# மாயச் சமாதியில் மர்மப் புதையல்

பிரேமா பிரசுரம்



மேதாவி எழுதிய

மர்ம நாவல்


மாயச் சமாதியில்
மர்மப் புதையல்
பிரேமா
பிரசுரம்


மேதாவி எழுதிய
மர்ம நாவல்

# மாயச் சமாதியில் மர்மப் புதையல்

## மேதாவி

எழுதிய துப்பறியும் நாவல்

மர்ம நாவல்

பிரேமா™
பிரசுரம்
59, ஆற்காடு சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

044- 24800325, 24833180. : 9486000325
e-mail : aruram@premapirasuram.com
website: www.premapirasuram.com

முதற்பதிப்பு : அக்டோபர் 1956

இரண்டாம் பதிப்பு : டிசம்பர் 2007

பதிப்புரிமை வாய்ந்தது

இந்நாவலில் வரும் பெயர்கள், சம்பவங்கள், சூழ்நிலைகள் அனைத்தும் கற்பனையே. இறந்தோர், இருப்போர் எவரையும் குறிப்பிடுவன ஆகா.

## *1. பிரபாகரின் பிரதாபமும், வேதநாயகத்தின் வேலையும்*

மஞ்சுளா பாங்கைக் கொள்ளை அடித்தவர்களில் ஒருவனெனச் சந்தேகிக்கப்பட்ட வேதநாயகத்தைக் கைது செய்வதுதான், போலீஸ் அதிகாரி என்ற முறையில், தாம் நிறைவேற்றும் கடைசிக் கடமை என்று நினைத்தார் சப்—இன்ஸ்பெக்டர் பிரபாகர். மவுன்ட் ரோடிலுள்ள கிருஷ்ணபகவான் ஹோட்டலில் காபி அருந்திவிட்டுப் புறப்பட்டுக் கொண்டிருந்த வேதநாயகத்தை, லபக் என்று பிடித்துக் கொண்ட பிரபாகர், கடைசியாக, சிக்கிக் கொண்டாயா, நாயகா!" என்று கிண்டலாகக் கூறினார்.

சிக்கிக் கொண்டேனா?— புரியவில்லையே, இன்ஸ்பெக்டர் சார்!" என்று பரிதாபமாகக் கேட்டான் வேதநாயகம். மயானக் கரையில் சஞ்சரிப்பவர்கள், பேய் பிசாசு அடிக்காம் இருப்பதற்காக நெற்றியில் மந்திரித்த விபூதி பூசிக் கொண்டு இருப்பது போல வேதநாயகம் பட்டையாக விபூதி பூசி, காலணா அளவு குங்குமப் பொட்டும் வைத்துப் பக்த சிகாமணிபோல் விளங்கினான். ஒரு கையில் தாயத்தும் கட்டியிருந்தான்.

மஞ்சுளா பாங்க் கொள்ளை விஷயமாக, இன்ஸ்பெக்டர் துரைசாமி உன்னிடம் பேச ஆசைப்படுகிறார்!" என்றார் பிரபாகர்.

மஞ்சுளா பாங்காவது! மண்ணாங்கட்டியாவது! எனக்கு அந்த பாங்க் எங்கு இருக்கிறது என்றுகூடத் தெரியாது! கொள்ளையைப்பற்றி, உங்கள் இன்ஸ்பெக்டர் என்னோடு பேசுவதற்கு என்ன இருக்கிறது? அதை உம்போன்ற சப் இன்ஸ்பெக்டரிடமல்லவா, அவர் பேச வேண்டும்! பேசிப் பேசிப் பொழுதைப் போக்கத்தானே, உம்மைப் போன்ற ஆட்களை போலீஸ் படைகளில் வைத்திருக்கிறார்கள்! — அது போகட்டும்; உமக்குப் பணம் ஏராளமாக வந்துவிட்டதாகவும், நீர் போலீஸ் படையை விட்டுத் தொலையப் போவதாகவும் கேள்விப்பட்டேனே..." என்றான் வேதாநாயகம்.

தொலையத்தான் போகிறேன் — ஆனால் உன்னைத் தொலைத்து விட்டு!" என்று சிரித்துக் கொண்டே கூறினார் பிரபாகர்.

போகிற போக்கில், பாவம், ஒரு தோல்வி மாலையைப் போட்டுக் கொண்டு போகப் போகிறீர்! நன்றாக எண்ணெய் போட்டுப் பள பளவென மின்னும் பிரதிவாதத்தரப்பு சாட்சிகளில் பத்துப்பேர் எனக்கு இருக்கிறார்கள்! — உம் போக்கு, எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது, பிரபாகர்! நான் பாங்குகளில் கொள்ளை அடிப்பதில்லை என்று உமக்குத் தெரியும்! பூட்டு உடைப்பதுதான் என்னுடைய வேலை— பூட்டு உடைப்பது தான் என்னுடைய விசேஷ தொழில். இதை மறந்து விட்டீரா?" என்று பல்லை இளித்தான் வேதநாயகம்.

செவ்வாய்க்கிழமை இரவு பத்து மணிக்கு நீ என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று அதட்டினார் பிரபாகர்.

வேதநாயகம் சிரித்தான். நான் சொன்னால், பொய் சொல்லுகிறேன் என்று சொல்லுவீர்!" என்றான்.

சும்மா, சொல்லு!" என்று தைரியம் கொடுத்தார் பிரபாகர்.

வேதநாயகம் உடனே பதில் சொல்லிவிடவில்லை. வெள்ளையாக, மனதைத் திறந்து சொல்வதால், ஏற்படும் விபரீதங்களை, அவன் அறிவான். சில வினாடிகள் தீர யோசித்துவிட்டுக் கடைசியாக உண்மையைப் பேசினான்.

நான் ஒரு, சொந்த வேலை செய்து கொண்டு இருந்தேன்...! சொந்த வேலை" என்றால். பிறரிடம் நான் சொல்ல விரும்பாத வேலை என்று அர்த்தம்! கேவலமான வேலைதான்; ஆனால் கண்ணியமானது!

ஏ, வேதநாயகம்! உன்னிடம் நான் பல தடவைகள் சொல்லி விட்டேன். அகராதியிலிருந்து, வார்த்தைகளை மனப்பாடம் செய்து கொண்டுவந்து, அவற்றை உளறிக் கொட்டி என் உயிரை வாங்காதே! புரியும்படி பேசு! அகராதி வார்த்தைகளை உருப்போட, நீ செலவிடும் நேரத்தை, நல்ல புத்தகங்களைப் படிப்பதில் செலவிட்டு உன் அறிவையாவது விருத்தி செய்துகொள்!" என்று சிரித்தார் பிரபாகர்.

நான் அகராதி படிக்க நேரம் எது? யாராவது அறிஞர் எழுதுவதை அபேஸ்" பண்ணிக் கொள்வேன்!" என்றான் வேதநாயகம் வெட்கமில்லாமல்!

அது போகட்டும்; உனக்கு அந்த வேலையில் நல்ல வருமானம் கிடைத்ததா?" என்று அக்கறையோடு விசாரித்தார் பிரபாகர்.

அதில் — அந்த வேலையில், எனக்கு ஒரு ஐநூறு ரூபாய் கிடைத்தது! இதைக் கேட்டதும் பிரமித்துப் போய் விட்டீரல்லவா? — அவ்வளவும் உண்மை! உலகத்திலேயே இதுவரையில் நான் கண்டிராத, மிகப் பிரமாதமான ஒரு பூட்டுக்கு, புதுச் சாவி தயாரிக்கும் வேலையில்தான் நான் ஈடுபட்டிருந்தேன்! ஆனால் அது ரொம்ப பயங்கரமான வேலை — லட்சக்கணக்கில் கொட்டிக் கொடுத்தாலும், இனி அந்த வேலைக்குப் போகமாட்டேன் — நீர் என்னை முற்றிலும் நம்பலாம்; மஞ்சுளா பாங்க் விவகாரம் எனக்குத் தெரியவே தெரியாது! அன்றையத் தினம் இரவு நான் செங்கல்பட்டில் இருந்தேன். அந்தக் கொள்ளை நடத்திய கூட்டத்தை உமக்கும் தெரியும்; எனக்கும் தெரியும்! ஆனால் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ள மாட்டோம்!" என்று கூறிவிட்டுச் சிரித்தான் வேதநாயகம்.

அன்றையத் தினம் பகலும் இரவும் வேதநாயகம், 'போலீஸ் — லாக்கப்பில்'அடைபட்டுக் கிடந்தான். போலீஸ் இலாகா, பாங்க் கொள்ளையைப் பற்றி மும்முரமாக விசாரித்துக் கொண்டிருந்தது. வேதநாயத்தை அதில் சமபந்தப்படுத்த, அவர்களுக்குப் போதிய சாட்சியம் கிடைக்கவில்லை. அதோடு செவ்வாய்க்கிழமை மாலை முதல் புதன்கிழமை காலை வரையில், அவன் செங்கல்பட்டில் இருந்தான் என்பதற்கும், பலமான சாட்சியம் இருந்தது! அதனால் மறுநாள் காலை வேதநாயகத்தைப் போலீஸார் விடுதலை செய்துவிட்டனர்.

விடுதலையான வேதநாயகத்தை, தனது கூட்டாளிபோலப் பாவித்து, சப் இன்ஸ்பெக்டர் பிரபாகர், பக்கத்தில் உள்ள ஒரு ஹோட்டலுக்கு அவனை டிபன் சாப்பிட அழைத்துச் சென்றார். பொதுவாகத் திருட்டையே தொழிலாகக் கொண்ட குற்றவாளிகளுக்கும், அவர்களைப் பிடிப்பதே தொழிலாகக் கொண்ட போலீஸாருக்கும் இடையே, குரோத உணர்ச்சி ஏற்படுவதில்லை. அதிலும் சப்

இன்ஸ்பெக்டர் பிரபாகருக்கு, போலீஸ் இலாகாவில் எவ்வளவு செல்வாக்கு உண்டோ, அவ்வளவு செல்வாக்கு குற்றவாளிகள் இடையேயும் இருந்தது.

இதோ பாரும், இன்ஸ்பெக்டர்! உம்மிடம் சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லிவிட்டேன்! ஆனால் நீர் நம்ப மறுக்கிறீர்! அந்த வேலையில் எனக்கு முன் பணமாக ஐநூறு ரூபாய் கிடைத்தது — பூரா வேலையும் முடித்திருந்தால் இரண்டாயிரம் ரூபாய் கிடைத்திருக்கும்! இதற்குமேல் நீரே யூகித்துக் கொள்ளலாம் — ஆனால் சரியானபடி யூகிக்கத்தான் நமக்குத் தெரியாது!" என்றான் வேதநாயகம்.

பிரபாகர் அவனை உற்றுப் பார்த்தபடி, உன் மனதிற்குள், ஏதோ ஒரு முக்கிய விவகாரத்தை மறைத்து வைத்து இருக்கிறாய்!... சும்மா சொல்லு!" என்று தைரிய மூட்டினார்.

நான் சொல்லமாட்டேன். அதைச் சொன்னால், ஒரு ஆள் சிக்கிக் கொள்வான்! அந்த ஆள் கெட்டவன்தான்; எனக்குப் பிடிக்காதவன் தான்; ஆனால் அதற்காக நான் காட்டிக் கொடுக்கும் வேலையில் இறங்கமாட்டேன்! நடந்த விவரம் பூராவும் சொல்கிறேன் கேளும். நீராகவே யூகித்துக் கொள்ளும்!" என்று வேதநாயகம் கூறிவிட்டு, எதிரே கண்ணாடி டம்பளரில் இருந்த காப்பியை, ஒரே மடக்கில் குடித்துவிட்டு டம்ளரை மேஜைமேல் வைத்தான்.

இன்ஸ்பெக்டர் சார்! என்னை வேலைக்கழைத்த அந்த ஆளை, எனக்கு அதற்குமுன் நேரடியாகத் தெரியாது. அவன் ஏதோ சங்கடத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறான் என்பதை மாத்திரம் அறிவேன் — அந்தச் சங்கடம் என்னவென்று கண்டுபிடிப்பது என் வேலை அல்ல! ஒரு நாள் இரவு அவன் என்னைச் சந்தித்தான்; என்னை அறிமுகம் செய்து கொண்டான்; பிறகு இருவரும் அவன் வீட்டிற்குப் போனோம் — அப்பாடா!" என்று நடுங்கினான் வேதநாயகம். அப்போது அவன் முகத்தில் பேயடித்ததுபோல் சவக்களை ஊடுருவி நின்றது. சிவ, சிவா!" என்று அவன் ஏதோ மந்திர உச்சாடனம் செய்வதுபோல் மனதிற்குள் முணு முணுத்துக் கொண்டான்.

சப் இன்ஸ்பெக்டர் பிரபாகர், வியப்போடு வேதநாயத்தின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

வேதநாயகம் தொடர்ந்து ஆரம்பித்தான்: அவன் என்னிடம் முதலில், நான் செய்ய வேண்டிய வேலையைச் சொன்ன பொழுது, நான் அதை நம்பவில்லை. விளையாடுகிறான் என்று நினைத்தேன். ஆரம்பத்திலேயே என்னால் அந்த வேலையைச் செய்யமுடியாது என்று மறுத்துவிட நினைத்தேன். பிறகு என் சுபாவம் — அதாவது மர்மமான விஷயங்களில், புகுந்து புறப்படவேண்டும் என்ற சுபாவம் — என்னை ஆட்கொண்டது. வெகு நேரம் யோசித்துவிட்டு அந்த வேலைக்கு ஒப்புக் கொண்டேன். அதில் மோசடியோ கிராதகத்தனமோ எதுவும் இல்லை — அந்த வேலையும், மிகவும் சாதாரணமானதுதான். ஒரு குறிப்பிட்ட இடத்தில், ஏதோ ஒன்று இருந்தது. அங்கு என்ன இருக்கிறதென்று, எட்டிப் பார்த்துக் கண்டு பிடிப்பதுதான், அவன் கொடுத்த வேலை — அதைப் பற்றிப் பேசுவதற்கே நான் விரும்பவில்லை; ஆனால் அங்கு இருந்த கூத்து இருக்கிறதே, அடேயப்பா, அதைப் போன்ற மாயக்கூத்தை, நான் வாழ்க்கையிலேயே பார்த்ததில்லை!" என்று நிறுத்தினான்.

வேதநாயகம் கூறியவற்றில் எந்தவிதத் தொடர்பும் இல்லா விட்டாலும், குற்றவாளிகளின் மனப்போக்கை நன்றாக அறிந்த பிராபாகர், அவன் ஏதோ ஒரு விஷயத்தை வெளியிட விரும்புகிறான் என்றும், ஆனால் வெளியிடப் பயப்படுகிறான் என்றும் புரிந்து கொண்டார்.

எங்காவது வக்கீல் வீட்டு இரும்புப் பெட்டியை உடைக்கப் போனாயா?" என்று பிரபாகர் குருட்டடியாகக் கேட்டார். சில சமயங்களில், இப்படிப்பட்ட குருட்டடிக் கேள்விகளால் பல விஷயங்கள் வெளியாவதுண்டு.

ஆனால் வேதநாயகம் இல்லை" என்ற பாவனையில் தலை ஆட்டிவிட்டு, பேச்சை மாற்றி வேறு ஏதேதோ பேச ஆரம்பித்தான் — தான், தனது சொந்த ஊரான நாகர் கோயிலுக்குப் போய்விடப் போவதாகவும், அங்கு அவனது சகோதரன் விவசாயத் தொழில் செய்து கொண்டு கௌரவமாக இருப்பதாகவும், என் என்னவோ சொன்னான்.

இன்ஸ்பெக்டர்! நீரும் நானும், ஏககாலத்தில், நம் தொழில்களை விட்டு விலகப் போகிறோம்! நீர் ரொம்ப நல்ல சினேகிதத் தன்மையுள்ள மனிதனாக இருப்பதால், நீர் போலீஸ்காரராக இருப்பதற்குலாயக்கில்லை; நான் ரொம்ப நேர்மையானவனாக இருப்பதால் திருடனாக இருப்பதற்கு லாயக்கில்லை! — நாம் மீண்டும் எப்பொழுதாவது வாழ்க்கையில் சந்திக்கத் தான் போகிறோம். அப்பொழுது ஒருவரை ஒருவர் பார்த்து, ஆச்சரியப்பட்டுக் கொள்வோம்!" என்றான் வேதநாயகம்.

வேதநாயகத்தினிடமிருந்து, அதற்கு மேல் கிரகிக்க முடியாது என்று அறிந்த சப் இன்ஸ்பெக்டர் பிரபாகர், நேராக கமிஷனர் ஆபீஸுக்குப் புறப்பட்டார். அங்கு இன்ஸ்பெக்டர் துரைசாமி உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். அவரிடம் வேதநாயகம் கூறிய விவரங்களை, எடுத்துக் கூறினார் பிரபாகர்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி சிரித்தார்: வேதநாயகம் பரம அயோக்கியனாயிற்றே! அவனை அடித்துக் கிணற்றில் தள்ளினால், கிணற்றின் அடித்தளத்திலுள்ள கற்களையே திருடிக் கொண்டு விடுவானே! — அவன்,கிடக்கிறான்! ம்... ஆம், உன் வேலையெல்லாம் முடிந்துவிட்டது என்று நினைக்கிறேன்?"

முடிந்துவிட்டது" என்று தலையை ஆட்டினார் பிரபாகர்.

ம்...கிராமத்திற்குப் போய், பிரபுபோல் வாழ்க்கை நடத்தப் போகிறாய்! எவளாவது ஒரு நல்ல பெண்ணாகப்பார்த்துக் கல்யாணம் செய்து கொள்வாய்! கலெக்டர்களுக்கும், போலீஸ் சூப்ரிண்டென்டெண்டுகளுக்கும் விருந்து நடத்துவாய்! எவளாவது நல்ல பாட்டுக்காரியைத் தருவித்துக் கச்சேரியும் நடத்துவாய்! — அடாடா; என்ன வாழ்க்கை! — பிரபாகர்! உறசாகத்தோடு உழைத்து, ஊருக்கும், உனக்கும், நல்லது தேடிக் கொடுக்கவேண்டிய நேரத்தில், இந்த சோம்பேறி வாழ்க்கைக்குப் போகிறேன் என்கிறாய்! உனக்கு அவமானமாக இல்லையா?" என்று கிண்டல் செய்தார் துரைசாமி.

பிரபாகர் முகம் வெட்கத்தால் சிவந்தது. உள்ளபடியே யாராவது கொஞ்சம் சொல்லி இருந்தாலும், அவர் ராஜினாமாக் கடிதத்தை அனுப்பாமல்

இருந்திருப்பார். கிராமத்தில் போய் இருந்து, புத்தகம் எழுதலாம் என்று அவர் திட்டமிட்டிருந்த போதிலும், அவருக்கு ஏண்டா இந்த ராஜினாமாவை அனுப்பினோம்" என்ற தவிப்பு மனத்திற்குள் இருந்தது. முடியுமானால், எந்தக் கஷ்டப்பட்டாவது, அந்த ராஜினாமாக் கடிதம், கமிஷனர் கைக்குப் போய்ச் சேராமல் தடுத்துவிடவும் அவர் தயாராக இருந்தார் — ஆனால் முடியவில்லை!

அடடா; இந்தப் பணம் படுத்தும் பாடுதான் என்ன? நல்ல மனிதனை, பாழாக்கிவிடுகிறதே! — ஆனால் நீ இயற்கையிலேயே ஒரு சோம்பேறிதான்! உன் விஷயத்தில் எல்லாம் ஒன்றுதான்!" என்று மீண்டும் கிண்டல் செய்தார் துரைசாமி.

பிரபாகருக்கு அதற்குமேல் தாங்க முடியவில்லை. தங்கள் சுறுசுறுப்பு இந்த நாடறிந்த விஷயமாயிற்றே!" என்று பதிலுக்குக் கிண்டல் செய்தார் பிரபாகர்! — நாம்தான் வேலையை விட்டுப் போகப் போகிறோமே என்ற தைரியம் அவருக்கு! இன்ஸ்பெக்டர் துரைசாமி, விசித்திரமாக பிரபாகரைப் பார்த்தபடி, பிரபாகர்! நாளை வரையில் நீ என்னுடைய சேவகன்தான்! ஒரு சில்லறை சப் — இன்ஸ்பெக்டர்! நாளை மறுதினம் வேண்டுமானால் நீ மிராசுதார் ஆகலாம்! அதுவரை என்னிடம் பணிந்து நடக்க வேண்டும்! என்னைப் பார்த்துச், சுறுசுறுப்பில்லாதவன் என்று முடிவு கட்டி விட்டாயே! சரி; அது போகட்டும்; நீ நேராக மலைமேல் விநாயகர் வாசக சாலை"க்குப் போ! அங்கு சில புத்தகங்கள் திருட்டுப் போய்விட்டதாகப் புகார் வந்திருக்கிறது!" என்று கட்டளையிட்டார்.

இப்படிப்பட்ட சில்லறை வேலைகளைக் கவனிப்பதில், பிரபாகருக்கு அளவு கடந்த எரிச்சல்தான் என்றாலும், மேல் அதிகாரியின் கட்டளையை மறுக்கமுடியாமல் அவர் அறையைவிட்டுக் கிளம்பினார்.

போலீஸ் கமிஷனர் ஆபீஸைவிட்டு வெளியே நடந்து கொண்டிருக்கும் பொழுது, பிரபாகரின் மனம் தீவிரமாக வேலை செய்து கொண்டிருந்தது. போலீஸ் இலாகாவை விட்டுவிடத் தாம் முடிவு செய்தது நல்லதா கெட்டதா என்ற ஆராய்ச்சியில் அவர் மனம் ஈடுபட்டிருந்தது. சென்னைப் போலீஸ் இலாகாவிலேயே, திருட்டுக் குற்றங்களைக் கண்டு பிடிப்பதில் நிபுணன்" என்ற சிறப்புப் பெயர் அவருக்குக் கிடைத்திருந்தது. இன்ஸ்பெக்டர் துரைசாமி பல

சமயங்களில் அபிமானத்தோடு, உனக்கு ஒரு திருடனின் மனம்தான் இருக்கிறது — அதாவது திருடன் மனம், எப்படி வேலை செய்கிறதோ, அதோபோல உன் மனமும் வேலை செய்கிறது!" என்று கூறுவார்.

உள்ளபடியே பிரபாகருக்கு அந்தத் திறமை இருந்தது! போலீஸார் வருஷா வருஷம் நடத்தும் விளையாட்டுப் போட்டி ஒன்றில் ஒரு பெரிய அதிகாரியின் தூண்டுதலின் பேரில் பிரபாகர் ஒரு வேடிக்கை செய்து காண்பித்தார். போலீஸ் இலாகா மந்திரியின் சட்டைப் பையிலிருந்து, அவருக்குத் தெரியாமல், அவரது வாட்சையும் டயரியையும், சில கடிதங்களையும், பிக்பாக்கெட்" அடித்துக் காண்பித்தார்! எவ்வளவோ பேர் மந்திரியைச் சூழ்ந்து கொண்டிருந்த போதிலும், பிரபாகர் செய்த வேலையை யாரும் பார்க்கவில்லை!

பிரபாகரின் சொந்த ஊர் மலையாள ராஜ்யத்தில் இருந்தது. அவர் தந்தை திருவிதாங்கூர் ராஜ்யத்தைச் சேர்ந்த சிறைச்சாலை ஒன்றில், சூப்பிரின்டென்டெண்டாக வேலை பார்த்து வந்தார். பிரபாகர் ஒரே மகனாதலால், எந்த நேரத்திலும், அவனைத் தன்னோடுதான் வைத்துக் கொண்டிருப்பார். அவரது தந்தையான மேனன்.

இந்தக் காரணத்தால், பிரபாகர் சிறைச் சாலைக்குள் நுழைந்து, அங்கிருந்த கைதிகளோடு பழகும் வாய்ப்புக் கிடைத்தது. இயற்கையிலேயே அதி புத்திசாலித்தனமும், பார்வைக்குக் கவர்ச்சிகரமான தோற்றமும உள்ள சிறுவன் பிரபாகரனைக் கண்டால், சிறைக் கைதிகளுக்கு எல்லாம் ஒரே ஆனந்தம் உண்டாகிவிடும். திருவிதாங்கூர் சிறைச் சாலையில் அந்தக் காலத்தில், பயங்கரமான பல கொள்ளைக் காரர்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் சங்கரனும், அச்சுதனும் முக்கியமானவர்கள். அச்சுதனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. சங்கரன் அடிக்கடி சிறைச்சாலைக்கு வந்து போவான். அவர்கள் இருவருக்கும், பிரபாகர் மேல் அலாதியான பிரியம் இருந்தது. அந்தப் பிரியத்தில், தங்களுக்குத் தெரிந்த பல நுணுக்கமான தொழில்களை அவனுக்குக் கற்பித்தார்கள்! சங்கரன் சொல்லிக் கொடுத்த பாடங்களில், சாதுரியமாக பிக்பாக்கெட் அடிக்கும் முறைதான் முக்கியமானது! அதோடு மூன்று சீட்டு" என்ற ரெங்கு ஆட்டம் ஆடும் பொழுது, எதிரிகள் கண்ணில் மண்ணைத்

தூவிவிட்டு, சீட்டுகளில் எப்படி குல்மால்" வேலை நடத்தலாம் என்பதையும் கற்றுக் கொடுத்திருந்தான். அச்சுதன் வேறு ஒரு துறையில் நிபுணன். ஒரு சிறு கொண்டை ஊசியின் உதவியால், எப்படிப்பட்ட பிரமாதமான பூட்டுக்களையும், அவனால் திறந்துவிட முடியும் என்று கருதப்பட்டு வந்தது. அந்தக் கலை"யை பரி பூரணமாக பிராபகருக்குச் சொல்லிக் கொடுத்தான் அச்சுதன்! அந்தக் காரணங்களால், பள்ளிக்கூடப் படிப்புகளைப் பிரபாகர் கற்றுக் கொளள்வதற்கு முன்பே, பயங்கரமான குற்றங்களைப் பற்றிய கலையில் பரிபூரண தேர்ச்சி அடைந்துவிட்டார்!

உள்ளபடியே பிரபாகரின் மனதில் சைத்தான் ஆதிக்கம் செலுத்தியிருந்தால், அவர் சப் இன்ஸ்பெக்டர் ஆவதற்குப் பதில், பிரபல கொள்ளைக் காரனாக மாறியிருப்பார். ஆனால் அவரது குடும்பப் பண்பாடும், சூழ்நிலையும், அவரது மனோ நிலையை ஒழுங்காகப் பக்குவப்படுத்தி வைத்திருந்ததால், அவர் படிப்பிலும் அக்கறை செலுத்தி, முதல் வகுப்பு பி.ஏ. பட்டமும் வாங்கினார்.

பிரபாகர், இம்மாதிரி தீயபாடங்களை, குற்றவாளிகள் இடமிருந்து கற்றுவருவதைக் கவனித்த அவர் தாயார், மேனனிடம், அதைப் பற்றி எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். மேனன் சிரித்துக் கொண்டே, பிரபாகரைக் கெடுக்கவேண்டும் என்று கைதிகள் நினைக்கவில்லை. அவன் மீதுள்ள அபிமானத்தால்தான் அந்தத் தொழிலை எல்லாம் சொல்லிக் கொடுத்தார்கள்! அவன் போலீஸ் இலாகாவிற்குத் தான் போகப்போகிறான்; இந்த அப்பியாசம் அவனுக்கு அந்தச் சமயத்தில் எவ்வளவோ பயன்படும்!" என்று தீர்க்கதரிசிபோல் கூறினார்.

போலீஸ் படையில் சேர்ந்த பிரபாகர், முதலில் கோயம்புத்தூர் ஜில்லாவில் சப்இன்ஸ்பெக்டராக நியமிக்கப் பட்டார். அவரது திறமையைக் கண்ட அதிகாரிகள், தலைநகரத்திற்கு அவரை மாற்றிக் கொண்டார்கள்...

போலீஸ் கமிஷனர் ஆபீஸைவிட்டு, வெளியேவரும் பொழுது, எதிரே உதவிக் கமிஷனர் வந்து கொண்டிருந்தார். அவருக்குப் பிரபாகர் மேல் அளவு கடந்த அபிமானம். இவ்வளவு புத்திசாலித்தனமும், சுறுசுறுப்பும் உள்ள

பிரபாகர் போலீஸ் படையைவிட்டு விலகப் போகிறாரே என்று, அந்த உதவிக் கமிஷனருக்கு ரொம்ப வருத்தம்.

என்ன, பிரபாகர்! நாளை மறுதினம் நீ வேலையை விட்டுப்போய் விடப்போகிறாய் போலிருக்கிறதே! என்ன துரதிருஷ்டம்! அதை விட துரதிர்ஷ்டம் உனக்குப் பணம் ஏராளமாக இருப்பதுதான்! எங்கள் இலாகா ஒரு திறமைசாலியை இழக்கப்போகிறது! — அது போகட்டும்; வேலையைவிட்ட பிறகு, நீ என்ன செய்யபோகிறாய்?" என்று அன்பொழுகக் கேட்டார்.

பிரபாகர் புன்னகை புரிந்தபடியே ‘‘எனக்கே தெரிவில்லை— ஆனால் ராஜினமா செய்தது எவ்வளவு தவறு என்பதை இப்பொழுது தான் உணர ஆரம்பிக்கிறேன்" என்றார்.

உதவி கமிஷனர் சில வினாடிகள் யோசித்தார். பிறகு திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவர் போல், ‘‘அட! இப்பொழுது தான் ஞாபகம் வருகிறது! உனக்கு வக்கீல் ராஜாங்கம் பிள்ளையைத் தெரியுமா?" என்று கேட்டார். தெரியாது என்று தலையை ஆட்டினார் பிரபாகர்.

அவர் ரொம்ப நல்ல மனிதர். அவரது வீடு மாம்பலத்திலே இப்பொழுது இருக்கின்றது. டெலிபோன் நம்பர்கள் குறிக்கப்பட்டு இருக்கும் ரிஜிஸ்டரில் பார்த்தால் உனக்கு அவரது சரியான விலாசம் கிடைக்கும். அவர் நேற்று என்னைச் சந்தித்தார்" — என்று நிறுத்தினார் உதவிக் கமிஷனர்.

பிரபாகர் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்தார். தொடர்ந்து பேச ஆரம்பித்தார் உதவிக் கமிஷனர்! நீதான் பொருத்தமான ஆள் — அப்பொழுது என்னவோ உன் நினைவு எனக்கு வரவில்லை! அவருக்கு ஏதோ சங்கடங்கள் இருக்கும்போல் தோன்றுகின்றது. அதற்காக, முழுநேர வேலை செய்யக்கூடிய, ஒரு துப்பறிவாளர் வேண்டுமென்று கூறினார் — நீ போய் அவரைப் பார்க்கிறாயா? நான் அனுப்பியதாகச் சொல்! உன்னால் முடியுமானால் அவருக்கு இயன்ற உதவிகளைச் செய். உனக்கும் உடனடியாக ஒரு சுயேச்சையான வேலை கிடைத்தமாதிரியும் ஆயிற்று; என் நண்பர் ஒருவருக்கு உதவி செய்தமாதிரியும் ஆயிற்று!"

என்ன வேலை," என்று உற்சாகமில்லாமல் கேட்டார் பிரபாகர்.

எனக்கு விபரமாகத் தெரியாது. அவரது கட்சிக்காரர் ஒருவர், அவருக்கு ஏதோ தொல்லை கொடுத்து வருகிறார் போலத் தெரிகிறது. எதற்கும் நீ போய்ப்பார்!" என்று கூறிவிட்டு உதவிக் கமிஷனர் உள்ளே சென்றார்.

போலீஸ் படையை விட்டுப் பிரிந்து தனிப்பட்ட முறையில் துப்பறிய வேண்டுமென்ற ஆசை பிரபாகருக்குக் கொஞ்சமும் கிடையாது. இருந்தபோதிலும் உதவிக் கமிஷனரிடம் அவருக்கு தேவதா விசுவாசம். ஆகவே அவரது யோசனையை ஏற்றுக்கொண்டு, வக்கீல் ராஜாங்கம் பிள்ளைக்கு உதவி செய்யத் தீர்மானித்தார் பிரபாகர்.

அந்தச் சமயத்தில், போலீஸ் சேவகர் ஒருவர் வந்து, பிரபாகரை உதவிக் கமிஷனர் அழைப்பதாகக் கூறினார். திரும்பவும் ஆபீஸிற்குள் நுழைந்தார் பிரபாகர்.

இன்று மாலை, நான் வக்கீல் ராஜாங்கம் பிள்ளைக்கு நீ வந்து பார்ப்பதாக டெலிபோன் செய்துவிடுகிறேன். நீ நிச்சயம் போவாய் அல்லவா?" என்று சந்தேகத்தோடு கேட்டார்.

நிச்சயம் போகிறேன், சார்!" என்றார் பிரபாகர்.

## *2. வாசக சாலை வனிதையும், திருட்டுப்போன புத்தகமும்*

மலைமேல் விநாயகர் வாசக சாலை"யை நோக்கி சாவகாசமாக நடந்து கொண்டிருந்தார் பிரபாகர். மலைமேல் விநாயகர் லைப்ரரி" என்பது, நாவல் புத்தகங்களும், கதைப் புத்தகங்களும் நிறைந்ததல்ல. அதில் ஆராய்ச்சிப் புத்தகங்கள் தான் அதிகம் இருந்தன; சர்வ கலா சாலைகளிலும், கண்காட்சி சாலைகளிலும், வைக்க விட்டுப்போன பல அரிய நூல்கள் அந்தப் புத்தக சாலையில் இருந்தன. அங்கிருந்த புத்தகங்களைப் படித்துப் புரிந்துகொள்வதற்கே பல வருஷங்கள் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டு இருக்க வேண்டும்! இல்லாவிட்டால் அவற்றில் ஒரு வரிகூடப் புரியாது! நான்கு அடுக்கு உள்ள அந்தக் கட்டிடத்தில், ஏராளமான புத்தகங்கள் சேகரித்து வைக்கப்பட்டு

இருந்தன. மதத் தத்துவப் புத்தகங்களும், விஞ்ஞான ஆராய்ச்சிப் புத்தகங்களும், இலக்கிய ஆராய்ச்சிப் புத்தகங்களும் — மற்றும் சாதாரண மனிதனுக்குக் கொஞ்சம்கூடப் புரியாத எல்லாவிதப் புத்தகங்களும், அந்தப் புத்தக சாலையை அலங்கரித்துக் கொண்டிருந்தன.

அதைத் தோற்றுவித்தவர், திவான்பகதூர் மலைமேல் விநாயகர் முதலியார். அவர் இந்த ஸ்தாபனத்தை ஏற்படுத்தி, அதன் பெயரால் ஏராளமான நிதி எழுதி வைத்து, எப்படி அதை நடத்துவது என்பதை வரையறுக்கும் விதிகளையும் வகுத்துக் கொடுத்திருந்தார். அவ்விதிகளில் ஒன்று, அங்கு வேலை பார்க்கும் அதிகாரிகளில் இருவர் பெண்களாக இருக்கவேண்டும் என்பது!

அம்மாதிரி அவர் விதி வகுப்பதற்குக் காரணம், பெண்களும் அந்தப் புத்தக சாலைக்கு வந்து, படித்துப் பயன்பெற வேண்டும் என்பதுதான்! இப்படியெல்லாம் அவர் ஏற்பாடு செய்திருந்த போதிலும்கூட, புத்தக சாலைக்குக் கூட்டமே வருவதில்லை.

சப் இன்ஸ்பெக்டர் பிரபாகர், மலைமேல் விநாயகர் லைப்ரரி"யை அடைந்து, நேராக உள்ளே சென்றார். அங்கு யௌவனமான ஒரு பெண் மேஜை அருகில் உட்கார்ந்து, லைப்ரரி பதிவுப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டு இருந்தாள்.

நான் கமிஷ்னர் ஆபிஸிலிருந்து வருகிறேன். இங்கு ஏதோ புத்தகங்கள் காணாமல் போய்விட்டதாக எங்களுக்குப் புகார் வந்தது!" என்றார் புத்தக அலமாரியைப் பார்த்தபடி பிரபாகர்.

இயற்கையிலேயே சப் இன்ஸ்பெக்டர் பிரபாகருக்குப் பெண்களிடம் அவ்வளவு சிரத்தை கிடையாது. அவர்கள் புத்திசாலிகளாக இருந்தாலும் முட்டாள்களாக இருந்தாலும் பணக்காரிகளாக இருந்தாலும், பாஞ்சாலிகளாக இருந்தாலும், அவர்களை லட்சியம் செய்து அவர் பார்ப்பதில்லை.

ஆமாம் நான் சாப்பிடப்போயிருந்த போது ஒரு புத்தகம் திருட்டுப் போய்விட்டது. அது அவ்வளவு முக்கியமான புத்தகமல்ல — ஒரு சமஸ்கிருத

புத்தகத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது ! வேதாந்தத் தத்துவ சாஸ்திரங்களின் வகையைச் சோந்தது. அதை எழுதியவர்— அதாவது மொழிபெயர்த்தவர் — சுவாமி நிலைகொள்ளா ஆனந்தர்!" என்றாள் அந்தப் பெண்.

நீங்கள் இங்கு இல்லாதபோது, வேறு யார் இங்கு இருந்தார்கள்?"

எனது உதவியாளரான பரமேஸ்வரி என்ற பெண் இருந்தாள்,"

அந்த நேரத்தில் உங்கள் லைப்ரரி அங்கத்தினர்கள் யாராவது இங்கு வந்தார்களா? எவ்வளவோ பேர் வந்தார்கள்! அவர்கள் பெயர்களை யெல்லாம் ரிஜிஸ்டரில் குறித்து வைத்து இருக்கிறோம். ஆனால் ‘அவர்களெல்லோரும் மிகவும் கண்ணிய ஆனவர்கள். எங்கள் புத்தக சாலையின் அங்கத்தினர் அல்லாத ஒரே ஒருவர்தான் புதிதாக அந்த நேரத்தில் இங்கு வந்திருக்கிறர். அங்கத்தினர் கட்டணம் முதலியவற்றை விசாரித்துப் போகவேதான் அவர் வந்தார். அவர் ஒரு வடக்கத்தி டாக்டர்!பெயர் டாக்டர் ரஞ்சித் சிங்!" என்றாள் அந்தப் பெண்.

அவரை யாருக்கும் தெரியாதோ?"என்று கேட்டார் பிரபாகர்.

பரமேஸ்வரி அவரை அடையாளம் கண்டு கொண்டாள்.அவர் புகைப்படத்தை அவள் எங்கோ பார்த்திருக்கிறாள்— அவர் பெயர் உங்களுக்கு நினைவு இருக்கும் என்று அல்லவா நினைத்தேன்!" என்றாள்அந்தப் பெண்.

அந்தப் பெயரை நான் எதற்காக நினைவு வைத்துக் கொள்ள வேண்டும், அம்மணி?"என்று கிண்டலாகக் கேட்டார் பிரபாகர்.

ஏன் நினைவு வைத்துக் கொள்ளக் கூடாது, அப்பரே?"என்று நையாண்டி செய்தாள் அந்தப் பெண்.

இப்பொழுதுதான் சப் இன்ஸ்பெக்டர் பிரபாகர் அந்தக் குறும்புக்காரியைச் சுவாரஸ்யத்தோடு கவனிக்க ஆரம்பித்தார். உண்மையிலேயே அவள் பார்வைக்கு அழகாகத் தோன்றினாள்.

மன்னிக்க வேண்டாம்! இம்மாதிரி துக்கடாத் திருட்டுக்களில் எனக்கு அக்கறையே இருப்பதில்லை. நாளையத்தினம் நான் போலீஸ் படையை விட்டே விலகப்போகிறேன்!" என்றார் பிரபாகர்.

அப்படியானால், குற்றவாளிகளெல்லாம் கூடிப் பெரிய திருவிழா கொண்டாடுவார்கள்!" என்று குறும்பாகப் பேசினாள் அந்தப் பெண். அவள் கண்களில் குறும்பு தாண்டவம் ஆடியது. அதைப் பார்த்த பிரபாகரின் உள்ளம், அவளிடம் தாவிப் பறந்தது.

உங்களுக்கு நகைச்சுவை உணர்ச்சி ரொம்ப இருக்கிறது!" என்று புன்னகையுடன் கூறினார் பிரபாகர்.

நகைச்சுவை உணர்ச்சி என்பது, முட்டாள்தனம் நடப்பதைப் பார்த்து, சிரித்து ரசிப்பதுதான்! எனக்கு அந்த உணர்ச்சி இல்லாம் இருந்தால், என்னைப் பார்த்து ஒருவர் அம்மணி" என்று கிண்டல் செய்வதை, அவர் போலிஸ் அதிகாரியாக இருந்தபோதிலும், சப்—இன்ஸ்பெக்டராக இருந்தபோதிலும்— சகித்துக் கொண்டு இருந்து இருக்க மாட்டேன். பலமாக ஆட்சேபித்திருப்பேன்!" என்று சட்டென்று கூறினாள் அந்தப் பெண்.

என் முரட்டுத்தனத்திற்கு ரொம்ப வருந்துகிறேன்! தயவு செய்து, அந்த டாக்டர் ரஞ்சித் சிங் என்ற பேர்வழி யார் என்று சொல்லுங்கள். அந்தப் பெயரைக் கேட்டால், எனக்கு எந்தவிதப் புத்துணர்ச்சியும் ஏற்படவில்லை! ஏதோ மாயாண்டி என்ற ஒரு பிக்—பாக்கெட் திருடனின் பெயரைக் கேட்பது போலத்தான் சுவாரஸ்யம் இல்லாமல் இருக்கிறது!" என்றார் பிராபகர்.

என்னிடம் விவரம் கேட்கிறீர்களா— இந்த அழகில், நீங்கள் ஒரு துப்பறியும் அதிகாரி! மற்றவர் தூங்கும் பொழுது, அவர்கள் பொருளைப் பாதுகாத்துக் கொடுக்கும் மகோன்னத சக்தி வாய்ந்த அதிகாரி!" என்று சிரிப்பை அடக்கிக்கொண்டு கேட்டாள் அவள்.

பிரபாகர் சிரித்தபடியே, என் தோல்வியை ஒப்புக்கொள்கிறேன்! தயவு செய்து நீங்களே அந்த விவரங்களைச் சொல்லுங்கள்!" என்றார்.

நான் சொல்வதற்கு நிறைய விவரங்கள் எதுவும் இல்லை. அந்தப் புத்தகம் இன்று மத்தியானம் ஒரு மணிக்கு இருந்தது. ஒன்றரை மணிக்கு

இல்லை! அவ்வளவுதான்."

யார் அந்த டாக்டர் ரஞ்சித் சிங்?"

அந்தப் பெண் சிரித்தபடியே, அதனால்தான், நான், நீங்கள் ‘ஒரு துப்புறியும் அதிகாரியா?’என்று கேட்டேன். பரமேஸ்வரி சொன்னது இருந்து, டாக்டர் ரஞ்சிம் சிங்கைப் போலீஸிற்கு நன்றாகத் தெரியும் என்று புரிந்து கொண்டேன். அவர் எழுதிய புத்தகத்தைப் பார்த்து இருக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

அவர் புத்தகம் எழுதி இருக்கிறாரா?" என்று வியப்போடு கேட்டார் பிரபாகர்.

அவள் எழுந்து உள்ளே சென்று ஒரு சிறிய புத்தகத்தை எடுத்து வந்தாள். அந்தப் புத்தகத்தைக் கையில் வாங்கி, பிரபாகர் அதன் தலைப்பைப் பார்த்தார்:

மனித இனப் புனரமைப்பு ஆராய்ச்சி —— டாக்டர் ரஞ்சித் சிங் எழுதியது"

புத்தகத்தை, உள்ளே புரட்டிப் பார்த்தார் பிரபாகர். புத்தகம் பூராவும், படங்களும், கணிதக் குறிப்புகளும் நிறைந்திருந்தன.

இவர் எதற்காகப் போலீஸில் சிக்கிக்கொண்டார்? புத்தகம் எழுதுவது கிரிமினல் குற்றமல்லவே!"என்றார் பிரபாகர்.

அது கிரிமினல் குற்றம்தான்!—ஆனால் அதற்காக அவர் தண்டிக்கப்படவில்லை. புத்தகத்தை எழுதி, உண்மைகளைக் கண்டம் துண்டமாக்கிச் சித்திரவதை செய்வதுபோல், அவர் வேறு எதையோ சித்திரவதை செய்ய முயன்றிருக்கிறார். அதற்காக அவர் போலீஸாரால் கைது செய்யப்பட்டு இருக்கிறார்!"

இந்தப் புத்தகத்தில் என்ன இருக்கிறது?" என்று கேட்டார் பிரபாகர்.

மனித ஜந்துக்களைப் பற்றிய விஷயங்கள் இருக்கிறது! கட்டுப்பாடுகளின் கீழ் மனிதரை அடக்கி வைத்து,வாழ்க்கை நடத்தும்படி

வற்புறுத்துவதைவிட அவர்களைக் காடுகளில் விரட்டி விட்டு, கொண்டதே கோலம் என்ற தத்துவத்தில் வாழ்க்கை நடத்தும்படி விட்டுவிட்டால் அவர்கள் குதூகலமாக இருப்பார்கள் என்று ரஞ்சித் சிங் அபிப்பிராயப்படுகிறார்!" என்று சிரித்தாள் அந்தப் பெண்.

சில வினாடிகள் இருவரும் ஒன்றும் பேசவில்லை.

உண்மை என்னவென்றால், மிஸ்டர் உங்கள் பெயர் என்ன?" என்று கேட்டாள் அந்தப் பெண்.

பிரபாகர்!"

அதாவது, மிஸ்டர் பிரபாகர்!...சுவாமி நிலை கொள்ளா ஆனந்தர் எழுதிய அந்தப் புத்தகம் காணாமல் போய்விட்டதைப் பற்றி நாங்கள் கவலைப் படவில்லை. அந்த இடத்தில் ஒரு புதுப் புத்தகம் வாங்கி வைத்துவிட்டோம். எங்கள் காரியதரிசி, எதற்கெடுத்தாலும் துடிதுடித்துக்கொண்டு, எதையாவது செய்வார்! அவர் செய்த விபரீதத்தால்தான் நீங்கள் இங்கே விஜயம் செய்திருக்கிறீர்கள்! — தயவுசெய்து, நான் இப்படிச் சொன்னேன் என்று எங்கள் காரியதரிசியிடம் சொல்லிவிடாதீர்கள்! — இப்பொழுது நீங்கள் வந்ததுதான் வந்துவிட்டீர்கள்; எனக்கு மயிர்க்கூச்செறியும் ஒரு கதையைச் சொல்லுங்கள்! நான் இதுவரை ஒரு துப்பறிவாளரைப் பார்த்ததுமில்லை; இனி பார்க்கப் போவதுமில்லை!"

பிரபாகரின் எழுபது அங்குல உயரமுள்ள சரீரம் எழுந்து நின்றது! அம்மையே — உங்கள் பெயரைக் கேட்க எனக்குத் துணிச்சல் இல்லை — என்னை வாட்டி எடுத்துவிட்டீர்கள்; ஆனால் கொஞ்சம் தயையும் காட்டுங்கள்! இந்த ரஞ்சித் சிங் எங்கே குடியிருக்கிறார்?" என்று கேட்டார்.

மனித இன புனரமைப்பு ஆராய்ச்சி" என்ற புத்தகத்தைக் கையில் எடுத்து புரட்டிப் பார்த்தாள். அதில் முன்னுரைக்குக் கீழே கீழ்க்கண்டவாறு விலாசம் குறித்திருந்தது.

பரலோக பவனம்" டாக்டர் ரஞ்சித் சிங்

ரட்லண்ட் கேட், சென்னை. நூலாசிரியன்.

பரலோக பவனம்! மயிர்க் கூச்செறியும் பெயராக இருக்கிறதே! நுங்கம்பாக்கம் அருகில் இருக்கிறது!" என்று அந்தப் பெண் படித்து வியாக்கியானம் செய்தாள்.

எனக்கே படித்துக்கொள்ளத் தெரியும்!" என்று எரிச்சலாகக் கூறினார் பிரபாகர். அந்தப் பெண் ஒரு தினுசாக அவரைப் பார்த்தாள். பிறகு, இதோ பாருங்கள், மிஸ்டர்! இம்மாதிரி தர்பார்களெல்லாம் எங்களுக்குப் பழக்கமானதல்ல; போலீஸார் வருவதும், அவர்கள் அமர்க்களப்படுத்துவதும், எங்களால் சகித்துக்கொண்டு இருக்கக் கூடியதல்ல! எவனோ ஒரு பிச்சைக்காரன் எழுதிய ஒரு பிச்சைக்காரப் புத்தகத்திற்கு, பிச்சைக் காரத்தனமாக புகார் எழுதி —

ஒரு பிச்சைக்காரனைத் தருவித்துவிட்டார், உங்கள் காரியதரிசி!" என்று முடித்தார் பிரபாகர்.

இருவரும் சிரித்தார்கள்.

டாக்டர் ரஞ்சித் சிங்கைத் தவிர வேறு யாரும் வந்தார்களா?" என்று கேட்டார் பிரபாகர்.

மற்றவர்கள் வந்தபொழுதெல்லாம் நான் இருந்தேன். அது காணாமல் போயிருக்கவே வழியில்லை. ஏனென்றால், நான் எப்பொழுதும் உஷாராகக் கண் காணித்து வருவேன்..." என்று சொல்லிக் கொண்டே வந்தவள், மேஜையைக் கவனித்தாள். மேஜைமீது கிடந்த மனித இன புனரமைப்பு ஆராய்ச்சி" என்ற புத்தகம் எங்கோ மாயமாய் மறைந்துவிட்டது!

நீங்கள் எடுத்தீர்களா?" என்று கேட்டாள் அந்தப் பெண்.

நான் எடுத்ததைப் பார்த்தாயா?" என்று சவால் விட்டார் பிரபாகர்.

நிச்சயமாக நான் பார்க்கவில்லை! இங்கேதானே ஒரு வினாடிக்கு முன்பு இருந்தது!" என்று மலைத்துப் போனாள் அந்தப் பெண்.

பிரபாகர் தன் கோட்டுக்கடியில் கையைவிட்டு அந்தப் புத்தகத்தை எடுத்து அவளிடம் நீட்டினார். எனக்கு உஷாராகக் கண்காணிக்கும்" ஆசாமிகளைச் சந்திப்பதில் ரொம்பப் பிரியம்!" என்று கிண்டல் செய்தார்.

ஆனால் நீங்கள் எப்படி அதைச் செய்தீர்கள்? அந்தப் புத்தகத்தின் மேல் என் கையை வைத்திருந்தேனே; ஒரு வினாடி தானே என் கண்ணை வேறு பக்கம் திருப்பினேன்?" என்று பிரமித்துப் போனாள் அந்தப் பெண்.

மறுபடியும் ஒருநாள், இதற்காகத் திரும்பிவந்து, உனக்குச் சொல்லிக் கொடுத்துவிட்டுப் போகிறேன்!" என்று கூறிவிட்டு, விறு விறுவென்று புத்தக சாலையைவிட்டுப் புறப்பட்டார்.

வீதியையடைந்தபொழுதுதான் அவளது பெயரைக் கேட்காமல் வந்து விட்டோமே என்ற எண்ணம் பிரபாகருக்கு வந்தது.

மஹேஸ்வரி — இதுதான் அந்தப் பெண்ணின் பெயர் —புத்தகசாலை ஜன்னலின் வழியாக, பிரபாகர் தலைமறையும் மட்டும் பார்த்துக் கொண்டு இருந்தாள். அவளுக்கு முதன் முதலில் தோன்றிய எண்ணம் என்னவென்றால், பிரபாகர் ஒரு தற்பெருமைவாதி; அவர் முகத்தில் விழிக்கக் கூடாது" என்பதுதான்! இருந்தபோதிலும், அவரை அப்படிச் சொல்வதற்குமில்லை.

மீண்டும் எப்பொழுதாவது இந்த விசித்திர மனிதரைச் சந்திப்போமா என்ற எண்ணம், அவளை அறியாமலே அவள் மனதில் எழும்பியது.

## *3. டாக்டரின் பரலோகபவனத்தில் விசித்திர நபர்கள்!*

பிரபாகருக்கு, மீண்டும் ஒரு முறை அந்தச் சந்திப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று, ஆசையாக இருந்தது! ஆனால் மஹேஸ்வரியை மறுபடியும் சந்திக்க வேண்டும் என்றால், அதற்கு ஒரே ஒரு வழிதானிருந்தது. அந்த வழியை ஏற்படுத்திக் கொள்வதற்காகப் பிரபாகர், டாக்டர் ரஞ்சித் சிங்கைத் தேடிப் புறப்பட்டார்.

ரட்லெண்ட் கேட்டில் இருந்த பரலோக பவனத்தை நெருங்கிய சப் இன்ஸ்பெக்டர் பிரபாகர், தன் முகத்தில் அரும்பியிருந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டார். ஏனென்றால், பரலோக பவனத்தைக் கண்டுபிடிப்பது, பரலோகத்தையே எட்டிப்பிடிப்பது போன்றிருந்தது! அந்த விலாசத்தைச்

சொல்லி, யாரையாவது கேட்டால், சிலர் சிரித்தார்கள்; சிலர் கிண்டல் செய்வதாக எண்ணி ஆத்திரப்பட்டார்கள்! சிலர் பைத்தியம் என்று நினைத்து விலகிப் போனார்கள்! ரட்லெண்ட் கேட் பகுதியைப் பலமுறை வலம் வந்தபிறகு, எதிர்பாராத விதமாக பரலோக பவன"த்தை அடையும் பாக்கியம் கிடைத்தது. அதைக் கண்டுபிடித்த பொழுது, கிட்டத்தட்ட இருட்டிவிட்டது.

பாழடைந்த ஒரு காம்பௌண்டுச் சுவற்றிலே, பரிதாபகரமாக ஊசலாடிக் கொண்டிருந்த ஒரு கேட்"டிற்குப் பின்னால் டாக்டர் ரஞ்சித்சிங் வசித்துவந்த பரலோக பவனம்" இருந்து வந்தது.

காம்பௌண்டிற்குள், ஏராளமாகப் புல்பூண்டுகள் முளைத்தும் உயரமாகக் காட்டுச் செடிகள் வளர்ந்தும், ஒரு சிறு வனமாகவே காட்சியளித்தது. பரலோக பவனம்" பரலோக யாத்திரைக்குத் தயாராகிவிட்ட ஒரு கட்டிடத்தைப் போலவே இருந்தது.

அந்த வீட்டுக் கதவை, வெகுநேரம் வரை தட்டி இடித்துக்கொண்டிருந்தார் பிரபாகர். மனித அரவமே இல்லாதிருந்த அந்த வீட்டில், யாரும் குடியிருக்கிறார்களா என்ற சந்தேகம் பிரபாகருக்கு எழுந்தது. அந்தச் சமயத்தில், யாரோ கதவை நோக்கி நடந்து வருவது தெரிந்தது. க்ளாங்" என்ற சத்தத்துடன், உள்ளே சங்கிலி திறக்கப்படும் சத்தம் கேட்டது. கதவை இரண்டு அங்குல அளவிற்குத் திறந்துகொண்டு, ஒரு விசித்திர உருவம் பிரபாகரை எட்டிப் பார்த்தது.

அந்த முகத்தைப் பார்த்ததும், பிரபாகர் ஆச்சரியத்தால் நெடு மூச்சுவிட்டார். அந்த முகம் நீளமாக இருந்தது. ஒரு பெரிய தாடி, அந்த முகத்தின் பாதிப் பகுதியை ஆக்ரமித்துக் கொண்டிருந்தது. பாக்கியிருந்த இடத்தில், குறுக்கும் நெடுக்குமாகக் கோடுகள் வளைந்து, சுருங்கிப்போன மாம்பழம் போலிருந்தது. துஷ்டத்தனம் நிறைந்த கொடிய கண்களிரண்டு, அந்த முகத்தை இன்னும் பயங்கரமாக்கிக் கொண்டிருந்தது.

டாக்டர் ரஞ்சித் சிங் இருக்கிறாரா?" என்றார் பிரபாகர்.

என் பெயர்தான் ரஞ்சித் சிங்" என்று கடுமையாகக் கூறிய அந்த உருவம், என்னைப் பார்த்துப் பேசவந்தீர்களா? — ரொம்ப ஆச்சரியமாக

இருக்கிறது. நான், யாரையும் வீட்டில் சந்தித்துப் பேசும் வழக்கமில்லையே?" என்றார்.

கதவைத் திறப்பதா வேண்டாமா என்று ஒருவினாடி டாக்டர் ரஞ்சித் சிங் நினைத்தார். பின்புறம் திரும்பி, உள்ளே இருந்த ஒரு நபரிடம் ஏதோ கூறினார். அந்தச் சமயத்தில், உள்ளிருந்த நபரைப் பிரபாகர் பார்த்துவிட்டார். பிரபாகரைக் கண்டதும் அந்த நபர் வேகமாக உள்ளே மறைய ஆரம்பித்தார்.

அந்த நபரை நோக்கி, என்னப்பா பிச்சைக்கண்ணு! எதிர்பாராத சந்திப்பாக இருக்கிறதே!" என்றார் பிரபாகர்.

டாக்டர் ரஞ்சித் சிங் ஏதோ முணுமுணுத்தபடி கதவை நன்றாகத் திறந்துவிட்டார். பிச்சைக்ண்ணுவைப் பல சந்தர்ப்பங்களில், சப் இன்ஸ்பெக்டர் பிரபாகர் பார்த்து இருக்கிறார். ஆனால் அன்று இருந்ததைப் போல் அவ்வளவு பிரமாதமாக அவன் உடை உடுத்திக்கொண்டதில்லை.

பிச்சைக்கண்ணு லேசாகத் தயங்கியபடியே, எனது நண்பர் டாக்டர் ரஞ்சித் சிங்கைப் பார்க்க வந்தேன்!" என்று மழுப்பினான்.

பிரபாகர் அவனை உற்றுப் பார்த்தபடியே, பெரிய பிரபு போலக் காட்சியளிக்கிறாயே! இப்பொழுது என்ன விளையாட்டு நடத்திக் கொண்டு இருக்கிறாய், பிச்சைக்கண்ணு?" என்று கேட்டார்.

இப்பொழுது எனக்கு, நல்ல வேலை கிடைத்திருக்கிறது சார்! — ரொம்ப நேர்மையான வேலை! இனி நான் சங்கடத்தில் சிக்கிக் கொள்ளமாட்டேன்! சரி; நான் டாக்டரிடம் சொல்லிவிட்டுப் புறப்படுகிறேன்!" என்று கூறிவிட்டு டாக்டர் ரஞ்சித் சிங்கிற்கு வணக்கம் செலுத்திவிட்டு, வேகமாக இறங்கி வெளியே நடக்க ஆரம்பித்தான்.

பொறு, பிச்சைக்கண்ணு! உன்னிடம் கொஞ்சம் பேசவேண்டும்! நான் டாக்டருடன் பேசிவிட்டு வரும்வரை, நீ இங்கேயே காத்திரு!" என்றார் பிரபாகர்.

பிச்சைக்கண்ணு ஒரு வினாடி தயங்கினான். பிறகு வாயிற்படி யருகே நின்றுகொண்டிருந்த டாக்டர் ரஞ்சித் சிங்கை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்தான்; சரி சார்; நான் ரொம்ப நேரமிருக்கமுடியாது. எனக்கு முக்கியமான

வேலையொன்று இருக்கிறது!" என்று கூறிவிட்டு டாக்டரை நோக்கி உரத்த குரலில், நீங்கள் கொடுத்த மருந்திற்கு, ரொம்பவும் நன்றி செலுத்துகிறேன் டாக்டர்!" என்று கூறினான்.

மருந்து" என்று அவன் கூறியதும், தன்னை ஏமாற்றத்தான் என்று புரிந்து கொண்டார் பிரபாகர். அங்கிருந்து பிரபாகர் நேராக டாக்டர் ரஞ்சித் சிங் இருந்த இடத்திற்குச் சென்றார். இருவரும் உள்ளே ஹாலுக்குச் சென்றார்கள். பிரபாகர், தனது விலாசமெழுதின சீட்டை எடுத்து டாக்டரிடம் கொடுத்தார். அதை வாங்கிப் படித்த டாக்டர், நீங்கள் போலீஸ்காரரா? என்ன விசித்திரம்! வெகுநாட்களாகப் போலீசார் என்னை வந்து தொந்தரவு செய்யவில்லை — ஒரு சிறு நாயை, சோதனையிட்டு ஆராய்ச்சி நடத்தியதற்காக, ஒரு பெரிய விஞ்ஞானிக்கு எவ்வளவு பெரிய தொந்தரவு கொடுத்து விட்டார்கள். அவர்கள்! அதற்காக எவ்வளவு கூப்பாடுகள்; தொந்தரவுகள்! சரி; இப்பொழுது நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

தான் வந்த வேலையைச் சுருக்கமாகக் கூறினார் பிரபாகர். ஆனால் அதற்கு டாக்டர் அளித்த பதில், பிரபாகரை நிலைதடுமாறச் செய்து விட்டது!

அந்தப் புத்தகம்தானே? ஆமாம்; அது என்னிடம்தான் இருக்கிறது! அது என் புத்தக அலமாரியில் இருக்கிறது! அது எனக்குத் தேவையாக இருந்தது. அதை எடுத்து வந்துவிட்டேன்!"

பிரபாகர் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, ஏன் அப்படிச் செய்தீர்கள்?" என்று கேட்டார்.

அது புத்தக சாலைதானே? புத்தகத்தை இரவல் கொடுக்கத்தானே அவர்களிருக்கிறார்கள்? அதை இரவல் வாங்கிவர நினைத்தேன்; அதனால் அதை எடுத்துக்கொண்டு வந்தேன்! நான் மறைத்துக்கொண்டு வரவில்லையே — என் கையில்தானே கொண்டு வந்தேன்! — சரி; இப்பொழுது படித்து முடித்துவிட்டேன். அது எனக்குத் தேவையில்லை; அதை எடுத்துக்கொண்டு போகலாம்! அந்தப் புத்தகத்தை எழுதிய ஸ்வாமி நிலை கொளானந்தர் ஒரு வடிகட்டிய முட்டாள். அவன் எழுதியிருப்பது எல்லாம் சுத்த அபத்தம். அவன்

தத்துவங்கள், மகா, மகா மட்டம்!" என்று சரமாரியாகப் பொழிந்தார் டாகட்ர் ரஞ்சித் சிங்.

சப் இன்ஸ்பெக்டர் பிரபாகர் மிகப் பொறுமையோடு, புத்தக சாலைகளில் புத்தகங்களை இரவல் வாங்கி வருவதென்றால், எப்படி வாங்கிவர வேண்டும் என்பதைப் பற்றி டாக்டருக்கு கொஞ்சநேரம் உபதேசித்துவிட்டு, அங்கிருந்து புறப்பட்டார்.

பிச்சைக்கண்ணு அவருக்காகக் காத்துக் கொண்டு இருந்தான். அவனை நெருங்கியதும், பிச்சைக்கண்ணு; உன்னைப்பற்றி எனக்குச் சில விவரங்கள் தெரியவேண்டும்! இந்த ரஞ்சித் சிங் உனது நண்பரா?" என்று பிரபாகர் கேட்டார்.

அவர் என் டாக்டர்!" என்று கூசாமல் புளுகினான் பிச்சைக்கண்ணு.

பிச்சைக்கண்ணுவிடம் பிரபாகருக்குத் தனி அபிமானம் இ ருந்தது. பிச்சைக்கண்ணுவின் முக்கியமான தொழில், மோட்டார்த் திருட்டுத்தான். அதாவது, யாராவது மோட்டார்காரை நிறுத்திவிட்டு ஹோட்டலுக்கோ, கோயிலுக்கோ, அல்லது வேறு எங்கோ போயிருக்கும் போது, பிச்சைக்கண்ணு அந்தக்காரில் ஏறி உட்கார்ந்து, பெங்களூரை நோக்கி மாயமாய் மறைந்து விடுவான். பெங்களூர் சென்றதும் அந்தக்கார், அக்கு வேறு, ஆணிவேறாக" பிரிக்கப்பட்டு, இருந்த தடயமே தெரியாது மறைந்துவிடும். அது சம்பந்தமாக இரண்டு தடவை அவன் சிறைக்குப் போய் வந்திருக்கிறான். இரண்டு தடவையும் அவனைச் சிறைக்கு அனுப்பியது, சப் இன்ஸ்பெக்டர் பிரபாகர்தான்!

இப்பொழுது எனக்கு நிரந்தரமாக டிரைவர் உத்தியோகம் கிடைத்து இருக்கிறது. ஆண்டியப்பன் என்பவனிடம் நான் வேலை பார்த்துவருகிறேன். இப்பொழுது ரொம்பவும் யோக்யமானவனாக மாறிவிட்டேன். எந்தவிதமான திருட்டிலும் ஈடுபடுவது கிடையாது!" என்றான் பிச்சைக் கண்ணு.

ஆண்டியப்பன் எங்கே குடியிருக்கிறார்?"

கோடம்பாக்கத்தில் உள்ள, சூளைமேட்டுப் பகுதியில் குடியிருக்கிறார். இங்கிருந்து ஒன்றரை மைல் தூரம்தான் இருக்கும். வேண்டுமானால் நீங்கள்

போய் விசாரிக்கலாம்!" என்றான் பிச்சைக் கண்ணு.

உனது பழைய சோகக் கதை, அவருக்குத் தெரியுமா?"

நன்றாகத் தெரியும். நான் எல்லாவற்றையும் அவரிடம் சொல்லி விட்டேன். தன்னிடமிருந்த டிரைவர்களிலேயே, நான்தான் ரொம்பவும் நல்லவன் என்று சொல்கிறார் அவர்"

பிரபாகர் அவனைக் கூர்ந்து கவனித்தார்.

இப்பொழுது போட்டுக் கொண்டு இருக்கிறாயே, இம்மாதிரி உடைகளைத் தான் அணிந்து கொள்ள வேண்டும் என்று உன் யஜமானன் வற்புறுத்துகிறாரா?" என்று கேட்டார்.

நான் லீவில் போகிறேன் சார்! உங்களுக்குத் தேவையானால் இதோ என் விலாசம்" என்று கூறிக்கொண்டே தன் சட்டைப்பையில் இருந்து, தனக்கு வந்த ஒரு கவரை எடுத்துக்கொடுத்தான். அதில், சென்னை, கோடம்பாக்கம், சூளைமேடு, மகா—ஸ்ரீ ஆண்டியப்பன் மேல்பார்த்து, பிச்சைக் கண்ணுவிடம் கொடுப்பது" என்று எழுதியிருந்தது.

என்னை அவர்கள் குழந்தைபோல் நடத்துகிறார்கள் சார். ஆண்டியப்பனையும், அவர் சம்சாரத்தையும்போல, உலகத்திலேயே மனிதர்கள் இருக்கமாட்டார்கள், சார்!" என்று வானளாவப் புகழ்ந்தான் பிச்சைக்கண்ணு.

சந்தோஷம் பிச்சைக்கண்ணு! நான் வெளிப்படையாகப் பேசுவதற்கு வருத்தப்படாதே; நீ இந்த ஜன்மத்தில் திருந்துவாய் என்று நான் நினைக்கவே இல்லைஸ!" என்று சிரித்துக் கொண்டே கூறினார் பிரபாகர்.

பிச்சைக்கண்ணு ஒன்றும் பேசாமல் ஒரு மௌனப் புன்னகையோடு அந்த இடத்தை விட்டுக் கிளம்பினான்.

பிரபாகர் அதன் பின்னர் சுவாமி நிலைகொளானந்தர் எழுதிய அந்தத் தத்துவஞானப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு, நேராக மலை மேல் விநாயகர் லைப்ரரியை நோக்கிச் சென்றார். ஆனால் அவர்போன நேரத்தில், மஹேஸ்வரி வீட்டிற்குப் போய்விட்டாள்!

அவ்வளவு நேரத்திற்குமேல் வக்கீல் ராஜாங்கம் பிள்ளையைப் போய் பார்ப்பது உசிதமல்ல என்று நினைத்தார் பிரபாகர். நேராகத் தம் வீட்டிற்குத் திரும்பினார். வீட்டை நெருங்கும் பொழுது, யாரோ கூப்பிடுவது போலிருந்தது. திரும்பிப் பார்த்தார். அவரை நோக்கி வேதநாயகம், வேகமாக ஓடி வந்து கொண்டிருந்தான். சாதாரணமாக வேதநாயகம், அவ்வளவு தூரம் நிலைகுலைந்து போகமாட்டான். அவனுடைய முகம் இருளடைந்து மரணபீதி மண்டியிருந்தது.

இன்ஸ்பெக்டர் சார்! உம்மோடு பேசவேண்டும்!" என்று வேதநாயகம் நடுங்கும் குரலில் கூறினான். அவனை அந்த நிலையில் பிரபாகர் பார்த்ததேயில்லை.

என்ன, வேதநாயகம்? ஏதாவது தகராறா?"

வேதநாயகம், வீதியை இருமருங்கிலும் கவனித்தபடி, எனக்குத் தெரியாது சார்; என்னைத் தொடர்ந்து வருகிறார்கள்!" என்று கூறினான்.

போலீஸாரா? — மாட்டார்களே!" என்றார் பிரபாகர்.

வேதநாயகம் பொறுமையிழந்து, போலீஸா? போலீஸ் என்னைப் பின் தொடருவதைக் கண்டு கவலைப்படுவேன் என்றா நினைக்கிறீர்? இல்லை; காலையில் உம்மிடம் கூறினேனே. அந்த ஆள்! அந்த விவகாரத்தில் ஏதோ தகராறு இருக்கிறது! காலையில் உம்மிடம் ஒரு விஷயத்தைச் சொல்லாமல் மறைத்து விட்டேன். நான் அந்த வேலையைச் செய்து கொண்டிருக்கும் பொழுது, அந்த ஆள் ஒரு சுழல் துப்பாக்கியைத் தனது காற் சட்டைப் பைக்குள் போடுவதைக் கவனித்தேன். அவன் அந்தப் பைக்குள்ளேயே கைவிட்டுக் கொண்டிருந்தான். பூட்டுகளைத் திறந்து — கதவையும் திறந்துவிட்டேனானால் நான் அந்த இரண்டாயிரம் ரூபாயையும் வாங்குவதற்கு உயிரோடு இருக்கமாட்டேன் என்ற சந்தேகம் எனக்கு எழுந்தது. ஏனென்றால், அந்த ஆள், என்னைச் சுட்டுக்கொன்று அங்கேயே புதைத்து விட்டு வந்திருப்பான்! பாதிவேலை நடக்கும் பொழுது, சிறிது வெளியே சென்றுவிட்டு வருவதாகப் புளுகினேன். அவன் அனுமதி கொடுத்தான். நான் தப்பித்தோம், பிழைத்தோம் என்று, வேகமாக ஓடிவர ஆரம்பித்தேன். ஏதோ ஒன்று என்னைத்

துரத்தியது — கடவுளுக்குத்தான் தெரியும் — அது என்ன என்று! — அது ஏதோ மிருகம் போலிருந்தது! என்னிடம், துப்பாக்கியோ, பிச்சுவாவோ கிடையாது! — அவற்றையெல்லாம் நான் வைத்துக்கொள்வது இல்லை என்று உமக்கே தெரியும்!" என்று வேதநாயகம் விவரமாகக் கூறினான்.

அவனை அழைத்து கொண்டு, பிரபாகர், தம் ஜாகை நோக்கி நடந்தார்.

வீட்டிற்குள் சென்றதும், கதவைத் தாளிட்டுவிட்டு, வேதநாயகம்; நடந்தது எல்லாவற்றையும், என்னிடம் மறைக்காமல் சொல்லு — நீ செய்ததாகச் சொன்ன அந்த மர்ம வேலை என்ன?" என்று ஆதரவாகக் கேட்டார்.

வேதநாயகம் அறை பூராவும் ஒரு முறை கண்ணோட்டம் செலுத்தினான். பிறகு எழுந்து ஜன்னலுக்கு வெளியே பார்த்தான். திரும்பி வந்து மெதுவாக ஆசனத்திலமர்ந்தான்.

பிறகு மெல்லிய குரலில், செத்துப்போன ஒருவனின் சமாதியைத் திறக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தேன்!" என்றான்.

## *4. அவரவர் கதைகள்!*

வேதநாயகம் கூறியதைப் பிரபாகரால் நம்பவே முடியவில்லை. ஆனால் வேதநாயகம் ரொம்பவும் உறுதியாகக் கூறினான். அதைப் போல, அவன் தன்னிடம் பொய் சொல்லவேண்டிய அவசியம் இல்லையென்று பிரபாகர் கருதினார்.

செத்துப் போனவனின், சமாதியைத் திறக்க முயற்சி செய்தாயா? அதென்ன விசித்திரம்? எனக்கு பூரா விவரமும், சொல்லு வேதநாயகம்!"

என்னால் சொல்ல முடியாது, சார்"! எனக்கு இன்னும் பீதியாக இருக்கிறது. அந்த மனிதன், பைசாசத்தைப் போன்றவன்! அவனிடம் சிக்கிக்கொள்வதைவிட, தற்கொலை செய்து கொண்டு இறந்துபோக நான் தயாராக இருக்கிறேன்!" என்றான் வேதநாயகம்.

அந்த மனிதன் யார்?"

நான் உம்மிடம் சொல்லமாட்டேன் — கடைசியில் சொன்னாலும் சொல்லலாம். ஆனால் இப்பொழுது சொல்ல மாட்டேன். எங்காவது ஒரு அமைதியான இடத்தில் உட்கார்ந்து, எல்லாவற்றையும் ஒரு காகிதத்தில் எழுதி வைக்கப் போகிறேன்—எனக்கு ஏதாவது நேரிட்டால், அதாவது பயன்படட்டும்!" என்று கவலை தோய்ந்த குரலில் கூறினான் வேதநாயகம்.

வேதநாயகத்தைப்பற்றி, பிரபாகருக்கு நன்றாகத் தெரியும். அவன் இவ்வளவு தூரம் பதறிப்போனதை, அவர் வாழ்நாளில் கண்டதில்லை. பிரபாகர், அவனைச் சாப்பிடச் சொன்ன பொழுது, தன்னால் சாப்பிட முடியாது என்று தடுத்துவிட்டான். அவனை வற்புறுத்த விரும்பாத பிரபாகர் சமையற்காரியிடம் கூறி சாப்பாட்டை எடுத்துப்போகச் சொல்லிவிட்டார். அவனை அதற்குமேல் கேள்வி கேட்பதில் பயன் இல்லை என்று அவருக்குத் தெரியும்.

ஏன், வேதநாயகம்! நீ இன்றிரவு இங்கே தங்கியிருந்து உன் மனதில் மறைந்துகிடக்கும் மாயக்கதையை, ஏன் எழுதக்கூடாது? உன்னை நான் உடனடியாக எழுதிக்கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தவில்லை; ஆனால் வேறு எந்த இடத்தையும்விட, இந்த இடம் உனக்கு ரொம்பப் பந்தோபஸ்தானது என்று கூறுகிறேன்!" என்று ஆதரவோடு கூறினார் பிரபாகர்.

அதே யோசனை வேதநாயகத்திற்கும், முன்பே தோன்றி இருந்து இருக்கவேண்டும். அதனால்தான், பிரபாகர் சொன்ன உடனேயே, வேதநாயகம் அந்தத் திட்டத்திற்கு ஒப்புக்கொண்டான்.

பிரபாகர் சாப்பிட்டு முடிந்ததும், டெலிபோன் மணி 'கணகண' வென்று அடித்தது. ஸப் இன்ஸ்பெக்டர் பிரபாகரா பேசுவது?" என்று டெலிபோனில் குரல் வந்தது. அந்தக்குரலை பிரபாகர் அதற்குமுன் கேட்டதில்லை.

ஆமாம்!" என்றார் டெலிபோனில் பிரபாகர்.

நமஸ்காரம்!.........நான்தான் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை பேசுகிறேன். இன்று உதவி கமிஷனரிடமிருந்து, எனக்கு டெலிபோன் செய்தி வந்தது. உமக்காக நான் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டு இருந்தேன் இன்றிரவே என்னைச் சந்திக்க முடியுமா?" என்று படபடப்போடு கேட்டார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

அவர் குரலில் தொனித்த அவசரத்தைப் பிரபாகர் கவனித்தார்.

அவசியம் வருகிறேன்!"

இன்னும் கால்மணி நேரத்திற்குள் வந்து சேர்ந்து விடுவீர்களா?"

ஓ; வந்துவிடுவேன்!" என்று தயங்காமல் கூறினார் பிரபாகர். வேதநாயகம் காத்திருப்பதும், அவனிடம் அந்த மர்மக்கதையைக் கேட்டுத் தெரிந்துகொள்வதின் அவசியமும், அவர் மனதைவிட்டு அகலவில்லை என்றாலும், அவனைத் தனியாக அங்கே விட்டுப் போனால், அவன் தாராளமாக எழுதுவதற்கு ஏதுவாகுமென்று நினைத்தார்.

தனது சமையற்காரியைக் கூப்பிட்டு, அன்றிரவு அவளுடைய சகோதரிவீட்டில் படுத்துக்கொள்ளும்படி கூறினார். தானும் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை வீட்டிற்குப் போவதால், வேதநாயகம், எந்தவித இடையூறும் இல்லாமல், நிம்மதியாக எழுதுவான் என்று நினைத்தார்.

அந்த யோசனைக்கு வேதநாயகம் உடனே ஒப்புக்கொண்டான்.

சப் இன்ஸ்பேக்டர் பிரபாகர், கால்மணி நேரத்தில், மாம்பலத்தில் உள்ள வக்கீல் ராஜாங்கம் பிள்ளை வீட்டை அடைந்தார்.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளைக்கு ஐம்பது அல்லது ஐம்பத்தைந்து வயது இருக்கலாம். ரொம்ப உயரமாகவும், ஒல்லியாகவும் இருந்தார். அவரது அடர்ந்த புருவமும், வலிய தவடையும், அவர் ஒரு சண்டைக்காரரென எடுத்துக்காட்டின. அவர் வளர்த்திருந்த கிருதாமீசை, அவருக்கு மூர்க்கத்தனமான தோற்றத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. ஆனால் அவரது அகன்ற கண்களில் அலாதியான கவர்ச்சி தென்பட்டது. அதைப் பார்த்த பிரபாகருக்கு, அவர்மீது ஒரு பற்றுதல் தோன்றியது.

உட்கார், பிரபாகர்! நீ தான், உதவிக் கமிஷனர் கூறிய துப்பறிவாளனா? —ம்......! நாளையிலிருந்து போலீஸ் படையைவிட்டு விலகப்போவதாகவும், உனக்குப் பொழுது போக்குக்காக, ஒருவேலை வேண்டும் என்று விரும்பியதாகவும் உதவிக் கமிஷனர் கூறினார். உனக்கு நான் ஒருவேலை தயாராக வைத்திருக்கிறேன். எனது நிம்மதியைக் குலைத்துக் கொண்டிருக்கும்

அந்தக் கவலை, உனக்குப் பொருத்தமான பொழுது போக்காகவே இருக்கும்!" என்று கூறிவிட்டு வக்கீல் ராஜாங்கம் பிள்ளை, எழுந்து குறுக்கும் நெடுக்குமாக அந்த அறையில் உலாவ ஆரம்பித்தார்.

நான் ஒரு வக்கீல் என்னைக் கோர்ட்டுகளில் நீ பார்த்திருக்க முடியாதென்றாலும், என்னைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பாய். நான், கோர்ட்டு வழக்குகளுக்கு ஆஜராவது ரொம்ப அபூர்வம். பிரபலமான பல கம்பெனிகளுக்கும், பெரிய எஸ்டேட்டுகள் பலவற்றிற்கும், நான் பிரதிநிதி ஹோதாவில் வேலை செய்து வருகிறேன். இதைத்தவிரப் பல தரும ஸ்தாபன டிரஸ்டுகளுக்கும், டிரஸ்டியாக இருந்து வேலை பார்த்து வருகிறேன். லக்ஷக்கணக்கான சொத்துக்கள் உள்ள ராமாநந்தம் எஸ்டேட்டுக்கும் நான்தான் டிரஸ்டியாக இருந்து வருகிறேன் அந்த எஸ்டேட்டின் நிர்வாகப் பொறுப்புகளை, எதற்காக ஏற்றுக் கொண்டோம் என்று, என்னைப்பார்த்து நானே பரிதாபப்படுகிறேன்! ராமாநந்தர் தம் மகன் பவாநந்தம் மைனராக இருக்கும் பொழுது, என்னை அவனுக்குக் கார்டியனாக நியமித்துவிட்டு இறந்துபோனார். ராமநந்தருக்குத் தங்கக் கட்டிச் சாமியார் என்கிற புனைப்பெயரும் உண்டு! அந்த ஆசாமி முன்கோபம் படைத்தவர்; ஆத்திரக்காரர்; அரைப்பைத்தியம்! அவர்கள் பரம்பரையே அப்படித்தான் இருந்தது உனக்கு ராமாநந்தர் எஸ்டேட் இருக்கும் இடம் தெரியுமா?" என்று கேட்டார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

பிரபாகர் புன்னகை புரிந்தபடியே, ரட்லண்ட் கேட்டில் இருக்கிற ராமாநந்தர் எஸ்டேட்டுக்குச் சொந்தமான ஒரு இடத்திற்கு நான் இன்று மாலை போயிருந்தேன்!" என்று கூறிவிட்டு, டாக்டர் ரஞ்சித் சிங்கின் வீட்டை மனதில் நினைத்துக்கொண்டார் பிரபாகர்.

ராஜாங்கம் பிள்ளை யோசனையோடு நடந்து கொண்டிருந்தார்.

அந்தப் பிராந்தியத்தில்தான், ராமாநந்தரின் குமாரர் பவானந்தம் வசித்து வருதிறானோ?" என்று கேட்டார் பிரபாகர்.

வக்கீல் ராஜாங்கம்பிள்ளை, கண்களில் ஆத்திரம் ஜொலிக்க, அவன் அங்கே வசிக்கவில்லை அவன் அங்கே வசிக்கவில்லை! அப்படி இருந்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும்! அந்த பவானந்தம் எந்த

இடத்திலுமே வசிக்கவில்லை! அதாவது ஒரு இடத்தில், இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு மேல் அவன் தங்குவதே இல்லை. அவன், நாடோடிகளுக்கெல்லாம் மேலான நாடோடி! சிறுவயதில், அவன் அப்பாவும் அப்படித்தான் இருந்தார். தம்பிக்கண்ணு— அதுதான் அவனது செல்லப்பெயர் சென்ற பத்து வருஷங்களாக, பவானந்தம் ஒரு ஊரிலிருந்து இன்னெரு ஊருக்கு, ஒரு நாட்டிலிருந்து மற்றெரு நாட்டிற்குமாக, ஏராளமாகச் செலவு செய்து கொண்டு சுற்றித் திரிகிறான். அவன் எவ்வளவு செலவு செய்தாலும் அந்த எஸ்டேட் தாங்கும் எப்போதாவது அபூர்வமாகத்தான் பவானந்தம் சென்னைக்கு வருவான்— அவனை நான் நேரில் பார்த்து நான்கு வருஷங்கள் ஆகின்றன!" என்று கூறிய வக்கீல் ராஜாங்கம் பிள்ளை கொஞ்சநேரம் ஏதோ யோசனை செய்துகொண்டு நின்றுவிட்டு, அவனுடைய முழு சரித்திரத்தையும் சொன்னால்தான், உனக்குப் புரியும். ராமாநந்தர் இறந்தபொழுது, பவானந்தத்திற்கு ஆறு வயது. அவனுக்குத் தாயார் கிடையாது. நெருங்கிய சொந்தக் காரர்களும் இல்லை. மாமனோ, சிற்றப்பாவோ இருந்திருந்தால், பவானந்தத்தை அவர்கள் கையில் ஒப்புவித்து விட்டு, என் பொறுப்பைக் கழித்துக் கொண்டடு இருப்பேன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஒருவருமே இல்லை! பையன் ரொம்பவும் நோஞ்சலாக இருந்தான். அதனால் எட்டாவது வயதில்தான் அவனை ஒரு ‘கான்வென்ட்’பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவைத்து, ‘அப்பாடா’ என்று உட்கார்ந்தேன்! ஆனால் அவன் தினசரி, தன்னை அழைத்துப் போய் விடும்படி கடிதம் அனுப்பிக் கொண்டேயிருந்தான். செய்யும் வகை அறியாமல், அவனுக்கு வீட்டிலேயே படிப்புச் சொல்லிக்கொடுக்க உபாத்தியாயரை அமர்த்தினேன். அது ஓரளவு பயனளித்தது என்றே சொல்ல வேண்டும். மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் அவன் வெற்றிகரமாகவே பாஸ் செய்தான். அவனது உடல் நிலை ரொம்ப மோசமாக இருந்ததாலும், அவனுக்கு மேற்கொண்டு படிக்க ஆவல் இல்லாமலிருந்ததாலும், அவன் வெளியிடங்களைப் போய்ச் சுற்றிப் பார்த்துவரட்டுமென்று, அவனுடைய உபாத்தியாயரோடு அனுப்பி வைத்தேன். அப்படி அனுப்பியதுதான் தவறாக முடிந்துவிட்டது. ஊர் சுற்றவேண்டுமென்ற எண்ணம் அவன் உள்ளத்தில் வலுவாக இடம் பெற்று விட்டது! அது முதல் சுற்ற ஆரம்பித்தான்; சுற்றினான்; சுற்றிக்கொண்டே இருக்கிறான்! நான்கு வருஷங்களுக்குமுன் அவன்

சென்னைக்கு வந்தான். என்னைச் சந்தித்தான். ஜப்பான் தேசத்திற்குப் போவதாகக் கூறினான். அங்குள்ள குடிசைத் தொழில் முறைகளை ஆராய்ந்து ஒரு புத்தகம் எழுதப் போவதாகக் கூறினான்—இப்பொழுது என் கவலையெல்லாம் அந்தப் பையனைப் பற்றிதான்! அடிக்கடி பணம் அனுப்பச் சொல்லி, அவனிடமிருந்து தாக்கீது வருதிறது. பெரும் பெரும் தொகையாக, நான் தந்தி மணியார்டர் செய்துகொண்டிருக்கிறேன். அவன் மேஜர் ஆகிவிட்டதால், எனக்கு பணப் பொறுப்பு எதுவும் கிடையாது இருந்த போதிலும் இப்படி அனுப்பி வருகிறோமே என்ற கலவரம் என் மனதை வாட்டுகிறது!" என்றார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

அவனது பண நிலைமை—! என்று ஆரம்பித்தார் பிரபாகர்.

அசைக்க முடியாத நிலைமையில் இருக்கிறது; அசைக்க முடியாத நிலைமையிலிருக்கிறது! அதைப் பற்றிக் கவலையே கிடையது! என் மனதை வாட்டுவதெல்லாம், பையன் வெகு காலமாக என் கண் பார்வையைவிட்டு மறைந்திருக்கிறானே என்பதுதான். அவனுக்கு எவ்வளவோ அபாயங்கள் நேரலாம்; தகாத ஆட்களோடு கூட்டுறவு ஏற்படலாம்—இந்தக் காரணங்களால், நான் அவனோடு தொடர்பு கொள்ளத் துடிக்கிறேன். நேரடியாக அல்ல : மூன்றாவது நபரின் மூலமாக சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், நீ அடுத்தவாரம் கப்பலில் புறப்பட்டு, ஹாங்காங் துறைமுகத்திற்கும், பிறகு ஜப்பான் நாட்டிலுள்ள டோக்கியோ நகரத்திற்கும் சென்று வரவேண்டும். அங்கு சென்று பவானந்தத்தோடு தொடர்புகொள்ள வேண்டும். நான் அனுப்பினேன் என்று தெரியாமல் நீயாக அவனைச் சந்திப்பதுபோல் சந்தித்து அவனிடம் ஒட்டுறவாகப் பழகவேண்டும். தம்பிக்கண்ணு என்ற பெயரில்தான், அவன் சம்ஸ்தான மகாராஜாவைப்போல் வெளி நாடுகளில் சுற்றுப் பிராயணம் செய்துகொண்டு வருகிறான்! அவன் அடிக்கடி ஓரிடம் விட்டு ஓரிடம் மாறிக்கொண்டே இருப்பதனால், நீயாக ஜாக்கிரதையாய் விசாரித்து அவனை விடாமல் தொடர்ந்து செல்ல வேண்டும், நான் அடிக்கடி தகவல்கள் அனுப்பி, அதன்படி நீ அவனைத் தேடிப்பிடிப்பதென்பது, சில சமயங்களில் முடியாத காரியமாகிவிடும், இருந்தபோதிலும் எனக்கு இடையில் தகவல்கள் வந்தால் நான் உனக்குத் தந்தி கொடுக்கிறேன். தம்பிக்கண்ணுவைத் தேடும் வேலைக்காக உன்னை நான் அனுப்பியபோதிலும், நீ எக்காரணங் கொண்டும்

போலீஸார் உதவியை நாடக்கூடாது. அதனால், அவன்மீது வீண்சந்தேகம் எழுந்து, அவனுக்குத் தொல்லைகள் ஏற்படலாம். எனக்குத் தெரியவேண்டிய விவரங்களெல்லாம் இவைகள்தான், அவனுக்கு ஏதாவது தீய சகவாசங்கள். ஏற்பட்டிருக்கின்றனவா; அதோடு, நான் அனுப்பும் பணம், அவனது சொந்த உபயோகத்திற்காகவே ஒழுங்காக செலவிடப் படுகிறதா...... இந்த விவரங்கள்தான் எனக்குத் தெரியவேண்டும். அவன் உலகின் பல்வேறு பகுதிகளில், பல தொழிற்சாலைகளில் ஷேர்கள் வாங்கி இருப்பதாக எழுதியிருக்கிறான். அவற்றில் சிலவற்றை எனக்கு அனுப்பி இருக்கிறான் என்றாலும், பெரும்பாலானவற்றை ஏதோ ஒரு பாங்கில் பாதுகாப்பாக வைத்திருப்பதாக எனக்கு எழுதியிருக்கிறான். இந்த விஷயத்தை, ஏன் இரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறேன் என்றால்—ஏன், போலீஸ் உதவியை நாட வேண்டாமென்று சொல்லுகிறேன் என்றால்—மேஜரான அவனது நடவடிக்கைகளை மேற்பார்க்கும் அதிகாரம் எனக்குக் கிடையாது என்பதுதான். அதனால்தான், பிரபாகர், நான் உன்னை அனுப்பினேன் என்று தெரியக் கூடாதென்று கேட்டுக்கொள்கிறேன்—இந்த வேலை உனக்குப் பிரியம்தானே பிரபாகர்?''என்று கேட்டார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

இது, ரொம்பவும் உற்சாகமான வேலைதான்! எவ்வளவு காலத்திற்கு நான் ஊர் சுற்ற வேண்டி இருக்கும்?"

எனக்குத் தெரியாது—சில மாதங்களாக இருக்கலாம்; சில வாரங்களாக இருக்கலாம்; அல்லது சில நாட்களாகக்கூட இருக்கலாம்! நீ, அவ்விடத்திய நிலவரத்தைப்பற்றி, எனக்கு அவ்வப்போது அனுப்பி வரும் தந்தியைப் பொறுத்தது அந்த விஷயம்! உனக்கு ஏற்படும் செலவுகளைக் கொடுத்து, ஒரு நல்ல தொகையையும் கொடுக்கிறேன்!" என்று கூறிவிட்டு, வக்கீல் ஒரு தொகையைக் குறிப்பிட்டார். அது ரொம்பவும் தாராளமான தொகையாயிருந்தது.

என்னை எப்பொழுது போகச் சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார் பிரபாகர்.

வக்கீல், ஒரு சிறிய டயரியை எடுத்துப் பிரித்துப்பார்த்தார், பிறகு, இன்று புதன்கிழமை. அடுத்த புதன்கிழமை நீ புறப்படலாம். தற்சமயம் அவன் ஹாங்காங் நகரத்தில்தான் இருக்கிறான். பிறகு டோக்கியோ நகரம் போகப் போவதாக எழுதி இருக்கிறான். டோக்கியோ நகரத்தில் விக்காடோ" ஹோட்டலில்தான் அவன் தங்கி இருப்பான். அவனுக்கு ஹாங்காங் தான் ரொம்பப் பிடித்த இடம்!" என்றார்.

பிரபாகர் புறப்படுவதற்காக எழுந்து கொண்டே, ஒரே ஒரு கேள்வி. அவன் யாரையாவது ஒரு பெண்ணே—அவன் மணம் செய்து கொள்ள லாயக்கில்லாத ஒரு பெண்ணை—மணந்து கொண்டிருப்பானோ என்று சந்தேகப்படுகிறீர்களா?" என்று கேட்டார்.

அப்படிச் சந்தேகிப்பதற்குக் காரணமே இல்லை. என்னவோ, என் சந்தேக மனதுதான் அப்படி அடித்துக் கொள்ளுகிறது!" என்று புன்னகையோடு கூறிய வக்கீல் ராஜாங்கம் பிள்ளை, நீ அவனிடம் நெருங்கிப் பழக ஆரம்பித்தால், சில விஷயங்களை அவனிடம் வற்புறுத்திக் கூற வேண்டும். அதில் முதலாவதாக அவனைச் சென்னைக்கு வந்துவிடும்படி வற்புறுத்த வேண்டும். இந்த எஸ்டேட்டின் முழுப் பொறுப்பையும் அவன் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவன் கூடிய சீக்கிரம் எவளையாவது ஒரு நல்ல பெண்ணைக் கலியாணம்செய்து கொண்டு, என் மனதிலிருந்தே மறைந்துவிடவேண்டும். ராமானந்த பவனம்" என்ற பங்களா, குடியிருக்க ஆளில்லாமல், க்ஷீணித்துக் கொண்டு வருகிறது. இவ்வளவு அருமையான ஒரு பங்களாவை, ஒரு பாதுகாப்பாளர் வசம் ஒப்புவித்து விட்டு, அவன் ஊரைச் சுற்றிக் கொண்டு வருவதுதான் பரிதாபகரமானது! எப்படி இருந்தாலும், அவனுடைய அந்திய காலக்கிரியைக்காவது, அவன் இங்கே வந்து சேரவேண்டும்!" என்று நகைச்சுவையாகக் கூறினார் ராஜாங்கம் பிள்ளை. ஆனால் நகைச்சுவையாகச் சொன்ன அந்தச் சொற்களின் விளைவை, எட்டு மாதங்களுக்குப் பிறகுதான் பிரபாகர் புரிந்து கொண்டார்.

பிரபாகரிடம் ஒப்படைக்கப்பட்ட வேலை, உள்ளபடியே ரொம்பவும் விசித்திரமானது. இருந்த போதிலும், அசம்பாவிதமானது அல்ல. அந்த வேலையில் உள்ள கவர்ச்சி, அதனால் ஊர் சுற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது

என்பதுதான்! உத்தியோகத்தை ராஜினாமா செய்ததால் மனச் சோர்வை அடைந்திருந்த பிரபாகருக்கு, ஊரைச் சுற்றி வருவது ஓரளவு ஆறுதலையே அளித்தது.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளையின் வீட்டைவிட்டு, பிரபாகர் புறப்பட்ட பொழுது, இரவு வெகு நேரமாகிவீட்டது. தம் வீட்டில் விட்டு விட்டு வந்த வேதநாயகத்தின் நினைவும் அவருக்கு உறுத்தியது. வீதியில் வாடகைக்கார் முதலிய எந்தவித வாகனங்களும் எதிர்ப்படவில்லை. வீட்டிற்கு அவர் திரும்பி நடந்துதான் வரவேண்டியிருந்தது.

தம் ஜாகையை அடைந்ததும் கதவைத் தட்டினார். வீடு பூராவும் ஒரே இருளாக இருந்தது. யாரும் கதவைத் திறக்கவில்லை. சாதாரணமாக, உட்புறமிருந்தும், வெளிப் புறம் இருந்தும், பூட்டக்கூடிய விதத்தில், தெருக் கதவிற்கு 'தொட்டிப் பூட்டு'அமைக்கப்பட்டிருந்தது. தாம் அகால நேரத்தில் திரும்பிவரும் பொழுது, சமையற்காரி அயர்ந்து தூங்கிவிட்டாலும், வெளியிலிருந்தபடியே அதைத்திறந்து கொண்டு செல்வதற்காகப் பிரபாகர் எப்பொழுதும் ஒரு மாற்றுச் சாவி வைத்திருப்பார். அந்தச் சாவியை உபயோகித்து, வெளிக்கதவைத் திறந்து கொண்டு உள் நுழைந்தார் பிரபாகர். வீட்டிற்குள் வேத நாயகத்தைக் காணோம்! மேஜையில் ஆறேழு வெள்ளைக் காகிதங்கள் வைக்கப்பட்டபடி இருந்தன. அதனருகே ஒரு பௌண்டன் பேனாவும் இருந்தது. அப்படியானால் திரும்பி வந்து மாயச் சமாதியைப்பற்றிக் காகிதத்தில் எழுதும் உத்தேசத்தோடுதான், வேதநாயகம் எங்காவது வெளியில் சென்றிருப்பான் என்று நினைத்தார் பிரபாகர். அவனுக்காக இரவு இரண்டு மணி வரையில் காத்திருந்தும், அவன் திரும்பி வரவில்லை. என்ன காரணத்தாலோ, வேதநாயகம் தன் மனதை மாற்றிக்கொண்டிருக்கிறான் என்று எண்ணமிட்டார்.........

மறு நாள் காலை பத்தரை மணிக்கு, மலைமேல் விநாயகர் லைப்ரரிக்கு, திருட்டுப்போன புத்தகத்தை எடுத்துக்கொண்டு பிரபாகர் பிறப்பட்டார். பிரபாகரைக் கண்டதும் அந்தப் பெண் மஹேஸ்வரி கலகலவெனச் சிரித்தாள். என்னைப் பார்த்தால் உனக்குச் சிரிப்பாய் இருக்கிறதல்லவா? இதோ அந்தத் தத்துவஞானப் புத்தகம்! அதை எடுத்துச் சென்ற டாக்டர் ரஞ்சித் சிங்

என்கிற விசித்திரமான பேர்வழி வாசக சாலை என்றால் இன்னதென்று அறியாத ஒரு முட்டாள்! அவரவர் தங்களுக்குத் தேவையான புத்தகங்களை கேள்வி முறையில்லாமல் எடுத்துக் கொண்டு போய்விடலாமென்று நினைத்திருக்கிறான்.!" என்றார் பிரபாகர்.

அவள் அந்தப் புத்தகத்தை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள். உள்ளபடியே, நீங்கள் ரொம்பவும் கெட்டிக்காரர், பிரபாகர்! இதை எப்படிக் கண்டு பிடித்தீர்களென்று கொஞ்சம் சொல்லுங்கள்!"

என்னுடைய துப்பறியும் சாமர்த்தியத்தால்! எடுத்துச் சென்றவன் வட நாட்டான் என்று கண்டு பிடித்தேன்; எப்படி என்றால் அதை நீ சொன்னாய்! அவனது விலாசத்தை யூகித்துக் கொண்டேன். எவ்வாறென்றால் அதை நீ கொடுத்தாய்! இந்தப் புத்தகத்தை உடனே திருப்பிக்கொண்டு வந்துவிட்டேன். எப்படி என்றால் ரஞ்சித் சிங் அதைத் திருப்பிக்கொடுத்தான்!" என்றார் பிரபாகர்.

பிரமாதம்!" என்றாள் மஹேஸ்வரி என்ற அந்தப் பெண். இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

வேலை முடிந்து, வெகுநேரம் வரையில், புத்தகசாலைவிட்டுக் கிளம்பாமல் மஹேஸ்வரி இருந்த இடத்திலேயே கதை அளந்த வண்ணம் பிரபாகர் நின்று கொண்டிருந்தார். நான் அடுத்த வாரம், கடல் கடந்து பிரயாணம் செய்யப்போகிறேன். சிலமாதங்கள் வெளி நாட்டு வாசமாக இருக்கும். இதை ஏன் உன்னிடம் சொல்கிறேன் என்று எனக்கே தெரியவில்லை! ஆனால் அயல் நாட்டு யாத்திரை என்றால், உனக்கு அதில் சிரத்தை இருக்குமென்று நினைத்தேன்!" என்றார் பிரபாகர்.

மஹேஸ்வரி ஒரு புன்னகை புரிந்து கொண்டாள். நான் சந்தித்தவர்களிலேயே நீங்கள் ரொம்பவும் விசித்திரமான துப்பறிவாளர்! உண்மையிலேயே, நான் சந்தித்த ஒரே துப்பறிவாளர் நீங்கள்தான்!" என்றாள்.

பிராபகர் முகம் ரொம்பவும் சங்கடமாக மாறிவிட்டதைக் கவனித்த மஹேஸ்வரி, தவறாக நினைக்காதீர்கள் மிஸ்டர் பிரபாகர்! இந்த வாசகசாலைக்கு எவ்வளவோ பேர் வருகிறார்கள். அவர்கள் எல்லோரும், தமது குடும்ப விஷயத்தை, ரொம்பவும் உள்ளன்போடு என்னிடம் கூற ஆசைப்

படுகிறார்கள்! ஒவ்வொருவர் குடும்பக் கதையையும், நான் பொறுமையாகக் கேட்டுச் சகிப்பது சாத்தியமா என்று நீங்களே சொல்லுங்கள்!" என்றாள்.

அது இங்கு வருபவர்கள் குற்றமல்ல! அது உன் அழகின் குற்றம்!" என்றார் பிரபாகர்.

அந்தச் சமயத்தில் மஹேஸ்வரி ஏதோ நினைத்துக்கொண்டவள் போல், திடீரென்று, எனது உறவினரைத் தேடி வக்கீல் ராஜாங்கம் பிள்ளை அனுப்பிவைக்கப் போகும் துப்பறிவாளர் தாங்களா?" என்று சந்தேகத்தோடு கேட்டாள்.

ஆமாம்! பவானந்தம் உன் சொந்தக்காரனா?" என்று பேராச்சரியத்தோடு கேட்டார் பிரபாகர்.

மஹேஸ்வரி ‘ஆம்’ என்ற பாவனையில் தலையசைத்தபடி, பவானந்தம் எனக்குத் தூரத்துப் பங்காளி ஆவார். நானும் என் தாயாரும் அன்றிரவு, வக்கீல் ராஜாங்கம் பிள்ளையோடு பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது பவானந்தத்தைத் தேடிப் பிடித்துவர வக்கீல் ராஜாங்கம் பிள்ளை, யாரோ ஒரு துப்பறிவாளரை அனுப்பபோவதாகக் கூறினார்!" என்றார்.

நீ எப்பொழுதாவது பவானந்தத்தை நேரில் பார்த்திருக்கிறாயா"? என்று கேட்டார் பிரபாகர்.

நான் பார்த்ததில்லை பவானந்தம் சிறுவனாக இருக்கும்பொழுது, என் தாயாருக்கு அவனைத் தெரியுமாம். அவனை ஒரு தடவை பார்த்திருக்கிறாள் என்றுகூட நினைக்கிறேன். அவன் தந்தை ரொம்பவும் பயங்கரமான மனிதர். இதையெல்லாம் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை உங்களுக்குச் சொல்லி இருப்பாரென்று நினைக்கிறேன். அவனைத் தேடிக்கொண்டா, கிளம்புகிறீர்கள்?" என்று கேட்டாள் மஹேஸ்வரி.

அந்தச் சோகச் செய்தியைத்தான், உன்னிடம் சொல்ல வந்தேன்!"என்றார் பிரபாகர்.

அந்தச் சமயத்தில், வாசக சாலைக் காரியதரிசி அங்கு வந்ததால், பிரபாகர் அங்கிருந்து கிளம்ப வேண்டியதாயிற்று.

போலீஸ் கமிஷனர் ஆபீஸிற்குப் பிரபாகர் திரும்பிச் சென்ற பொழுது, இன்ஸ்பெக்டர் துரைசாமி அங்கே இருந்தார். வேத நாயகத்தின் நள்ளிரவுக் கதையை, பிரபாகர் சொல்லும் பொழுது, எந்வித அபிப்பிராயமும் கூறாமல் கேட்டுக் கொண்டிருந்தார்.

முடிவாக இன்ஸ்பெக்டர் துரைசாமி, அதைக் கேட்கும்பொழுது, பொய் மாதிரிதான் ஒலிக்கிறது! பொய் மாதிரி ஒலிக்கும் எல்லா விஷயங்களும், பொய்யாகத் தான் இருக்கும்!" என்றார்.

பிரபாகர் சிரித்தார்.

வேத நாயகத்தின் மனச்சாட்சியை, ஏதாவது உறுத்திக் கொண்டிருந்தது என்றால், அதை அவன் ஏன் ஏழுதிவைக்காமல் போனான்? அவனை யார் துரத்தினார்கள்? நீ யாரையும் பார்த்தாயா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

நான் ஒருவரையும் பார்க்கவில்லை. ஆனால், அவன் உண்மையிலேயே பீதி அடைந்திருந்தான்!" என்றார் பிரபாகர்.

வேஷம் போட்டிருப்பான் ராஸ்கல்!" என்று கூறிய துரைசாமி மேஜை மேலிருந்த பித்தானை அழுத்தினார். சில வினாடிகளில் ஒரு போலீஸ் அதிகாரி உள்ளே வந்தார்.

யாராவது ஒரு கான்ஸ்டபிளை அனுப்பி, வேத நாயகத்தைத் தேடிப்பிடித்து, அழைத்துவரச் சொல். அவனைச் சில கேள்விகள் கேட்க வேண்டும்!" என்றார். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவர் போல், அந்த அதிகாரியிடம், யாரையும் அனுப்பவேண்டாம்" என்று கூறிவிட்டு பிரபாகர் பக்கம் திரும்பி, பிரபாகர்! அவன் விலாசம் உனக்குத்தெரியும்! நீ போய் அவனைக் கொண்டுவா" என்றார்.

என்னுடைய உத்தியோக காலம் இன்று பன்னிரெண்டு மணியோடு முடிகிறது!" என்றார் பிரபாகர்.

நள்ளிரவு பன்னிரெண்டு மணியோடு முடிகிறது. சீக்கிரம் போ!" என்று விடாமல் பேசினார் துரைசாமி.

வேத நாயகம், கீழ்ப்பாக்கம் பைத்தியக்கார ஆஸ்பத்திரி அருகிலுள்ள ஒரு தெருவில், ஓடையின் அருகே ஒரு வீட்டில் குடியிருந்து வந்தான். அங்கு போய் விசாரித்த பிரபாகருக்கு அந்த வீட்டுக்காரரால் எந்தவிதத் தகவலும் கொடுக்க முடியவில்லை. முதல் நாள் மாலையே வீட்டை விட்டுக் கிளம்பிய வேதநாயகம் திரும்பியே வரவில்லையென்று தெரிந்தது. இன்னும் அவன் சென்றிருக்கக்கூடிய பல இடங்களில் சென்று விசாரித்துப் பார்த்தார் பிரபாகர். அந்த இடங்களிலும் உபயோகமான தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

அவ்விவரங்களையெல்லாம் இன்ஸ்பெக்டர் துரைசாமியிடம் கூறினார் பிரபாகர். அவர் எதிர் பார்த்ததைவிட, அந்த விவகாரத்தை ரொம்ப முக்கியமாகக் கருதினார் துரைசாமி.

வேத நாயகம் சொன்ன திருட்டுக் கதையை நான் இப்பொழுது நம்புகிறேன். அவனே தடுமாறிப் போய்விட்டான் என்றால், அது கவனிக்கவேண்டிய விஷயம்தான். பூகம்பமே வந்தாலும், வேதநாயகம் காட்டிக் கொடுக்கும் வேலையில் ஈடுபடமாட்டான் — ஒருக்கால் அவன் இப்பொழுது உன் ஜாகையில் இருந்தாலும் இருப்பான்!" என்றார் துரைசாமி.

பிரபாகர் விடு திரும்பியபோது, வேதநாயகம் அங்கும் காணப்படவில்லை.

வேதநாயகம் அந்தப் பக்கம் தலை காட்டவே இல்லை என்று அவருடைய சமையற்காரியும் கூறினாள்.

வேலையைவிட்டு விலகுவதற்குமுன், பிரபாகர் செய்து முடிக்க வேண்டிய வேலைகள் நிறைய இருந்தன. அவற்றைச் செய்து முடிப்பதற்காக, தம் அறைக்குச் சென்று போலீஸ் உடுப்புகளை யெல்லாம் களைந்து விட்டுச் சாதாரண ஆடை அணிந்து கொள்ளத் தீர்மானித்தார்.

அறைக்குள் சென்றபோது, கோட் ஸ்டாண்டில் வழக்கமாகத் தொங்கிக் கொண்டிருக்கும் அவரது 'ஸ்லாக்—ஷர்ட்டைக்'காணோம். சமையற்காரியைக் கூப்பிட்டு, அந்த ஷர்ட்டைத் துவைத்துப் போட்டு இருக்கிறாளா என்று கேட்டார்.

வெளியே கிடந்தால் அவை திருட்டுப் போய்விடுமென பயந்து அலமாரிக்குள் அவற்றை எடுத்து வைத்திருப்பதாகக் கூறினாள் சமையற்காரி.

ஒருவிதச் சிந்தையுமில்லாமல், பிரபாகர் அந்தப் பீரோவின் கதவைப் பிடித்திழுத்தார். அலமாரிக்குள் இருந்து, ஏதோ ஒரு கனமான வஸ்து பிரபாகர்மீது சாய்ந்து, அவரைக் கீழே தள்ளிவிட்டது. வாரிச் சுருட்டிக்கொண்ட எழுந்து, அது என்னவென்று கவனித்தார்.

வேதநாயகத்தின் உடல்தான் அது!

அவன் கழுத்து முறிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தான்!

ஒரு வினாடி, பிரபாகரின் இரத்த ஓட்டமே நின்று விட்டதைப் போலிருந்தது.

## *5. அலமாரிக்குள் இருந்த பிணமும், அவசரப் பிரயாணமும்!*

போலீஸ் இலாகாவைச் சேர்ந்த பல பெரிய அதிகாரிகள், பிரபாகரின் ஜாகையில் வந்து கூடிவிட்டார்கள். கொலையுண்ட வேதநாயகத்தின் பிரேதத்தைப் பரிசீலனை செய்த வைத்திய அதிகாரி, இந்த ஆள் இறந்து பல மணி நேரங்களாகிவிட்டன. இவன் கழுத்து முறிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறான் என்றார்.

அதைக் கேட்டதும் பிரபாகரின் உடல் அவரறியாமல் நடுங்கியது. அலமாரிக்குள் பிணம் இருக்கும் பொழுது, அவர் இரவு பூராவும் அந்த அறையிலே படுத்துத் தூங்கியிருக்கிறார்!

கொலை நடக்கும் சமயம் கொலையுண்ட வேதநாயகம் ஏதாவது போராடியதாக அறிகுறியே இல்லையா?" என்று கேட்டார் ஓர் அதிகாரி.

இல்லை! டாக்டர் சொல்லுவது அந்த விஷயத்தில் சரி, அவனை யாரோ, பலமான ஆயுதமொன்றால் தாக்கி உடனடியாகக் கொன்றிருக்கிறார்கள், ஆனால் அவர்கள் எப்படி என் ஜாகைக்குள் வந்தார்கள் என்பது, ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!" என்றார் பிரபாகர்.

அக்கம் பக்கத்தில் விசாரித்ததில் திருப்திகரமான விஷயம் எதுவும் அகப்படவில்லை.

பிரபாகரின் ஜாகை முழுவதும் போலீஸ் அதிகாரிகள் சோதனை செய்து பார்த்தனர்.

இரவில் உள்ளே புகுந்த ஆள், சமையலறையின் கம்பியில்லா ஜன்னல் மூலமாகத்தான் உள்ளே வந்திருக்க வேண்டும்! அது ஒன்றுதான் சாத்தியமான வழி!" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

பிரபாகரின் ஜாகை முதல் மாடியிலிருந்தது. சமையற்கட்டு ஜன்னலோரமாக ஒரு மரம் இருந்தது. அந்த மரத்தில் ஏறி, ஜன்னல் வழியாக உள்ளே குதிக்கலாம் என்றால், அது அவ்வளவு சுலபமான வழியல்ல.

முதல் நாள் இரவு வக்கீல் ராஜாங்கம் பிள்ளையின் வீட்டிலிருந்து பிரபாகர் திரும்பியதும், தாம் சமையற்கட்டுப் பக்கம் செல்லவே இல்லை என்றார். அதனால் சமையற்கட்டுக் கதவுகள் திறந்திருந்தனவா என்று நிச்சயிக்க முடியாமலிருந்தது. ஆனால் சமையற்காரி அந்தச் சந்தேகத்தைப் போக்கிவிட்டாள். காலையில் அவள் வேலைக்கு வந்த பொழுது, சமையற்கட்டுக் கதவும், சமையற்கட்டு ஜன்னல் கதவும், விரியத் திறந்து கிடந்தது என்று கூறினாள்.

அந்த ஆள் யாராக இருக்கக் கூடுமென்று உனக்கு எதுவும் தோன்றுகிறதா?—அதாவது வேதநாயகத்தை, பயமுறுத்தியது, யாராக இருக்குமென்று?" என்று கேட்டார் துரைசாமி.

அதைப்பற்றி வேதநாயகம் என்னிடம் எதுவும் சொல்லவில்லை. அவன் ரொம்பவும் கதிகலங்கிப் போயிருந்தான். தான், அந்தப் பயங்கர வேலையில்—அதாவது செத்தவனின் சமாதியைத் திறக்கும் வேலையில் ஈடுபட்டிருந்ததாக அவன் கூறியது எனக்கு உண்மையென்றே பட்டது. அதோடு அந்த வேலை முடிந்ததும், தன்னை வேலைக்கமர்த்திய நபர், கொலை செய்து விடுவானென்று வேதநாயகம் நிச்சயமாக நம்பியிருந்தான்!" என்றார் பிரபாகர்.

பிரபாகர் வீட்டில் நிகழ்ந்த இந்த எதிர்பாராத கொலை நிகழ்ச்சியால், அவர் பவானந்தத்தைத் தேடிச் செல்லும், சுற்றுப் பிரயாண வேலையை ஒத்திவைக்க வேண்டுமா என்பதைப்பற்றி அதிகாரிகள் கூடி யோசித்தனர். முடிவில், யாராவது கைது செய்யப்பட்டாலொழிய, பிரபாகர் தங்கியிருக்க

வேண்டிய அவசியமில்லையென்றும், அவர் உடனே புறப்பட்டுச் செல்லலாமென்றும் முடிவிற்கு வந்தார்கள். கொலைகாரன் கண்டு பிடிக்கப்பட்டால் மட்டும், பிரபாகர் உடனே திரும்பிவந்து சாட்சியம் அளிக்க வேண்டுமென்றும், அதுவரை பிரபாகர் போலீஸ் இலாகாவோடு கடிதம் மூலம் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் அதிகாரிகள் கூறினர். இந்த விவரம் வக்கீல் ராஜாங்கம் பிள்ளைக்கும் தெரிவிக்கப்பட்டது.

ஆகவே, திட்டம் போட்டிருந்தபடி, குறிப்பிட்ட தேதியில் பிரபாகர் ஹாங்காங் நகரை நோக்கிக் கப்பலில் அவசரமாகப் பிரயாணமானர். ஆளையும் தெரியாமல், அவனிருக்கும் இடமும் நிச்சயம் தெரியாமல், பவானந்தத்தைத் தேடிப் புறப்படுகிறோமே என்று நினைத்ததும் பிரபாகருக்குச் சிரிப்பாக இருந்தது.

## *6. மஹேஸ்வரியிடமிருந்து விசித்திரச் சாவி!*

இனந்தெரியாத பவானந்ததத்தைத் தேடிப் பிரபாகர் வெளி நாட்டுப் பிராயணத்தைத் தொடங்கிய சமயத்தில், சென்னை பூராவும் வேதநாயகத்தின் மர்மக் கொலையைப்பற்றி அமளி துமளி பட்டுக் கொண்டிருந்தது. அதுதான், பிரபாகரின் மனதில் ஆதிக்கம் பெற்றிருந்தது, ஆனால் நாளாக ஆக, அந்தப் பயங்கர நினைவு அவர் மனதைவிட்டு அகன்று, மஹேஸ்வரியின் மனோகர உருவம் அவர் உள்ளத்தில் ஆதிக்கம் பெற ஆரம்பித்தது.

அவள் பெயரைக்கூடப் பிராபகர் விசாரிக்க மறந்துவிட்டார். அந்தப் பெயர் தெரிந்தாலாவது, அவளுக்குக் கடிதமாவது எழுதலாம். தாம் சுற்றுப் பிரயாணம் செய்யும் இடங்களிலுள்ள வினோதக் காட்சிப் படங்களை வாங்கியாவது அவளுக்கு அனுப்பலாம். ஆனால் புறப்பட்ட அவசரத்தில், வேதநாயகத்தின் கொலையும் குறுக்கிட்டதால், அவளைப் போய்ச் சந்திக்கக்கூட அவருக்கு நேரமில்லை. ‘மலைமேல் விநாயகர் வாசகசாலையில் வேலை பார்க்கும் குறும்புக்கார அழகிக்கு’என்று விலாசம் எழுதிப் போட்டால், ஒருக்கால் அவள் கைக்கு கிடைக்குமா என்ற பைத்தியக்கார எண்ணம்கூட ஒரு வினாடி பிரபாகருக்கு ஏற்பட்டது! அந்த அளவிற்கு மஹேஸ்வரியின் கவர்ச்சிகரமான தோற்றம் அவரை அடிமைப்படுத்தியிருந்தது!

சிங்கப்பூரை அடைந்ததும், அங்கிருந்தபடியே ‘மலைமேல் விநாயகர் லைப்ரரி’க்கு ஒரு வருஷ சந்தா அனுப்பி வைத்தார் பிரபாகர், உள்ளபடியே, அவர் அந்த வாசகசாலையில் போய்ப் படிப்பதற்கான புத்தகங்களே அங்கில்லை. ஆனால் அந்த ரசீதில் அவள் கையெழுத்துப் போட்டு அனுப்பினாலும் அனுப்பலாமென்று ஆவலோடு எதிர்பார்த்தார்—அந்தப்பணத்தை அனுப்பிய பிறகுதான், அவர் செய்த பைத்தியக் காரத்தனம் அவருக்குப் புரிந்தது. ஏனேன்றால் சிங்கப்பூர் விலாசத்திற்கு, அந்த ரசீது வந்து சேர்வதற்குள், அவர் ஜப்பானை அடைந்திருப்பார்.

அவர் சுற்றுப் பிரயாணம் செய்த நாட்களில், வெளி நாடுகளிலும் வேதநாயத்தின் கொலைக்கு மதிப்புக் கொடுத்து. செய்தி பிரசுரிக்கும் பத்திரிகைகளே இல்லை! ஆகவே, இந்தியாவை விட்டுப் புறப்பட்ட பிறகு, அந்தக் கொலையைப் பற்றிய விவரங்கள் அவருக்குத் தெரிய இடமில்லாது போய்விட்டது. ஹாங்காங்கிலும், டோக்கியோவிலும், பவானந்தத்தைக் காணாமல், அவனை மயிரிழையில் தவற விட்டுவிட்ட பிரபாகர், அவனைத் தேடிக்கொண்ட இலங்கைக்குப் பிரயாணமானர்.

இலங்கையை அவர் வந்தடைந்தபொழுது, கொழும்பு நகரத்தில் அவன் இருப்பானென்று தேடிப் போனார். அங்கிருந்தும், பவானந்தம் புறப்பட்டுத் தென்னாப்பிரிக்காவிலுள்ள டர்பன் நகருக்குப் போய் இருக்கிறான் என்று தெரிந்தது. ஆனால் நல்ல காலமாக, கொழும்பு நகரத்திற்கு வக்கீல் ராஜாங்கம் பிள்ளையிடமிருந்து ஒரு தந்தி வந்திருந்தது. பிரபாகரை உடனே திரும்பி வந்து விடும்படி ராஜாங்கம் பிள்ளை எழுதியிருந்தார்.

பவானந்தத்தைத் துரத்திக் கொண்டலைவது,நரக வேதனையாக இருந்ததால், பிரபாகருக்கு ஊர் திரும்பிப் போனால் போதுமென்றாகி விட்டது. நேராகக் கொழும்பை விட்டுப் புறப்பட்டு, ‘இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸ்’ரயிலில் சென்னையை நோக்கிப் புறப்பட்டார் பிரபாகர். எக்ஸ்பிரஸ் வண்டி, மானாமதுரையை நெருங்கிய போது, மானாமதுரை ஜங்ஷனில் அவர் கண்ட காட்சி, அவராலேயே நம்பமுடியாததாக இருந்தது.

மானாமதுரை ஜங்ஷன் பிளாட் பாரத்திலே, மஹேஸ்வரி நின்று கொண்டிருந்தாள்! அவளேதான்! சந்தேகமே இல்லை! அவள் பிரபாகரைப்

பார்க்கவில்லை. பிரபாகரை எதிர்பார்க்காததால், மஹேஸ்வரியும் அவர் இருந்த அதே முதல் வகுப்பு வண்டியில் வந்து ஏறினாள்.

நீயா!" என்று உற்சாகமாகக் கூவினார் பிரபாகர்.

மஹேஸ்வரி எந்தவித உற்சாகமும் இல்லாமல், நானேதான்!" என்று கூறினாள்.

உங்கள் மலைமேல் விநாயகர் வாசகசாலைக்குச் சந்தாகூட அனுப்பினேன்!" என்று, எதையாவது பேச வேண்டும் என்பதற்காகப் பேசினார் பிரபாகர்.

எனக்குத் தெரியும். நான்தான் ரசீதில் கையெழுத்திட்டு அனுப்பினேன்" என்றாள் அந்தப் பெண்மணி.

ஓ! நீ தான் அந்த —" என்று அவள் பெயரைத் தெரிந்து கொள்வதற்காக, 'ஏதோ மறந்துவிட்டவர் போல்'நடித்தார் பிரபாகர்.

நான்தான் அந்த ரசீதில் கையொப்பமிட்டேன்!" என்று எந்தவித மாதறுதலுமில்லாமல் பதிலளித்தாள் அந்தக் குறும்புக்காரி. ஆனால் பிரபாகர் எதிர்பார்த்த மாதிரி, அவள் ஏமாந்துபோய் தன் பெயரைத் தானாகச் சொல்லிக் கொள்ளவில்லை! அந்த வழியில் அவள் பெயரைத் தெரிந்துகொள்ள முடியாதென்று உணர்ந்த பிரபாகர், நேரடியாகவே உன் பெயர் என்ன?" என்று கேட்டுவிட்டார்.

என் பெயர் மஹேஸ்வரி!"

ஆமாம், ஆமாம்! இப்பொழுதுதான் நினைவு வருகிறது!"

ரசீதில் பார்த்திருப்பீர்கள்—இல்லையா?"

ஆமாம்" என்று புளுகினார் பிரபாகர்.

அந்த ரசீது 'ஆள் கிடைக்கவில்லை'என்ற குறிப்போடு எங்கள் வாசகசாலைக்கே திரும்பி வந்துவிட்டது!" என்று கருணையில்லாமல் தாக்கினாள் மஹேஸ்வரி!

தனது பித்தலாட்டங்கள் அவளிடம் பலிக்காததைக் கண்ட பிரபாகர், உன்னைப்போல் குறும்புக்காரப் பெண்ணை நான் உலகத்தில் பார்த்ததேயில்லை. எவ்வளவு சுலபமாக, மனிதனை முட்டாளாக்கி விடுகிறாய்!" என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸ் ரயில் வேகமாக காரைக்குடி ஸ்டேஷனை அடைந்ததும், மஹேஸ்வரியை அழைத்துக் கொண்டு, பிரபாகர் ரெயில்வே சிற்றுண்டிசாலைக்குச் சென்றார். வண்டி புறப்பட சில வினாடிகளுக்கு முன், பிரபாகரும் மஹேஸ்வரியும், தங்கள் வண்டிக்குத் திரும்பி வந்தார்கள்.

அந்தசில நிமிஷ நேரங்களுக்குள், மஹேஸ்வரியின் பெட்டி, அலங்கோலமாகச் சோதனையிடப்பட்டிருந்தது. ஆனால், அதிலிருந்த எந்தச் சாமானும் களவு போகவில்லை.

நிச்சயமாக எதுவும் களவு போகவில்லையா?" என்று கேட்டார் பிரபாகர்.

இல்லை!"

ஆச்சரியமாக இருக்கிறதே!" என்றார் பிரபாகர்.

இரண்டாவது தடவையாக எனக்கு இந்த அனுபவம் ஏற்பட்டுவிட்டது. மானாமதுரை ஜங்ஷனில், ரயில்வே வெயிட்டிங் ரூமில் என் பெட்டியை வைத்துவிட்டு, ரயில்வே புக் ஸ்டாலுக்குச் சென்று விட்டேன். அங்கு போய், இரண்டொரு புத்தகங்களை வாங்கி வருவதற்குள், என் பெட்டி பூராவும் இதேபோல சோதனை போடப்பட்டுக் கிடந்தது!" என்றாள் மஹேஸ்வரி.

சென்னை போய்ச் சேரும்வரை, அன்றிரவு பூராவும், இருவரும் தூங்கவில்லை. அவர்கள் தூங்காததற்குக் காரணம் திருடன் வந்து விடுவான் என்பது மட்டுமல்ல; அதைவிட வேறு ஒரு ருசிகரமான காரணம் இருந்தது!

எங்கே, இப்படி ஊர் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டுவிட்டாய்?" என்று சாதுரியமாகக் கேட்டார் பிரபாகர்.

ஊர் சுற்றிப் பார்க்கப் புறப்படுபவளுக்கு, ராமனாதபுரம் ஜில்லாவிலே என்ன வேலை?— அடடா; என்ன நரக வேதனையான பிரயாணம்!" என்றாள்

மஹேஸ்வரி.

எனது பிரயாணமும், கிட்டத்தட்ட அவ்வளவு மோசமானதாகத் தான் இருந்தது!" என்றார் பிரபாகர்.

நீங்களும் ஒரு சாவியைத் தேடிக்கொண்டு அலைகிறீர்களோ?" என்று கேட்டாள் மஹேஸ்வரி. பிரபாகர் அவளையே வெறிக்கப் பார்த்தார்.

எதைத் தேடிக்கொண்டு அலைகிறேனா என்று கேட்டாய்?" என்று புரியாமல் விழித்தார் பிரபாகர்.

மஹேஸ்வரி, தன் கையிலே வைத்திருந்த சிறிய மணிபர்ஸ் ஒன்றைத் திறந்து, அதற்குள்ளிருந்து ஒரு சிறு கவரை எடுத்தாள். அந்தக் கவருக்குள் விசித்திரமான உருவில் ஒரு சாவி இருந்தது. அதைப் போன்ற சாவியை, அவர் தன் வாழ்நாளிலே பார்த்ததில்லை. அந்த சாவியின் உருவம் மிகவும் விசித்திரமாக இருந்தது. சுமார் இரண்டரை அங்குலம் நீளமுள்ள அந்தச்சாவி, பார்வைக்குக் கீழ்க்கண்டவாறு இருந்தது.

இது ரொம்பவும் விசித்திரமான பொருளாக இருக்கிறதே! இதைத்தான் நீ தேடிக் கொண்டு சென்றாயா? என்று கேட்டார்.

மஹேஸ்வரி 'ஆம்'என்ற பாவனையில் தலையசைத்து, ஆமாம்— இதற்க்காகத்தான் நான் பிரயாணத்தைத் தொடங்கினேன் என்று எனக்குத் தெரியாது! பார்வைக்கு ஏதோ பைத்தியக்காரத்தனமாகத் தெரிகிறதல்லவா? என் தந்தைக்குப் பரிச்சயமான ஒரு தோட்டக்காரன் ராமநாதபுரம் ஜில்லாவிலிருந்தான். அவன் பெயர் பஞ்சநதம். அவன் எங்கள் உறவினரான ராமானந்தரின் எஸ்டேட்டிலே வேலை பார்த்துவந்தான். மூன்று மாதங்களுக்கு முன், என் தாயாருக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் பஞ்சநதம் இறந்துவிட்டான் என்றும், தான் செய்த பாவங்களுக்கும், குறிப்பாக அவன் எங்கள் குடும்பத்துக்குச் செய்த தீங்குகளுக்கும், ரொம்பவும் மனம் வருந்தி, இறக்கும் பொழுது தன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு இறந்தான் என்றும், அந்த ஊரிலுள்ள 'சைவசித்தாந்தம் மடத்தின்'சாமியார் எங்களுக்கு எழுதியிருந்தார். அதோடு எங்கள் குடும்பத்தினரிடம் நேரடியாகச் சேர்ப்பிக்கும்படி, ஒரு சிறு கவரைக் கொடுத்துச் சென்றிருப்பதாகவும், அது ரொம்ப முக்கியமான விஷயம்

என்றும், பஞ்சநதம் கூறியதாக அந்தச் சாமியார் எழுதியிருந்தார். ஆனால் மானாமதுரைக்குப் புறப்பட்டு வந்து போவதற்கு எனக்கோ, என் தாய்க்கோ விருப்பமில்லை. நான் வாசகசாலையில் வேலை பார்த்துச் சம்பாதிக்கும் பணம் ரொம்பச் சிக்கனமாகக் குடும்பம், நடத்துவதற்கே போதும் போதாததாக இருந்தது. ஆகவே, வீண் சிலவு செய்துகொண்டு மானாமதுரைக்குப் புறப்பட, நாங்கள் தயாராக இல்லை. இருந்த போதிலும் இரண்டு நாட்கள் கழித்து எங்களுக்கு ஒரு கவரிலே, மானாமதுரைக்கு ரிட்டர்ன் டிக்கட்டும், நூறு ரூபாய் பணமும் வைத்து அனுப்பப்பட்டிருந்தது!" என்றாள் மஹேஸ்வரி.

அதை அனுப்பியது யார்?" என்று கேட்டார் பிரபாகர்.

மஹேஸ்வரி 'தெரியாது'என்ற பாவனையில் தலையை ஆட்டிவிட்டு, எனக்குத் தெரியாது! ஆனால், பிரயாணத்தைத் துவக்குவதென்று என்னவோ முடிவு செய்துவிட்டேன். சைவசித்தாந்த மடத்தின் சாமியார், என்னைக் கண்டதும் மிகவும் சந்தோஷமடைந்தார். தன் வீட்டில் பஞ்சநதம் கொடுத்த கவர் இருப்பதை அறிந்த யாரோ சிலர், மூன்று தடவைகள், இரவு நேரத்தில் வீட்டிற்குள் புகுந்து திருட முயற்சித்திருக்கிறார்கள் என்று சாமியார் கூறினார். அதோடு பஞ்சநதம் சாகும்பொழுது பணக்காரனாக இருந்தான் என்று கேள்விப்பட்டதால், நான் அந்தக்கவருக்குள் மிகவும் விலை மதிப்புள்ள பொருள் இருக்குமென்று நினைத்தேன். கவரைப் பிரித்ததும் எனக்கு ஒரே ஏமாற்றமாகிவிட்டது. ஏனென்றால் அந்தக் கவருக்குள் இருந்தது இந்தச் சாவிதான்" என்றாள்.

பிரபாகர் அந்தச் சாவியை பல தடவைகள் திருப்பித் திருப்பிப் பார்த்தார்.

பஞ்சநதம் ஒரு தோட்டக்காரன் என்று சொன்னாய்; ஆனால் பணக்காரன் என்றும் சொல்லுகிறாய்! அப்படியானால் அவன் ஏராளமாகச் சம்பாதித்திருக்க வேண்டும்! அவன் ஏதாவது கடிதம் எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறானா?"

இல்லை! எனக்கு ரொம்ப ஏமாற்றம் ஆகிவிட்டது—எந்தக் காரணத்தாலோ, அந்தச் சாவியைப் பெட்டிக்குள் வைக்காமல், எனது மணிபர்ஸுக்குள்ளேயே வைத்து இருந்தேன். சைவசித்தாந்தமடத்து சாமியாரின் வீட்டைவிட்டுப் புறப்பட்டுக் கொஞ்சதூரம் வந்ததும், ஒரு சிறு சந்தின் வழியாக

நடந்து வரவேண்டியிருந்தது. ஒரு கூலியாள், என் பெட்டியையும், ஒரு தோல் பையையும் எடுத்துக் கொண்டு வந்தான். திடீரென்று எவனோ ஒருவன், ஒரு திருப்பத்திலிருந்து ஓடிவந்து. கூலி ஆள் கையிலிருந்த தோல் பையைப் பிடுங்கிக் கொண்டு ஓடிவிட்டான். திடீரென்று பட்டப் பகலில் நடந்த அந்த நிகழ்ச்சியைக் கண்டு, பிரமித்துப்போன எனக்கு, கூச்சல் போடக்கூட முடியவில்லை. அந்தப் பைக்குள் விசேஷமான எந்தச் சாமானும் இல்லாததால், நான் போலீஸுக்குப் புகார் செய்து, நாளைக் கடத்த விரும்பவில்லை. பிறகு ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்த பொழுதுதான், என் பெட்டி சோதனையிடப்பட்டது" என்று கூறி முடித்தாள் மஹேஸ்வரி.

பிராபகர் ஆழ்ந்த யோசனையில் உட்கார்ந்து இருந்தார்.

இந்த விசித்திரமான நிகழ்ச்சிகளைப்பற்றி, உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டாள் மஹேஸ்வரி.

அந்த சாவி, யாருக்கோ ரொம்ப அவசியமாகத் தேவைப்படுகிறது என்று நினைக்கிறேன்" என்றார் பிரபாகர்.

ரயில் வண்டி எழும்பூர் ஸ்டேஷனை அடைந்ததும், ரயிலைவிட்டு இறங்கிய பிரபாகர், அவசர அவசரமாகத் தன் சாமான்களை எடுத்துக் கொண்டு, நான் போய் வருகிறேன்" என்று ஒரே வார்த்தையில் கூறிவிட்டு கூட்டத்தில் மாயமாய் மறைந்தார். மஹேஸ்வரிக்கு அது ஏமாற்றமாகவே இருந்தது.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் மஹேஸ்வரி, தனது பெட்டியுடன் ‘டாக்ஸி கார்கள் நிற்கும் இடத்திற்கு வந்தாள். அவளது பெட்டியைத் தூக்கிவந்த போர்ட்டர் டாக்ஸீ காருக்குள் அதை வைத்து விட்டு சில்லறைக்குக் கையேந்தி நின்றான். அவனுக்குச் சில்லறை கொடுப்பதற்காக, மணிபர்ஸைத் திறந்து பணமெடுத்துக் கொண்டு இருந்தாள் மஹேஸ்வரி. அந்தச் சமயத்தில் யாரோ ஒருவன் வேகமாக அவளை உராய்ந்துகொண்டு சென்றான். மற்றொருவன் எதிர் பக்கத்திலிருந்து ஓடி வந்து அவளை இடித்துவிட்டு மேலே சென்றான். இந்தத் தடுமாற்றத்தில் அவள் கையிலிருந்த பர்ஸ், சுமார் பத்து கெஜ தூரத்திற்கப்பால் போய் விழுந்தது. அங்கு நின்று கொண்டிருந்த ஒருவன்,

அந்தப் பர்ஸைத் தூக்கி, இருபது கெஜ தூரத்திற்கப்பாலுள்ள வேறொருவனிடம் வீசியெறிந்தான்.

'லபக்'என்று அந்தப் பர்ஸைப் பிடித்து திருடன் ஓட ஆரம்பிக்கும்பொழுது 'படீர்'என்று ஒரு குத்து அவன் முகத்தில் விழுந்தது. அவன் தலை சுழன்றது. அவன் கையிலிருந்த மணி பர்ஸை ஒரு முரட்டுக் கரம் 'வெடுக்'கென்று பிடுங்கியது. ராஸ்கல்! நடடா போலீஸ் ஸ்டேஷனுக்கு!" என்று அவன் கையைப் பிடித்து இழுத்தார் பிரபாகர்.

ஆனால் எதிர்பாராதவிதமாக அந்த ஆள் கையை வெடுக்கென்று பறித்துக்கொண்டு ஓடிவிட்டான்.

## *7. சீட்டுக் கலவையில் தந்திரம்!*

மறுநாள் காலை பத்துமணிக்கு, வக்கீல் ராஜாங்கம் பிள்ளை வீட்டிற்குப் பிரபாகர் சென்ற பொழுது, ராஜாங்கம் பிள்ளை அவர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்படியானால் அந்த பவானந்தத்தை உன்னால் சந்திக்க முடியாமல் போய்விட்டது; இல்லையா?" என்று கேட்டார் வக்கீல் வருத்தத்துடன்.

இல்லை, சார்! நான் வேகமாகவே தொடர்ந்து சென்றேன். ஆனால் என்னைவிட வேகமாக அவன் போய்விட்டான்!" என்றார் பிரபாகர்.

அவன் ஒரு வெறிபிடித்த பிசாசு!—அவன் இப்பொழுது தென் ஆப்பிரிக்காவிலுள்ள டர்பன் நகரத்தில்தான் இருக்கிறான்!" என்று வக்கீல் சொல்லிவிட்டு, மேஜைக்குள் இருந்து ஒரு பைலை வெளியில் எடுத்தார். அதிலிருந்த ஒரு தந்தியை, பிரபாகருக்குக் காண்பித்தார். அதில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தது.

அட்வகேட் ராஜாங்கம் பிள்ளை, சென்னை:— என்னைத் துரத்திக்கொண்டே வரும் பிரபாகர் என்பவன் யார்? உங்களுக்கு 'பவர்'எழுதிக்கொடுத்த அந்தப் பத்திரத்தை தபாலில் அனுப்பி இருக்கிறேன்.

என்னைத் தயவு செய்து தொந்தரவு செய்யாமல் விட்டுவிடுங்கள். அடுத்த மாதம் சென்னை திரும்புவேன்—தம்பிக்கண்ணு"

அந்தத் தந்தி, கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டு இருந்தது. பிரபாகர் அங்குபோய்ச் சேருவதற்கு— மூன்றுதினங்களுக்கு முன்னால் அந்தத் தந்தி அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிந்தது.

என்னால் எதுவும் செய்ய முடியாமல் போய்விட்டது. அவனைப் பற்றி வேறு ஏதேனும் விசேஷமான தகவல் நீ கேள்விப்பட்டாயா?" என்று கேட்டார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

மற்றவர் அவனைப்பற்றி கவனிக்குமளவுக்கு, கூட அவன் எங்கும் தாமதிப்பதில்லை. அவன் தங்கியிருந்த ஹோட்டல்களி| உள்ள சிப்பந்திகளையும் விசாரித்தேன். அவர்கள் யாருக்கும், அவனைப்பற்றி விசேஷமாக எதுவும் சொல்லத் தெரிய வில்லை. இந்திய சர்க்காரின் பிரதிநிதி இலங்கைக்கு வந்த சமயத்தில், அவன் கொழும்பு நகரத்திலிருந்திருக்கிறான்!" என்றார் பிரபாகர்.

ம்......." என்று சில வினாடிகள் மௌனமாக இருந்த வக்கீல் ராஜாங்கம் பிள்ளை, அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டார்.

ஒன்றுமில்லை!"

சில வினாடிகள் வரை இருவரும் மௌனமாக இருந்தார்கள், பிறகு பிரபாகர், நீங்கள் உண்மையிலேயே பவானந்தத்தைப்பற்றி என்ன சந்தேகப் படுகிறீர்கள்?" என்று கேட்டார்.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளை யோசனையோடு உதட்டைக் கடித்துக் கொண்டே, எனக்கு எதுவும் நிச்சயமாகத் தெரியவில்லை. ரொம்ப மோசமாக எதுவும் நடந்திருக்கக் கூடுமானால், அவன் யாராவது அயல் நாட்டுக்காரியை மணம் செய்துகொண்டு சென்னைக்கு அவளை அழைத்துவர பயந்துகொண்டிருக்கலாம்!" என்றார்.

பிரபாகர் யோசனையோடு, வருத்தப்படாதீர்கள், வக்கீல் சார்!—ம்! அவனிடமிருந்து உங்களுக்கு நிறையத் தபால்கள் வந்திருக்கின்றன அல்லவா?"

ஆமாம்."

அவைகளை நான் பார்க்கலாமா?"

ராஜாங்கம் பிள்ளை ஒரு பெரிய பைலை எடுத்து அவனிடம் நீட்டினார். அதற்குள் ஏராளாமான தந்திகளும் பல கடிதங்களும் இருந்தன. அவை உலகின் பல்வேறு பாகங்களிலிருந்து அனுப்பப் பட்டிருந்தன.

இவை எல்லாம், இந்த ஒருவருஷ காலத்திற்குள் தம்பிக் கண்ணு என்கிற பாவனந்தம் எனக்கு அனுப்பியவை. இதற்கு முன்னால் அவன் எழுதிய கடிதங்களை நீ பார்க்க வேண்டுமானால் இரண்டு பெட்டி நிறைய அடுக்கிப் பூட்டிவைத் திருக்கிறேன். அவைகளை எல்லாம் பார்க்கிறாயா?" என்றார் வக்கீல்.

வேண்டாம்—இவையெல்லாம் பவானந்தத்தின் கையெழுத்துத் தானே?" என்று கேட்டார் பிரபாகர்.

சந்தேகமில்லை; அவனுடையதுதான். அவனைப் போல். மாயம் செய்துகொண்டு, வேறு யாராவது எழுதியிருப்பாரோ என்று நினைக்க வேண்டாம்!"

அடடா; இவ்வளவு இடங்கள் சுற்றியும், என்னால் அவனைக் கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டதே. அவன் எப்படிப்பட்டவன் என்று தெரிந்து கொண்டாவது வந்திருக்கலாம். என் வேலை தோல்விகரமாக முடிந்து விட்டதைப்பற்றி ரொம்ப வருத்தப்படுகிறேன். வெகு வேகமாக பவானந்தம் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் புறப்பட்டு விடுகிறான். பின்னால் ஒரு சமயத்தில், அவன் எழுதிய எல்லாக் கடிதங்களையும் நான் பார்க்க விரும்பினாலும் விரும்புவேன். ஏனென்றால், அவன் அவ்வளவு சுவாரசியமான ஆளாக இருக்கிறான்!" என்றார் பிரபாகர்.

இப்பொழுதே வேண்டுமானாலும் பார்!"

வேண்டாம்—அவன் யாரையாவது, திருமணம் செய்து கொண்டு இருப்பானோ என்று நீங்கள் சந்தேகப்பட்டால், அந்தச் சந்தேகத்தை நீங்கள் விட்டு விடலாம். ஏனென்றால் ஹாங்காங் நகரத்திலும், டோக்கியோ

நகரத்திலும் தனியாகத்தான் தங்கியிருந்திருக்கிறான். பாவனந்தத்திற்கு எந்தவித ஸ்திரீ சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. அவன் சென்னைக்குத் திரும்பி வந்ததும், அவனை நான் நேரில் பார்க்க ஆசைப்படுகிறேன்!" என்றார் பிரபாகர்.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளை ஒரு புன்னகையுடன், அவசியம் நீ சந்திக்கவேண்டும். ஆனால் சென்னைக்கு வந்த மறுநாளே, அவன் எங்காவது புறப்படத் துடித்துக் கொண்டிருப்பான்!" என்றார்.

பிரபாகர் செய்த சேவைக்காக, வக்கீல் ராஜாங்கம் பிள்ளை, அவருக்கு ஒரு பெருந்தொகைக்கு செக் எழுதிக் கொடுத்திருந்தார். அங்கிருந்து புறப்பட்ட பிரபாகர் தம் வீட்டை அடைந்ததும், தமது ‘சூட்கேஸ்’ஒன்றை மேஜைமேல் வைத்து, அதைத் திறந்தார். அதற்குள் ஏராளமான தஸ்தாவேஜுகளும், ஹோட்டல் பில்களும், பிரயாணத்தின் பொழுது அவர் எழுதிய குறிப்புகளும் நிறைந்திருந்தன. எல்லா அவற்றுக்கும் அடியில் ஒரு சிறு பிளாட்டிங் பேப்பர் இருந்தது. ஏதோ ஒரு கவரில் விலாசம் எழுதி அதை அந்தப் பிளாட்டிங் பேப்பரால் ஒற்றியிருக்கவேண்டும். ஒற்றப்பட்ட அந்த விலாசம், பிளாட்டிங் பேப்பரில் நன்றாகப் பதிந்திருந்தது. அதில் எழுதியிருந்தது இதுதான்.

டாக்டர் ஆண்டியப்பன்,

சூளைமேடு, கோடம்பாக்கம்,

சென்னை."

இந்த பிளாட்டிங் பேப்பர், டோக்கியோ நகரத்தில், பாவனந்தம் தங்கியிருந்த ஹோட்டலில் இருந்தது. பிரபாகர் அதை எடுத்து வந்தார். பவானந்தம் தங்கியிருந்த அதே அறையில்தான் பிரபாகரும் போய்த் தங்கியிருந்தார். அவர் டோக்கியோ நகரத்திற்குச் செல்வதற்கு நாற்பத்தெட்டு மணி நேரத்திற்கு முன்புதான் பவானந்தம் அங்கிருந்து புறப்பட்டிருக்கிறான். பவானந்தம் சென்ற பிறகு, அந்த அறையில் வேறு யாரும் தங்கவில்லை. பிரபாகர்தான் போய் இறங்கியிருந்தார்...

அந்த பிளாட்டிங் பேப்பரை பத்திரமாக பிரபாகர் தம் மேஜை டிராயரில் எடுத்துவைத்துப் பூட்டிவிட்டு, அங்கிருந்த நிலைக்கண்ணாடி அருகே சென்றார்.

உன்னை ஒரு துப்பறிவாளன் என்று கூறிக் கொள்கிறாய்!... ஆனால் பிரபாகர், நீ அந்த வேலைக்குக் கொஞ்சம்கூடத் தகுதியற்றவன்!" என்று பிரபாகர் அந்நிலைக் கண்ணாடியில் பிரதிபலிக்கும் தம் உருவத்தை நோக்கிச் சொல்லிக் கொண்டு ஒரு பெருமூச்சு விட்டார்.

பிறகு அவர் திரும்பவும், மேஜை அருகே வந்து உட்கார்ந்து கொண்டு, மேஜைக்குள்ளிருந்து ஒரு சீட்டுக்கட்டை வெளியே எடுத்தார்.

கப்பல் பிரயாணம் சென்ற பொழுது, அவர் பல நுணுக்கமான தந்திரங்களைக் கற்றுக்கொண்டு வந்திருந்தார். அதில் ஒன்று, சீட்டுக் கட்டின் மேலே இருக்கும் சீட்டை, 'கலவை'யின் போது ஒன்பதாவது சீட்டாக மாற்றிவைக்கும் தந்திரம்.

எதிரே ஒரு கடிகாரத்தை வைத்துக் கொண்டு, அந்த விளையாட்டைப் பிரபாகர் பலதடவை அப்பியாசம் செய்தார். கடைசியில், கால்வினாடி நேரத்தில் அந்தத் தந்திரத்தைச் செய்து முடிக்கும் ஆற்றலை அப்பியாசம் செய்துகொண்டார். பிறகு ஒரு திருப்தியோடு மேஜையடியைவிட்டு எழுந்தார். அன்று அஸ்தமனம் வரையில், அவருக்கு எந்தவித வேலையும் இல்லாததாலும், பிராயணத்தால் உடல் அசந்திருந்ததாலும், நன்றாகத் தூங்கினார்.

அஸ்தமன சமயத்தில், தம் காரை எடுத்துக்கொண்டு, மேற்கு நோக்கி சாவகாசமாகப் புறப்பட்டார் பிரபாகர்.

## *8. டாக்டர் ஆண்டியப்பனின் அலறல்!*

அவரை உள்ளே வரச்சொல்!" என்றார் டாக்டர் ஆண்டியப்பன்.

பார்வைக்குக் குள்ளமாகவும், வழுக்கைத் தலையோடும், பெண் குரலோடும் காட்சியளித்த டாக்டர் ஆண்டியப்பன், பேச்சில் சாதுரியம் படைத்தவர் என்று சொல்ல முடியாது. மற்றவர்கள் மூன்றே வரியில் சொல்லும் விஷயத்தை, அவர் ஐந்து நிமிஷ நேரம் வளர்த்திச் சொல்லுவார். இந்தக் குறைபாடு, தமக்கு இருப்பதை அறிந்த டாக்டர் ஆண்டியப்பன் அதற்காக

மற்றவர்கள் தம்மைக் கிண்டல் செய்யும் முன், தம்மைத்தாமே கிண்டல் செய்துகொள்வார்!

அந்தப் பெண்மணி கொண்டு வந்து கொடுத்த விலாசமிட்ட கார்டை, மறுபடியும் எடுத்துப் படித்துப் பார்த்தார்.

கனகசுந்தரம்

428. முகலாய தெரு,

சிங்கப்பூர்"

என்று எழுதியிருந்தது.

இந்தக் கனகசுந்தரம் யார் என்பது, டாக்டர் ஆண்டியப்பனுக்குச் சட்டென்று தெரியவில்லை. வாழ்க்கையில் அவர் எவ்வளவோ பேர்களைச் சந்தித்திருக்கிறார். கனகசுந்தரம் என்ற பெயரில், ஒரு இறக்குமதி வியாபாரியைக்கூட அவருக்குத் தெரியும். ஆகவே யார் என்று நிர்ணயிக்க முடியாமல் குழம்பிக்கொண்டிருந்தார் டாக்டர் ஆண்டியப்பன்.

கனகசுந்தரம் என்று அழைக்கப்பட்ட அந்த நபர் வந்தபொழுது டாக்டர் ஆண்டியப்பன், ஒரு சிறு தோல் பையை வைத்து ஆராய்ந்து கொண்டிருந்தார். அந்தத் தோல் பைக்குள், ஒரு சிறு டைரியும், ஸ்டாம்பு முதலியன வைக்க ஒரு சிறு அறையும், சில்லரைக் காசுகள் போட்டு வைக்க ஒரு மணிப் பர்ஸும் வைக்கப்பட்டிருந்தன. கனகசுந்தரம் உள்ளே வருகிறார் என்று அறிந்ததும், அந்தத் தோல் பையை மேஜையில் குவிந்திருந்த காகிதங்களின் அடியில் டாக்டர் சட்டெனச் செருகினார்.

உட்காருங்கள்! நான் சாதாரணமாக, இரவு நேரங்களில் யாரையும் சந்திப்பதில்லை!" என்றார் டாக்டர் ஆண்டியப்பன்.

கனகசுந்தரம் ஒரு புன்னகையுடன் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

என்ன வேலையாக என்னைப் பார்க்க வந்தீர்கள்?" என்று கேட்டார் டாக்டர் ஆண்டியப்பன்.

ஒரு முக்கிய வேலையாகப் பார்க்க வந்தேன். சிங்கப்பூர் அருகே, ஊருக்குச் சற்றுத் தள்ளி வெளிப்புறத்தில், உங்களுக்கு ஒரு தோட்டமிருக்கிறது. அந்தத் தோட்டத்தின் அருகே, எனக்கும் தோட்டம் இருக்கிறது—" என்றார் கனகசுந்தரம்.

'ஆமாம்'என்ற பாவனையில் டாக்டர் ஆண்டியப்பன் தலையசைத்தார். அவருக்கு வெளிநாடுகளில் ஏராளமாகச் சொத்தி இருந்தது. அவையெல்லாம் நிறைய லாபத்தை அளித்து வந்தன.

கனகசுந்தரம் தொடர்ந்து பேசினார்: உங்கள் நிலத்தில், தங்கம் தோண்டி எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று அறிந்தேன் ஏன் என்றால், எனது தோட்டத்தைச் சேர்ந்த எஞ்ஜினியர் கொஞ்ச நாட்களுக்குமுன் அந்தத் தோட்டத்தின் மண்ணையெடுத்து ஆராய்ச்சி செய்து பார்த்தார். அதிலிருந்து அங்கு தங்கச் சுரங்கம் இருக்குமென்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது" என்று கனகசுந்தரம் கூறிவிட்டு சட்டைப் பையிலிருந்து ஒரு 'பிளானை' மேஜைமேல் வைத்தார். பிறகு அந்தப் பிளானில் ஒவ்வொரு இடமாகக் காட்டி, எந்த இடத்திலிருந்து, எந்த இடம் வரை அந்தத் தங்கச் சுரங்கம் போகக்கூடும் என்று பிரமாதமாக விவரிக்க ஆரம்பித்தார். டாக்டர் ஆண்டியப்பனுக்கு அவ்விபரங்கள் எல்லாம் முன்பே தெரியும். ஆதலால் அவற்றை சுவாரஸ்யமில்லாமல் கேட்டுக் கொண்டிருந்தார்.

பேச்சின் முடிவில், கனகசுந்தரம் சட்டென்று, இந்தச் சொத்தை நீங்கள் பவானந்தத்திடமிருந்துதானே வாங்கினீர்கள்?" என்றார்.

ஒரு வினாடி டாக்டர் ஆண்டியப்பன் அசந்து போய்விட்டார். பிறகு அவர் சமாளித்தபடி, ம்...ஆமாம்—அவரது ஏஜெண்டுகளிடமிருந்து வாங்கினேன். அவர்கள் பெயர் எனக்கு மறந்து விட்டது—பவானந்தத்தை நேரில் கண்டு பிடிப்பது, ரொம்பவும் சிரம சாத்தியமானவேலை! பவானந்தம் சதா ஊர்சுற்றிக்கொண்டே யிருப்பான்.அவனது ஏஜென்டுகள், இன்று அவன் ஜப்பானில் இருக்கிறான் என்பார்கள்! மறுநாள் தென்னாப்பிரிக்காவில் இருக்கிறான் என்பார்கள்! பவானந்தத்தைப்போன்ற விசித்திர ஆளை நான் பார்த்ததேயில்லை!" என்று சிரித்தார்.

பிறகு டாக்டர் ஆண்டியப்பன் சட்டென்று ஏதோ நினைத்துக் கொண்டார் போல், அடடா; இந்தத் தங்கச் சுரங்கம் இருக்கும் விவரத்தை, எனது மலாயா ஏஜெண்ட் எனக்குத் தெரிவிக்காமல் மறைத்து விடுவான் என்ற சந்தேகத்தில், நீங்களாக வருந்தி வந்து சொன்னதற்கு ரொம்ப நன்றி செலுத்துகிறேன். உங்களைப்போல், மற்றவர் விஷயத்தில் அக்கறை காட்டுபவர் ஆபூர்வம்! நீங்கள் இவ்வளவு தூரம் வந்ததற்கு ரொம்ப சந்தோஷப்படுகிறேன்!" என்று புறப்பட்டுப் போ'என்று சொல்லாமல் சொன்னார்.

பவானந்தத்திடமிருந்து உங்களுக்குக் கடிதம் வருகிறதா?" என்று விடாக்கண்டரைப்போல் கேட்டார் கனகசுந்தரம்.

பவானந்தத்திடமிருந்தா? இல்லை, இல்லை. டாக்டர் ஆண்டியப்பன் என்று ஒருவர் இருப்பதே அவருக்குத் தெரியாது!" என்று டாக்டர் கூறிவிட்டு, தமது கைக்கெடிகாரத்தைப் பார்த்தபடி, அடடா ; வெகுநேரம் ஆகிவிட்டது— மணி பத்தரை ஆகிவிட்டதே! நீங்கள் புறப்படுங்கள் ; புறப்படுங்கள் ;" என்று கனகசுந்தரத்தைத் துரிதப்படுத்தினார்.

கனகசுந்தரம் என்ற புனைப் பெயரிலே வந்திருந்த துப்பறியும் பிரபாகர் புறப்பட்டதும், டாக்டர், ஆண்டியப்பனின் வேலைக்காரியோ என்று தனது விலாசமிட்ட கார்டைக் கொடுக்கும்போது பிரபாகர் சந்தேகித்த அந்தப் பெண்மணி (உண்மையில் அவள் டாக்டர் ஆண்டியப்பனின் தர்மபத்தினி) தன் கணவனிடம் சென்று, அவன் யார்?" என்று கேட்டாள்.

டாக்டர் ஆண்டியப்பன், சாவகாசமாக மீண்டும் தம் மேஜை அருகே போய் உட்கார்ந்தார். அவரது பதிலுக்கு எதிர்பார்த்த மனைவி, அவர் பின்னாலேயே அறைக்குச் சென்றாள்.

அவன் பெயர் பிரபாகர்; துப்பறிபவன்!" என்றார் டாக்டர் ஆண்டியப்பன்.

அவர் மனைவியின் முகம் சவம்போல் வெளுத்தது.

கடவுளே! துப்பறிபவனா ! அவன் எதற்கு இங்கே வந்தான்?" என்று பதறினாள். அவள் உடலெல்லாம் நடுங்கியது.

நிச்சயமாகத் துப்பறிபவன்தானா? என்று மீண்டும் அவருடைய பத்தினி கேட்டாள்.

டாக்டர் ஆண்டியப்பன், சாவகாசமாக 'ஆமாம்'என்ற பாவனையில் தலையசைத்துவிட்டு, அவன் நல்ல புத்திசாலி —ஆனால் அவன் வருவான் என்று எனக்குத் தெரியும். அவனது மூன்று புகைப்படங்கள் என்னிடம் இருக்கின்றன. ஒவ்வொரு புகைப்படமும், அவன் ஒவ்வொரு வேஷத்திலும் இருந்தபொழுது எடுத்தது!" என்றார்.

பிறகு மீண்டும் தம் வேலையைக் கவனிப்பதற்காக, மேஜைமேல்கிடந்த காகிதங்களுக்கிடையே கையை விட்டு தமது தோல் பைக்காகத் துழாவினார். ஆனால் பையை அங்கே காணோம்! டாக்டர் ஆண்டியப்பனின் முகம் சவம்போல் வெளுத்தது.

அது போய்விட்டது—எனது டைரி போய்விட்டது; அதோடு சாவியும் போய்விட்டது—கடவுளே; அந்தச் சாவியும் போய்விட்டது!" என்று பதறினார் டாக்டர் ஆண்டியப்பன்.

குடிகாரனைப்போல் அவரது கால்கள் நிற்க முடியாமல் தள்ளாடின. அவரது முகத்தில் கட்டு மீறிய கலவரம் ஆதிக்கம் செலுத்தியது.

“நான் அந்த 'பிளானைப் பார்த்துக் கொண்டி ருக்கும் பொழுதுதான் அந்தத் துப்பறியும் பிரபாகர் மெல்ல பிளானுக்கிடையில் கையைவிட்டு, அதைத் திருடிக்கொண்டுருக்கிறான். திருட்டில் அவன் மகா நிபுணன் என்பதை நான் மறந்து விட்டேன்! அயோக்கியன்! – அந்தக் கதவை மூடு! நான் டெலிபோன் செய்ய வேண்டும்!'' என்று அலறினார் டாக்டர் ஆண்டியப்பன்.

## *9. தெரு நடுவில் சிகப்பு வெளிச்சம்!*

டாக்டர் ஆண்டியப்பனின் வீட்டைவிட்டு துப்பறியும் பிரபாகர் புறப்படும்பொழுது நன்றாக மழை பிடித்துக்கொண்டது. அந்த மழையிலும், அளவு கடந்த வேகத்திலே அவர் அமர்ந்திருந்த மோட்டார்கார் செல்ல ஆரம்பித்தது. நேராக ஆயிரம் விளக்கிலுள்ள ஆண்டர்ஸன் ரோடிலுள்ள, தமது

ஜாகைக்குச் செல்ல வேண்டுமென்று முடிவு கட்டினார் பிரபாகர். இருட்டில் தன்னந் தனியாகத்தான் அவர் தம் காரை ஓட்டிப் பறந்து கொண்டிருந்தார்.

காரில் போய்க் கொண்டிருக்கும்போதே, தன் சட்டைப் பைக்குள் கையை விட்டு, தாம் எடுத்து வந்திருந்த தோல்பை ஜாக்கிரதையாக இருக்கிறதா என்று கவனித்தார். அந்தப் பைக்குள், கடினமான வஸ்து ஏதோ ஒன்று தென்பட்டது. முதலில் அது பணமாக இருக்கக் கூடுமென்று நினைத்த பிரபாகர், காரை நிறுத்தி அதைத் திறந்து பார்த்தார். அதற்குள்ளும், விசித்திர உருவமான ஒரு சாவி இருந்தது! மஹேஸ்வரி கொண்டு வந்ததைப்போன்ற அதே விசித்திரமான சாவி!

பிரபாகர் உற்சாகமாக விஸில் அடித்தபடி, அந்தச் சாவியைத் தோல் பையிலிருந்து வெளியே எடுத்து தமது காரில் கால் வைக்குமிடத்தில் விரிக்கப்பட்டிருந்த ரப்பர் விரிப்பின் அடியில் மறைத்து வைத்தார். ஏனென்றால் மஹேஸ்வரியிடமிருந்த சாவியைக் கைப்பற்று வதற்காக அவ்வளவு முயற்சிகள் எடுத்துக்கொண்ட நபர்கள், தன்னிடமிருக்கும் சாவியை கைப்பற்றுவதற்காக, தம் காரையே வழி மறித்து நிறுத்தக்கூடும் என்று எதிர்பார்த்தார் பிரபாகர்.

இப்பொழுதுதான், பிரபாகருக்கு அந்தச் சாவியைச் சுற்றியுள்ள மர்மங்கள் கொஞ்சம் கொஞ்சமாக விளங்க ஆரம்பித்தன. மஹேஸ்வரி இடமிருந்த சாவி, இப்பொழுது பாங்கில் பந்தோபஸ்தாக ‘டெபாஸிட்’ செய்யப்பட்டிருக்கிறது. இரண்டாவது சாவி இது!—இன்னும் இதுபோன்ற எத்தனை விசித்திரமான மர்மச் சாவிகள் இருக்கின்றனவோ!...

பவானந்தம் டாக்டர் ஆண்டியப்பனுக்குக் கடிதம் எழுதியிருப்பது தமக்கு நிச்சயமாகத் தெரியும்பொழுது, டாக்டர் ஆண்டியப்பன் தமக்கும் பவானந்தத்திற்கும், எந்தவிதக் கடிதத் தொடர்பும் இல்லையென்று கூறியதேன்? அந்த விசித்திரச் சாவியின் தாத்பரியம் என்ன? தாம் உள்ளே நுழையும்பொழது டாக்டர் ஆண்டியப்பன், சடக்கென அந்தத் தோல் பையைக் காகிதங்களுக்கடியிலே தள்ளிவைப்பதைப் பிரபாகர் பார்த்திருந்தார். அதில் என்ன இருக்கக் கூடும் என்ற ‘ஆராயும் புத்தி’யில்தான், டாக்டருக்குத் தெரியாமல் அதைக் கிளப்பிக்கொண்டு வந்தார் பிரபாகர்.

கோடம்பாக்கம் சூளைமேட்டிலிருந்து கிளம்பிய அவருடைய மோட்டார்கார், நேராகக் கோடம்பாக்கம் ஹைரோடு வழியாக வந்து, நுங்கம்பாக்கம் வில்லேஜ் ரோடைச் சேருமிடத்தை அடைந்தது. அதற்கு மேல் அந்த ரோடு வழியாகப் போக முடியாதபடி, ரோடுரிப்பேர் வேலைக்காக தடுக்கப்பட்டிருந்ததால், காரை நுங்கம்பாக்கம் வில்லேஜ் ரோடிலேயே சிறிது தூரம் ஓட்டி, கிருஷ்ணமாச்சாரி ரோடுவழியாக, நுங்கம்பாக்கம் ஹைரோடை அடையச்செய்தார். அங்கிருந்து தம் இருப்பிடத்தை அடைவதற்கு அவர் வழக்கமாகச் செல்லும் குறுக்கு வழியான 'காதர் நவாஸ்கான்'ரோடில் காரைத் திருப்பினார். கொஞ்ச தூரம் சென்றதும், அத்தெருவின் நடு மத்தியில் மூன்று சிவப்பு விளக்குகள் வைக்கப்பட்டிருப்பதைக் கவனித்தார். உடனே காரை மெதுவாக ஓட்டி அந்த விளக்குகள் அருகில் கொண்டு போய் நிறுத்தினார். இம்மாதிரி விளக்குகளை வைத்திருந்தால், அந்தத் தெரு, கார் பிரயாணத்திற்கு லாயக்கற்றது என்று அர்த்தம். ஆனால் சில வினாடிகளுக்கு முன் அவர் கிருஷ்ணமாச்சாரி ரோடிலிருந்து வேகமாக ஒரு லாரி வந்து திரும்பியிருக்கும்பொழுது, தம் கார் அந்த வழியாகச் செல்வது கஷ்டமில்லையென்று நினைத்தார்.

மறு வினாடி அவருக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. உள்ளபடியே, அந்த ரஸ்தா தடுக்கப்பட்டிருந்தால், லாரி எப்படி அந்த வழியே வந்திருக்க முடியும்? அப்படி வைக்கப்பட்டிருந்தால், அவை நிச்சயமாக ஒரு மோசடி எண்ணத்தோடுதான் வைக்கப்பட்டிருக்கவேண்டும்!

காரின் விளக்குகள் எல்லாவற்றையும் அணைத்துவிட்டு, சுற்றிலும் இருட்டாக்கிக்கொண்டு தம் கால் சட்டை பைக்குள்ளிலிருந்து ஏதோ ஒன்றை எடுத்துக்கொண்டு, காரை விட்டு மெதுவாக இறங்கினார் பிரபாகர். வெளியே நின்று கொஞ்ச நேரம் கவனித்தார். எந்தவித அரவமும் கேட்கவில்லை. தெருவின் நடுமத்தியிலேயே நடந்தபடி அச்சிவப்பு விளக்குகள் வைக்கப்பட்டிருந்த இடத்தையே நெருங்கினார். நடுவிலிருந்த விளக்கைக் கையிலெடுத்துப் பார்த்தார். அந்த விளக்கு ரொம்பவும் பழசாக இருந்தது. அவசர அவசரமாக யாரோ அதற்குச் சிவப்பு வர்ணம் பூசி இருக்கிறார்கள். மற்ற விளக்குகளிரண்டும், வெவ்வேறு உருவத்திலும், வெவ்வேறு

மாதிரியாகவும் செய்யப்பட்டு இருந்தன. அவற்றின்மீது பூசப்பட்டிருந்த சிவப்பு வர்ணமும் புதிதாகவே இருந்தது.

நடுவிலிருந்த விளக்கைத் தூக்கி, ஆத்திரமாக வீசி எறிந்தார். அது தூள் தூளாக நொறுங்கி விழுந்தது! பிறகு தன் கார் இருந்த இடத்திற்கு வந்தார்.

காரில் ஏறி உட்கார்ந்து, அதை ‘ஸ்டார்ட்’செய்ய ஆரம்பித்ததும், எஞ்ஜின் ஆடியதே தவிர, கார் நகரவில்லை. அதற்குக் காரணம் என்னவென்று புரியாமல், இன்னொரு தடவை முயற்சித்துப் பார்த்தார். அப்பொழுதும் கார் கிளம்பவில்லை. அப்பொழுதுதான் பெட்ரோல் இருக்கிறதா என்று கவனித்தார்.

‘காலி’என்ற அறிவிப்பை, பெட்ரோல் நிலவரம் காட்டும் மீட்டர் காண்பித்தது. டாக்டர் ஆண்டியப்பன் வீட்டிற்குப் போகும் பொழுதுதான், காரில் இரண்டு காலன் பெட்ரோல் போட்டுக் கொண்டுபோனார். அதற்குள், பெட்ரோல் எப்படிக் காலியாகி இருக்க முடியும்?

சந்தேகத்தோடு, கையில் டார்ச் விளக்குடன், காரின் பின்பக்கத்தை சோதனையிடச் சென்றார் பிரபாகர். பெட்ரோல் எல்லாம் தரையில் ஆறாக ஓடியிருந்தது!—தாம் நடுத் தெருவில் உள்ள சிகப்பு விளக்குகளை ஆராய்ந்து கொண்டிருக்கும் பொழுது, யாரோ மோட்டார் காரிலிருந்த பெட்ரோலை காலி செய்திருக்கிறார்கள். அவரிடம் ரிஸர்வில் பெட்ரோல் இல்லை. ஆகவே; நடு வழியில் நல்ல இருட்டில் தர்ம சங்கடமான நிலையில் தன்னந் தனியாகச் சிக்கிக் கொண்டார் பிரபாகர்.

தமது டார்ச் விளக்கின் உதவியால், அருகில் யாருடைய பங்களாவாவது இருக்கிறதாவென்று பிரபாகர் கவனித்தார். அங்காவது சென்று பெட்ரோல் வாங்கி வரலாமென்று யோசனை செய்தார் ஆனால் அருகிலிருந்த பங்களா எதுவென்று கவனித்தப்பொழுது. அவருக்கே தூக்கி வாரிப்போட்டது—ஏனென்றால் ‘பரலோகபவனம்’தான் அங்கு காட்சியளித்தது! அந்தப் பங்களா டாக்டர் ரஞ்சித் சிங் என்னும் விசித்திமான பேர்வழியின் வாசஸ்தலமாகும்.

டார்ச் விளக்கை அடித்தபடி, ஜாக்கிரதையாக அந்தப் பரலோக பவனத்தில் வெளிக் காம்பௌண்ட் கேட்டிற்குள் நுழைந்தார் பிரபாகர்! அங்கே

தோட்டத்தில் அடர்த்தியாகச் செடிகள் மண்டிக்கிடந்தன. கண்காணிப்பில்லாததால், தோட்டம் காடுபோல் வளர்ந்திருந்தது. ஏழெட்டு அடிகள் எடுத்து வைத்ததும், பிரபாகர் திடீரென்று நின்றுவிட்டார். ஏனென்றால் ஒரு புதர் மறைவில் ஒரு நீளமான குழி வெட்டப்பட்டிருந்தது! ஆறடி நீளமுள்ள அந்தக் குழி, குறுகலாக இருந்தது. அதைச் சமீபத்தில்தான் யாரோ வெட்டியிருக்க வேண்டும் என்று தீர்மானித்தார் பிரபாகர். சவத்தைப் புதைப்பதற்காக வெட்டப்படும் புதை குழிபோலிருந்தது அது! அதைப் பார்த்ததும் எக்காரணத்தாலோ பிரபாகரின் உடல் நடுநடுங்கியது!

அந்த இடத்தைவிட்டு ஜாக்கிரதையாக மேலே நடந்த பிரபாகர், ‘பரலோக பவன’த்தின் படிக்கட்டில் ஏறினார். அங்கு ஜீவராசிகள் இருக்கும் தடயமே காணப்படவில்லை. பேயடைந்த வீட்டைப்போல் வெறிச்சென்றிருந்தது!

பிரபாகர் பயப்பிராந்தியுடன் அந்த வீட்டின் வெளிக்கதவைத் தட்டினார். உள்ளே இருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை. வெகு நேரம் தட்டிய பிறகு, கதவை நோக்கி யாரோ வரும் சப்தம் கேட்டது. பிறகு பூட்டுத் திறக்கப்பட்டு, உள்ளே மாட்டியிருந்த சங்கிலி கழற்றப்படுவது தெரிந்தது. கதவை ஒரு சாண் அளவு திறந்து கொண்டு டாக்டர் ரஞ்சித் சிங், தலையை நீட்டினார். அவரிடம் பெட்ரோல் இரவல் கேட்டார் பிரபாகர்.

யார் இது? என்ன இது!..... பெட்ரோலா? பெட்ரோல் வேண்டுமா?—ரொம்ப மடத்தனமாக இருக்கிறதே! உனக்கு கொஞ்சம் பெட்ரோல் தருகிறேன்—ஆனால் பணம் கொடுத்துவிட வேண்டும்!" என்றார் ரஞ்சித் சிங்.

பிரபாகரைத் தெரிந்து கொண்டதாகவே, டாக்டர் ரஞ்சித் சிங் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் கதவை மாத்திரம் அகலத் திறந்து விட்டார். உள்ளே நுழைந்த பிராபகர் டாக்டர் ரஞ்சித் சிங்கைக் கூர்ந்து கவனித்தார். டாக்டர் ரஞ்சித் சிங் ஒரு நீளமான கறுப்பு அங்கியைத் தரித்துக் கொண்டிருந்தார். அந்த அங்கி பூராவும் பல இடங்களில் கறை பட்டிருந்தது! அவர் காலில் அணிந்திருந்த ‘ஸ்லிப்பர்’பல இடங்களில் ரிப்பேர் செய்யப்பட்டிருந்தது. போன தடவை தான் டாக்டர் ரஞ்சித் சிங்கைச் சந்தித்த பிறகு அந்த விசித்திரப் பேர்வழி இன்னும் குளிக்கவேயில்லை என்று புரிந்து கொண்டார் பிரபாகர், அவரது முரட்டுக் கரங்கள் ஏதோ ரசாயனத்

திராவகங்கள் பட்டுத் தீய்ந்துபோயிருந்தன. விரல்களிலெல்லாம் ரொம்பவும் நீளமாக நகங்கள் வளர்ந்திருந்தன. ஆனால், அந்தப் பரலோக பவனத்தின் கொலுக்கூடம் விலை உயர்ந்த சாமான்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தரையில் விரிக்கப்பட்டிருந்த ரத்னக்கம்பளமும், உட்காருவதற்காகப் போடப்பட்டு இருந்த சோபா ஸெட்டுகளும், மேற் கூறையிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த ‘லஸ்தர்’விளக்குகளும், மிகவும் விலை மதிப்புடையனவாக இருக்குமென்று நினைத்தார் பிரபாகர். ஆனால் வெளியிலிருந்ததைப்போல், இங்கும், ஒரு அங்குல கனத்திற்கு தூசி படர்ந்திருந்தது. அந்த ரத்தினக் கம்பளத்தில் பிரபாகர் அடி எடுத்து வைத்ததும், புகைபோல தூசி வெளிக் கிளம்பிற்று.

நீ இங்கேயே இரு. நான் பெட்ரோல் கொண்டுவந்து தருகிறேன்—ஒரு காலன் பெட்ரோலின் விலை இரண்டு ரூபாய் பதினாலு ஆணா!" என்றார் டாக்டர் ரஞ்சித் சிங்.

பெட்ரோல் எடுத்து வருவதற்காக அந்த விசித்தர மனிதர் உள்ளே சென்றதும், பிரபாகர் அந்த அறையைக் கூர்ந்து கவனித்தார். விசித்திரமும் அருவருப்பும் நிறைந்த இந்த டாக்டர் ரஞ்சித் சிங்கின் வாழ்விலே, ஏதோ மர்மம் இருக்க வேண்டுமென்று நினைத்தார் பிரபாகர். அதற்குள் அந்த மனிதர் இரண்டு டின்களில் பெட்ரோல் எடுத்து வருவது தெரிந்தது.

நான்கு காலன் பெட்ரோல் இருக்கிறது!" என்று கூறிவிட்டு டாக்டர் ரஞ்சித் சிங் பிரபாகரை நிமிர்ந்து பார்த்தார். தன்னைப் புரிந்து கொண்டபோதிலும், புரியாதவர்போல் இந்த டாக்டர் நடிக்கிறாரே என்று மனதிற்குள் அதிசயித்தார் பிரபாகர். அவர் மனதில் எந்தவிதமான எண்ணம் வேலை செய்கிறதென்பதை யூகித்துக் கொண்டவர்போல், டாக்டர் ரஞ்சித் சிங், நான்தான் ரஞ்சித் சிங். நாம் இருவரும் ஏற்கனவே சந்தித்திருக்கிறோமென்று நினைக்கிறேன். ஒரு புத்தக விஷயமாக நீ வந்தாய்!" என்றார்.

ஆமாம்!"

பிரபாகர் உள்ளத்தில் ஏதோ ஒரு அபாயம் எதிர்நோக்கி இருப்பதாக, ஏதோ ஒன்று எச்சரித்தபடி இருந்தது.

நீ என்னைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பாய்—ஆமாம்;விஞ்ஞான உலகில் என்பெயர் ரொம்பவும் அடிபடும். சரி, சரி; பணத்தைக் கொடுத்துவிட்டு நீ புறப்படு" என்றார் விசித்திரமாக டாக்டர் ரஞ்சித் சிங்.

ரொம்ப வந்தனம், டாக்டர். இதோ பன்னிரெண்டு ரூபாய் இருக்கிறது—சில்லறைபற்றிக் கவலைப்பட வேண்டாம். உங்களிடமே இருக்கட்டும்!" என்றார் பிரபாகர்.

அந்தத் தாடிக்கார டாக்டர், கொஞ்சம்கூட சஞ்சலம் இல்லாமல், அந்தப் பணத்தை திருப்தியோடு பையில் போட்டுக் கொள்வதைப் பார்த்த பிரபாகருக்கு ஆச்சரியமாக இருந்தது.

தெருக்கதவருகே சென்று, டாக்டர் ரஞ்சித் சிங் தாளை திறந்து விட்டார்.

பிரபாகர் ஜாக்கிரதையாக அவர்மீது ஒரு கண் வைத்தபடியே, வாயிற்படியைத் தாண்டி வெளியே கால் எடுத்துவைத்தார். அவரிடம் ஏதோ சொல்ல விரும்புபவர் போல், வாயைத் திறந்த டாக்டர் ரஞ்சித் சிங், சட்டென்று தம் மனதை மாற்றிக்கொண்டு, உள் பக்கம் திரும்பி, 'படீ'ரென கதவைச் சாத்தித் தாளிட்டுக்கொண்டார். கதவை அவர் அப்படி சாத்தியதும், எங்கிருந்தோ இருட்டில் பீதியால் ஏதோ ஒன்று வீரிட்டு அலறுவதைப் போன்ற ஒரு சத்தம் கேட்டது! பிரபாகர் உடல் ஒரு வினாடி சில்லிட்டு போய்விட்டது. அந்தச் சத்தம் ஒரு அலறலாக ஆரம்பித்துப் படிப்படியாகத் தேம்பலாக மாறி, இரவின் நிசப்தத்தில் கலந்தது. அந்தச் சப்தம் வீட்டிற்குள்ளிருந்துதான் வருகிறது. என்று பிரபாகர் புரிந்து கொண்டார்.

பிரபாகரின் நெற்றியிலே முத்து முத்தாக வியர்வை அரும்பியது. வீட்டிற்குள் திரும்பவும் நுழைந்து, அந்தக் கூக்குரலின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முயலலாமா என்று முயற்சித்தார். ஆனால் அப்படிச் செய்வது பயனற்றவேலை என்று கருதி, இரண்டு பெட்ரோல் டின்களையும், கைக்கு ஒன்றாக எடுத்துக்கொண்டு, பிரபாகர் திக்திக்கென்று நெஞ்சு அடித்துக்கொள்ள மெதுவாகத் தோட்டத்தின் வழியாய் நடக்க ஆரம்பித்தார். மழையின் காரணமாக காலில் அணிந்திருந்த காலணியை, காரில் கழற்றி வைத்துவிட்டு வந்து விட்டாராகையால். அவர் நடக்கும் பொழுது எந்தவித ஓசையும்

ஏற்படவில்லை. அதனால் சுற்றிலும் ஏற்படும் சத்தங்களை, பிரபாகரால் சுலபமாக அறிய முடிந்தது. இரண்டு கைகளிலும் பெட்ரோல் டின்கள் இருந்ததால், டார்ச் விளக்கை அவர் தம் கால் சட்டைப்பைக்குள் சொருகிக் கொண்டிருந்தார்.

சற்று முன் அவர் கண்முன் தென்பட்ட அந்தப்படுகுழியை நெருங்கியதும், தம்பின்னால் இருட்டில் யாரோ வருவது போன்ற பிரமை அவருக்கு ஏற்பட்டது. ரொம்பவும் உன்னிப்பாகக் கவனித்தார். ஏதோ ஒரு விசித்திரமான சப்தம் தன் பின்னால் தொடர்ந்து வருவது அவருக்கு நன்றாகத் தெரிந்தது. சட்டென்று திரும்பிப் 'பரலோகபவன'த்தைப் பார்த்தபடியே, பின்பக்கமாக நடந்து செல்லவாரம்பித்தார். வரவர அந்தச் சப்தம் இருட்டில் தெளிவாகக் கேட்க ஆரம்பித்தது. அவரது வலதுகைப் பக்கத்திலிருந்த ஒரு புதரில், ஏதோ பேராபத்தை உணர்ந்த பிரபாகர், திடீரென்று இரண்டு பெட்ரோல் டின்களையும் கீழே போட்டுவிட்டு, இடுப்பிலிருந்த சுழல் துப்பாக்கியை எடுத்துக்கொள்ள முயன்றார். ஆனால் அதற்குள் ஏதோ ஒரு முரட்டு உருவம் அவரைப் பலமாகக் கட்டிப்பிடித்தது. அந்த உருவத்தின் உடம்பெல்லாம் கரடியைப்போல ரோமம் வளர்ந்திருந்தது! முக்கால் நிர்வாணமாக இருந்த அந்த மிருகத்தனமான உருவத்தின் முரட்டுக்கரங்கள் குபீரெனப் பிரபாகரின் தோள்களைச் சுற்றி இறுகி இருந்தன! பிருமாண்டமான அந்த மிருக உருவம் வேகமாகப் பிரபாகரின் முகத்தைப் பற்றி அமுக்கிக் கழுத்தைத் திருப்பி முறித்துவிட முயன்று கொண்டிருந்தது! பிரபாகருக்கு மரணபயத்தால் மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. ஆனால் சாகப்போகிறோம் என்ற கலவரத்தில் ஏற்பட்ட அசாதாரணமான பலத்தோடு குபீரென்று முரண்டித் துள்ளிய பிரபாகரின் வலுவான மண்டை, அந்த உருவத்தின் தவடையில் முரட்டுத் தனமாகத் தாக்கியது! அந்த அடியின் வேகத்தைத் தாளாத அந்த முரட்டு உருவம் பயங்கரமாக முனகி, அமானுஷ்யமாகக் கூக்குரலிட்ட படி, பிடியை விட்டு விட்டது.

மறுவினாடி பிரபாகர் சட்டென்று, தம் துப்பாக்கியை உருவி எடுத்துக்கொண்டு, நகராதே! அந்த இடத்திலேயே நில்—உன் உருவத்தை நான் பார்க்கவேண்டும்!" என்று கூறிக்கொண்டே, கால் சட்டைப் பையிலிருந்த டார்ச் விளக்கை எடுத்து எதிரே அடித்துப் பார்த்தார்.

எந்த உருவமும் அங்கில்லை!

இடதுபக்கமும் வலது, பக்கமுமாக, டார்ச் விளக்கை அடித்து அதன் வெளிச்சத்தில் பார்த்தார்.

எந்த இடத்திலும், தன்னைத் தாக்கிய அந்த விசித்திர உருவத்தைக் காணவில்லை!

ஒருவேளை அந்த ஆள் பின்னால் நின்று கொண்டிருப்பானோ?

சட்டென்று பிரபாகர் தன் பின்புறம் திரும்பி டார்ச் விளக்கை அடித்துப் பார்த்தார். அங்கும் அந்த உருவத்தைக் காணவில்லை!

கடைசித் தடவையாக பரலோக பவனத்தை நோக்கிப் பிரபாகர் தம் கை டார்ச் விளக்கை அடித்து அதன் வெளிச்சத்தில் பார்த்தபோது அவர் ரத்தம் உறைந்து விடுவதைப் போலிருந்தது! கட்டிடத்தின் அருகிலிருந்த புதர் மறைவிலே, கோவணம் மட்டும் தரித்த ஒரு பிரமாண்டமான உருவம், மறைந்து, மறைந்து கட்டிடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது!

தன்னைக்கொன்று புதைப்பதற்குத்தான், அந்தப் புதிதாக வெட்டிய குழியை டாக்டர் ரஞ்சித் சிங் தயாராக வைத்திருந்தார் என்பதை அறிந்ததும் பிரபாகரின் உடம்பு நடு நடுங்கியது.

உடனே பிரபாகர் ஒரே ஒரு பெட்ரோல் டின்னை மாத்திரம் எடுத்துக்கொண்டு வெளியே ஓடிவந்து, ஐந்து நிமிஷ நேரத்திற்க்குள் அந்தப் பிராந்தியத்தை விட்டே தம் மோட்டார்காரில் பறந்துவிட்டார்!

## *10. அப்பரின் ஆத்திரம்!*

டாக்டர் ஆண்டியப்பன், தம்மால் நடக்க முடிந்திருந்தால் ‘பரலோக பவனம்’ என்னும் விசித்திரமாளிகைக்கு நடந்தே வந்திருப்பார். நடக்க முடியாததால்தான், டிரைவர் பிச்சைக்கண்ணுவின் முனகலையும் சகித்துக்கொண்டு, மழையும் காற்றும் ஆதிக்கம் செலுத்திய அந்தக் கொடிய இரவில் மோட்டார் காரில் ஏறிக்கொண்டு பதை பதைப்போடு புறப்பட்டார்.

‘பரலோக பவனர்த்’திலிருந்து நூறு கஜதூரம் இப்பாலிருக்கும் பொழுதே, காரை நிறுத்தி விட்டு டாக்டர் ஆண்டியப்பன் மெல்லக் கீழே இறங்கி, பிச்சைக்கண்ணு! பத்திரம்; எதிரே இருக்கும் சந்திற்குள் காரைக்கொண்டு நிறுத்திவை. விளக்கையெல்லாம் அணைத்துவிடு. நான் திரும்பி வரும்வரை இந்த இடத்தைவிட்டு நகராதே!" என்று கூறிவிட்டு அந்த வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

பிச்சைக்கண்ணு ஏதோ முணுமுணுத்துவிட்டு, ரொம்ப நேரம் அங்கே தங்கி விடாதீர்கள்! இதெல்லாம், என்ன நாடகம், டாக்டர்? அந்தக் கிழவனை, நாம் இருக்கும் இடத்திற்கு வரச் சொல்லியிருந்தால் என்ன?" என்றான்.

உன் வேலையை கவனி!" என்று சீறிவிட்டு டாக்டர் ஆண்டியப்பன் இருளில் மறைந்தார்.

அவர் ‘பரலோக பவனத்’தை நெருங்கும் பொழுது இரவு மணி ஒன்றுக்கு மேலாகிவிட்டது. இருட்டிலே தடுமாறிக்கொண்டு சென்ற அவர், ஒரு தடவை அங்கிருந்த ஒரு மரணக் குழியில் விழப் பார்த்தார்.

டாக்டர் ஆண்டியப்பன் நேரடியாகத் தெருக் கதவைத் தட்டவில்லை. வீட்டை ஒரு முறை வலம் வந்து, இருண்டிருந்த ஒரு ஜன்னலைத் தட்டினார். பிறகு அங்கிருந்து தெருக்கதவுப்பக்கம் அவர் வந்தபொழுது, டாக்டர் ரஞ்சித் சிங் தம் வீட்டின் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு தயாராகக் காத்திருந்தார்.

ஆ, நீயா! இந்த நேரத்தில் உன்னைப் பார்ப்பது எவ்வளவு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது தெரியுமா! உள்ளே வா, என் அருமை நண்பா! டெலிபோன் மூலம் நீ அனுப்பிய செய்தி வந்தது; ஆனால், அந்தோ! விதி எனக்கெதிராக சதி செய்து விட்டது!" என்று பழைய கால நாடகத் தமிழில் பேசினார் டாக்டர் ரஞ்சித் சிங்.

அந்தத் துப்பறியும் பிரபாகர் தப்பி ஓடி விட்டானா?" என்று கலவரத்தோடு கேட்டார் டாக்டர் ஆண்டியப்பன்.

டாக்டர் ரஞ்சித் சிங், தம் தோளை ஒரு உலுப்பு உலுப்பி விட்டு, தாடியை உருவிக்கொண்டார். அதுதான் விதி! இல்லாவிட்டால் அவன் பரலோக யாத்திரை தொடங்கி இருப்பான்! நானே, ரஸ்தாவில் சிகப்பு விளக்குகளை வைத்தேன்—நானே அவனுடைய காரிலிருந்த பெட்ரோலையெல்லாம் காலி செய்தேன். அவன் திரும்பி வருவதற்குள் நான் வீட்டிற்குள் வந்து புகுந்து கொண்டேன். அந்த நிலவரம் ரொம்ப விசித்திரமானது! அவனுக்கும் சாவுக்குமிடையே ஒரு சிறு மயிரிழைதான் இடைவெளி இருந்தது!... தப்பிவிட்டான் விதிவசத்தால் தப்பிவிட்டான்.

கட்டுக்கடங்காத கலவரத்தோடு டாக்டர் ஆண்டியப்பன், கொலுக் கூடத்தைச் சுற்றிப்பார்த்தபடியே, மேலே என்ன நடக்கும்?" என்று ரகசியமான குரலில் கேட்டார்.

டாக்டர் ரஞ்சித் சிங் அலட்சியமாக, இப்பொழுதோ, பிறகோ போலீஸார் இங்கே வருவார்கள். என் வீட்டைச் சோதனை போடுவார்கள். என்ன குடிமுழுகிப் போய்விடும்? சில எலிகளைக் கொன்று, அந்தக் குழியருகே போட்டிருக்கிறேன். எலிவளையை வெட்டிப்பறிக்க குழிவெட்டக் கூடாதென்று எந்தச் சட்டம் என்னைத் தடுக்க முடியும்?" என்றார் டாக்டர் ரஙசித் சிங்.

பிரபாகரின் பின்னால் நீ 'நமது ஆசாமியை'—?" என்று நிறுத்தினார் ஆண்டியப்பன்.

நான் 'நமது ஆசாமி'யை அவன்பின்னால் அனுப்பினேன். ஆனால் அந்த 'நமதுஆசாமி' மடையனைப்போல் தடுமாறித்திரும்பி விட்டான். உடம்பிலுள்ள சதையை வலுப்பெறச்செய்ய வேண்டும் ஆனால். மூளைக்கு வேலை கொடுக்காமலிருக்க வேண்டும். மூளைக்கு வேலை கொடுக்காததால், 'நமது ஆசாமி' அவ்வளவு. முரடனாகஇருக்கிறான்!" என்று கூறிவிட்டு டாக்டர் ரஞ்சித் சிங், உள்ளே போகலாம்,வா! என்று அழைத்தார்.

இருவரும், டாக்டர் ரஞ்சித் சிங் வேலை செய்யும் அறைக்குச் சொன்றார்கள். அங்கு மேஜைமேல் இருந்த அருவருப்பான திராவகங்கள் எல்லாம் காலி செய்யப்பட்டு, ஒரு சீட்டுக்கட்டு பரப்பி வைக்கப்பட்டிருந்தது.

ஆண்டியப்பன்! முதலில் நம்மிடமிருந்து தப்பிச்சென்ற அபாயகரமான அந்த ஆள் யாரென்று எனக்கு சொல்லு. அவனை இதற்கு முன் நான் பார்த்திருக்கிறேன். ஒரு புஸ்தகம் சம்பந்தமாக என்னிடம் விசாரிக்க வந்திருந்தான். அன்றையதினம் உனது டிரைவர் பிச்சைக்கண்ணுவும் இங்கு வந்திருந்தான். அந்த ஆளை எனக்குத் தெரிந்த மாதிரியும் தெரிகிறது; ஆனால் தெரியவும் இல்லை!" என்று கேட்டார் டாக்டர் ரஞ்சித் சிங்.

டாக்டர் ஆண்டியப்பனின் முகம் பேய்க்களைத்தட்டி வெளுத்து, இறங்கிப் போயிருந்தது.

பவானந்தத்தைத் தேடிப்பிடிக்க, வக்கீல் ராஜாங்கம் பிள்ளை அனுப்பிய ஆள்தான் அந்தத் துப்பறிபவன்" என்று முனகினார் டாக்டர் ஆண்டியப்பன்.

டாக்டர் ரஞ்சித் சிங்கின் புருவம் வெகுதூரம் உயர்ந்து தாழ்ந்தது. அப்படியா? என்ன ஆச்சரியம்! பவானந்தத்தைத் தேடிப்பிடிக்க இந்தக் கனவானைத் தான் மகாப் புத்திசாலியான ராஜாங்கம் பிள்ளை அனுப்பினாரோ!" என்று சொல்லிவிட்டு விழுந்து விழுந்து சிரித்தார் டாக்டர் ரஞ்சித் சிங்! பிறகு, இது ஒரு பிரமாதமான நகைச்சுவை விஷயம்! உள்ளபடியே மகா, மகா, புத்திசாலியும் உண்மை விசுவாசியுமான ராஜாங்கம் பிள்ளையைப்போல ஆளைக் கண்டு பிடிப்பதே அபூர்வம்!—நமது நண்பர் பவானந்தத்தைக் கண்டு பிடித்தாரா? இல்லை! அதுதான் ரொம்பப் பிரமாதம். ஒருக்கால் இந்தத் துப்பறிபவனால் வேகமாக விரட்டிக் கண்டுபிடிக்க முடியவில்லையோ! ஒருக்கால், காரில் போகவேண்டிய இடங்களுக்குக் கட்டை வண்டியில் சென்றானோ!" என்று உற்சாகத்தோடு சொல்லிவிட்டு எதிரே இருந்த மேஜைமீது தனது கரடி நகங்களால் தாளம் போட்டு, அருவருக்கத்தக்க ஒரு ஒலியைக் கிளப்பிக் கொண்டிருந்தார்.

டாக்டர் ஆண்டியப்பன் ஏதோ சிந்தனையோடு உட்கார்ந்து இருந்தார்.

எனது நண்பருக்கு வேறு என்ன வேண்டும்?" என்று ஆண்டியப்பனையே உன்னிப்பாகப் பார்த்தபடி கேட்டார் ரஞ்சித் சிங்.

எனக்குக் கொஞ்சம் பணம் வேண்டும்!"

ஒரு வார்த்தைகூட பேசாமல், டாக்டர் ரஞ்சித் சிங், மேஜை டிராயரைத் திறந்து அதற்குள்ளிருந்து ஒரு தகர டப்பாவை எடுத்தார். அந்த டப்பாவிலிருந்து ஒரு கத்தை நோட்டுகளை எடுத்து, டாக்டர் ஆண்டியப்பனிடம் கொடுத்துக்கொண்டே, இனிமேல் நான் கொடுக்க வேண்டியது அதிகம் இல்லை. ஆகவே நீ பணக்காரனாகிக் கொண்டே வருகிறாய்! என்னிடமிருந்த பணமெல்லாம் உன்னிடம் மாறிக் கொண்டே வருகிறது! நான் இறந்தால் அது உனக்கு ஆதாயம்!" என்றார் டாக்டர் ரஞ்சித் சிங்.

ஆண்டியப்பன் நடுங்கிக்கொண்டே, சாவு என்ற வார்த்தையை எடுத்துப் பேசவேண்டாம்! அம்மாதிரி விவகாரங்களே நமக்கு வேண்டாம். முதலில் நாம் போட்ட திட்டம்தான் சரியானது. அதிலிருந்து நாம் விலக ஆரம்பித்து விட்டோம். நீ யாரையாவது கொலை செய்திருந்தால்—"

கொலை செய்திருக்கிறாயா?" என்று கேட்டார் டாக்டர் ஆண்டியப்பன்.

டாக்டர் ரஞ்சித் சிங் ஒரு புன்னகை புரிந்தார் : வேதநாயகம் என்று ஒருவன் இருந்தான். அவன் நிச்சயமாகச் செத்துப்போய் விட்டான்! ஆனால் அது தற்கொலை என்று நினைக்கிறேன்!" என்று உஷாராகப் பேசினார் டாக்டர் ரஞ்சித் சிங்.

பிறகு ஏதோ நினைத்துக்கொண்டவர்போல் சிங் தொடர்ந்து சொல்லலானார்: போலீஸ்காரர்களிடம் செல்பவர்களைக் கண்டால் எனக்கு என்னவோ பிடிப்பதில்லை! அது ரொம்ப மோசமான விஷயம்! ஏனென்றால் போலீஸாருக்கு வெறும் கற்பனா சக்தி கிடையாது!" என்று கூறிவிட்டு டாக்டர் ஆண்டியப்பனை ஓரக் கண்ணால் பார்த்தபடி, நான் இப்பொழுது ஒரு போலீஸ்காரனிடம் போகிறேன் என்று வைத்துக்கொள்; வாக்குமூலம் கொடுக்கிறேன். என்றும் வைத்துக்கொள்;— எவ்வளவு விபரீதமாக முடியும்!" என்றார் டாக்டர் ரஞ்சித் சிங்.

டாக்டர் ஆண்டியப்பன் துள்ளிக்குதித்து வாய்குளறியபடி, நீ அதற்குத் துணிமாட்டாய்! உன்னால் செய்ய முடியாது!" என்று கத்தினார்.

டாக்டர் ரஞ்சித் சிங் அலட்சியமாகத் தோளைக் குலுக்கியபடி, எதற்காக இந்தப் பயங்கர ஊரிலே வந்து நான் அவஸ்தைப் படவேண்டும்?

காஷ்மீரத்திலுள்ள எனது உல்லாச மாளிகையில், நான் நிம்மதியாக உட்கார்ந்திருக்க வேண்டிய நேரத்தில், நான் ஏன் இங்கே இருந்து அவஸ்தைப்படவேண்டும். அங்கிருந்தால், இந்த மதராஸ் போலீஸ்காரர்கள் என் உயிரை வாங்க மாட்டார்கள்!" என்று சொல்லிக்கொண்டே வந்தவர், சட்டென்று பேச்சை நிறுத்தி, 'பேசாதே'என்று விரலை உயர்த்தி டாக்டர் ஆண்டியப்பனுக்கும், சமிக்ஞை காட்டினார். சாத்தப்பட்டிருந்த ஜன்னலுக்கு வெளியே, இரண்டு தடவை அரவம் கேட்டதை டாக்டர் ரஞ்சித் சிங் கவனித்தார்.

வெளியில் யாரோ இருக்கிறார்கள்"என்று இரகசியமான குரலில் குசுகுசுவென கூறினார் டாக்டர் ரஞ்சித் சிங்.

அது— 'நமது ஆசாமி'யோ?"

'நமது ஆசாமி'இல்லை!" என்று கூறிவிட்டு, கொஞ்சம் இரு!" என்று சொல்லியபடியே டாக்டர் ரஞ்சித் சிங், அறையை விட்டு வெளியேறி கதவுப் பக்கம் சென்றார். அவர் மெதுவாக கதவைத் திறப்பது டாக்டர் ஆண்டியப்பனுக்குத் தெரிந்தது. பிறகு, ரஞ்சித் சிங் திரும்பி அறைக்கு வர வெகு நேரமாயிற்று. சிங் திரும்பி வந்த பொழுது, அவர் முகத்தில் ஒரு பதைப்பு காணப்பட்டது. அவர் கையில், டெலிபோன் கருவியைப் போன்ற ஏதோ ஒன்றும், அதோடு இணைக்கப்பட்ட ரப்பர் ஒன்றும் காட்சியளித்தது.

யாரோ ஜன்னலருகே ஒட்டுக் கேட்டுக் கொண்டு நின்றிருந்திருக்கிறார்கள்! எனது யூகங்கள் மூன்றைக் கூறுகிறேன்—நீ இங்கே காரில் வந்தாய்?" என்றார் டாக்டர் ரஞ்சித் சிங்.

நான் நடந்து வந்தேன்" என்றார் டாக்டர் ஆண்டியப்பன்.

உனது அருமையான டிரைவர்—அவன் பிறர் விஷயத்தில் ஆராய்வதில் அளவு கடந்த சிரத்தை காட்டுகிறான்!"

நான்தான் நடத்துவந்தேன் என்று சொன்னேனே. என்னோடு எந்த டிரைவரும் வரவில்லை."

டிரைவராலும் நடக்க முடியும்! இது என்ன?" என்று கூறிவிட்டு, தமது பெரிய கோட் பையில் வைத்திருந்த ஒரு 'டிரைவர் தொப்பி'யை வெளியே எடுத்தார்.

இந்தத் தொப்பியைப் போட்டு மூடி, அவன் இந்த இயந்திரத்தின் உதவியால் ஒட்டுக்கேட்டுக்கொண்டிருந்திக்கிறான்!" என்றார் ரஞ்சித் சிங்.

யார் அது? அது என் டிரைவர் பிச்சைக்கண்ணுவாக இருக்க முடியாது. அவன் மனைவியின் மருமகம்!" என்றார் டாக்டர் ஆண்டியப்பன்.

அதோடு அவள் மீது உயிரையே வைத்திருப்பவன்!" என்று சீறினார் டாக்டர் ரஞ்சித் சிங்.

அந்தத் தொப்பியைத் திருப்பி உட்புறமிருந்த விலாசத்தைக் கவனித்தார். உள்ளே அந்தத் தொப்பிக் கடியில் விலாசமிருந்தது.

ஆண்டியப்பா! உன் வீட்டிற்குள்ளேயே, ஒரு உளவாளியை வைத்துக் கொண்டிருக்கிறாயே! என்ன விசித்திரம்!" என்றார் ரஞ்சித் சிங்.

அது எப்படியிருக்க முடியும்? எனக்குத் தெரிந்த அளவு, உனக்கும் டிரைவர் பிச்சைக்கண்ணுவைப் பற்றித் தெரியும்!" என்று ஆத்திரப்பட்டார் டாக்டர் ஆண்டியப்பன்.

உனக்கும் அவனைப் பற்றி என்ன தெரியும்? ஒரு திருடன் என்றும், மோட்டார்களை 'அபேஸ்'செய்பவன் என்றும், போலீஸாரால் விரட்டப்படுவானென்றும் தெரியும்! ஆனால் உன் நண்பன் பிரபாகர் அன்று இங்கே வந்தபொழுது, இரண்டு பேரும் குலாவினார்கள்! அப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது!" என்று வெறுப்பாகப் பேசினார் டாக்டர் ரஞ்சித் சிங்.

டாக்டர் ஆண்டியப்பன், அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை.

சிறிது நேரத்திற்கெல்லாம், ரஞ்சித் சிங்கின் வீட்டை விட்டுப் புறப்பட்டு, கார் நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்கு வேகமாக வந்து பார்த்தார் டாக்டர் ஆண்டியப்பன். டிரைவர் பிச்சைக்கண்ணுவோ, ஆழ்ந்த நித்திரையில்

காணப்பட்டான்! ஆண்டியப்பன் சத்தம் போட்டதும் வாரிச்சுருட்டி எழுந்து உட்கார்ந்தான் டிரைவர்.

பிச்சைக்கண்ணு! நீ இவ்வளவு நேரமும் காரிலேயேதான் இருந்தாயா? அல்லது என்னைப் பின்தொடர்ந்து வந்தாயா?" என்று கேட்டார் டாக்டர் ஆண்டியப்பன்.

கார் இருக்கும் பொழுது, எவனாவது நடந்து வருவானா? பூராநேரமும் நான் இங்கேதான் இருந்தேன். ஏன்? யாராவது உங்களைப் பின் தொடர்ந்து வந்தார்களா?" என்று முனகினான் பிச்சைக்கண்ணு.

நீ என்னையே ஏமாற்றப் பார்க்கிறாய்? பிறகு அதற்காக ரொம்ப வருத்தப்படுவாய்! என்றார் ஆண்டியப்பன்.

நான் செய்த எந்த செய்கைக்காகவும், வருத்தப்படுவதே இல்லை! சரி, சரி; சீக்கிரம் ஏறி உட்காருங்கள்—மழை பெய்கிறது!" என்று கடுகடுப்பாகக் கூறினான் டிரைவர் பிச்சைக்கண்ணு.

டாக்டர் ஆண்டியப்பரிடம் இருந்த ஆத்திரம் பூராவையும், காரின் மீது செலுத்தி, புயல்வேகத்திலே அதைத் திருப்பி, கண்மூடித்தனமாக ஓட்ட ஆரம்பித்தான் பிச்சைக்கண்ணு! அப்பருக்கு நெஞ்சு படபடத்தது.

சாதாரணமாக கார் வெகுவேகமாகச் செல்வதை, டாக்டர் ஆண்டியப்பரால் சகித்துக் கொண்டிருக்க முடியாது. அவர்மீது தனக்குள்ள ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ளப் பிச்சைக்கண்ணு காரை இம்மாதிரி ஓட்டுவது வழக்கம்.

வீட்டை அடைந்ததும் டாக்டர் ஆண்டியப்பன், குமுறும் ஆத்திரத்தோடு காரைவிட்டு இறங்கி, படீரென்று கதவைச் சாத்திவிட்டு, பிச்சைக்கண்ணு! உன்னைப்பற்றி நீ பிரமாதமாக நினைத்துக்கொண்டிருக்கிறாய்! நீ இல்லாவிட்டால் காரியமே நடக்காது என்று நினைத்திருக்கிறாய்! நீ ஒரு—" என்று டாக்டர் ஆண்டியப்பர் தம் பேச்சை முடிப்பதற்குள், 'ஸர்'என்று கார், ஷெட்டை நோக்கிப் பறந்தது.

தான் நின்று பதில் சொல்லக்கூடிய யோக்கியதை இந்த டாக்டர் ஆண்டியப்பருக்குக் கிடையாது என்று டிரைவர் பிச்சைக்கண்ணு கருதினான்!

## *11. வக்கீலின் பதட்டம்! பிரபாகரின் திட்டம்!*

வக்கீல் ராஜாங்கம்பிள்ளை தமது தாலை ஆகாரத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுதுதான், துப்பறியும் பிரபாகர் அங்கு வந்து சேர்ந்தார்.

உங்களிடம், நான் ஓர் உண்மையை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்பதற்காகவே வந்தேன்!" என்றார் பிரபாகர்.

நீங்கள் கூறுவது விபரீதமாக ஒலிக்கிறதே!" என்றார் வக்கீல்.

உங்களிடம் ஒரு முக்கியத் தகவலை சொல்லாமல் நான் இருந்து விட்டேன். நியாயமாக அந்தத் தகவல் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்! என்றார் பிரபாகர்.

பிறகு டோக்கியோ நகரத்தில், தான் பார்த்த பிளாட்டிங் பேப்பர் கதையை விபரமாகக் கூறினார் பிரபாகர்.

இதிலிருந்து பவானந்தம், டாக்டர் ஆண்டியப்பனோடு கடிதத் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறான் என்று தெரிகிறது. எனக்கு இந்த விவகாரத்திலுள்ள அந்தரங்கக் கோளாறு என்னவென்று தெரியாததால்—பவானந்தம் சென்னைக்கு வராமல் மறைந்திருப்பதற்கு ஏதாவது மர்மமான காரணம் இருக்கிறதா என்பதை நான் அறியாததால்—இதை ஆழ்ந்து விசாரிக்க வேண்டி நேர்ந்தது!" என்றார் பிரபாகர்.

டாக்டர் ஆண்டியப்பனா?" என்று முகத்தைச் சுளித்த வக்கீல் ராஜாங்கம் பிள்ளை, அந்தப் பெயரை எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது—" என்றார்.

சிங்கப்பூரிலுள்ள நிலத்தை விற்பனை செய்த பொழுது, தஸ்தாவேஜில் அவர் பெயர் காணப்பட்டது"

ஆமாம், ஆமாம்! அதேதான் அந்த நிலத்தில் தங்கம் கிடைக்குமென்று ‘சிங்கப்பூர் ஹெரால்டு’பத்திரிகையில் செய்திகூட வெளிவந்திருந்தது.

ஆம்'ஆண்டியப்பன்தான்! ஆனால் அவனுக்கு பவானந்தத்தைத் தெரியாது!" என்றார் வக்கீல்.

பிறகு பவானந்தம் எதற்காக அவருக்குக் கடிதம் எழுதினார்?" என்று கேட்டார் பிரபாகர்.

ஒருக்கால் பவானந்தத்திற்கு முதலில் டாக்டர் ஆண்டியப்பரே கடிதம் எழுதியிருக்கல்லாம்" என்றார் ராஜாங்கம் பிள்ளை. இந்தச் சிக்கல் அவர் மனதை ரொம்பக் குழப்பி இருக்க வேண்டும்! பவானந்தத்தை அவருக்குத் தெரியுமா என்று நீ கேட்கவில்லையா?" என்று கேட்டார் வக்கீல்.

கேட்டேன்! ஆனால், எந்தவிதக் கடிதப் போக்குவரத்துமே, தமக்கும் பவானந்தத்துக்கும் கிடையாது என்று டாக்டர் ஆண்டியப்பன் மறுக்கிறார். அது எனக்கு விசித்திரமாகப் படுகிறது! அது போகட்டும்; இதைப்போல் விசித்திரமான ஒரு பொருளை நீங்கள் பார்த்து இருக்கிறீர்களா?" என்று பிரபாகர் கேட்டுவிட்டு, டாக்டர் ஆண்டியப்பனிடமிருந்து தான் எடுத்துவந்த தோல் பையை, சட்டைப் பைக்குள்ளிருந்து வெளியே எடுத்து அதிலிருந்த விசித்திரச் சாவியை மேஜைமேல் எடுத்து வைத்தார்.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளை அதைக் கையில் எடுத்து ஆச்சரியத்தோடு பார்த்துவிட்டு, இதைப் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கிறதே! இது என்ன— சாவியா? இது எங்கிருந்து உனக்குக் கிடைத்தது?" என்று கேட்டார்.

பிரபாகர் கொஞ்சம்கூடத் தயக்கமில்லாமல், நான் இரவல் வாங்கிய ஒரு நோட்டுப் புத்தகத்தில் அது இருந்தது. அந்தப் புத்தகத்தில் பவானந்தம் எங்கெங்கு செல்கிறான் என்ற விவரங்கள் எல்லாம் மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன!— அவன் ஹாங்காங்கிலிருந்தது; அவன் டோக்கியோ நகரத்தில் தங்கியிருந்தது; அவன் கொழும்பு நகரத்திலிருந்தது; அவன் டர்பன் நகரத்திற்குச் சென்றது; முதலிய பல்வேறு விபரங்களும், தேதிவாரியாக அந்தப் புத்தகத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. மொத்தத்தில் சென்ற எட்டு மாதங்களில் பவானந்தம், எந்தெந்த இடங்களிலிருந்தான் என்ற விபரம் மிகத் தெளிவாக அந்த நோட்டுப் புத்தகத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது!" என்றார் பிரபாகர்.

இது புதுமையாக இருக்கிறதே!— தனக்கு பவானந்தத்தைப் பற்றி எதுவுமே தெரியாதென்றா டாக்டர் ஆண்டியப்பர் மறுக்கிறார். என்று வியப்போடு கேட்டார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை அடியோடு மறுக்கிறார்; அவனைப் பார்த்ததே இல்லை என்றும் ஒரு கடிதம்கூட எழுதியது இல்லையென்றும் பிரமாணம் செய்கிறார்! சிங்கப்பூரிலுள்ள சொத்து விற்பனையெல்லாம் உங்கள் மூலமாகவே பவானந்தம் செய்திருக்கிறார்."

அது உண்மைதான். அது நடந்தது எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. என்னுடைய பிரதமக் குமஸ்தாதான் பத்திரம் எல்லாம் எழுதிமுடித்தான்" என்றார் வக்கீல்.

டாக்டர் ரஞ்சித் சிங் என்று ஒரு பேர்வழி இருக்கிறானே அவனை உங்களுக்குத் தெரியுமா? ‘ரட்லண்ட்’கேட் அருகே குடியிருக்கிறான்" என்றார் பிராபகர்.

அதைக் கேட்ட ராஜாங்கம் பிள்ளை திடுக்கிட்டு, ஆமாம், எனக்கு ரஞ்சித் சிங்கைத் தெரியும். ஆனால் பல வருஷங்களாக, அவன் வீட்டுப் பக்கம் நான் செல்லவில்லை. சொல்லப்போனால் அவன் குடியிருக்கும் வீடும், பவானந்தத்தின் எஸ்டேட்டைச் சேர்ந்தது தான்—அந்த வட்டாரத்திலுள்ள பெரும்பாலான நிலங்கள், பவானந்தத்துக்குச் சொந்தமான நிலங்கள், டாக்டர் ஆண்டியப்பனும், எங்கள் நிலத்தை குத்தகைக்கு வைத்திருப்பவன்தான் என்று நினைக்கிறேன். டாக்டர் ரஞ்சித் சிங் வசிக்கும் பரலோக பவனத்தைப் பொறுத்த வரையில், அதை அந்தச் சிங்கிற்கு வாடகைக்கு விட்டிருக்கிறோம். அந்த டாக்டர் லைஸென்ஸ் இல்லாமல், ஒரு உயிர்ப் பிராணியை கண்டதுண்டமாக்கி ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார், போலீஸாரால் வழக்குத் தொடரப்பட்டார்!—குரூரமான தோற்றமும், ஆபாசப் பழக்க வழக்கங்களும் நிறைந்தவன் அந்த டாக்டர் ரஞ்சித் சிங்" என்றார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

அவனேதான்; அவனேதான்!" என்றார் பிரபாகர்.

ஏன், அவன் என்ன செய்தான்?"

நான் அதை விபரமாகச் சொல்கிறேன்!" என்று பிரபாகர் கூறிவிட்டு, அன்றிரவு அங்கு நடந்த விஷயங்கள் எந்த அளவுக்குக் கூறவேண்டுமோ, அந்த

அளவுமட்டும் ராஜாங்கம் பிள்ளையிடம் கூறினார். ஏன் என்றால் பவானந்தத்தின் மறைவைப் பற்றிய மர்மம் என்னவாக இருக்கக்கூடுமென்று பிரபாகராக ஓரளவு யூகித்து வைத்திருந்தார். எல்லா விஷயங்களையும், எவ்லோரிடமும் வெளிப்படையாகப் பேசுவதாலும் விபரீதமேற்படும் என்று பிரபாகருக்குத் தோன்றியது.

நீ ஏன் போலீஸில் போய் தெரிவிக்கவில்லை?" என்று கேட்டார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

நானே ஒரு பழைய போலீஸ்காரன் என்ற நினைவு என் மனதைவிட்டுச் சீக்கிரத்தில் அகலமாட்டேன் என்கிறது?—இருந்த போதிலும் நான் துரைசாமியிடம் விஷயத்தைச் சொல்லவேண்டும்!" என்றார் பிரபாகர்.

துரைசாமி என்பது யார்?"

போலீஸ் இலாகாவைச் சேர்ந்த துப்பறியும் இன்ஸ்பெக்டர். மர்மங்களில் சிக்கல் எடுப்பதில், அசுர சக்தி வாய்ந்தவர்! அதிருக்கட்டும் இந்த டாக்டர் ரஞ்சித் சிங், சாப்பாட்டிற்கு என்ன செய்கிறான்?" என்று கேட்டார் பிரபாகர்.

எனக்கும் தெரியாது! ஆனால், மனித உடற்கூறு சாஸ்திரத்திலே அவன் நல்ல நிபுணன். ஆனால் அவனது சோதனைகளையெல்லாம் நாகரிகம் வாய்ந்த மனிதகுலம் ஒப்புக்கொள்ளாது!—அட; இப்பொழுது தான் நினைவு வருகிறது. பரலோக பவனத்தை டாக்டர் ரஞ்சித் சிங்கிற்கு வாடகைக்குக் கொடுக்கும்படி, டாக்டர் ஆண்டியப்பன்தான் சிபார்சு செய்திருக்கிறார்! கொஞ்சம் இரு; இதோ வந்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டு வக்கீல் ராஜாங்கம் பிள்ளை உள்ளே சென்று, கடிதங்கள் அடங்கிய ஒரு பெரிய ‘பைலை’எடுத்து வந்தார்.

அதுதான் விஷயம்; ஆண்டியப்பன், சமீபத்தில்தான், ரங்கூன் அருகே உள்ள, சொத்தை வாங்கியிருக்கிறார். அந்த விஷயம் முடிந்து ஒரு மாதத்தில்தான், ‘பரலோக பவனத்தை’டாக்டர் ரஞ்சித் சிங்கிற்கு வாடகைக்கு விட்டிருக்கிறோம்!" என்றார் வக்கீல்.

பிரபாகர் தான் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களெல்லா அவற்றையும் தெரிந்து கொண்டு விட்டார்— எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே

தெரிந்து கொண்டுவிட்டார். அங்கிருந்து நேராக ஆயிரம் விளக்கில் 'ஆண்டர்ஸன்'வீதியிலுள்ள தம் ஜாகைக்குக் கிளம்பினார்.

ஜாகையை அடைந்த பிரபாகர், தம்முடைய இரண்டு பெட்டிகளிலும் ஆடைகளை எடுத்து வரிசையாக அடுக்க ஆரம்பித்தார். அந்த வேலை முடிந்ததும் சமையற்காரியைக் கூப்பிட்டார்.

உனக்கு ஒரு மாதம் சம்பளத்தோடு ஓய்வு கொடுத்திருக்கிறேன்! ஒரு மாதம் என்பது, ரொம்பவும் அதிகமான காலம்! வடக்குப் பக்கமாகத் திரும்பி நீ காசிக்கு வேண்டுமாலும் போகலாம்; தெற்கே திரும்பி கன்னியாகுமரிக்கு வேண்டுமானாலும் போகலாம்! ஆனால் ஒரே ஒரு இடத்திற்கு மாத்திரம் போகாதே! அந்த இடம் தான், இந்த வீடு! ஒரு மாதம் முடியும்வரை இந்த வீட்டின் பக்கம் அடியெடுத்து வைக்காதே!" என்றார் பிரபாகர்.

ஏன், ஐயா?" என்று திகைப்புடன் ஆரம்பித்தாள் சமையற்காரி.

பிரபாகர் அந்த விஷயத்தில் நிரம்பவும் பிடிவாதமாக இருந்தார். அந்த வீட்டிற்குள் அவ்விடைக்கால்த்திற்குள் சமையற்காரி வந்தால் பயங்கரமான பல விபரீதங்கள் ஏற்படுமென்று அவளுக்கு எச்சரிக்கை செய்தார்.

தபால்காரர்களிடம் தமக்கு வரும் கடிதங்களைப் போலீஸ் கமிஷனர் ஆபிஸுக்கு அனுப்பும்படி கூறினார். வக்கீல் ராஜாங்கம் பிள்ளையிடம் கூட அவர் தம் திட்டங்களைக் கூறவில்லை, ஏனென்றால் விவகாரம் முக்கியமான கட்டத்தை அடையும்பொழுது, யாரையுமே நம்பக்கூடாது என்று முடிவு செய்தார் பிரபாகர்.

## *12. மஹேஸ்வரியின் வீட்டில் சமாதி மேட்டின் கதை!*

மஹேஸ்வரியும் அவளது தாயாரும் எழும்பூரில் 'ஸ்பர்ட்டாங்' ரோட்டில் குடியிருந்து வந்தார்கள். அந்த வீடு மிகவும் சிறியது.

பேரழகியான மஹேஸ்வரியின் தாயார் பிரமாதமான அழகுபடைத்த பஞ்சையான பெண்மணிதான்! அந்த அம்மாளுக்கு வாழ்க்கையின் எல்லாத்

துறைகளிலும் அனுபவமிருந்தது. ஒரு காலத்தில் அவள் கணவருக்கு, செங்கல்பட்டு ஜில்லாவில் ஏராளமாக நஞ்சை நிலமிருந்தது. சென்னையில் மைலாப்பூரிலும் ஒரு பெரிய பங்களா இருந்தது. அவற்றைத் தவிர பந்தயக் குதிரைகளும், உல்லாசப் பிரயாணத்திற்காக ஓர் இயந்திரப் படகும் அவருக்கு இருந்தன. இப்படி அவர் ராஜாங்க வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது, திடீரென்று ஒருநாள், எதிர்பாராதவிதமாக, அவர் சொத்துக்கள் எல்லாம் மாயமாய் மறைந்தன. எப்படி என்றால், அவர் ஒரு கம்பெனியின் டைரக்டராக இருந்தார். அந்தக் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர், ஏதோ 'குல்மால்'நடத்திக் கம்பெனியின் பணத்தையெல்லாம் கபளீகரம் செய்துவிட்டார். அதன் விளைவாக அவர் கைது செய்யப்பட்டுச் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அந்த மோசடியில் சுவாகா செய்யப்பட்ட பணத்திற்கு டைரக்டர் என்ற முறையில் மஹேஸ்வரியின் தந்தையும் பதில் சொல்ல நேர்ந்தது. அத்தொகைக்கு ஈடு செய்யாவிட்டால் அவர் சிறைக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. ஒரு சொத்துக் கூட விடாமல் எல்லாவற்றையும் விற்று அந்தத் தொகைக்கு ஈடு கட்டினார் மானஸ்தரான மஹேஸ்வரியின் தந்தை. அது நடந்து சில தினங்களுக்குள்ளாகவே, அதே ஏக்கத்தில் காலமாகியும் விட்டார்.

மஹேஸ்வரியின் குடும்பத்திற்கு மிஞ்சியது எழும்பூரிலிருந்த ஒரு சிறு வீடுதான். அந்த வீட்டை, ஏற்கெனவே வாடகைக்கு விட்டிருந்தார்கள். நிலைமை மோசமான பிறகு, மாடிப் பகுதியை மாத்திரம் வைத்துக்கொண்டு, கீழ்ப்பகுதியை வாடகைக்கு விட்டிருந்தார்கள்.

அன்று இரவு அந்த வீட்டின் மாடியில் மேஜை அருகே உட்கார்ந்து, மஹேஸ்வரி ஏதோ தீவிரமாக எழுதிக்கொண்டிருந்தாள். அவளது தாயார் ஒரு வேதாளக் கதைப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள்.

அந்த அம்மாள் மெல்ல படித்துக்கொண்டிருந்த புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு மஹேஸ்வரி! நீ மானாமதுரைக்குப் போய் வந்தது ரொம்பப் பைத்தியக்காரத்தனம். அதை நான் அனுமதித்து திருக்கக்கூடாது. அதையொட்டி நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் கவனிக்கும்பொழுது, அவை பயங்கரமாகவும் நம்ப முடியாதன வாகவும் இருக்கின்றன! உன்னைத்தவிர

யாராவது அந்த விபரங்களைச் சொல்லியிருந்தால், நான் நம்பியிருக்கவேமாட்டேன்!" என்றாள்.

இந்தப் பஞ்சநதம் யார் அம்மா?"

அவன் பரம ஏழையாய், ஊர்ஊராக வேலை தேடி அலைந்து கொண்டிருந்தான். உன் அப்பாதான் அவனை அழைத்து வந்து, முதலில் வேலை கொடுத்தார். பலவிதங்களில் தனக்கு உதவி செய்த உன் அப்பாவிடம், அவனுக்கு அளவு கடந்த விசுவாசம். அதனால் உன் அப்பா அந்த பஞ்சநதத்திற்கு நம் உறவினரான ராமானந்தரின் எஸ்டேட்டில், பிரதம தோட்டக்காரனாக வேலை வாங்கிக் கொடுத்தார். ராமானந்தரோ ஒரு முன்கோபி. வேலைக்காரர்களை, கண்மண் தெரியாமல் அந்த மனுஷர் அடிப்பார். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் பஞ்சநதத்தையும் மரத்தில் கட்டி வைத்து சவுக்கால் அடித்துவிட்டார்!...! ராமானந்தரை உனக்கு நினைவு இருக்கிறதா, மஹேஸ்வரி?" என்று கேட்டாள் தாயார்.

இருக்கிறதம்மா! ராமானந்தரின் அந்தப் பயங்கரமான அந்தக் குரலும் ரத்தச் சிவப்பான அந்தக் கண்களும், அவரது முரட்டு மீசையும்,—அடேயப்பா; எனக்கு நன்றாக நினைவிருக்கிறது! அவரை எனக்கு அடியோடு பிடிக்காதம்மா!" என்றாள் மஹேஸ்வரி.

அவளது தாயார் மறுபடியும் புத்தகத்தை எடுத்து இரண்டொரு வரிகள் படித்தாள். பிறகு, இந்த மனிதர் எப்படிப்பட்டவர். மஹேஸ்வரி?" என்று கவலையுடன் கேட்டாள்.

தனது தாயார் பிரபாகரைப் பற்றித்தான் கேட்கிறாள் என்பதைப் புரிந்துகொண்ட மஹேஸ்வரி, அம்மா; நாலாவது தடவையாக நீ என்னைக் கேட்கிறாய்! எனக்குத் தெரியாது—என்னிடம் ரொம்ப நல்ல முறையில் நடந்துகொண்டார்; அவ்வளவுதான்!" என்றாள்.

நல்ல ஒழுக்கமுள்ள வாலிபரா?"

ஆமாம், ரொம்பக் கெட்டிக்காரர்! சுறுசுறுப்பானவர்; நம்பிக்கைக்கு லாயக்கானவர்—ஆனால் ரொம்பக் குறும்புக்காரரம்மா! என்றாள் மஹேஸ்வரி மனங்கொள்ளாமல் உற்சாகத்தில் துடித்தவளாய்.

அவளது தாயார் மறுபடியும் புத்தகத்தின் பக்கங்களைப் படிக்காமலே புரட்டிக் கொண்டு இருந்து விட்டு, அவர் தொழில் என்ன?" என்று மெல்லக் கேட்டாள். மஹேஸ்வரி சிறிது தயங்கினாள். எனக்குத் தெரியாது—அதாவது, இப்பொழுது அவர் என்ன தொழில் செய்கிறார் என்று எனக்குத் தெரியாது. ஏற்கெனவே போலீஸ் இலாகாவில் துப்பறியும் சப் இன்ஸ்பெக்டராக வேலை பார்த்து வந்தார். இப்பொழுது அதை விட்டுவிட்டுச் சுயேச்சையாக துப்பறிவாளராக வேலை பார்த்து வருகிறார்—நான்தான் சொன்னேனே, அம்மா!" என்று கூறிவிட்டு ஒரு துப்பறிவாளனுக்குள்ள சமூக அந்தஸ்து என்ன, அம்மா?" என்று கேட்டாள்.

வாசக சாலையில் உதவியாளராக சேவை செய்பவருக்கு என்ன அந்தஸ்து உண்டோ, அதே அந்தஸ்துதான்!" என்று நிதானமாகக் கூறிய தாயார், வேலையைப் பொறுத்தவரையில், அவர் என் அருமை மகளின் அந்தஸ்திதான் இருக்கிறார். அதைப்பற்றி நான் உன்னைக் கேட்டிருக்கவே கூடாது!" என்றாள்.

மஹேஸ்வரி தனது ஆசனத்தை விட்டு எழுந்து ஓடி, தாயாரைக் கட்டிக்கொண்டாள்; நான் அவரிடம் என் மனதைத் திறந்து பேசியதால். நான் அவரிடம் காதல் கொண்டு அலைகிறேன் என்று நீ நினைக்கிறாயம்மா! அது நிச்சயமாக இல்லை! அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டே இருப்பதில் எனக்கு ரொம்ப ஆசை—அவ்வளவு சுவாரஸ்யமாகப் பேசுகிறார்! எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனில் அவர் அந்தத் திருடனை நோக்கிப் பேசிய பேச்சுக்கள்—அப்பப்பா, நாராசமானவை!— இருந்தபோதிலும் அவர் நேர்மையாகவும், ஒளிவு மறைவு இல்லாமலும் நடந்துகொள்கிறார்! அந்தத் திருடனை அவர் தாக்கி எனது மணிப்பர்ஸை மீட்டபொழுது, அப்படியே அவருடைய கையைக் கட்டிக்கொள்ளவேண்டுமென்று எனக்குத் தோன்றியது—ஆனால் அதற்குமேல் அவரிடம் எனக்குக் காதலோ வேறு ஒன்றோ கிடையாது! அதைப்பற்றி நீ கவலைப்படாதேயம்மா! ஒருக்கால் அவருக்கு மணமாகி இருந்தாலும் இருக்கலாம்...!

அந்தச் சமயத்தி தெருக் கதவு படபடவெனத் தட்டப்படும் சத்தம் கேட்டது. மஹேஸ்வரி ஓடிச் சேன்று கதவைத் திறந்தாள். பிரபாகர் அங்கு

நின்றுகொண்டிருந்தார்!

உள்ளே வாருங்கள்!" என்று நாணத்தோடு வரவேற்றாள் மஹேஸ்வரி.

உள் நுழைந்த பிரபாகரை மஹேஸ்வரியின் தாயார், ஒரு வினாடி கூர்ந்து கவனித்தாள். அந்த அம்மாள் முகத்திலே ஒரு விசித்திர உணர்ச்சி நிலவியது; மெல்ல முகத்தில் திருப்தியை வரவழைத்துக் கொண்டாள்.

நீங்கள்தான், பிரபாகரா?— எனது மகளுக்கு நீங்கள் செய்த உதவிக்கு நான் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன்!" என்று பரிவோடு கூறினாள் மஹேஸ்வரியின் தாயார்.

நல்ல வேளையாக, நீங்கள் அந்தப் பேச்சை ஆரம்பித்தீர்கள்! இல்லாவிட்டால், எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று தெரியாமல் தடுமாறிப் போயிருப்பேன். தாங்கள் இப்பொழுது அளித்த உதவிக்கு மிகமிக நன்றி!" என்று புன்னகை செய்தார் பிரபாகர்.

எல்லோரும் சிரித்தார்கள்.

ம்! மஹேஸ்வரி! உன்னிடம் ஒன்று கேட்க வேண்டும்! உலகம் சுற்றும் இந்தியனான பவானந்தம், உங்கள் பங்காளி என்று நீ கூறினாயே, அவனுக்குவேறு யாரும் பங்காளிகள் இருக்கிறார்களா?" என்று கேட்டார் பிரபாகர்.

ஒருவருமில்லை. நானும், என் தாயாரும்தான், உயிரோடு இருக்கும் பவானந்தத்தின் உறவினர்கள்—அதாவது; பவானந்தம் மணம் செய்து கொள்ளாமலிருந்தால்!" என்றாள் மஹேஸ்வரி.

அதைக் கேட்டதும் பிரபாகர் முகத்திலே ஒரு மாறுதல் ஏற்பட்டது. அப்படி இருக்குமென்றுதான் நான் அஞ்சினேன். இந்தச் சதியில் நீங்களும் ஏதோ ஒரு விதத்தில் சிக்கிக்கொண்டு இருக்கிறீர்கள் என்று நினைத்தேன். ஆனால் எப்படி என்று எனக்குச் சரியாக விளங்க வில்லை. உங்களுக்குச் சென்னை நகரை விட்டு, செங்கல்பட்டு ஜில்லாவில் யாரும் நண்பர்கள் இருக்கிறார்களா?" என்று மஹேஸ்வரியின் தாயாரைக் கேட்டார் பிரபாகர்.

இருக்கிறார்கள்! ஏன் கேட்கிறீர்கள்?" என்று ஆச்சர்யத்தோடு கேட்டாள் மஹேஸ்வரியின் தாயார்.

உங்கள் வீட்டில் டெலிபோன் இருக்கிறதல்லவா?" என்று கேட்ட பிரபாகர், அங்கு ஒரு மூலையில் இருந்த டெலிபோன் கருவியைப் பார்த்துவிட்டு,"ஐந்து நிமிஷ நோட்டீஸில், உங்களால் சென்னையை விட்டுப் புறப்பட முடியுமா? இன்றிரவே உங்களைப் புறப்படச் சொல்லவேண்டுமென்றிருந்தேன்; ஆனால் அது அவசியமாகத் தெரியவில்லை." என்றார்.

அதைக் கேட்டதும் மஹேஸ்வரிக்கு நெஞ்சு திக்திக்கென்று அடித்துக்கொண்டது.

மஹேஸ்வரியின் தாயார் அவரை நிதானமாகப் பார்த்தாள்! இதெல்லாம் என்ன என்று எனக்கு விளக்கமாகச் சொல்லக் கூடாதா?" என்று கேட்டாள்.

நான் இப்பொழுது சொல்ல முடியாது. இப்பொழுதுதான் எனக்குச் சில விவரங்கள் இலேசாகத் தென்பட்டுக் கொண்டு வருகின்றன. இந்த நிலையில் என்ன வருமென்று என்னால் சொல்வதற்கில்லை. உங்கள் இருவருக்கும் எந்தவித ஆபத்துமில்லை என்றும், உங்களை யாரும் தொந்தரவு செய்யமாட்டார்கள் என்றும் எனக்குத் தோன்றுகிறது—இருந்த போதிலும் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்.

எல்லாம் இந்த விசித்திரச் சாவியால் வந்ததுதானா!" என்று பதைபதைப்புடனும் பீதியுடனும் கேட்டாள் மஹேஸ்வரி. எல்லாம் அந்த மர்மச் சாவியால் வந்ததுதான்!" என்று பிரபாகர் கூறிவிட்டு, காலஞ் சென்ற கோடீஸ்வரரான ராமாநந்தர் எப்படிப்பட்ட மனிதர்?" என்று மஹேஸ்வரியின் தாயாரைக் கேட்டார்.

அந்த அம்மாள் ஒரு கணம் என்னவோ யோசித்தாள்; பிறகு குரலில் நிதானத்தை வரவழைத்துக் கொண்டு சொல்லலானாள்.

ராமாநந்தர் ஒரு நல்ல மனிதர் அல்ல! அவர் குடிகாரர். அதோடு அவர் வாழ்க்கையில் நடந்த ரசக்குறைவான நிகழ்ச்சிகளும் இருக்கின்றன. அதைப்பற்றியெல்லாம் கௌரவமானவர்களெல்லாம் பேசமாட்டார்கள். ஆனால்

அந்தப் பரம்பரையே அப்படிப்பட்ட விசித்திரமான பழக்க வழக்கங்கள் உள்ளது தான். அதற்கு முன் தலைமுறையில், அவர்கள் ரொம்பவும் கேவலமாக நடந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களை ஜாதியைவிட்டு விலக்கி விட்டார்கள். ஜாதிப் பிரஷ்டம் செய்துவிட்டதால், அவர்களுக்கு அந்தக் குலத்தினரின் பொதுச் சுடுகாட்டை உபயோகிக்கும் உரிமைகூட மறுக்கப்பட்டது. அதற்காக அவர்கள் மிகப்பெரிய நிலத்தைவாங்கி, அதிலேதான் தங்கள் வகையறாவைச் சேர்ந்தவர்களைப் புதைத்து, சமாதிகட்டி வருகிறார்கள். அந்த இடத்திற்கு சமாதி மேடு என்று பெயர். அதைக் கேள்விப்பட்டு இருக்கிறீர்களா?" என்று கேட்டாள் மஹேஸ்வரியின் தாயார்.

இல்லை என்று தலையை ஆட்டினார் பிரபாகர். சமாதிமேடு என்று கூறியதும் அவருக்கு அதில் விஷேமாக எதுவும் தென்படவில்லை..... திடீரென்று அவருக்கு ஒரு நினைவுவந்தது—சமாதி! அவர் மனம், வேதநாயகத்தை நோக்கிப் பறந்தது. சமாதியைத் திறக்க அழைத்துச் செல்லப்பட்ட அந்த மனிதன்! விஷயத்தை ஓரளவு புரிந்துகொண்டதால் கொலை செய்யப்பட்டவன்!...

அந்த இடம் எங்கே இருக்கிறது?" என்று பரபரப்போடு கேட்டார் பிரபாகர். நுங்கம்பாக்கம் ஏரி அருகில் அந்தச் சமாதிமேடு இருக்கிறது. சுற்றிலும் மரங்கள் அடர்ந்து ஒரு வனாந்தரம்போல் காட்சியளிக்கும் இடத்தில் இருக்கிறது!" என்றாள் மஹேஸ்வரியின் தாயார்.

அங்குள்ள சமாதிகளைப் பாதுகாக்க யாரும் ஆட்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்களா?" என்று கேட்டார் பிரபாகர்.

அது யாரோ ஒரு காவற்காரனால் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. அவனுக்கு சமாதி மேட்டிலேயே ஒரு மூலையில், ஒருவிடுதி கட்டிக் கொடுத்திருக்கிறார்கள்!—பவானந்தத்திற்கு அந்த சமாதி மேட்டையே கைகழுவி விடவேண்டுமென்று ஆசை, ஆனால் அதை எதுவும் செய்ய முடியாமல் இருக்கிறது என்று வக்கீல் ராஜாங்கம் பிள்ளை கூறினார்.!" என்றாள் மஹேஸ்வரியின் தாயார்.

அந்த அம்மாளைக் கூர்ந்து நோக்கி, வாரீசுக் காரனான வானந்தத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டார் துப்பறியும் பிரபாகர்.

ஒரே ஒரு தடவை பார்த்திருக்கிறேன். அவன் சிறுவனாய் இருந்தபொழுது—பள்ளிக் கூடத்தில் படித்துக் கொண்டிருந்த பொழுது—! அதன் பிறகு அவன் எனக்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறான். சமீபத்தில் கூட எனக்கு ஒரு கடிதம் வந்தது. உங்களுக்குப் பார்க்க வேண்டும் என்றிருந்தால் அதைக் காண்பிக்கிறேன்." என்று மஹேஸ்வரியின் தாயார் கூறிவிட்டு ஒரு கடிதத்தை அலமாரியிலிருந்து எடுத்து பிரபாகரிடம் கொடுத்தாள். அதில் எழுதியிருந்தது இதுதான்:

அன்புள்ள சின்னம்மாவுக்கு—

நான் இவ்வளவு காலம் உங்களுக்குக் கடிதம் எழுதாதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதவே எனக்கு வெட்கமாக இருந்தது. தாங்கள் நலம் என்றே நம்புகிறேன். சீனா தேசத்துப் பொருள்களில் உங்களுக்கு நிரம்ப ஆசை இருப்பது எனக்குத் தெரியுமாதலால், உங்களுக்கு ஓர் அழகான தேநீர் கூஜாவை அனுப்பிவைத்திருக்கிறேன்.

அன்புள்ள,

தம்பிக் கண்ணு"

மர்மப் பேர்வழியான பவானந்தத்தின் அந்தக் கையெழுத்தும், வக்கீல் ராஜாங்கம் பிள்ளையிடமிருந்த கடிதங்களின் கையெழுத்தும் ஒன்றாகவே இருந்தன.

இன்னொரு கடிதம்கூட இதோ இருக்கிறது. அந்தக்கடிதம் ஒரு வருஷத்திற்குமுன், நாங்கள் துரதிர்ஷ்டவசமான சூழ்நிலையில் சிக்கிக் கொண்ட பொழுது, அவனால் எழுதப்பட்டது" என்றாள் மஹேஸ்வரியின் தாயார்.

அந்தக் கடிதத்தையும் பிரபாகர் வாங்கிப் பார்த்தார். அது, கொழும்பு ஹோட்டல் ஒன்றில் இருந்து எழுதப்பட்டிருந்தது. அதில் பின்வருமாறு

எழுதப்பட்டிருந்தது:

.... உங்களுக்கு ஏற்பட்ட துரதிருஷ்டங்களை அறிந்து ரொம்ப வேதனைப்படுகிறேன். உங்களுக்கு எவ்வளவு பண உதவி வேண்டும் ஆனாலும் அளிக்கத் தயாராக இருக்கிறேன். நான் செய்யக் கூடியது எதுவும் உண்டா? தயவு செய்து கட்டளை இடுங்கள்! தயவு செய்து ராஜாங்கம் பிள்ளையைச் சந்தித்து இந்தக் கடிதத்தைக் காண்பியுங்கள். உங்களுக்குத் தேவையான எந்தத் தொகையையும் உங்களுக்குக் கொடுத்துதவ வேண்டுமென அவருக்கு எழுதி இருக்கிறேன்,...

பிரபாகர் அந்தக் கடிதத்தைப் பார்வையிட்டு முடிந்ததும் அவரை நோக்கி மஹேஸ்ரியின் தாயார், நான் ராஜாங்கம் பிள்ளையைப் பார்க்கவில்லை! தனக்கும் பவானந்தம் கடிதம் எழுதியிருப்பதாக அவரும் தெரிவித்தார்— அதுபோகட்டும்; நீங்கள் எதற்காக, எந்த நேரமும் சென்னையைவிட்டு விலகுவதற்குத் தயாராக இருக்கும்படி எங்களிடம் கூறினீர்கள்?" என்று கலவரத்துடன் கேட்டாள் மஹேஸ்வரியின் தாயார். அதுவரை எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த மஹேஸ்வரி, நிச்சயமாக ஏதாவது இருந்தாலொழிய, பிரபாகர் நம்மிடம் அப்படிக் கூறமாட்டார். வினாடி நேரத்தில் சென்னையைவிட்டுப் புறப்பட நாம் தயாராக இருக்கவேண்டுமென்று அவர் கூறினால், நாம் தயாராக இருக்கவேண்டும்!—இது அந்த விசித்திரச் சாவி சம்பந்தப்பட்ட விஷயம் தானே, பிரபாகர்?" என்று கேட்டாள்.

ஆமாம்; அதோடு வேறு ஒன்றும் இருக்கிறது. நான் இப்பொழுது சொல்லியதுபோல், என்னால் எதையும் வரம்புகட்டிக் கூற முடியவில்லை. சில விஷயங்கள் என் மனதில் தீர்க்கமாகப் பதிந்து விட்டன. சில விஷயங்களைத் தெளிவாகப் புரிந்துகொண்டும் இருக்கிறேன். ஆனால் இன்னும் சில முக்கிய விஷயங்களை, நான் இனிமேல்தான் நிர்ணயித்து முடிவுகட்ட வேண்டும்!" என்றார் பிரபாகர்.

மஹேஸ்வரியின் தாயார் எதுவும் விளங்காதவள் போல் பிரமித்துப்போய் உட்கார்ந்திருந்தாள்.

உங்களுக்கு டாக்டர் ரஞ்சித் சிங்கைத் தெரியுமா?" என்று கேட்டார் பிரபாகர்.

தெரியாது என்று தலையை ஆட்டினாள் மஹேஸ்வரியின் தாயார்.

உங்களுக்கு டாக்டர் ஆண்டியப்பனைத் தெரியுமா?" என்று மீண்டும் கேட்டார் பிரபாகர்.

வெகு நேரம் வரை யோசித்துப் பார்த்தும், அந்த அம்மாளுக்கு டாக்டர் ஆண்டியப்பன் என்கிற பேர்வழியைப் பற்றிய நினைவு வந்ததாகவே காணப்படவில்லை.

அப்படிப்பட்ட ஆளை நான் கேள்விப்பட்டதே இல்லை!" என்றாள் மஹேஸ்வரியின் தயாயார் தீர்க்கமான குரலில்.

## *13. சாம இருட்டில் வேதாள உருவத்தின் விசித்திரக் கை!*

மஹேஸ்வரியின் வீட்டிலிருந்து கொஞ்ச நேரத்தில் பிரபாகர் கிளம்பிய பொழுது, வீதியில் யாரும் தன்னைப் பின்பற்றி வருகிறார்களா என்று திக்பிரமையுடன் கவனித்தார். அவருடைய மனதிற்குள் மரணாபத்தான ஒரு எண்ணம் அலைமோதிக்கொண்டிருந்தது. சிறிது தூரத்திற்குப் பின்னால் ஓர் ஆள் அவரைக் கண் காணித்துக்கொண்டே வந்தான். அந்த ஆளுக்குப் பின்னால் ஒருவன் கண்காணித்துக் கொண்டுவந்தான். பிரபாகருக்கு எதிரே கொஞ்சம் தூரத்தில் ஒரு டாக்ஸிகார் வந்துகொண்டிருந்தது. அந்த டிரைவர் தன் காரில் ஏறிக் கொள்ளும்படி பிரபாகரை அழைத்தான். ஆனால் பிரபாகர் அவன் அழைப்பை லட்சியம் செய்யவில்லை. அன்றிரவு அவர் எப்படிப்பட்ட அபாயத்தையும் எதிர்ப்பார்த்திருந்தார். ஆகவே வீதியில் நடந்து சென்று அந்த அபாயத்தை சமாளிப்பது சுலபம் என்றும், வாடகைக் காருக்குள் சிக்கிக் கொண்டால் நிலைமை மோசமாகிவிடும் என்றும் பயந்தார். இன்னும் சிறிது தூரம் முன்னேறிச் சென்றதும் அவருக்கு எதிரே விர்ரென்று வேகமாக மற்றொரு டாக்ஸிகார் வந்துகொண்டிருந்தது. அதை நிறுத்திப் பிரபாகர் அதில் ஏறிக்கொண்டு, மயிலாப்பூரிலுள்ள ‘மெர்ரிலண்ட்ஸ்’ஹோட்டலுக்குப் போகும்படி

கூறினார். தம்மை பின் தொடர்ந்துவந்த இரு ஆட்களும், மற்றொரு டாக்ஸிகாரில் ஏறிக்கொண்டு தம் காரைத் தொடருவதைக் கவனித்தார். ‘மெர்ரிலண்ட்ஸ்’ ஹோட்டலை அடைந்ததும், அவர் அங்கு தமக்காக ஒரு அறையை ரிசர்வ் செய்து கொண்டு, சாவியை வாங்கியபடி உள்ளே நுழைந்தார். அந்த ஹோட்டலுக்குக் கொலைப்புற வாசல் ஒன்றிருந்தது. அதன் வழியாக வெளியேறி ராயப்பேட்டை ஹைரோடை அடைந்து, அங்கிருந்த ஒரு டாக்ஸி மோட்டார்காரைப் பிடித்துக்கொண்டு நேராகப் போலீஸ் கமிஷனர் ஆபிஸுக்குச் சென்றார்.

கமிஷனர் ஆபிஸில் இன்ஸ்பெக்டர் துரைசாமி இன்னும் அங்கேதான் இருந்தார். நடந்த விபரங்களை எல்லாம், பிரபாகர் அவரிடம் கூறினார்.

இவற்றையெல்லாம், நீ எங்கோ கதைப் புத்தகத்திலிருந்து படித்துவிட்டு வந்திருக்கிறாய். பெரிய மர்மக்கதையாக இருக்கிறதே!" என்றார் ஆச்சரியத்துடன் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

பிறகு ஒரு துப்பறிவாளரை அழைத்து, இன்று முதல் எழும்பூர் ஸ்பர்டாங் ரோடிலுள்ள மஹேஸ்வரியின் வீட்டிற்கு முன் பக்கத்தில் ஒரு போலீஸ் கான்ஸ்டபிளும், பின் பக்கத்தில் ஒரு கான்ஸ்டபிளும் சாதாரண உடுப்பில் நின்று ரகசியமாகக் கண்காணித்து வரவேண்டும். நாளை முதல், ஒரு நல்ல துப்பறிவாளன், பிரபாகரை ரகசியமாகப் பின் தொடரவேண்டும். அனுதினமும் இரவு, அந்த ரகசியத் துப்பறிவாளன் பிரபாகர் அறையில் படுத்துத் தூங்கவேண்டும். புரிந்ததா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

அவர் கூறியவற்றையெல்லாம் அந்த அதிகாரி ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதிக்கொண்டார்.

நாளைக் காலை நுங்கம்பாக்கம் போலீஸாருக்கத் தெரிவித்து, பரலோக பவன’த்தை நான் சோதனையிடப் போவதாகத் தெரிவி. இங்கிருந்து ஒரு லாரியில் நான் போலீஸாரை அழைத்துச் செல்கிறேன். அங்கும் சிலபேர் காத்திருக்கட்டும்.—" என்று தொடர்ந்து கூறினார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

அந்த அதிகாரி சென்றதும், பிரபாகர்! நானும் வீட்டிற்குக் கிளம்ப வேண்டியதுதான். உன்னோடு வருகிறேன். உன் வீட்டிற்குப் போகலாம்" என்றார்

துரைசாமி. நீங்கள் அம்மாதிரியெல்லாம் செய்யவேண்டாம்! நாம் இருவரும் சேர்ந்து போகக்கூடாது. நான் தனியாகவே செல்கிறேன்—நீங்கள் கவலைப்படவேண்டாம்!" என்றார் பிரபாகர்.

இரு—உன்னை 'பரலோகபவன'த்தில் தாக்கிய விசித்திர நபர், ஒரு திகம்பர மனிதன் என்றா கூறினாய்?"

ஆனால் முக்கால் நிர்வாணந்தான்!" என்றார்.

இந்த டாக்டர் ரஞ்சித் சிங் இருக்கிறானே —அவனே மறுபடியும், தன் பழைய வேலையை ஆரம்பித்துவிட்டான் போலிருக்கிறது! மூன்று மாதங்களுக்கு முன், நான் அவனைப் பிடித்தேன்—" என்று நிறுத்தினார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

பழைய வேலை என்றால் என்ன?"

மனித குலத்தைத் திருத்தி அமைப்பது!" என்று கிண்டலாகக் கூறினார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

அப்படியென்றால் என்ன அர்த்தம்?" என்று கேட்டார் பிரபாகர்.

டாக்டர் ரஞ்சித் சிங்கின் கொள்கை என்ன வென்றால், இரண்டு மூன்று வயதுள்ள ஒரு குழந்தையை எடுத்துப்போய், அதை ஒரு மிருகத்தை வளர்ப்பதைப் போல் வளர்த்தால் அந்த ஜன்மம் துணி கேட்காது; பேசாது; ஆனால் மனித உருவத்தில்தான் காட்சி அளிக்கும். அப்படி வளர்க்கப்படும் ஜன்மம், மூளைக்கு வேலை கொடுக்காததாலும், வேறு யுக்தியான வழியில் தன் சக்தியைச் செலவிடாததாலும், அதனுடைய பூரா சக்தியும் எலும்புகளையும், தசைநாரையும் வளர்ப்பதற்காகவே பயன்பட்டு, சுமார் பத்தடி உயரத்திற்குமேல் மிகவும் பூதாகாரமாக வளரும்!— ஒரு மிருகத்தின் தன்மைகளே அந்த மனித உருவத்திலும் காணப்படும். இதுதான் அவனது ஆராய்ச்சி. இப்படிப்பட்ட ஆராய்ச்சியின் பயனாக டாக்டர் ரஞ்சித் சிங் வளர்த்திருக்கும் ஒரு முரட்டு உருவத்திடம்தான் நீ சிக்கிக் கொண்டிருக்கிறாய் என்று நினைக்கிறேன்— நாளைக்கு, நான் அவன் வீட்டைச் சோதனையிடும் பொழுது, ஆடையணியத் தெரியாமலும், பேசத்தெரியாமலும், ஏதாவது ஒரு

மனித ஜன்மம் எதிர்ப்பட்டால், நிச்சயம் டாக்டர் சிங்கை தீவாந்தர சிட்சைக்கு ஆளாக்கி விடுவேன்!" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

போலீஸ் கமிஷனர் ஆபீஸிலிருந்து பிரபாகர் புறப்படும்போது பொழுது இருட்டிவிட்டது. யார் கண்ணிலும் படாமல் பிரபாகர் மறைந்து மறைந்து, திருட்டுத்தனமாக ஆயிரம் விளக்கிலுள்ள தம் ஜாகைக்குப் போய்ச் சேர்ந்தார். உள்ளே நுழைந்ததும் கதவைத் தாளிட்டுவிட்டு ஒரு விளக்கைப் பொருத்தினார். அன்று புறப்படுவதற்கு முன்பே, அவர் எல்லா ஜன்னல்களையும் சாற்றிக் கொக்கி போட்டுவிட்டுப் போயிருந்ததால், அவர் இப்பொழுது விளக்கைப் பொருத்தியது, வீதியிலிருந்து பார்ப்பவருக்குத் தெரியாது. ஒவ்வொரு அறையாக மிகக் கவனமாகச் சோதனையிட்டார். எல்லாம் வைத்தது வைத்தபடியே இருந்தது!

ஆடைகள் வைக்கும் அலமாரி அருகே வந்ததும், பிரபாகருக்குச் சட்டென்று வேதநாயகத்தின் நினைவு வந்தது. சமாதிமேட்டிலே, வேதநாயகம் எதைப் பார்த்திருப்பான்? எந்தச் சமாதியைத் திறக்கச்சொல்லி, அவனைப் பயங்கரப் பேர்வழிகள் வற்புறுத்தி இருப்பார்கள் என்றெல்லாம் பிரபாகர் சிந்திக்கலானார்.

இரவு இரண்டு மணிவரையில் என்னென்னவோ காகிதங்களை வைத்து ஆராய்ச்சி செய்துவிட்டுப் படுக்கைக்கு எழுந்தார் பிரபாகர்.

அவர் மெல்ல விளக்கை அணைத்துவிட்டு ரகசியமாக ஜன்னல் கதவைத் திறந்துவிட்டு வெளியே இருளை ஊடுருவிக் கவனித்தார்.

வானம் நிர்மலமாக இருந்தது. தேய் பிறைச் சந்திரன் இலேசாகப் பவனி வந்துகொண்டிருந்தது. ‘சிலுசிலு’வென்று குளிர்ந்த காற்று வீசியது. ஜன்னல் வழியாக அறைக்குள் நிலவு வீசிக்கொண்டிருந்தது. பிரபாகர் படுக்கையில் படுத்து நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்தார்.

தூக்கத்தில் ஒரு சிறு ஒலிகேட்டாலும், பிரபாகர் விழித்துக் கொள்வார். அதேபோல அன்றும் திடீரென்று திடுக்கிட்டு விழித்துக் கொண்டார். எதனால் அந்த விழிப்பு ஏற்பட்டதென்று, அவருக்குத் தெரியவில்லை. ஒருக்கால் ஜன்னல் கதவு படபடவென்று காற்றில் அடித்துக் கொண்டிருக்கலாம்; இருந்தபோதிலும்,

அது தாம் எதிர்பார்த்த சத்தம்தான் என்று தீர்மானித்தார் பிரபாகர். இடது கைப்பக்கம் திரும்பி, அறைக் கதவைப் பார்த்தபடி படுத்துக்கொண்டு பிரபாகர் கவனித்தார். அப்பொழுது, அறைக்குள் கரும் கும்மென்று இருட்டு நிறைந்திருந்தது என்றாலும் ஜன்னல் வழியாக வந்த சந்திர வெளிச்சமானது கிட்டத்தட்ட அன்று வாயிற்படியின் அருகே இலேசாக விழுந்துகொண்டிருந்தது.

பிரபாகர் அங்குள்ள நிலா வெளிச்சத்தைப் பதைப்புடன் உற்றுப்பார்த்துக் கொண்டேயிருக்கும் பொழுது, அந்த அறை வாயிற்படியின் கதவு மெதுவாக நகர்ந்தது. அந்தக் கதவிற்குப் பின்பக்கமிருந்து, ரோமம் நிறைந்த ஒரு முரட்டுக் கரம் நிலவு வெளிச்சத்தில் தெரிந்தது. அந்தக் கையைப்போல பயங்கரமான—மிக விசித்திரமான மிகவும் மிருகத்தனமான கையை, பிரபாகர் அதற்குமுன் பார்த்ததே இல்லை. அந்தக் கையின் முரட்டு விரல்கள் அப்பைசாச உருவில் இருந்தன. அதனுடைய கட்டைவிரல், பட்டையாகவும், முரடு பாய்ந்தும் காணப்பட்டது. அந்த விசித்திரக்கையானது கெட்டியாக கதவைப் பிடித்தபடி மெதுவாக உட்புறம் கதவைத் தள்ளிக் கொண்டிருந்தது.

வினாடி நேரத்தில் பிரபாகர் படுக்கையை விட்டுத் துள்ளிக்குதித்து, ஓசை செய்யாமல் எதிர்புறச் சுவர் ஓரமாக, தரையின் இருளோடு படுத்தப்படுக்கையாய் கிடந்தார். மறு வினாடி ஒரு ராட்சச உருவம் ‘வீர் ’என்ற பயங்கரமான ஒலியை எழுப்பிக்கொண்டு அவர் படுத்திருந்த படுக்கைமீது குபீரெனப் பாய்ந்தது. அந்த உருவத்தின் பைசாசக் குரலைக் கேட்ட பிரபாகருக்கு ரத்தமே உறைந்துவிடும் போலிருந்தது. அது வேதாளம் ஒன்றின் குரல்போலவே அமானுஷ்யமாகக் கீரீச்சிட்டது.

பிரபாகர் இயற்கையிலேயே பயந்தவரல்லர் என்றாலும் தன்னந்தனியான அந்த இருட்டில் விசித்திரமான பூதாகார உருவத்தைச் சந்தித்த பயப்பிரமை அவருடைய நெஞ்சைப் பிடித்து உலுக்கியது.

கீழே விழுந்து கிடந்த பிரபாகர், மெதுவாகத் தம் கால் சட்டைப் பையிலிருந்த சுழல் துப்பாக்கியை எடுத்தார்; சட்டென்று பாய்ந்து, சிறுது தூரத்தில் இருந்த மின்சார விளக்கைப் பொருத்துவதற்காக அந்தப் பக்கம் ஓடினார். அந்தச் சமயத்தில் அறையில் ஏதோ சப்தம் கேட்டது. விளக்கைப்

பொருத்திவிட்டு சட்டென்று அறைக்குள் பார்த்தார். அறை காலியாகக் கிடந்தது! அறைக் கதவு வீரியத் திறந்து கிடந்தது.

அவசரமாக ஹாலுக்கு ஓடிவந்தார். தெருக் கதவு தாளிடப்பட்டு பூட்டியபடியே இருந்தது. ஆனால் சமையற்கட்டு கதவு விரியத் திறந்து கிடந்தது. சமையல் அறையை ஒட்டிய ஜன்னலும் திறந்துதான் இருந்தது. அந்த ஜன்னலில் கட்டப்பட்டிருந்த ஒரு கயிறு ஏணி காற்றில் ஊசலாடிக் கொண்டிருந்தது. ஜன்னல் வழியாகக் கீழே குனிந்து கவனித்தார் பிரபாகர். கீழே இருட்டில் ஒன்றுமே தெரியவில்லை. அந்தப் பயங்கர உருவம் மாயமாய் இருளில் மறைந்துவிட்டது.

சிறிது நேரம் கீழே குனிந்தபடியே பிரபாகர் காத்திருந்து கவனித்தார். தம்மைத் தாக்க வந்த பயங்கர உருவம் எங்காவது இருளில் அசைகிறதா என்று கவனித்தார். அந்தச் சமயத்தில் கீழே இருட்டில் விர்ரென்று ஒரு மோட்டார்கார் புறப்படும் சப்தம் கேட்டது. பிறகு கார் வேகமாகச் செல்வதும் பிரபாகரின் காதில் விழுந்தது. சிறிது நேரத்தில் அந்தக் கார் சப்தம் வெகு தூரத்தில் தேய்ந்து மறைந்தும் விட்டது.

பிரபாகர் திரும்பவும் தம் அறைக்குள் வந்தார். கடிகாரத்தில் மணி நான்கு ஆகி இருந்தது. பயங்கர உருவம்போல் மின்னலெனத் தோன்றி மறைந்த இந்த இனம் தெரியாத கொலைகாரன் யார்? அந்த உருவம் தம்மைப் பரலோக பவனத்தில், தாக்கிய அதே நபர்தான் என்று பிரபாகர் யூகித்துக் கொண்டார். காற்றில் ஊசலாடும் ஏணியை மெதுவாக மேலே இழுத்தார். அது யாரோ அனுபவம் இல்லாத ஓர் நபரால் செய்யப்பட்ட ஏணி என்று தெரிந்தது.

அதே வழியாகத்தான் வேதநாயகத்தைக் கொலை செய்த நபரும் வந்திருக்கவேண்டும் என்று தீர்மானித்தார் பிரபாகர்.

பொழுது நன்றாக விடிந்துவிட்டது. அளவுகடந்த அதிர்ச்சியினால், பிரபாகர் படுக்கையின் மீது சாய்ந்து விழுந்தார். சில வினாடிகளுக்கு எல்லாம் தம்மை அறியாமலே அயர்ந்து தூங்க ஆரம்பித்தார்.

## *14. சவக்கிடங்கில் ஒரு கோர சப்தம்!*

டெ லிபோன் மணி ‘கணகண’வென்று அடித்த சப்தத்தில்தான் மறுபடி பிரபாகர் விழித்துக்கொண்டார். படுக்கையில் புரண்டபடியே டெலிபோன் கருவியை கையில் எடுத்து யார் என்று கவனித்தார்.

மறு வினாடி அவர் முகம் ஆச்சரியத்தால் மலர்ந்தது!

நீயா; உன்னை நான் இப்பொழுது எதிர்பார்க்கவே இல்லை!" என்று பிரபாகர் வியப்போடு கூறினார்.

டெலிபோன் கருவியின் அடுத்த முனையிலிருந்து, ஒரு சிரிப்பொலி வந்தது.

நான்தான் கூப்பிடுகிறேன் என்று தெரிந்து கொண்டீர்களா? அப்படியானால் நீங்கள் புத்திசாலிதான்!" என்றாள் மஹேஸ்வரி.

எதுவும் தகராறா?" என்று அவசரமாகக் கேட்டார் பிரபாகர்.

அதற்கு மஹேஸ்வரி உடனடியாகப் பதில் சொல்ல வில்லை. இல்லை, உங்களோடு பேசலாம் என்று நினைத்தேன்—" என்று இழுத்தாள்.

சரி, புறப்பட்டுவா!" என்றார் பிரபாகர்.

மஹேஸ்வரி அவருடைய வீட்டிற்கு வந்து சேர்வதற்கு முன்னால் பிராபகர் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, தயாராக அவளை எதிர்நோக்கிக் குறுகுறுப்போடு காத்திருந்தார். ஆனால் காலை ஆகாராம் மாத்திரம் அவர் இன்னும் சாப்பிடவில்லை.

மஹேஸ்வரி வீட்டிற்குள் நுழைந்தபொழுது, அந்த நூதனமான கயிறு ஏணி எதிரே கிடந்தது.

அந்த நூலேணி இங்கே ஏன் கிடக்கிறது?" என்று மஹேஸ்வரி பதைபதைப்புடன் கேட்டாள்.

தீப்பிடித்து விட்டால் நான் தப்பித்து ஓடுவதற்காக! அந்த ஏணி இல்லாவிட்டால் என்னால் தூங்க முடியாது!" என்று பரிகாசமாகக் கூறினார்

பிரபாகர்.

நீங்கள் இன்னும் காலை ஆகாரம் சாப்பிட வில்லையா?" என்று கவலையுடன் கேட்டாள் மஹேஸ்வரி.

மணி பன்னிரெண்டாகிறது! இனிமேல், காலை ஆகாரம் சாப்பிடுவதற்கு வழியில்லை மத்தியான ஆகாரம் தான் சாப்பிட வேண்டும்!— அதுபோகட்டும், மஹேஸ்வரி! நீ எதற்காக என்னைத் தேடி வந்தாய்? அதை எனக்கு விவரமாகச் சொல்லு" என்று கேட்டார் பிரபாகர்.

நேற்றிரவு நீங்கள் புறப்பட்டு வந்த பிறகு, நானும் அம்மாவும் பேசிக் கொண்டிருந்தோம். நீங்கள் சொல்லிவந்த விஷயங்களைக் கேட்டு, என் அம்மா ரொம்பவும் மனக் கலக்கம் அடைந்திருக்க வேண்டும். ஆனால் 'நாம் ஏன் அப்படிச் சொன்னோம்'என்று நீங்கள் நினைக்காதீர்கள். ஏனென்றால் நீங்கள் சொல்ல வேண்டியதைத்தான் சொல்லிவிட்டு வந்தீர்கள். இரவு வெகு நேரம் வரையில் நாங்கள் அதைப்பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தோம் அதன் விளைவாக இன்று காலை நான் வக்கீல் ராஜாங்கம் பிள்ளையைப் பார்க்கச் சென்றேன். மானாமதுரை போய்வந்த விவரத்தையும், அந்த விசித்திரமான சாவி விவரத்தையும், வக்கீலிடம் கூறினேன். வக்கீல் ரொம்பவும் கலக்கமடைந்தார். என்னை உடனடியாகப் போலீஸ் பாதுகாப்பு ஏற்படுத்திக் கொள்ளச் சொன்னார். போலீஸ் கமிஷனர் ஆபிஸிற்கு இந்த விவரத்தைப்பற்றி டெலிபோன் செய்வதற்காக டெலிபோனைக்கூடக் கையிலே எடுத்துவிட்டார்; நான்தான் மிகவும் கஷ்டப்பட்டுத் தடுத்து நிறுத்தினேன். அதன் பிறகு நான் ஒரு யோசனை சொன்னேன். அதைக்கேட்டு வக்கீல் ராஜாங்கம் பிள்ளையே பிரமித்துப்போய் விட்டார்!" என்றாள் மஹேஸ்வரி.

என்ன யோசனை கூறினாய்?"

அதை உங்களிடம் சொல்லமாட்டேன்! திடீரென்று முன்னறிவிப்பின்றி, அதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்! அப்பொழுது தான் சுவாரசியமாயிருக்கும். உங்களிடம் மோட்டார்கார் இருக்கிறதா?" என்று உற்சாகமாய்க் கூறினாள் மஹேஸ்வரி.

இருக்கிறதென்று தலையாட்டினார் பிரபாகர்.

அதில் மூன்று பேர் ஏறிச் செல்லமுடியுமா?"

மூன்றவது நபர் யார்?" என்று கேட்டார் பிரபாகர்.

வக்கீல். ராஜாங்கம் பிள்ளையும் வருகிறார்—எல்லோரும் சமாதி மேட்டிற்குச் செல்கிறோம்!"

பிரபாகர் முகத்திலே ஒரு புன்னகை அரும்பியது. நிச்சயமாக, நீ மனோதத்துவம் அறிந்தவள், மஹேஸ்வரி! இன்று மாலை தனியாக அங்கே செல்வதாக இருந்தேன்!"

தனியாகப் போய் நீங்கள் அச்சமாதிகளைப் பார்க்க முடியாது. அதோடு அது ரொம்பவும் அபாயகரமான இடம். நான் உங்களோடு வருவது என் அம்மாவிற்குக் கூடப் பிடிக்கவில்லை. அந்த இடத்திற்குப் போவதைப்பற்றி என் அம்மாவிற்கு அவ்வளவு பயப்பிராந்தி! நல்ல வேளையாக வக்கீல் ராஜாங்கம் பிள்ளை, உடன் வருவதற்கு ஒப்புக்கொண்டார். அவருக்கு அந்த இடமும் அதன் சரித்திரமும் நன்றாகத் தெரியுமாதலால் எனக்கும் பாரம் தீர்ந்தாற்போலிருந்தது. சரியாக இரண்டரை மணிக்கு, நாம் இருவரும் வக்கீல் ராஜாங்கம் பிள்ளையைச் சந்தித்து அழைத்துப் போவதாக ஏற்பாடு! உங்களிடம் இருக்கும் விசித்திரச் சாவியை எடுத்து வருகிறீர்களா?" என்று கேட்டாள் மஹேஸ்வரி.

இரண்டு சாவிகளையும் எடுத்துக்கொண்டு அங்கு அவசியம் வந்து சேர்கிறேன்!" என்றார் பிரபாகர்.

மஹேஸ்வரி உடனே வீட்டுக்குச் செல்வதற்காக எழுந்தாள்.

நீ கண்டுபிடித்த மர்மம் என்ன?" என்று பிரபாகர் விசாரித்தார்.

இன்று சாயங்காலம் உங்களுக்குத் தெரியும்!" என்று உற்சாகமாகக் கூறினாள் மஹேஸ்வரி.

அன்று மத்தியானம் பிரபாகர் சாப்பாட்டை முடித்துக் கொண்டு பாங்கில் பந்தோபஸ்தாக வைக்கப்பட்டிருந்த விசித்திரச் சாவிகளை எடுத்துக் கொண்டு, நேராக மஹேஸ்வரியின் வீட்டை அடைந்தார்.

மஹேஸ்வரி அவருக்காகக் காத்துக் கொண்டிருந்தாள்.

உங்களிடம் அச் சாவிகள் இருக்கின்றனவா?" என்று முதல் கேள்வியாக மஹேஸ்வரி கேட்டுவிட்டு, என் அம்மாவிற்கு நான் அங்கு வருவது கொஞ்சங்கூடப் பிடித்தமில்லை. காலமான ராக மானந்தர் குடும்பம் சம்பந்தப்பட்ட எந்த விஷயத்திலும் அம்மா கலக்கமடைந்து தான் காணப்படுகிறாள்!" என்றாள்.

நீ ஏதோ மர்மத்தைக் கண்டு பிடித்ததாகச் சொன்னாயே, மஹேஸ்வரி?" என்று கேட்டார் பிரபாகர்.

கூடிய சீக்கிரம் தெரிந்து கொள்ளலாம்!—அது போகட்டும். நான் இன்று ஏன் மலைமேல் விநாயகர் வாசக சாலையின் வேலைக்குப் போகவில்லை என்று நீங்கள் கேட்கவில்லையே?—இன்று எங்கள் வாசக சாலையை ஸ்தாபித்தவரின் பிறந்த தினம்! வாசக சாலையைத் திறந்து வைத்தவரின் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்காக, அதை மூடியே விடுகிறோம்!" என்று கூறிவிட்டு மஹேஸ்வரி கலகலவெனச் சிரித்தாள். வக்கீல் ராஜாங்கம் பிள்ளையின் வீட்டை அடைந்ததும், ராஜாங்கம் பிள்ளை புன்னகையோடு வந்து காரில் ஏறிக்கொண்டார்.

என்ன பிரபாகர்! மிகப் பிரபலத் துப்பறிவாளனாகிய உனக்கு, ஆரம்ப துப்பறிவாளியாகிய மஹேஸ்வரி கூறிய உளவைக் கேட்டதும், எப்படி இருந்தது?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

எந்த உளவையும் அவள் என்னிடம் சொல்ல வில்லையே!"என்றார் பிரபாகர்.

உள்ளபடியே நான் சமாதி மேட்டிற்கு, மாதாந்திர விஜயம் செய்யும் தேதி நெருங்கியதால் தான் இப்பொழுது உங்களுடன் வருகிறேன். இல்லாவிட்டால், இந்த வேலைக்கு நான் வந்திருக்கவே மாட்டேன்!" என்று கூறினார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

அவர்கள் ஏறிச் சென்ற மோட்டார் கார் வேகமாகச் சமாதி மேட்டை அடைந்தது. சமாதி மேட்டின் பிரமாண்டமான வெளிக்காம் பௌண்டின் வாசல்

கேட் மூடப்பட்டிருந்தது. சமாதி மேட்டைச் சுற்றி நான்கு புறமும் உயரமான மதில்சுவர் எழுப்பப்பட்டு, மரத்தாலான வாசல் கேட் ஒன்று போடப்பட்டிருந்தது. அந்த கேட் கதவு வெய்யிலிலும் மழையிலும் அடிப்பட்டு க்ஷீணித்த நிலையிலிருந்தது.

காரின் ஹாரனை அழுத்தினார் பிரபாகர். அந்த இடத்தைக் காவல் காத்துக்கொண்டிருந்த ஒரு கிழவி மெல்ல வந்து கேட்டைத் திறந்து விட்டாள்.

மோட்டார் காரை உள்ளே கொண்டுபோய் நிறுத்திவிட்டு, எல்லோரும் காரை விட்டிறங்கி, சமாதி இருந்த இடத்திற்குச் சென்றார்கள். சமாதி மேடு பூராவும் ஏராளமான மரங்கள் வளர்ந்திருந்தன. எல்லாம் பசுமையாக இருந்தபோதிலும், பார்வைக்குக் களை இழந்திருந்தன. மழை வருவதற்கு அறிகுறியாக ஒரே புழுக்கமாக இருந்ததால், கொஞ்சங்கூடக் காற்று அடிக்கவில்லை. போதாக் குறைக்குக் கருமேகங்கள் வானிலே வட்டமிட்டு, இடையிடையே இடியும் மின்னலும் தோன்றின.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளை வானத்தை அண்ணாந்து பார்த்த படியே, சமாதிகளிருக்குமிடத்தை நெருங்கி விட்டோம். மழை கடுமையாகப் பெய்யும்போல் தோன்றுகிறது!" என்றார். சில கஜதூரம் மரங்களிடையே ஒற்றையடிப் பாதை வழியாக நடந்து சென்றார்கள். எதிரில் ஒரு பெரிய குன்றுபோன்ற மேடு தென்பட்டது.

இந்தக் குன்றுக்குப் பெயர் தேவானந்தக் குன்று! பவானந்தத்தின் முப்பாட்டான்தான் தேவானந்தம். இந்தக் குன்றுக்கு அடியில் பாதாளத்தில்தான் சமாதிகள் இருக்கின்றன!" என்றார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

குன்றின் நடு மத்தியில், ஒரு சதுரமான ஓட்டை செய்யப்பட்டு அதில் வலுவான இரும்புக் கதவு போடப்பட்டிருந்தது. துருப்பிடித்து இருந்தபோதிலும் இரும்புக் கதவு ரொம்பவும் வலுவாக இருக்கிறதென்று நினைத்தார் பிரபாகர்.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளை. தன்னோடு கொண்டுவந்திருந்த லாந்தர் விளக்குகளை ஒன்றன்பின் ஒன்றாக ஏற்றினார், பிறகு சட்டைப் பையிலிருந்து மிகப் பெரிய பழங்கால சாவி ஒன்றை எடுத்தார். அந்தச் சாவியைத் துருப் பிடித்திருந்த அந்தப் பூட்டில் நுழைத்துத் திறந்தார். பூட்டு ‘டணால்’என்று

திறந்துகொண்டது. இரும்புக் கதவை ராஜாங்கம் பிள்ளை உட்புறமாகத் தள்ளியதும் கிரீச் என்ற பயங்கரச் சப்தம் எழுந்தது. உள்ளே கரும்கும்மென்று பேய் இருள் புதைந்து கிடந்தது.

நான் முதலில் செல்கிறேன்! நீங்கள் பத்திரமாக என் பின்னால் வாருங்கள்!" என்று கூறிவிட்டு வக்கீல், அந்த விசித்திர வாசலுக்குள் நுழைந்து, அதிலிருந்து கீழ்நோக்கிச் சுரங்கப் படிகள் போல் சென்ற பழங்காலத்துப் படிக்கட்டுகளில் இறங்க ஆரம்பித்தார். அப்படிக் கட்டுகளில் பாசி பிடித்திருந்தது. ராஜாங்கம் பிள்ளைக்குப் பின்னால், மஹேஸ்வரி மனம் பதைக்க, திக் பிரமையுடன் இறங்கினாள். அவளுக்குப் பின்னால், பிரபாகர் இறங்கினார் இறங்கும்பொழுதே மொத்தம் பன்னிரண்டு படிகள் இருப்பதை மனத்திற்குள் கவனித்துக் கொண்டார் பிரபாகர்.

படிக்கட்டுகளை விட்டு இறங்கி சமதளத்தை அடைந்ததும், அது ஒரு சிறிய அறை போலக் காட்சியளித்தது. அங்குகிருந்து உள் நோக்கிச் செல்ல மற்றொரு இரும்புக் கதவு காணப்பட்டது. முதல் பூட்டுக்கு உபயோகித்த அதே சாவியை, இந்தப் பூட்டிலும் போட்டுத் திறந்தார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை. அங்கிருந்து உள்ளே சென்றதும், அந்த இடம் மிகவும் விசாலமாக இருப்பதைக் கவனித்துக் கொண்டார் பிரபாகர். அந்த இடத்தில் பத்துப் பன்னிரண்டு சமாதிகளிருந்தன. அந்த இடமே சமாதிகளின் புதையல் கிடங்குப் போலிருந்தது. ஒவ்வொரு சமாதியும் ஆறடி நீளம் ஆறடி அகலம் மூன்றடி உயரமும் எழுப்பப்பட்டிருந்தது. சமாதிக்குள் விளக்கேற்றி வைப்பதற்காக ஒரு மேடையும், அதைப் பூட்டி வைப்பதற்கு வலுவான மரக்கதவுகளும் போடப்பட்டிருந்தன. இரண்டு பக்கங்களிலும் சமாதிகள் அமைக்கப்பட்டு, அவற்றின் இடையிலிருந்த குறுகிய பாதையில்தான், அவர்கள் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். பாதையின் கோடியிலே ஒரு பெரிய சமாதி தென்பட்டது. அது மற்ற சமாதிகளைவிட மிகப்பெரியதாகக் காட்சியளித்தது. வக்கீல் ராஜாங்கம் பிள்ளை மெல்லத்தம் கையிலிருந்த லாந்தர் விளக்கை உயர்த்தி, அந்தப் பெரிய சமாதியைச் சுட்டிக் காட்டி, இதைத்தான் பார்க்க வேண்டுமென்று மஹேஸ்வரி ஆசைப்பட்டாள்—அதாவது விசித்திரமான ஏழு பூட்டுகள் போடப்பட்ட கதவு!" என்றாள்.

பிரபாகர் ஆச்சரியத்தோடு அந்த விசித்திரக் கதவை உற்றுப் பார்த்தார். அந்தக் கதவில் ஏழு துளைகளிருந்தன. சாவிகள் நுழைப்பதற்காக அவை ஏழு துளைகளும் சாவி ரூபத்திலே வளைத்து செய்யப்பட்டிருந்தன.

இப்பொழுது பிரபாகருக்கு எல்லாம் புரியத் தொடங்கிவிட்டது. இந்த விசித்திரமான சமாதி இடத்தைத் திறப்பதற்காகத்தான் முன்பு கொலையுண்ட வேதநாயகம் அமர்த்தப்பட்டிருந்தான்! அந்தக் கதவு வைத்து முடுக்கப்பட்டிருந்த வாசற்படி. விசித்திரமான உருவிலே அமைந்திருந்தது! அந்தக் கதவை மெதுவாகத் தட்டிப் பார்த்தார் பிரபாகர். அது ரொம்ப வலுவான கதவாகத் தெரிந்தது.

இது யாருடைய சமாதி?" என்று கேட்டார் பிரபாகர்.

இது தேவானந்தர் சமாதி!" என்றார் ராஜாங்கம் பிள்ளை.

உள்ளே என்ன இருக்கிறது?" என்று மெதுவாகக் கேட்டார் பிரபாகர்.

எனக்குத் தெரியாது. காலஞ்சென்ற ராமானந்தர், இக் கதவுகளைப் புதுப்பித்தார். ஏற்கெனவே ஏழு பூட்டுள்ள மற்றொரு கதவு இங்கு போடப்பட்டிருந்தது. அது க்ஷீணித்துப்போய்விட்டதால், இந்தக் கதவை ஜெர்மன் தேச கம்பெனி ஒன்றுக்கு எழுதி ஆர்டர் கொடுத்துக் காலஞ்சென்ற ராமானந்தர் தருவித்தார். இதற்குள் வெறும் மரப் பெட்டி ஒன்றுதான் காட்சி அளிக்கிறது!" என்றார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

அதை எப்படிப் பார்த்தீர்கள்?" என்று கேட்டாள் மஹேஸ்வரி.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளை, அந்தக் கதவின் மேல் பாகத்தில் ஆறங்குல நீளமும், இரண்டு அங்குல உயரமும் உள்ள துவாரம், ஒரு இரும்பு தகட்டினடியில் மறைக்கப்பட்டிருந்ததைத் திறந்து காட்டினார் அந்த இடுக்கு வழியாக பிரபாகர் தன் கையிலுள்ள டார்ச் விளக்கை அடித்து உள்ளே வீசிய வெளிச்சத்தில் பார்த்தார்.

அந்த அறையின் உள்ளே, பாசி பிடித்த ஈரமாக இருந்தது. அதன் நடு மத்தியிலே அமைக்கப் பட்டிருந்த மேடையில் ஒரு மரப்பெட்டி வைக்கப் பட்டிருந்தது.

அந்த மரப் பெட்டியா? அதில் என்ன இருந்ததோ எனக்குத் தெரியாது. ஆனால் காலமான ராமானந்தர், இந்த புதுக் கதவைப் பொருத்தும் பொழுது அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்து, அதில் ஒன்றுமில்லாத போதிலும் அந்த இடத்திலேயே கிடக்கட்டும் என்று போட்டு வைத்து விட்டாராம்..."

அந்தச் சமயத்தில் அங்கு கவிந்துள்ள இருட்டில் திடீரென்று பயங்கரமான கண்ணைப் பறிக்கும் விசித்திர ஒளி ஒன்று அங்கு பளிச்சென்று வீசியது! மஹேஸ்வரி திடுக்கிட்டுப் பயத்தால் வீறிட்டு அலறியபடி, பிரபாகரைக் கட்டிக் கொண்டாள்.

மின்னல்!" என்று உணர்ச்சியற்ற குரலில் கூறிய வக்கீல் ராஜாங்கம் பிள்ளை, நாம் திரும்பிப் போவதற்குள், நன்றாக மழையில் நனைந்து விடுவோம்" என்றார் உற்சாகமாக.

அதை அவர் சொல்லிக் கொண்டே இருக்கும் பொழுது, பயங்கரமான இடியோசை எழுந்து, பூமியை அதிர வைத்தது! அதைத் தொடர்ந்தே பயங்கரமான மின்னல் வெளிச்சமும் உள்ளே பாய்ந்து, இருமருங்கிலும் பிணங்கள் கிடக்க, நடுவிலே அவர்கள் நிற்பதை வலியுறுத்திக் காட்டியது. இதை எண்ணியதும் மஹேஸ்வரியின் உடல் வெடவெடவென வெகுவாக நடுங்கியது. பிரபாகரை இன்னும் வலுவாகப் பிடித்துக் கொண்டாள். அவளுடைய முகத்தில் சவக்களை தட்டிவிட்டது.

எல்லாம் சில வினாடிகளில் சரியாகப் போய்விடும்!" என்று தைரியம் கூறினார் பிரபாகர்.

அந்தச் சமயத்தில், மீண்டும் பயங்கரமான ஒரு வெளிச்சமும், காதை செவிடு படுத்தும் ஒரு கோர சப்தமும் கிளம்பின!

எங்கேயோ இடி விழுந்திருக்கிறது!" என்று பிரபாகர் கூறிக்கொண்டு இருக்கும் பொழுது ‘கிளாங்’என்ற சப்தம் கேட்டது. என்ன என்று துடித்துக் கொண்டு முன்னோக்கி ஓடினார் பிரபாகர்.

சமாதிகளின் சுரங்கத்தினுள்ளே அவர்கள் இறங்கி வந்த இரும்புக் கதவு படீரேன இழுத்து மூடப்பட்டிருந்தது.

அந்தக் கதவோரத்தில், ராஷச உருவத்தின் காலடிச் சுவடுகள் இரண்டு அதி பயங்கரமாகக் காணப்பட்டன.

பிரபாகர் பயந்தது நடந்தே விட்டது.

## *15 மாயச் சமாதியில் மரண அபாயம்*

மஹேஸ்வரியும் வக்கீல் ராஜாங்கம் பிள்ளையும் பிரபாகருக்குப் பின்னால் கலவரத்தோடு நின்றார்கள். அந்தக் கதவை தன் கைகளால் அசைத்துப் பார்க்கும்பொழுது, ராஜாங்கம் பிள்ளைக்கு உடல் எல்லாம் நடுங்கியது.

இதெல்லாம் என்ன கேலிக் கூத்து?" என்று பிள்ளை ஆத்திரமாகக் கத்தினார்.

இந்தச் சமயத்தில் பிரபாகரின் கைத்துப்பாக்கி சட்டென்று உயர்ந்தது. வெளியே செடி மறைவில் தெரிந்த ஓர் உருவத்தை நோக்கி இரண்டு முறைகள் சுட்டார். அதற்குள் கருமேகங்கன் திரண்டு வந்து, மழை கொட்டு கொட்டென்று கொட்டியது. அப்பொழுது அடித்த மின்னல் வெளிச்சத்தில், பிரமாண்டமான ஒரு பைசாசக் கை தென்பட்டது. மீண்டும் ஒருமுறை சுட்டார் பிரபாகர்.

ஓ, சுடாதீர்கள்; தயவு செய்து சுடாதீர்கள்!" என்று பதறினாள் மஹேஸ்வரி, பிரபாகர் தம் துப்பாக்கியைத் தம் சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டார். பிறகு ராஜாங்கம் பிள்ளையின் பக்கம் திரும்பி, பிள்ளைவாள்! இந்தக் கதவைத் திறந்த சாவி எங்கே?" என்று கேட்டார். தம் சட்டைப் பையிலிருந்த சாவியை எடுத்துக் கொடுத்தார் பிள்ளைவாள்.

பிரபாகர் கம்பி இடுக்கு வழியாக தம் கரத்தை வெளியே நீட்டி, மிகவும் சிரமப்பட்டு அந்தப் பூட்டைத் திறந்தார். கதவு சட்டென்று திறந்துகொண்டது.

கதவைத் திறந்து விட்டதும் பிரபாகர் அவர்களிருவரிடமும், .நீங்களிருவரும் முன்னால் சென்று கொண்டிருங்கள்! எனக்கு இங்கே ஒரு வேலை இருக்கிறது! அதைக் கவனித்துவிட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு,

அந்த ராஷச உருவம் எந்தப் பக்கத்தில் தோன்றியதோ, அந்தப் பக்கத்திலிருந்த ஒரு புதரை நோக்கி ஓடினார். சிறிது தூரம் சென்றதும் அவர் காலில் ஒரு இரும்புக் குழாய் தட்டுப்பட்டது. முனிஸிபாலிட்டி நகரங்களில் நாய்களை கொல்லுவதற்காகச் செலுத்தப்படும் விஷ வாயு நிறைந்தது அந்த இரும்புக் குழாய். அதன்மேல் ரத்தம் சொட்டியிருந்தது. இன்னும் சிறிது தூரத்தில், அதேபோல மற்றொரு இரும்புக் குழாயும், நீளமான ரப்பர் டியூபும் இருந்தது. அவற்றைப் பற்றி சிந்தித்துப் பார்த்திடும்போது, தங்களைச் சமாதிக்குள் போட்டு மூடிவிட்டு, விஷ வாயுவைத் திறந்துவிட்டு கொலை செய்ய அந்த ராஷச உருவம் முயன்றிருப்பது தெரிந்தது!

அதற்குமேல் அந்த அசுர மனிதனைத் தேடிச் சென்று பிடிக்க முடியாது என்பதை உணர்ந்த பிரபாகர். வேகமாக ராஜாங்கம் பிள்ளையும் மஹேஸ்வரியும் சென்ற திக்கை நோக்கி ஓடினார்.

அவர்களிருவரும் சவம்போல் வெளுத்துப்போய் ஓரிடத்தில் நின்றுகொண்டிருந்தனர்.

அது என்ன? யாரை நோக்கிச் சுட்டாய்?" என்று கேட்டார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

ஒருவருமில்லை. பீதியால் அப்படிச் சுட்டி இருக்கிறேன்!" என்று வெட்கமில்லாமல் கூறினார் பிரபாகர்.

அவர்களிருவரையும் கொண்டுபோய் அந்தக் காவற்காரன் இருந்த வீட்டில் விட்டுவிட்டு, திரும்பவும் சமாதிகளை நோக்கி நடந்து வந்தார், பிரபாகர்.

மழையும் இருட்டும் விருட்சங்களின் நிழலும் சேர்ந்து அந்தப்பிராந்தியமே பார்க்கப் பயங்கரமாய் இருந்தது! இரண்டு பக்கமும் ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொண்டு அந்தக் காயம்பட்ட ராஷச மனிதன் எங்காவது ஒளிந்திருக்கிறானோ என்று அறிய முயன்றார். ஆனால் அந்த ராஷசனை எங்கும் காணோம்.

தேவானந்தக் குன்றை நெருங்கியதும், இரும்புக் கதவைத் திறந்த பிரபாகர், மீண்டும் அவைகளைச் சாத்தி மூட முடியாதபடி, அந்தக் கதவில்

தன்னிடமிருந்த இரும்பு விலங்குகள் இரண்டைப் போட்டுப் பூட்டி வைத்தார். இப்பொழுது அக்கதவுகளை இழுத்துச் சாத்தினாலும் இரும்பு விலங்குகள் தடை செய்துகொண்டே இருக்கும்.

இதைச் செய்து முடிந்ததும், பிரபாகர் மெல்ல டார்ச் விளக்கை அடித்தபடி, அதன் வெளிச்சத்தின் உதவியைக்கொண்டு அதி பயங்கரமாக இருண்டுக்கிடக்கும் அந்தச் சுரங்கப் படிக்கட்டுகளில் இறங்கினார். அங்கிருந்து நேராக ஏழு பூட்டுகள் போடப்பட்ட அந்தக் கதவை நோக்கி நடந்தார். தமது உள் சட்டைப்பைக்குள்ளிருந்து ஒரு சாவியை எடுத்து, கதவின் மேலே ஏழு சாவித் துவாரங்கள் போல் தோன்றிய ஏழு ஓட்டைகளில் ஒன்றினுள் நுழைத்துக் கதவைத் திறக்க முயறார், முடியவில்லை; பிறகு நாலாவது துவாரத்தில் அச்சாவியை நுழைத்து அவர் முயற்சித்தபோதுதான், ‘கிளிக்’என்ற சபதத்துடன் பூட்டு நகர்வது தெரிந்தது. கதவை மெதுவாகத் திறப்பதற்கு முயன்றார்; ஆனால் முடியவில்லை. இன்னொரு சாவியை எடுத்து முயற்சி செய்து பார்த்தார். அது ஏழாவது துவாரத்திற்குப் பொருந்தி வந்தது. ஆனால் அப்பொழுதும் கதவைத் திறக்க முடியவில்லை. அதை இரண்டையும் ஏக காலத்தில் திறந்தபடி, கதவு அப்பொழுதாவது திறக்க இடம் கொடுக்கிறதாவென்று முயற்சித்தார் பிரபாகர்—அப்பொழுதும் கதவு திறக்கவில்லை.

கதவைப் பற்றிய மர்மம், அப்பொழுதுதான் பிரபாகருக்குத் தெளிவாக விளங்கியது. ஏழு சாவிகளையும் ஏழு துவாரங்களில் நுழைத்து ஏககாலத்தில் திறந்தால்தான் அந்தக் கதவு திறக்கும், அப்படி ஏழு சாவிகளும் கிடைத்துக் கதவைத் திறக்கும் பொழுது,

சற்றுமுன் வக்கீல் ராஜாங்கம் பிள்ளையோடு, தான் பார்த்த ஓட்டை வழியாக மறுபடியும் உள்ளே பார்த்தார் பிரபாகர். ஆனால் புதிதாக அவரால் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. திரும்பவும் இரு விசித்திரச் சாவிகளையும் தம் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு, நடுக் கதவையும் பூட்டிக்கொண்டு, படிக்கட்டுகள் வழியாக மேலே ஏறி, வெளியே வந்து வெளிக் கதவையும் பூட்டினார். அந்தச் சமயத்தில் சுமார் பத்து கஜங்களுக்கப்பால், விஷ வாயு அடைக்கப்பட்ட இரும்புக் குழாய் கிடப்பதைக் கண்டதும்

திடுக்கிட்டுப்போனார். அந்தக் குழாய் சற்று நேரத்திற்கு முன்னால் ஐம்பது கஜ தூரத்திற்கு அப்பால் கிடந்தது! அப்படியானால் அந்த ராஷச மனிதன் அவருக்குச் சமீபத்தில்தான் எங்கோ இருளில் மர்மமாக ஒளிந்து கொண்டிருக்கிறான். ஏதோ ஒரு மறைவில் நின்று தன்னைத்தான் ஆத்திரமாகக் கவனித்துக் கொண்டிருக்கிறான். என்று நினைத்தும் பிரபாகர் உடம்பெல்லாம் பீதியால் சில்லிட்டுப் போய்விட்டது.

அந்த இரும்புக் குழாயைத் தூக்கிக் கொஞ்ச தூரத்திற்கப்பால் வீசியெறிந்துவிட்டுக் காவற்காரனின் வீட்டை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்தார் பிரபாகர். அவருக்குப் பின்னால் ஏதோ வொன்று துரத்தி வருவதுபோன்ற பயப்பிராந்தி உண்டாயிற்று.

ஓட வேண்டுமென்ற ஒரு வெறி அவருக்கு ஏற்பட்டது. சட்டென்று தம் மனப்போக்கு எவ்வளவு பயங்கரமாக மாறுதல் அடைந்துவிட்டது என்பதைக் கவனித்ததும், அவருக்கே வெட்கமாக இருந்தது! பீதிக்கு அடிமையாகித் தாம் நடு நடுங்குவதை எண்ணியதும், ஏதோ குற்றம் செய்ததுபோல் அவர் மனம் உறுத்தியது. தம் மீதே தமக்கு ஏற்பட்ட ஆத்திரத்தோடு பிரபாகர் சட்டென்று திரும்பி அந்த விஷவாயுக் குழாய் வீசியெறியப்பட்ட இடத்தை நோக்கி நடந்தார். அந்த இடத்தில்தான் எதிரி ஒளிந்திருக்க வேண்டுமென்று அவருக்குத் தோன்றியதால், நேராக அவனைப் போய்த் தாக்கப்போகிறோம் என்ற தைரியத்துடன் முன்னோக்கி நடந்தார். வெகு தூரம் நடந்த பிறகு, யாரும் எதிர்ப்படாததால், சில வினாடிகள் அங்கு நின்று கொண்டிருந்தார். இப்பொழுது அவர் மனதில் எந்தவிதக் கலவரமும் இல்லை! எப்படிப்பட்ட அபாயத்தையும் எதிர்நோக்கும் சக்தியோடு இருந்தார்! அவ்வாறான மனோ திடத்தை உணர்ந்ததும் பிரபாகர் ஒரு மனத்திருப்தியோடு, காவற்காரன் வீட்டைநோக்கித் திரும்பி நடக்க ஆரம்பித்தார். அளவற்ற உணர்ச்சி வேகங்களுக்கு அடிமையாகி அவர் நரம்புகள் தளர்ந்து சோர்ந்துபோயிருந்தன.

தம்மை எதிர்த்த அந்த அமானுஷ்ய மனித மிருகத்தின் போக்கும், அதன் பிடிவாதமும், தன்னைக் காயப்படுத்தியவனைத் தீர்த்துக்கட்டியே ஆகவேண்டும் என்ற வெறியும், பிரபாகரைப் பிரமை தட்டிப் போகச்செய்தன. குப்பைகூளங்கள் நிறைந்த சமாதியைப் பூட்டி வைத்திருக்கும் ஒரு பூட்டுக்காக

ஏழு விசித்திரச் சாவிகள்! அந்த ஏழு சாவிகள் சம்பந்தப்பட்ட மர்மம், அவருக்கும் மரண அபாயத்தையே ஏற்படுத்தியது—மஹேஸ்வரிக்கும் அதே அபாயத்தையே ஏற்படுத்தியது!

சாதாரண மனித உலகில் நடமாடிவந்த ஒருவன், பேய்களும் வேதாளங்களும் நிறைந்த ஒரு மாளிகைக்குள் தள்ளப்பட்டுவிட்டால் அவன் எவ்வளவு பதைப்பு அடைவானோ, அவ்வளவு பதைப்பு அடைந்திருந்தார் பிரபாகர். கடந்த மூன்று தினங்களாக அவருக்கு ஏற்பட்ட அனுபவம் மகா பயங்கரமானது.

குற்றத்தைப் பற்றியும், குற்றம் புரிபவர்களைப்பற்றியும் பிரபாகருக்கு நன்றாக அத்துபடியாகியிருந்தது. பாலபருவத்தில் பழி பாவத்திற்கு அஞ்சாத மூர்க்கர்களோடு பழகும் வாய்ப்பு பிரபாகருக்குக் கிடைத்திருந்தால், அவர்கள் தந்திரங்களும், அவர்கள் வேலை முறைகளும், அவருக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். குற்றவாளிகள் கொலையாளிகளின் குரூர மனம் எப்படியெல்லாம் வேலை செய்தது, எப்படியெல்லாம் வேலை செய்யக்கூடும். என்பன அவற்றையெல்லாம் அவரால் யூகிக்க முடியும்.

ஆனால் அவர் இப்பொழுது இருப்பது ஒரு மாயா உலகமாக இருந்தது. அவரை இருளில் மாயமாகப் பதுங்கிவந்து தாக்கிக் கொல்ல முயன்ற அந்த ராஷச உருவம் யாரென்றே கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படியே கண்டுபிடித்தாலும் அந்த வெறி மிருக்கதின் மீது சுமத்தக் கூடிய குற்றம் எதுவுமில்லை—வேதநாயகம் கொலையைத் தவிர! பாவம்; வேதநாயகம்!—அவன் மனித உலகத்தைச் சேர்ந்த குற்றவாளி. பயங்கரமான இருளிலே, பாதாளத்திலுள்ள இந்த சமாதியைத் திறக்க முயலும்பொழுது பீதியால் அவன் மனம் என்ன பாடுபட்டிருக்கும்.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளையும், மஹேஸ்வரியும் இருந்த இடத்தை பிரபாகர் நெருங்கியதும், மஹேஸ்வரி ஒரு நிம்மதியுடன் பெருமூச்சு விட்டாள்.

கதவைப் பூட்டியவனைக் கண்டுபிடிப்பதற்காகச் சென்றாயோ?" என்று கேட்டார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

ஆமாம்! ஆனால் கண்டுபிடிக்க முடியவில்லை!"

அவனுக்குக் காயம் பட்டிருந்ததோ?" என்று கேட்டாள் மஹேஸ்வரி.

காயம் பட்டிருந்தது—ஆனால் அபாயமான காயம் இல்லை!" என்று எச்சரிக்கையாகக் கூறினார் பிரபாகர்.

அந்த மிருகத்தைச் சுட்டுக் கொன்றிருக்க வேண்டும்!" என்றார் ராஜாங்கம் பிள்ளை.

அதற்குள் மூவரும் மோட்டார்கார் நிறுத்தப்பட்டிருந்த இடத்தை அடைந்தனர்.

காரில் ஏறிக்கொண்டு செல்லும் பொழுது அவரவர் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார்களே தவிர, ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளவில்லை. முதலில் வக்கீல் ராஜாங்கம் பிள்ளையை அவர் வீட்டில் இறக்கிவிட்டுப் பிரபாகரும் மஹேஸ்வரியும் தங்கள் ஜாகைகளுக்குப் புறப்பட்டார்கள்.

கார் புறப்படும் தருணத்தில் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை சந்தேகத்தோடு பிரபாகரைக் கடைக் கண்ணால் பார்த்துவிட்டு மஹேஸ்வரியை நோக்கி, நான் அங்குகண்ட காட்சிகளை பார்த்துப் பயந்துவிடவில்லை. ஆனால் காணாத காட்சிகளை நினைத்துத்தான் கவலைப்படுகிறேன்!" என்று தமாஷாகக் கூறினார்.

நீங்கள் காணாத காட்சி எது?" என்று கேட்டாள் மஹேஸ்வரி.

மாயச் சமாதிக் கிடங்கில் நமது நண்பர் பிரபாகர் நம்மிடம் சொல்லாத பல விஷயங்களைக் கண்டு பிடித்து வந்திருக்கிறார் என்று நினைக்கிறேன். அப்படிக் கண்டுபிடித்து வந்த காட்சிகளும், அதி பயங்கரமானவையாகத் தான் இருக்குமென்று நினைக்கிறேன். எப்படியிருந்தாலும் அதைப்பற்றி நாளை காலை பேசலாம்!" என்றார் வக்கீல்.

அங்கிருந்து புறப்பட்ட பிரபாகர், மஹேஸ்வரியை அவளது வீட்டில் கொண்டுபோய் விட்டு விட்டு நேராகத் தம் வீட்டிற்குச் சென்று உடைகளை மாற்றிக்கொண்டு இன்ஸ்பெக்டர் துரைசாமியின் வீட்டிற்கு விரைந்தார்.

உங்களை அகால நேரத்தில் வந்து தொந்தரவு செய்வதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள்.ஆனால் நான் பார்த்த அதிசயமான காட்சிகளை உங்களிடம் உடனே சொல்லவேண்டும்!" என்று பிரபாகர் கூறிவிட்டு இன்ஸ்பெக்டரின் முகத்தைப் பார்த்தார்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி காட்டிய அசிரத்தை பிரபாகரக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. ஆனால் அடுத்த வினாடி அங்கு நடந்த ஒரு நிகழ்ச்சி அவர் மனப்பான்மையையே மாற்றி விட்டது.

ஒரு யூனிபாரம் தரித்த அதிகாரி அந்த சமயத்தில் துரைசாமியின் வீட்டிற்குள வந்தார். இன்ஸ்பெக்டருக்கு ‘சல்யூட்’அடித்து விட்டு, டாக்டர் ரஞ்சித் சிங் வீட்டை இன்றிரவு முற்றுகையிட வாரண்ட் வாங்கியாகி விட்டது. நாம் சரியாகப் பத்து மணிக்கு முற்றுகையிடப் போகிறோம்!" என்றார் அந்த அதிகாரி.

இரவு பதினொரு மணிக்குச் சோதனையிடப் போவதாக நுங்கம்பாக்கம் போலீஸிற்குத் தகவல் அனுப்பினீர்களே!" என்று ஆச்சரியத்தோடு கேட்டார் பிரபாகர்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி பெருமூச்சு விட்டபடி, நுங்கம்பாக்கம் போலீஸார் அங்கு வருவதற்கு முன்பே நான் அங்கு சோதனை நடத்த விரும்புகிறேன். அதோடு யாராவது ரஞ்சித் சிங்கிற்கு உளவு கூறிவிடக் கூடும். பிரபாகர்! உனக்குத் தெரியவே தெரியாது. துப்பறியும் தொழிலில் யாரையும் நம்பாதே! இந்த விவரங்களையெல்லாம் வேறு யாருக்கும் சொல்லி விட்டாயோ!" என்று கேட்டார்.

பிரபாகர் சிறிது தயங்கினார்! ஓரளவு வக்கீல் ராஜாங்கம் பிள்ளையிடம் கூறினேன்—மஹேஸ்வரியிடம் நிறைய சொல்லி இருக்கிறேன்!" என்றார்.

துரைசாமி ஒரு புன்னகையோடு, ராஜாங்கம் பிள்ளையிடம் சொல்லி விட்டாயா? சரிதான்! ஆனால் அந்தப் பெண்— அடகடவுளே! எந்தப் பெண்ணையும் நம்பவே நம்பாதே! போலீஸ்காரரின் நடைமுறை விதிகளில், அதுதான் முதலாவது விதியாக இருக்க வேண்டும். பெண்களிடம் ஒரு ரகசியத்தைச் சொல்லிவிட்டால் வீட்டுக்கு வரும் ஒவ்வொருவரிடமும்,

சுவாரசியமாக அதைப்பற்றியே பேசிக் கதையளப்பார்கள். எனக்குப் பெண்களை நன்றாகத் தெரியும்!" என்றார்.

நீங்கள் யாரிடமும் சொன்னீர்களா?" என்று கேட்டார் பிரபாகர்.

யாரிடமும் சொல்லவில்லை! போலீஸ் கமிஷனர் இடமும், என் மனைவிடமும்தான் சொன்னேன்— என் மனைவியின் விஷயம் வேறு! அதோடு என் மனையாளுக்குப் பல்வலி! வாயைத் திறக்கவே அஞ்சுகிறாள்! பல்வலி உள்ள பெண்கள் ரகசியத்தை வெளியே கூறிவிட மாட்டார்கள்! இதையும் குறித்து வைத்துக்கொள்!" என்று பரிகாசமாகக் கூறினார் துரைசாமி.

அதைச் சொல்லி முடித்ததும் அவர், இப்பொழுது நீ சொல்ல வந்நதைச் சொல்" என்று கண்ணை மூடிக்கொண்டவராய் உட்கார்ந்திருந்தார். பிரபாகர் அன்று நடந்த நிகழ்ச்சிகள் பூராவற்றையும் விவரமாகக் கூறினார்.

ஹும்! விசித்திரமான சமாதிகளின் கிடங்கு! ஏழு விசித்திரச் சாவிகள்! ஏழு விசித்திரப் பூட்டுகள்! இரண்டு விசித்திரச் சாவிகள் மட்டிலும் உன்னிடமிருக்கின்றன! பாக்கி ஐந்து விசித்திரச் சாவிகளும் யாரிடமோ இருக்கின்றன! அந்த ஐந்து சாவிகளையும் எப்படியாவது கொண்டுவா—அல்லது அதைவிட ஒரு நல்லயோசனை சொல்லுகிறேன்; அந்தக் கதவை டைனமைட் வெடிவைத்து தகர்த்துவிடலாம்!" என்று சுலபமாக முற்றுப்புள்ளி வைத்தார் துரைசாமி.

அம்மாதிரி வெடிவைத்துத் தகர்க்க நமக்குப் போதிய முகாந்திரமோ அதிகாரமோ இல்லை! அதோடு அந்த மர்மக் கதவிலுள்ள ஒரு துவாரத்தில் என் கைவரிசையைக் காட்டித் திறக்கமுடியுமா என்று பார்த்தேன். உலகத்திலேயே மிகச் சிறந்த ஆள்கூட, அந்தப் பூட்டைக் கள்ளச் சாவியால் திறக்க முடியாது! கொலையுண்ட வேதநாயகம் அந்த விஷயத்தில் தோற்றுவிட்டான்!" என்றார் பிரபாகர்.

வேதநாயகம்! அட கடவுளே! அவனை மறந்து விட்டேனே! அந்த விசித்திரச் சாவியைக் கொடு பார்க்கலாம்!" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார். பிரபாகர் அந்தச் சாவியைக் கொடுத்தார். வெகுநேரம்வரை இன்ஸ்பெக்டர் துரைசாமி ஒன்றும் பேசவில்லை. பிறகு அவர், அந்த விஷவாயுக் குழாய்

ரொம்ப நேரமாக அங்கே இருந்திருக்கவேண்டும். நீ இன்று மாலை தனியாக அங்கே சமாதிகளின் மர்மத்தைப் பரிசோதிக்க வருவாய் என்று எதிர்பார்த்திருக்கிறார்கள். ஆனால் வக்கீல் ராஜாங்கம் பிள்ளையும் அங்கு வந்தது. அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்க வேண்டும்—எனக்கு என்னவோ அப்படித் தோன்றுகிறது; ஏன் அப்படித் தோன்றுகிறது என்று தெரியவில்லை!" என்று கூறிவிட்டு துரைசாமி தம் ஆசனத்தை விட்டு எழுந்தார்.

சரி பிரபாகர்! இன்றிரவு டாக்டர் ரஞ்சித் சிங் வீட்டில் மறுபடி நாம் சந்திக்கலாம். ஆனால் உன் துப்பாக்கியை எடுத்து வராதே. நாங்கள் போடும் போலீஸ் சோதனையில் கலந்துகொள்ள உனக்கு அதிகாரம் இல்லை. வீணாக யாரையாவது சுட்டுத்தள்ளித் தொந்தரவில் மாட்டிக் கொள்ளாதே!" என்று எச்சரித்தார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

## *16 விஞ்ஞானி வீட்டிலே வேதாள உருவங்கள்!*

இரவு ஒன்பதரை மணிக்கே பிரபாகரின் மோட்டார் கார் ரகசியமாக டாக்டர் ரஞ்சித் சிங்கின் ‘பரலோக பவனத்’தின் அருகில், சில பர்லாங் தூரத்திற்கப்பால் கும்மிருட்டில் நிறுத்தப்பட்டிருந்தது. தம் காரிலிருந்த விளக்கையெல்லாம் அணைத்து விட்டுப் போலீஸாரின் கார் செல்லட்டுமென்று காத்திருந்தார், பிரபாகர்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் போலீஸ் லாரி விரைந்து சென்றது. அதைப் பின் தொடர்ந்தே பிரபாகரும் சென்றார்.

‘பரலோக பவன’த்தை நெருங்கும் பொழுது, அது கரும்கும் என்று இருண்டு கிடந்தது. முன்பு பிரபாகர் வந்தபொழுது எப்படிக் காட்சியளித்ததோ,

அதேபோல் பயங்கரமாகவும் சூன்யமாகவும் காட்சி அளித்தது அந்த விசித்திர வீடு!

பிரபாகர் காரை விட்டிறங்கி அந்தக் கட்டிடத்தை நோக்கிச் செல்லும்பொழுது, இன்ஸ்பெக்டர் துரைசாமி அந்த வீட்டின் கதவைத் தட்டிக்கொண்டிருந்தார். பல போலீஸார் அவ்வீட்டைச் சோதனை போடும்பொழுது என்னனென்ன விசித்திரங்கள் அகப்படுமோ...?

துரைசாமி கதவைத்தட்டியதற்கு, உடனடியாகப் பதில் கிடைத்தது. டாக்டர் ரஞ்சித் சிங் கதவை விரியத் திறந்து விட்டார். அவரது விசித்திரமான குரூரத்தோற்றமும், அவர் அணிந்திருந்த அழுக்கேறிய ஆடையும் பார்க்கக் 'கண்றாவி'யாக இருந்தன. இன்ஸ்பெக்டர் துரைசாமி தாம் எதற்காக வந்திருக்கிறோம் என்பதை விளக்கினார்.

டாக்டர் ரஞ்சித் சிங் கொஞ்சங்கூடக் கலவரப்படாமல், ஓ, உங்களை எனக்கு நன்றாகத் தெரியுமே! நீங்கள் இன்ஸ்பெக்டர் துரைசாமி. உங்கள் பின்னால் நிற்கும் கனவான்தான், நடுவழியில் பெட்ரோல் இல்லாமல் திண்டாடியவர்! என்ன பரிதாபம்! வாருங்கள் நண்பர்களே! எனது விஞ்ஞானக் கலைக்கூடத்திற்கு வாருங்கள்!" என்று வரவேற்றபடி வழிவிட்டு ஒதுங்கி நின்றார்.

எனது கொலுக்கூட அறையைப் பார்க்க விரும்புகிறீர்களா?" என்று ரஞ்சித் சிங் கேட்டபடி, பிரபாகரை அன்றிரவு சந்தித்துப் பேசிய அந்த அறைக் கதவைத் திறந்துவிட்டார்.

நீங்கள் வேலை செய்யும் அறையை நான் பார்க்கவேண்டும்!" என்று இன்ஸ்பெக்டர் கூறியதும் ரஞ்சித் சிங் அவரைப் பின் கட்டுக்கு வரும்படி அழைத்தார்.

இல்லை; பின்கட்டில் இருக்குமிடத்தை நான் குறிப்பிடவில்லை— மாடியிலிருக்குமிடத்தைத்தான் குறிப்பிடுகிறேன்!"என்றார் துரைசாமி.

ரஞ்சித் சிங் தம் தோள்களைக் குலுக்கிவிட்டு, ஒரு வினாடி தயங்கினார். மீண்டும் ஒரு முறை தோள்களைக் குலுக்கிவிட்டு, மாடிப் படிக்கட்டில் ஏறி,

ஒரு சிறு ஹாலை அடைந்தார். அந்த ஹாலில் மூன்று கதவுகளிருந்தன. பிரபாகரும் துரைசாமியும் இடது கைப்பக்கமிருந்த அறைக்குள் நுழைந்தார்கள். அந்த அறையில் ஓட்டை, உடைசலான சில சாமான்கள்தான் கிடந்தன. அதற்கு அடுத்த அறை, டாக்டர் ரஞ்சித் சிங்கின் படுக்கை அறை! அதில் நிறையச் சாமான்கள் போட்டு அடைத்து வைத்திருந்தார்! அந்த அறையின் ஒரு கோடியிலே ஒரு பெரிய இரும்பு அலமாரி இருந்தது. அதை சிங் அலட்சியமாகத் திறந்து விட்டுக் கொண்டே, இதற்குள் சோதனைபோட விரும்புகிறீர்களா?" என்று நையாண்டியாகக் கேட்டார்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி ஒருவிதப் பதிலும் சொல்லவில்லை. படுக்கைக்கு அடியில் காணப்பட்ட ஒரு சிறு அலமாரியை மாத்திரம் திறக்கும்படி கூறினார். அதன் பிறகு எல்லோரும் மூன்றாவது அறையை நோக்கிச் சென்றார்கள். மூன்றாவது அறை ஒரு படுக்கை அறைதான். அதில் இரண்டு படுக்கைகளிருந்தன. ஒரு மூலையில் பழைய கம்பளங்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

மாடிப்படியை விட்டு இறங்கி வரும்பொழுது, டாக்டர் ரஞ்சித் சிங், இன்று ஏமாற்றம் அடைந்து விட்டீர், இன்ஸ்பெக்டர் துரைசாமி! நீர் எதிர்பார்த்து வந்தது, இங்கு ஏதாவது முரட்டுக் குழந்தைகள் இருக்குமென்றுதானே? நீர் வரும்பொழுது, 'அடடா! இந்த விஞ்ஞானி ரஞ்சித் சிங் விசித்திரமான பழைய வேலைகளை அல்லவா செய்து கொண்டு வருகிறான்; அமானுஷ்யமான விசித்திர ஜந்துக்களையல்லவா சிருஷ்டித்துத்தள்ளுகிறான்; அவனைத் தீர்த்துக்கட்டி விடவேண்டும்' என்று கூறிக்கொண்டு வந்திருப்பீர்!" என்று கிண்டலாகக் கூறினார்.

இன்று நீ ரொம்ப பேசுகிறாய், ரஞ்சித் சிங்!" என்று உறுமினார் துரைசாமி.

ஏன் பேசக்கூடாது? என் வீட்டிற்கு விருந்தினர்களே வருவதில்லை! வாரக்கணக்கில் பேசுவதற்கு ஆள் இல்லாமலும், எந்தவித மனிதக் குரலையும் கேட்காமலும் நான் அவஸ்தைப்பட்டு வருகிறேன்! எனக்கு ஒரு மாறுதலை அளித்த உங்களுக்கெல்லாம் நன்றி!" என்று கூறிக்கொண்டே வந்த டாக்டர் ரஞ்சித் சிங், பின்கட்டிலிருந்த ஒரு நீளமான அறையைத் திறந்துவிட்டு,

இதுதான் என் விஞ்ஞான ஆராய்ச்சி நிலையம்!" என்று கூறினார். அந்த அறைக்கு இரண்டு ஜன்னல்கள் தானிருந்தன. அந்த ஜன்னல்கள் இரண்டும் மேல் விதானத்திலிருந்தன. அங்கு நீளமான ஒரு மேஜை போடப்பட்டிருந்தது. அந்த மேஜையின் மீது ஏராளமான விஞ்ஞான ஆராய்ச்சிப் புத்தகங்களும், காகிதங்களும் கிடந்தன. அறையிலிருந்த இரண்டு பெரிய அலமாரிகளில், பலவிதத் திராவகங்களும், ரசாயனக் கலவைகளும், மருந்துகளும், அடங்கிய ஜாடிகளும், பாட்டில்களும், காட்சி அளித்தன. ஒரு பெஞ்சின் மீது, தராசு, பூதக்கண்ணாடி மற்றும் பல்வேறு சாமான்களும் இருந்தன. அந்தப் பெஞ்சின் ஒரு கோடியில் வைக்கப்பட்டிருந்த ஒரு பெட்டி நிறைய ஆபரேஷன் செய்வதற்காக பற்பல கருவிகளிருந்தன. மூலையில் கிடந்த ஆபரேஷன் மேஜையில், விஞ்ஞானப் பரிசோதனைக்கு ஆளாகிச் செத்துப்போன ஒருஎலி, நான்கு கால்களும் பரப்பி வைக்கப்பட்டு, ஆணி அடிக்கப்பட்டிருந்தது.

இதுதான் இந்த ஏழை விஞ்ஞானியின் பொழுது போக்கு! இங்கே விஞ்ஞானப் பரிசோதனைக்காக ஆபரேஷன் மேஜையில் கிடத்தப் பட்டு இருப்பது ஒரு செத்த எலிதான்! நான் உயிர்ப் பிராணிகளை ஆராய்ச்சிக்கு உபயோகப்படுத்துவதில்லை. இந்த இடத்தில் எவ்வளவு இன்பமிருக்கிறதென்று உங்களுக்குத் தெரியாது. ரசாயனப் பொருளோடு ஒரு வாரம் சேர்ந்தாற்போல் காலம் கடத்த உங்களால் முடியாது!" என்றார் டாக்டர் ரஞ்சித் சிங்.

இந்த வீட்டில் வேறு யார் யார் இருக்கிறார்கள், ரஞ்சித் சிங்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

நான் தனியாகத்தான் வசிக்கிறேன்! நீங்களே பார்த்தீர்கள். யாரும் இங்கே வருவதில்லை" என்றார் ரஞ்சித் சிங்.

அன்றிரவு இதே வீட்டில் யாரோ விசித்திரமாக வீறிட்டு அலறியதைக் கேட்டதாக பிரபாகர் சொல்லுகிறாரே?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

அது அவரது மனக் கற்பனை!" என்று சிரித்தார் சிங்.

அவரை விசித்திரமான ஒரு அரை நிர்வாண உருவம் தாக்கியதாமே, அதுவும் கற்பனையா? ஆமாம்! ஆனால் அது பிரமாதமான கற்பனை!"

யாரோ மேலே படுக்க வருகிறார்கள்; நாலு பேருக்கு படுக்கை இருக்கிறதே!" என்று சந்தேகத்தோடு கேட்டார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

என்னைத் தேடி நண்பர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு எப்பொழுதும் உண்டு. ஆனால், அந்தோ! அவர்கள் வருவதில்லை. நான் தனியாகத்தான் இந்த வீட்டில் வசித்து வருகிறேன்! இங்கு ஒரு வாரம் தங்கி இருங்கள்—ஒரு மாதம் வேண்டுமானாலும் தங்கி இருங்கள்—உங்களுக்கே தெரியும் ! அல்லது உங்கள் அதிகாரிகளில் யாரையாவது என்னைக் கண்காணிக்க நியமியுங்கள். இந்த வீட்டில் நான் தனியாகத்தான் இருக்கிறேன் என்று நீங்களே வெகு எளிதாகப் புரிந்துகொள்வீர்கள்!" என்று கூறினார் டாக்டர் ரஞ்சித் சிங்.

ரொம்ப சரி!" என்று கூறிவிட்டு இன்ஸ்பெக்டர் துரைசாமி அங்கிருந்து புறப்பட்டார்.

டாக்டர் ரஞ்சித் சிங் வாயிற்படியினின்று போலீஸ்காரர்கள் மறையும் வரை பார்த்துக் கொண்டே இருந்தார். அதன் பிறகு முன் கதவைத் தாளிட்டுவிட்டு, மாடிப்படியை நோக்கி ரஞ்சித் சிங் உல்லாசமாக நடந்தார். மாடி அறையிலே தமது மேஜை டிராயரைத் திறந்து அதற்குள்ளிருந்து ஒரு நீண்ட சாட்டையை வெளியில் எடுத்தார். அந்தச் சாட்டையை வேகமாக ஒருமுறை சொடுக்கினார். அதன் பிறகு அறையின் மூலைப்பக்கம் வைத்திருந்த அலமாரியை மெதுவாகத் திறந்து அதற்குள்ளிருந்த ஒரு பித்தானை அழுத்தினார். அலமாரியின் பின்பக்கமுள்ள மர்மமான ஒரு சிறு அறைக் கதவு ‘கிரீச்’சென்று திறந்தது.

அந்த மர்ம அறைக்குள் இருள் அடைந்து கிடந்தது.

அங்குள்ள இருட்டை நோக்கி ரஞ்சித் சிங் கண்டிப்பான குரலில் உம்! உன் படுக்கைக்குப் போ; நேரமாகிவிட்டது!" என்றார்.

அவர் பஞ்சாபி மொழியில் பேசினார். இருட்டுக்குள் முடங்கிக் கொண்டிருந்த ஒரு விசித்திர உருவம் மெதுவாகக் கிளம்பி வெளியே வந்தது. அந்தப் பூதாகாரமான உருவம் வேதாளத்தைப்போல் பயங்கரமானதாகவும் டாக்டர் ரஞ்சித் சிங்கைவிட ஒரு மடங்கு அதிக உயரமாகவும் காணப்பட்டது.

அரை நிர்வாணமான அந்த வேதாள உருவம், தன் இடுப்பில் மாத்திரம் ஒரு கந்தல் கால் சட்டை அணிந்திருந்தது. மற்றபடி அதன் உடலில் துணியே கிடையாது. மனித மிருகம்போல் தோன்றிய அந்த உருவம் அநாகரிகக் காலத்து ஆதி மனிதனைப் போலவே காணப்பட்டது.

உன் அறைக்குப் போ! உனக்குப் பாலும் சாதமும் கொண்டு வருகிறேன்!" என்று டாக்டர் ரஞ்சித் சிங் அந்த உருவத்தை நோக்கிக் கூறி விட்டுச் சிறிது தூரத்தில் நின்றபடியே தன் கையில் இருந்த சாட்டையைச் சொடுக்கினார்.

அந்த ராக்ஷஸ உருவம் பயபக்தியோடு தன் அறைக்குள் நுழைந்தது. அது நுழைந்த மர்ம அறையின் கதவை ரஞ்சித் சிங் வெளிப்புறம் இழுத்துத் தாளிட்டுப் பூட்டினார். பிறகு கீழே இறங்கிச் சென்று, வீட்டின் பின் பகுதியை அடைந்தார். அவர் கையில் இன்னும் அந்தச் சாட்டை இருந்தது.

பின் கட்டை விட்டு தோட்டத்திற்குள் நுழைந்து ரஞ்சித் சிங் ஏதோ ஒரு பாட்டை முனகியபடி, மரங்களின் கீழே நடந்தார். ஒரு மாமரத்தினடியே வந்ததும், லேசாக ஒரு ‘விசில்’அடித்தார். இருண்டுள்ள மரத்தின் உச்சாணிக் கிளையிலிருந்து பூதாகாரமான வௌவாலைப் போல் ‘தொபீ’ரென்று ஏதோ ஒன்று கீழே குதித்தது. குதித்த அந்தப் பூதாகாரமான மனித உருவம் அவர் காலடியிலேயே வணங்கிக் கிடந்தது.

அறை—பால்—தூக்கம்" என்று அந்த உருவத்திடம் கூறிவிட்டு ரஞ்சித் சிங் சாட்டையைச் சொடுக்கினார். அந்தப் பிரமாண்டமான உருவம் வெகு வேகமாக வீட்டுக்குள் நுழைந்து மாடியை நோக்கிச் சென்றது. ரஞ்சித் சிங் சாவகாசமாக அதைப் பின் தொடர்ந்தார்.

கொஞ்ச நேரங் கழித்து ஒரு கையில் இரண்டு வாளிகள் நிறையப் பாலும், மற்றொரு கையில் இரண்டு பிளேட்டுகள் நிறைய மாமிசமும் வைத்து எடுத்துக்கொண்டு மாடிப் பாடிகளில் ஏறி மேலே சென்றார் ரஞ்சித் சிங்.

கொஞ்ச நேரத்தில் அவ்விரண்டு விசித்திர உருவங்களையும் சாப்பிட வைத்து, அவற்றைத் தனித்தனியாக மர்ம அறைகளில் போட்டுப் பூட்டிவிட்டு,

டாக்டர் ரஞ்சித் சிங் கீழ்த்தளத்திலுள்ள தனது விஞ்ஞான ஆராய்ச்சி சாலைக்குப் புறப்பட்டார். அந்தச் சமயத்தில் அவர் மனதில் போலீஸாரைப் பற்றிய எண்ணமோ, தமது விசித்திர அடிமைகளைப் பற்றிய எண்ணமோ எழவில்லை. அவர் கவனம் பூராவும், தாம் புதிதாக கண்டு பிடித்திருக்கும் ஓர் ஆராய்ச்சியின் மீதே லயித்திருந்தது!

## *17 அடுத்த வாரிசுக்காரிக்கு அவசர அழைப்பு!*

மூன்றாவது தடவையாக அன்று வந்த தபால்களைப் படித்துக் கொண்டிருந்தார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை. அந்த சமயத்தில் துப்பறியும் பிரபாகர் அங்கு வந்து சேர்ந்தார்.

உன்னை இவ்வளவு அதிகாலையில் அழைத்ததற்கு மன்னித்துக்கொள், பிரபாகர்! உன்னைப் பொறுத்தவரையில் இந்த விவகாரம், நீ கப்பல் பிரயாணத்தை முடித்துக்கொண்டு வந்த உடனேயே தீர்ந்துவிட்டது. இன்று காலை எனக்கு ஒரு கடிதம் வந்நது; அதைப் படித்துப் பார்!" என்று கூறிவிட்டு, வக்கீல் ராஜாங்கம் பிள்ளை ஒரு கடிதத்தைப் பிரபாகரிடம் நீட்டினார். அந்தக் கடிதம் தென் ஆப்பிரிக்காவிலுள்ள நைரோபி நகரத்தின் ஹோட்டல் ஒன்றினுடைய லெட்டர் பேப்பரில் எழுதப்பட்டிருந்தது. அதில் எழுதியிருந்த விபரம் இதுதான்: அன்புள்ள ராஜாங்கம் பிள்ளைக்கு,

டாக்டர் ஆண்டியப்பனைப்பற்றி நீங்கள் அனுப்பிய தந்தி கிடைத்தது. அவரை எனக்கு நன்றாகத் தெரியும். என்னோடு கடிதத் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார். அப்படி இருக்க, டாக்டர் ஆண்டியப்பன் கூறியதன் காரணத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருக்கால் தமது தொழில் சம்பந்தமான விஷயங்களைப் பிறரிடம் கூறக்கூடாது என்று கருதி, அவர் மறைத்திருக்கலாம். கொஞ்ச காலத்திற்கு முன், என்னிடம் எழுபத்தையாயிரம் ரூபாய் கடன் கேட்டு டாக்டர் ஆண்டியப்பன் கடிதம் எழுதியிருந்தார். அறிமுகமில்லாத ஒரு புது நபருக்கு இவ்வளவு பெரிய தொகையைக் கடன் கொடுப்பதற்கு நான் தயாராக இல்லை. தமது நிலைமை ரொம்ப மோசமாகிவிட்டதாகவும், சென்னையை விட்டே புறப்பட்டு எங்காவது

சென்றுவிட விரும்புவதாகவும், யாரோ ஒருவன் தன்னைக் கொலை செய்வதாகப் பயமுறுத்திக் கொண்டிருப்பதாகவும் டாக்டர் ஆண்டியப்பன் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கதை முழுவதையும், இப்பொழுது மறந்துவிட்டேன். அந்தச் சமயத்தில் ஆண்டியப்பன் கூறியது உண்மையாக இருக்கும் என்றே எனக்குத் தோன்றியது!

அது நிற்க; எனக்கு இப்பொழுது ஐம்பதாயிரம் ரூபாய் வேண்டும். அதை உடனே பிரான்ஸ் தேசத்திலுள்ள பாரிஸ் நகருக்கு அனுப்பி வைக்கவும், வழக்கமாக நான் தங்கும் ஓட்டலில்தான் இந்தத் தடவையும் போய் இறங்கப்போகிறேன்.

—தம்பிக்கண்ணு"

அவன் கேட்கும் தொகையை, நீங்கள் எப்பொழுதும் குறைக்காமல், அப்படியே அனுப்பிவிடுவீர்களா!" என்று கேட்டார் பிரபாகர்.

கண்டிப்பாக!" என்றார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

அப்படியானால் இந்தப் பெரும் தொகையையும் அனுப்பப் போகிறீர்களா?"

வக்கீல் ராஜாங்கம் பிள்ளை, தம் உதட்டைக் கடித்தபடி எனக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த விஷயத்தில் நான் ரொம்பவும் கலங்கிப்போயிருக்கிறேன். என்னுடைய பிரதம குமாஸ்தா எனக்கு ஒரு யோசனை கூறினான். பவானந்தத்திற்குத் தந்தி அடித்து, உடனே வேறு ஏஜெண்ட் நியமித்துக் கொள்ளும்படி தெரிவித்துவிடச் சொல்லியிருக்கிறான். இதில் இருக்கும் பொறுப்போ மிகப் பெரியது. நேற்றைய அனுபவமோ மகாபயங்கரம்! இந்த விஷயத்தை அடியோடு கைகழுவி விடத் தீர்மானித்துவிட்டேன். அதனால் எனக்குப் பெரிய நஷ்டம்தான். இந்த எஸ்டேட்டை நிர்வகிப்பதன் மூலம் எனக்கு மாதம் ஆயிரத்து இருநூறு ரூபாய் கிடைக்கிறது!" என்றார்.

அதைக் கேட்டதும் பிரபாகர் அயர்ந்துவிட்டார்.

இந்தப் பவானந்தம் எஸ்டேட்டிற்கு ஏராளமாகச் சொத்திருக்கும் போல் இருக்கிறது!" என்றார் பிரபாகர்.

ஆமாம்; அது துரதிருஷ்டவசமாக நாளுக்கு நாள் மதிப்பு உயர்ந்துகொண்டே செல்கிறது. வெகு சீக்கிரத்தில் நிர்வாகம் செய்ய முடியாமல் போய்விடும்!" என்றார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

பவானந்தத்தின் தந்தையான காலஞ் சென்ற ராமானந்தம், தம் எஸ்டேட்டிற்குப் பெரிய பொக்கிஷம்போல் எதையாவது வைத்துப் போய் இருக்கிறாரா?" என்று கேட்டார் பிரபாகர்.

இல்லை; பாங்கில் வைத்துப்போயிருக்கும் ரொக்கம்தான், பதினேழு லட்சம் ரூபாய்க்கு மேலிருக்கும். அதைத் தவிர வேறு ரொக்கம் எதுவும் கிடையாது. ஆனால் அவர் பல இடங்களில் ஏராளமாக நிலம் வாங்கிப் போட்டிருக்கிறார். அவையெல்லாம். இப்பொழுது, கண் மூடித்தனமாக விலை உயர்ந்திருக்கின்றன.—ஒருக்கால், இந்த ஏழு பூட்டு போடப்பட்டிருக்கும் சமாதி இடத்தை நினைத்துக்கொண்டு ஏதேனும் கேட்கிறாயா? நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன், அங்கு ஒன்றுமே கிடையாது. ஏனென்றால் நான் ஒவ்வொரு தஸ்தாவேஜையும் பார்த்திருக்கிறேன். அந்தச் சிறு சமாதி அறையைப்பற்றி, உனக்கு எவ்வளவு மர்மமாகத் தோன்றுகிறதோ, அவ்வளவு மர்மமாகவே எனக்கும் தோன்றுகிறது. பவானந்தத்தின் அனுமதி கிடைத்தால் 24 மணி நேரத்தில் அந்த ஏழு பூட்டுகளையும் தகர்த்தெறிந்து, சமாதிக் கதவைத் திறந்து, பார்த்துவிடலாம். ஆனால் நான் அவனிடம் அனுமதி கேட்கவேயில்லை. அந்த அவசியம் இருப்பதாகவும் எனக்குத் தெரியவில்லை!— பிரபாகர், உன்னைப்பற்றி நான் எவ்வளவோ கதைகள் கேள்விப்படுகிறேன். எப்படிப்பட்ட பூட்டாக இருந்தாலும், ஒரே வினாடியில் தகர்த்து விடுவாய் என்கிறார்கள்—" என்று கூறி நிறுத்தினார் ராஜாங்கம் பிள்ளை.

பெரும்பாலான பூட்டுகளை, நான் வெகு சுலபமாகத் திறந்து விடுவேன். ஆனால் இந்த ஏழு விசித்திரப் பூட்டுகளிடமும் என் கைவரிசை செல்லாது. அதோடு என் மனதிற்குள்ளேயே ஏதோ ஒன்று, அந்தப் பூட்டுகளிடம் என் கைவரிசை பலிக்காது என்று சொல்லுகிறது—அது போகட்டும்; இவ்வளவு பெரிய எஸ்டேட் சொத்திற்கு யாராவது உறவினர்கள் இருக்கிறார்களா?" என்று கேட்டார் பிரபாகர்.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளை தலை அசைத்தபடி, ஒருவர் இருக்கிறார்—மஹேஸ்வரிதான் அது. பவானந்தம் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டால், தொடர்ந்து முழுவதும் மஹேஸ்வரியைத்தான் சேரும்!" என்றார்.

ராஜாங்கம் பிள்ளை மேஜைமீதிருந்த அந்தக் கடிதத்தை எடுத்து, மீண்டும் ஒருமுறை படித்துப் பார்த்தார். உம்! பவானந்தம் கேட்ட பெரும் பணத்தை உன்னிடந்தான் கொடுத்துப் பாரிஸ் நகரம் அனுப்பவேண்டும் என்று முதலில் நினைத்தேன்!" என்று ஆர்ம்பித்தார் வக்கீல்.

பிரபாகர் பலமாகத் தலையசைத்து, வேண்டவே வேண்டாம்! ஒரு தடவை அயல் நாடுகளில் அந்தப் பவானந்தத்தைத் தேடி அலைந்ததை என் வாழ்க்கையிலேயே மறக்க முடியாது. அதுவே போதும்!—அது போகட்டும்; பெரும் தொகையாக இதற்கு முன் அனுப்பி இருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

பதினேழு லட்ச ரூபாயில் பெரும் பகுதி, அம்மாதிரி அனுப்பப் பட்டிருக்கிறது. வெளி நாடுகளில் எல்லாம் பவானந்தம் ஏராளமாகச் சொத்துகள் வாங்குகிறான். ஆனால் அவற்றிற்குரிய தஸ்தாவேஜுகள் என்னிடம் வருவதேயில்லை. இதைப்பற்றி. இரண்டொரு தடவைகள் அவனைக் கேட்டுப்பார்த்தேன். எல்லாம் பத்திரமாக இருக்கிறதென்று பதில் கூறிவிட்டான்!"

நான் போவதற்கு முன் இன்னொரு கேள்வி உங்களிடம் கேட்கவேண்டும். இக்கடிதங்கள் எல்லாம், மோசடிக் கடிதங்களாக இருக்கச் சாத்தியம் இருக்கிறதா?" என்று கேட்டார் பிரபாகர்.

சாத்தியமேயில்லை! பவானந்தத்தின் கை எழுத்துக்கள் எல்லாம் எனக்கு வெகு நன்றாகத் தெரியும்!" என்றார் வக்கீல்.

வெளி நாடுகளில் அந்தப் பவானந்தத்தைப்போல யாராவது வேஷம் போட்டுக்கொண்டு ஏமாற்ற முடியுமா?"

அதுவும் சாத்தியமில்லை! பவானந்தத்தின் முகம் ஒட்டிப் போயிருக்கும். அவனது காதுக்குக் கீழே ஒரு சிகப்பான தழும்பு இருக்கும்—நானும் எல்லா விதத்திலும் யோசித்துப் பார்த்தேன். பவானந்தத்தைப் போல யாரும் வேஷமிட்டு ஏமாற்றலாம்; அவனைப் பணையமாக வைத்துக்கொண்டு யாரும்

பணம் பறிக்கலாம். யாராவது துஷ்டர்களிடம் சிக்கிக்கொண்டு ஏமாந்துபோய், பணத்தை விரயம் செய்து வரலாம்;— இப்படியெல்லாம் பலவாறாக நானும் யோசித்தேன். அவனை இடையிடையே சந்திக்காமல் நானும் இருந்திருந்தேனானால், ரொம்பவும் கலவரம் அடைந்துபோயிருப்பேன்! ஆனால் வெளி நாடுகளில் பவானந்தம் உயிரொடுதான் இருக்கிறான், அவன் சுயேச்சையாகத்தான் செலவு செய்கிறான் என்று புரிந்த பிறகு, நான் என்ன செய்யமுடியும்? சொத்துக்கு வாரிசுக்காரன் இந்தப் பூலோகத்தைச் சுற்றவேண்டுமென்று விரும்பினால் அதை நிறுத்த எனக்கு அதிகாரம் ஏது?— அப்படியானால், பிரபாகர், நீ பாரிஸ் நகருக்குப் போக விரும்பவில்லையா?" என்று கேட்டார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

நிச்சயமாக இல்லை!" என்று தயங்காமல் பதிலளித்தார் பிரபாகர்.

மஹேஸ்வரியின் வாழ்க்கையில் இரண்டு பெரிய பிரச்சனைகள் அலைமோதி நின்றன. ஏற்கெனவே 'மலைமேல் விநாயகர் வாசகசாலை'யில் நிறைந்து கிடந்த—பிறருக்குப் புரியாத அந்தப் புத்தகங்களை உயிரை விட்டுக்கொண்டு ஆசையோடு மஹேஸ்வரி படிப்பாள்.

ஒரு விதத்தில் அந்தப் புத்தகசாலை அவளது அறிவைப் பெருக்கிக் கொள்ள உதவியது.

ஆனால் அந்தப் படிப்பு அவளது வாழ்க்கையில் குறுக்கிட்ட ஒரு முக்கிய பிரச்சனையைத் தீர்த்து வைக்கப் பயன்படாமலேயே போய்விட்டது. அதாவது தனக்குப் பிரபாகரிடம் ஏற்பட்டிருக்கும் உணர்ச்சி எத்தன்மையது என்பதைப் புரிந்துகொள்ள அந்தப் புத்தகங்கள் எதுவும் உதவி செய்யவில்லை! சில சமயங்களில் பிரபாகரை வெகுவாக விரும்புவதாக நினைத்தாள். இன்னும் சில சமயங்களில் அவரால் அளவு கடந்த மனோ வியாகூலம் ஏற்படுவதாக நினைத்தாள்!

சமாதி மேட்டுக்கு ஏன் போனோம் என்று கூட மஹேஸ்வரிக்குத் தோன்றியது. அங்கு ஏற்பட்ட ஏதோ ஒரு சிறு கலவரத்தில் பயந்து போய் பிரபாகரைக் கட்டிப் பிடித்துக்கொண்டு விட்டோமே என்று கூட மஹேஸ்வரி நினைத்தாள்.

‘மலைமேல் விநாயகர்’லைப்ரரிக்குப் பெண்கள் வருவது மிக அபூர்வம். அன்று ஒரு பெண்மணி அந்தப் புத்தகசாலைக்குள் நுழைந்ததைக்கண்டு, மஹேஸ்வரி பிரமித்துவிட்டாள். பார்வைக்குக் குள்ளமாகவும், சற்று பூதாகாரமான உடம்புடனும் காட்சியளித்த அந்த புதிய பெண்மணி, படாடோபமாக உடை உடுத்தியிருந்தாள். அவளைச் சுற்றிலும் கமகமவென்று அத்தர் வாசனை பரிமளித்தது. அவளது குரல் கொஞ்சம் மலிவானதாக இருந்ததால், அவள் பேச்சிற்கும், வேஷத்திற்கும் பொருத்தமில்லாமல் தோன்றியது.

நீதான் மஹேஸ்வரியா?" என்று உரிமையோடு கேட்டாள் அந்தப் பெண்மணி.

மஹேஸ்வரி நாற்காலியைவிட்டு, எழுந்து நான்தான் மஹேஸ்வரி! உங்களுக்கு எதுவும் புத்தகம் வேண்டுமா?" என்று கேட்டாள்.

நான் புத்தகங்களே படிப்பதில்லை!" என்று பயங்கரமாக பதிலளித்தார் அந்தப் பெண்மணி, புத்தகங்களை ஏராளமாகப் படிப்பதால், மனிதரின் புத்தி குட்டிச்சுவராகிவிடுகிறது! அவர் மட்டும் அவ்வளவு படிக்காமல் இருந்தால் இப்பொழுது இருப்பதை விட இன்னும் அதிகப் புத்திசாலியாக இருப்பார்!" என்றாள்.

மஹேஸ்வரிக்கு ஒன்றும் விளங்கவில்லை.

என் கணவரைத்தான் சொல்லுகிறேன்—டாக்டர் ஆண்டியப்பர்—நான் ஆண்டியப்பரின் மனைவி அம்மணியம்மாள்!" என்றாள் அந்தப் பெண்மணி.

கணவரின் பெயரைத் தன் வாயால் உச்சரிப்பது பாபம் என்று அவள் கருதியதாகத் தெரியவில்லை!

உட்காருங்கள்!" என்று உபசரித்தாள் மஹேஸ்வரி.

அம்மணியம்மாள் உட்கார்ந்தபடியே, என் கணவருக்கு, உன் தந்தையை நன்றாகத் தெரியும். பல வருஷங்களுக்கு முன்னால் இருவரும் ரொம்பவும் நெருங்கிய நண்பர்களாம். இன்று காலை என் கணவர் என்னிடம் வந்து, அம்மணி நீ வெளியே சென்றால், ‘மலைமேல் விநாயகர்’லைப்ரரிக்குப் போ" என்று சொல்லி விலாசத்தையும் எழுதிக் கொடுத்தார். அந்தக்

காகிதம்கூட இந்தப் பையில்தான் இருக்கிறது!" என்று கூறிவிட்டு தனது கையில் இருந்த மிகவும் விலையுயர்ந்த தோல் பைக்குள்ளிருந்து, ஒரு காகிதத்தை வெளியே எடுத்தாள். அதில் என்ன எழுதியிருந்ததென்று, அதை எழுதியவர்கூடப் புரிந்து கொள்ள முடியாது!

என் கணவர் சொன்னார்: 'நீ போய் மஹேஸ்வரியைச் சந்தித்து'அவள் நமது வீட்டிற்குத் தேனீர் விருந்து அருந்த வருகிறாளா என்று தெரிந்துகொள். அப்படி வந்தால், அவள் தந்தையைப்பற்றி அவளுக்கு இதுவரை தெரிந்தராத ஒரு ருசிகர விஷயத்தை நான் அவளுக்குக் கூற விரும்புகிறேன் என்று சொல்!"

அதைக் கேட்டதும், மஹேஸ்வரிக்கு ஒரே பிரமிப்பாக இருந்தது ஆனால் விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அக்கறையும் இருந்தது. இந்த விசித்திரமான பெண்மணி யார்? இவளது புருஷனான டாக்டர் ஆண்டியப்பனுக்குச் சமுதாயத்தில் எந்தவித அந்தஸ்து இருக்கிறது? பெயரைக் கேட்டால், 'டாக்டர்'என்று இருக்கிறதே......

மஹேஸ்வரியின் மனதைப் புரிந்து கொண்டவள் போல் அம்மணியம்மாள், என் புருஷர் மருத்துவ டாக்டர் அல்ல, பலர் அவரை அப்படித்தான் நினைக்கிறார்கள். ஆனால் இலக்கியத் துறையில், 'டாக்டர்'பட்டம் பெற்றவர். அந்தப் பட்டத்தை, அமெரிக்க நாட்டிலுள்ள ஒரு சர்வகலாசாலை அவருக்கு அளித்தது. டாக்டர் ஆண்டியப்பர் என்றால், இலக்கியப் பேராசிரியர் ஆண்டியப்பர் என்று அர்த்தம்! அது கிடக்கட்டும்; நான் சொன்னதில் ரொம்பவும் முக்கியமானது என்னவென்றால், உனக்கு, ஏராளமான எதிரிகள் இருக்கிறார்கள் மஹேஸ்வரி!" என்று கூறிக்கொண்டே வந்தவள் சட்டென்று தன் குரலைத் தாழ்த்தி, என் புருஷன் சொன்னார்: 'மஹேஸ்வரி'யைப்பார்த்து, நான் இம்மாதிரி தகவல் அனுப்பியதாக யாரிடமும் சொல்லாதே என்று சொல்லு. அதோடு நமது மோட்டார் காரையும் எடுத்துப் போ. முடியுமானால் அந்தக் காரிலேயே அவளை அழைத்து வா.ஒரு மணிநேரத்தில் அவள் திரும்பிச் சென்றுவிடலாம். யாருக்கும் அவள் வந்து போனது தெரியவேண்டாம்'என்று கூறினார்," என்றாள்.

எதற்காக, நான் அங்கு வந்து போனது யாருக்கும் தெரிய வேண்டாம் என்கிறீர்கள்?" என்று கேட்டாள் மஹேஸ்வரி, அவள் மனதிற்குள், இதற்குப் பின்னால் ஏதோ ஒரு பெரிய மர்ம விஷயம் அடங்கி இருக்கிறதென்று தோன்றியதே தவிர, அந்த நேரத்தில் அது என்ன விஷயமாக இருக்குமென்று யூகிக்க முடியவில்லை.

அம்மணியம்மாள் தொடர்ந்து, ஏனென்றால் உனக்கிருக்கும் எதிரிகளை நினைத்துதான் அவர் அப்படிச் சொல்லுகிறார், மஹேஸ்வரி! உன் எதிரிகள் உன்னை மாத்திரம் தொடர்ந்து அலையவில்லை; அந்த மலையாளத்தாரையும் கூட தொடர்ந்து அலைகிறார்கள்!" என்றாள்.

எந்த மலையாளத்தாரை? பிரபாகரையா?" என்று அவசரமாகக் கேட்டாள் மஹேஸ்வரி.

அம்மணி அம்மாள் பேசிய விதத்திலே, அவளுக்கும் ஓரளவு நம்பிக்கை பிறந்தது.

அந்த ஆள்தான்—போலீஸ்காரனான அவனை எதிரிகள் ஒரு தடவை வலையில் சிக்கவைக்க முயற்சித்தார்கள். அதைப்பற்றி அவன் உன்னிடம் சொல்லவில்லை போலிருக்கிறது. அடுத்த தடவை அவன் தலையைச் சீவி விடுவார்கள்!" என்றாள் அம்மணியம்மாள்.

மேஜைமீதிருந்த டெலிபோன் கருவியை ஒருமுறை பார்த்தாள் மஹேஸ்வரி.

என் தந்தைக்கும், இவற்றிற்கும் என்ன சம்மந்தம்?" என்று மஹேஸ்வரி கேட்டாள்.

அதை என் புருஷனே உன்னிடம் சொல்வார்" என்றாள் அம்மணியம்மாள்.

அந்த அம்மாளை மஹேஸ்வரி மிகவும் கூர்ந்து கவனித்தாள். நிச்சயமாக இந்தப் பெண்மணி, ஒரு சாதாரணமான நபர்தான். ஏராளமாக நகைகளை மாட்டிக்கொண்டு தனக்கு இருக்கும் சொத்தை விளம்பரப்படுத்திக் கொள்கிறாள். ஏனென்றால், ஒவ்வொரு தடவை அவள் திரும்பும்பொழுது

அவள் காதுகளிலிருந்த வைரக்கம்மல், 'டால்'அடித்தது. விரல்கள் நிறைய மோதிரங்களை மாட்டிக்கொண்டு அவைகளைக் கண்ணுக்கே தெரியாமல் மறைத்து வைத்திருந்தாள்.

உங்கள் வீடு இங்கிருந்து எவ்வளவு தூரம் இருக்கிறது?"என்று கேட்டாள் மஹேஸ்வரி.

கோடம்பாக்கத்தில் இருக்கிறது. இங்கிருந்து வெகு சமீபம் தான்!" என்றாள் அம்மணி அம்மாள். அதைச் சொல்லி விட்டுத் தன் கையில் கட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டாள்.

நான் வெளியே, எனது மோட்டார் காரில் காத்திருக்கிறேன்! நீல வர்ணக் கார். உனக்கு இந்த வாசகசாலையில் எதுவும் வேலை இருந்தால் முடித்து விட்டுச் சீக்கிரம் அங்கே வா!" என்று, தானே முடிவும் கட்டிக் கூறினாள் அம்மணியம்மாள்.

நீங்கள் காத்திருக்க வேண்டாம். நான் அரைமணி, நேரத்தில் உங்கள் வீட்டிற்கு வருகிறேன்!" என்றாள் மஹேஸ்வரி.

நான் காத்திருப்பதைப் பற்றிக் கவலைப்படாதே! வீதியை வேடிக்கை பார்த்துக்கொண்டு நான் காருக்குள்ளேயே உட்கார்ந்து இருப்பேன். எவ்வளவு விரைவில் வர முடியுமோ, அவ்வளவு விரைவில் வா. உனக்காக ஒரு பெரிய விஷயம் காத்திருக்கிறது! இன்றைய தினம் என் கணவரைச் சந்தித்தால், வாழ்நாள் முழுவதும் அவருக்கு நன்றி செலுத்திக்கொண்டே இருப்பாய்!" என்று உற்சாகமாகக் கூறினாள் அம்மணியம்மாள்.

அதைச் சொல்லிவிட்டு புத்தகசாலையை விட்டு அவள் வெளியே புறப்பட்டாள்.

மஹேஸ்வரி தனது தாயாரை அருகிலுள்ள டெலிபோன் மூலம் அழைத்துப் பார்த்தாள். தாயார் எங்கோ வெளியே சென்றிருப்பது தெரிந்தது. பிரபாகரைக் கூப்பிட்டுப் பார்த்தாள்; அவரும் அகப்பட இல்லை. நாலு மணிக்கு புத்தகசாலையை விட்டுப் புறப்பட்டு, அந்தக் கார் நிறுத்தப்பட்டிருந்த இடத்தை நோக்கிப் புறப்பட்டாள்.

மஹேஸ்வரி வருவதைக் கண்டதும், அந்தக் கார் டிரைவர் காரைத் திருப்பி அவளுக்கு முன்னால் கொண்டுவந்து நிறுத்தினான். அம்மணியம்மாள் கதவைத் திறந்துவிட்டாள். காருக்குள் ஏறி உட்கார்ந்த மஹேஸ்வரி, காரின் கண்ணாடி ஜன்னல்கள் எல்லாம் திறந்துவிட்டாள். ஏனென்றால், அம்மணியம்மாள் ஏராளமாகச் ‘செண்ட்’ முதலிய வாசனைத் திரவியங்களைப் போட்டுக் கொண்டிருந்தாள். அளவிற்கு மீறிய அந்த வாசனை மஹேஸ்வரியைத் திக்கு முக்காட வைத்தது.

உன் தாயாருக்கு டெலிபோன் செய்தாயா, அம்மா?" என்று ஓரக்கண்ணால் அவளைப் பார்த்தபடியே அம்மணியம்மாள் அவளைக் கேட்டாள்.

அருகிலுள்ள டெலிபோனில் கூப்பிட்டுப் பார்த்தேன்! அம்மா வீட்டில் இல்லை"

அப்படியானால்வேலைக்காரனிடம் தெரிவித்தாயா?

மஹேஸ்வரி லேசாகச் சிரித்தபடி, எங்களுக்கு வேலைக்காரர் வைத்துக் கொள்ளக்கூடிய அளவு வசதி இல்லை. நானும் என்னுடைய தாயாருமே வீட்டு வேலைகள் யாவற்றையும் செய்கிறோம்!" என்றாள்.

அம்மணியம்மாள் ஒரு பெருமூச்சு விட்டாள். பிறகு, வேறு யாரிடமாவது, எந்த இடத்திற்குப் போகிறாய் என்று தெரிவித்து விட்டு வந்தாயா? வெளியே செல்லும் சமயங்களில், நீ அவசியம் அதைச் செய்யவேண்டும். ஏதாவது விபத்து நேர்ந்தால் அதனால் அப்படிச் சொல்லி வைப்பதனால்—மிகவும் அனுகூலம் ஏற்படும்!" என்றாள்.

இல்லை நான் யாரிடமும் சொல்லவில்லை. என் நண்பரிடம் சொல்லலாம் என்று முயன்று பார்த்தேன், அவரும் இல்லை!" என்றாள் மஹேஸ்வரி.

அம்மணியம்மாளின் முகத்தில், ஒரு புன்னகை தோன்றி மறைந்தது! நீ எப்பொழுதும் அதி ஜாக்கிரதையாக இருக்க முடியாது—ம்... நீ நன்றாக சாய்ந்து உட்கார்ந்து கொள்; வசதியாக இருக்கும்!" என்று உபசரித்தாள்.

அம்மாதிரி சாய்ந்து உட்கார்ந்தால், காருக்குள் யார் இருக்கிறார்கள், என்பது வெளியே வீதியில் நடந்து செல்வோருக்குத் தெரியாது! ஆனால் அதை மஹேஸ்வரி உணரவில்லை! காருக்குள் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள்!

## *18. அம்மணியம்மாளுக்கு ஆத்திரம்! மஹேஸ்வரிக்கு மயக்கம்!*

கோடம்பாக்கத்தை நோக்கி கார் வெகு வேகமாகப் பறந்தது. அம்மணியம்மாள் மௌனமாகக் காரில் உட்கார்ந்திருந்தாள். மஹேஸ்வரியும் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்ததால், அதைப் பற்றி லட்சியம் செய்யவில்லை. கொஞ்ச நேரத்திற்கெல்லாம், சூளைமேட்டில் உள்ள டாக்டர் ஆண்டியப்பரின் பங்களா வாசலில், கார் போய் நின்றது. வாயிற்படியிலேயே டாக்டர் ஆண்டியப்பர் நின்று கொண்டிருந்தார். அந்தக் கிழவரை, மஹேஸ்வரி தன் வாழ்நாளிலேயே சந்தித்ததில்லை.

அக்கிழவருக்கோ, மஹேஸ்வரியை உற்றுப் பார்த்ததும் அளவிலாத பாசம் மடைதிறந்த வெள்ளம்போல் ஆவேசமாகப் பெருகிவிட்டது.

ஆம்! அப்படியானால் நீ தான் என் பழைய நண்பரின் மகளா!" என்று ஆண்டியப்பர் விளையாட்டாகக் கூறிக்கொண்டே, குழந்தாய்! என்னை உனக்கு நினைவிருக்காது— அது இயற்கைதான்!" என்றார். மஹேஸ்வரி புன்னகையுடன் மன்னிக்க வேண்டும், டாக்டர் சார்! தங்களை உண்மையிலேயே எனக்கு நினைவில்லை!" என்றாள்.

இருக்காது பெண்ணே, இருக்காது!" என்று ஒரு தகப்பனாரைப் போல் ஆதரவாகப் பேராசிரியர் ஆண்டியப்பர் பேச ஆரம்பித்தார். ஆனால் அவர் மனதில் எப்படிப்பட்ட ஆசையெண்ணம் ஏறபட்டிருக்கிறது என்பதைத் தனது நீண்ட அநுபவத்தால் அம்மணியம்மாள் புரிந்து கொண்டிருந்தாள். ஆகவே அவரை எரித்து விடுவது போல் ஒரு பார்வை பார்த்தாள்.

டாக்டர் ஆண்டியப்பர், அதைக் கவனித்தாரோ என்னவோ தெரியவில்லை. மஹேஸ்வரியின் தோளின் மீது கிழத் தகப்பனாரைப் போல சகஜ பாவத்துடன் ஆதரவாகக் கையைப் போட்டபடி அவளை அழைத்துக்

கொண்டு உள்பக்கம் சென்றார். அதை மஹேஸ்வரி விரும்பவில்லை. என்றாலும் வேறு வழியில்லாமல் மௌனமாகச் சென்றாள். கிழவரின் போக்கைக் காணும் போது என்னதென்று விவரிக்க முடியாத ஒரு பயமும் அவளுக்குத் தோன்றலாயிற்று!

அறைக்குள் சென்றதும், ஒரு கோழிக் குஞ்சை வைத்துக் கொண்டு கிழக் கோழி ஒன்று அமர்க்களமாகக் கொஞ்சுவதைப்போல் டாக்டர் ஆண்டியப்பர் ரொம்ப ரொம்ப பாசத்தோடு மஹேஸ்வரியிடம் பேச ஆரம்பித்தார்.

அம்மணி! உடனே தேநீர் தயார் பண்ணு—வெளியே சென்று வந்ததால், உனக்கு ரொம்பக் களைப்பாக இருக்கும் என்று நினைக்கிறேன்!" என்றார் ஆண்டியப்பர்.

களைத்துத்தான் போயிருக்கிறேன்!" என்று தீர்க்கமாகக் கூறிய அம்மணியம்மாள், ஆதங்கத்துடன் டாக்டர் ஆண்டியப்பரை நோக்கி, உங்களிடம் ஒரு வார்த்தை பேசவேண்டும், 'ஆவன்னா'!" என்றாள்—தனது கணவன்மீது ஆத்திரம் ஏற்படும்பொழுது, அம்மணியம்மாள் அரிச்சுவடி படிப்பதுபோல், தன் கணவன் பெயரின் முதலெழுத்தைச் சொல்லித்தான் கூப்பிடுவாள்!

இதோ வருகிறேன், அம்மணி!" என்று சொல்லிவிட்டு மஹேஸ்வரியை நோக்கித் திரும்பி, மஹேஸ்வரி! சௌகரியமாக உட்கார்ந்திருக்கிறாயா; நன்றாக சாய்ந்து உட்கார்!" என்று பிரமாதமாக உபசரித்தார் டாக்டர் ஆண்டியப்பர்.

பரவாயில்லை!" என்று கூறிய மஹேஸ்வரியோ, அம்மணியம்மாள் ஆத்திரத்தோடு அறைக் கதவை அடித்துச் சாத்திவிட்டுப் போவதைக் கவனித்தாள். அவள்பாடு நிரம்ப தர்மசங்கடமாயிருந்தது. தான் அழகாய்ப் பிறந்தது தப்போ என்று கூட அவளுக்குத் தோன்றியது. தன் தந்தையைப்பற்றிய விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற ஆவலும் அதிகமாயிருந்தது!

அம்மணியம்மாள் ஹாலுக்குள் நுழைந்தபொழுது, அங்கு டிரைவர் பிச்சைக்கண்ணு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு நின்று

கொண்டிருந்தான்.

அந்தப் பெண் யார், அத்தை?" என்று பிச்சைக்கண்ணு கேட்டான்.

அம்மணியம்மாள் ‘வெடுக்’என்று முகத்தை வெட்டியபடி, உன்னிடம் அந்தக் கிழவன் சொல்லிக் கொண்டிருந்த அதே பெண்தான்!" என்று கூறிவிட்டு, பிச்சைக்கண்ணு! நீ ரொம்பவும் விஷயங்களில் புகுந்து புறப்படுகிறாய். இதைப்பற்றி கிழவன்கூட என்னிடம் புகார் சொன்னார்!" என்று சீறினாள்.

அவளது புகாரைக் கவனிக்காமல் பிச்சைக்கண்ணு, அவளாகத்தான் இருக்குமென்று நினைத்தேன்— பார்ப்பதற்கும் அழகாகத்தான் இருக்கிறாள்! அம்மணி, அந்த அழகான பசுங்கிளியையும் கிழட்டுப் பூனையையும் நீ தனியாக விட்டுவிட்டு வந்திருக்கிறாயே என்றுதான் ஆச்சரியப்படுகிறேன்!" என்றான்.

நீ எதைப்பற்றி ஆச்சரியப்பட்டாலும் எனக்கு அக்கறை இல்லை. காரைக்கொண்டுபோய் ஷெட்டில் விட்டுவிட்டு வந்து என்னைப்பார்!" என்று சீறினாள் அம்மணியம்மாள்.

அதற்கு இன்னும் எவ்வளவோ நேரம் இருக்கிறது—அந்தக் கிழவன் இப்பொழுது என்ன செய்யப் போகிறான்?" என்று பரமஅலட்சியமாகக் கேட்டான் பிச்சைக்கண்ணு.

எனக்கு எப்படித் தெரியும்?" என்று எரிந்து விழுந்தாள் அம்மணியம்மாள்.

பிச்சைக்கண்ணு சளைக்கவில்லை: ம்! அந்த மஹேஸ்வரியிடம் விசித்திரச் சாவி இருக்கிறதா?" என்று விடாமல் கேட்டான்.

அவளிடம் சாவி ஒன்றும் கிடையாது; முட்டாள்!" என்று புயல்போல சீறியெழுந்த அம்மணியம்மாள், பிச்சைக்கண்ணு! மடத்தனமான கேள்விகளைக் கேட்டுக்கொண்டு இங்கே நிற்காதே! என் விஷயங்களில் அனாவசியமாகத் தலையிடாதே!—அதோடு உனக்கு சாவியைப்பற்றி என்ன தெரியும்?" என்று உறுமினாள்.

பிச்சைக்கண்ணு ஆழ்ந்த யோசனையோடு அவளை வெகுநேரம் பார்த்துக்கொண்டு நின்றான். பிறகு, நீங்கள் இருவரும் விசித்திரமான தம்பதிகள்—நீயும் கிழவனும்! ஆனால் அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை. அந்தப் பெண் மஹேஸ்வரி பார்வைக்கு ரொம்ப அழகாக இருக்கிறாள்—ம்... சமையல்கட்டிற்கு நானே போய்த்தான் தேநீர் தயாரித்துக்கொள்ளவேண்டு. அந்தக் கிழவன் சமையற்காரனுக்கும், வேலைக்காரிக்கும் லீவு கொடுத்து அனுப்பிவிட்டான். அவர்கள் எல்லோரும் ஒரே நாளில் எங்கோ தொலைந்துவிட்டார்கள்!" என்று கூறிவிட்டு கொஞ்சதூரம் முன்னால் நடந்த பிச்சைக்கண்ணு, பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவன் போல், சட்டென்று திரும்பி, எல்லோரையும் வீட்டைவிட்டு அனுப்பிவிட்டீர்கள்!— என்ன திட்டம் போட்டிருக்கிறீர்கள், அத்தை?" என்று கேட்டான்.

அந்த ‘அத்தை’எல்லாம் இங்கே வேண்டாம், பிச்சைக் கண்ணு! நான், உனது எஜமானி! ஜெயிலுக்குப் போய்விட்டு வந்தவனுக்கு, ‘அத்தை’முறை கேட்கிறதோ? இப்படி என்னைக் கூப்பிடக்கூடாதென்று பலதடவை உன்னை நாதன் எச்சரிக்கை செய்திருக்கிறேன்!" என்று சொல்லும் பொழுதே அம்மணியம்மாளின் உதடு ஆத்திரத்தால் பதறியது, அவளது சுபாவத்தை நன்றாக அறிந்திருந்த பிச்சைக்கண்ணு அதற்குமேல் அவள் ஆத்திரத்தை கிளப்பக்கூடாதென்று புரிந்து கொண்டான். சென்ற ஏழுவருஷ காலமாக (இடையில் சிறை சென்ற நாட்கள் தவிர) அவன் அம்மணியம்மாள் வீட்டிலே சில்லறை வேலைகள் செய்து கொண்டிருந்தான். இடையிடையே குஷாலாக, ஊர் பிரயாணம் சென்று வரும் வாய்ப்பும் அவனுக்குக் கிடைத்திருந்தது. அவனுக்குக் கிடைத்த சம்பளம் ரொம்ப அதிகமானது. டாக்டர் ஆண்டியப்பர் எதிர்பாராத சூழ் நிலையிலே திருமணம் புரிந்துகொண்ட விதவையான அம்மணியம்மாளின் ‘அந்தரங்க’விவகாரங்கள் பல, அவனுக்குத் தெரியும். தனக்குக் கிடைத்த அந்த சம்பளத்திற்காகவும், மற்ற வசதிகளுக்காகவும், வீட்டுக்குள் நடக்கும் பல விசித்திரச் சம்பவங்களை, கண்டும் காணாதவனாக ஒதுங்கிப்போய்க் கொண்டிருந்தான் பிச்சைக்கண்ணு.

உதட்டிலே வைத்திருந்த சிகரெட் கீழ் நோக்கித் தாங்க, கண்களைச் சிறிது சுளித்தபடியே, தன் ‘அத்தை’நின்று கொண்டிருந்த இடத்தை நோக்கி மெதுவாக நடந்தான் பிச்சைக்கண்ணு.

எத்தனை மணிக்கு, இந்த அழகான பெண் மஹேஸ்வரியைத் திரும்ப அழைத்துக் கொண்டு விடப்போகிறேன்?" என்று பிச்சைக் கண்ணு கேட்டான்.

அவள் இங்குதான் தங்கப் போகிறாள்! நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம்!" என்றாள் அம்மணியம்மாள்.

பிச்சைக்கண்ணு குனிந்து தரையைப் பார்த்தான். பிறகு அண்ணாந்து முகட்டு வளையைப் பார்த்தான். பிறகு சுற்றிலும் ஒரு முறை மெதுவாகக் கண்களைச் சுழற்றிப் பார்த்தான். அதன் பிறகு அந்தப் பெண் இங்கு தங்கப்போகிறாள் என்பது அவளுக்குத் தெரியுமா?" என்று கேட்டான். உன் வேலையைக் கவனி!"

இதுவும் என் வேலைதான். அவள் யார் என்றோ, அவள் எப்படிப்பட்டவள் என்றோ எனக்குத் தெரியாது. இங்கு ஏதாவது குரங்கு சேஷ்டைகள் நடந்தால் அதற்கு நான் பொறுப்பாளி அல்ல—அதில் எனக்குச் சம்பந்தமில்லை! ஒருமணி நேரத்தில் அவளை ஏற்றிச் செல்ல நான் காரைத் தயாராக வைத்திருப்பேன்!" என்று பிச்சைக் கண்ணு மிகத் தீர்க்கமான குரலில் கூறினான்.

அம்மணியம்மாள் எந்தவிதப் பதிலும் சொல்ல இல்லை. ஆத்திரமாக அந்த ஹாலைவிட்டு வெளியேறி, வேகமாக மாடிக்குச் சென்றாள். அவள் தலைமறையும் மட்டும் காத்திருந்ததில் பிச்சைக்கண்ணு, நேராக அடுக்களைக்குச் சென்று தேநீர் தயாரிப்பதில் ஈடுபட்டான்.அந்தச் சமயத்தில் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு விசித்திர நிகழ்ச்சி அவன் நினைவுக்கு வந்தது. அந்தக் காலத்தில் சாதாரண வீட்டு வேலைக்காரியாக இருந்த அவன் அத்தையான அம்மணியம்மாள் திடீரென்று பெரிய பணக்காரனின் மனைவியாக மாறிய விந்தை, அவன் மனதைவிட்டு எந்தக் காலத்திலும் மறையவில்லை.....

மஹேஸ்வரி இருந்த அறைக்குள், அம்மணி அம்மாள்தான் தேநீர் கொண்டுவந்தாள். அதை மேஜைமேல் வைத்துவிட்டு உடனே வெளியேறிவிட்டாள். மஹேஸ்வரிக்கு இதில் புதுமை எதுவும் தெரியவில்லை. ஏனென்றால், டாக்டர் ஆண்டியப்பர், தாம் சொல்லி விரும்பிய விஷயத்தைத் தனியாகச் சொல்ல விருப்பப்படுகிறார் போல் இருக்கிறது. என்றுதான் அவள்

நினைத்தாள். டாக்டர் ஆண்டியப்பரோடு பேசிக்கொண்டிருக்கும் பொழுது, மூன்று தடவைகள் பேச்சைத் தன் தந்தைப்பற்றிய விஷயத்திற்குத் திருப்ப முயற்சி செய்தாள். ஆனால் மூன்று தடவையும் பேராசிரியர் ஆண்டியப்பர் சாதுரியமாகச் சமாளித்து, வேறு எதை எதைப்பற்றியோ பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஆனால் இப்பொழுது தேநீர் அருந்துவதற்கு முன் மிகவும் உறுதியாக அதைப்பற்றி விசாரித்தாள் மஹேஸ்வரி.

டாக்டர் ஆண்டியப்பர் கனைத்துக்கொண்டு, அது ஒரு பெரிய கதை! அது முழுவதையும் இப்பொழுதே சொல்லிவிட முடியுமா என்று, எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. உன் தாயாரையும் டெலிபோனில் அழைத்து, அவளையும் இங்கு வரச்சொல்லி சாவகாசமாக உட்கார்ந்து பேசலாம் என்று நினைத்தேன், மஹேஸ்வரி!" என்றார்.

மஹேஸ்வரி வியப்போடு அவரைப் பார்த்தாள்— இன்று அம்மாதிரி செய்ய முடியாதென்று நினைக்கிறேன். ஏனென்றால் நானும் அம்மாவும், இன்று இரவு நாடகம் பார்க்கச் செல்கிறோம்!" என்று புளுகினாள்.

நான் டெலிபோன் செய்து, உன் அம்மாவை வர முடியுமா என்று கேட்கிறேனே?" என்று பவ்யமாகக் கேட்டார் டாக்டர் ஆண்டியப்பர்.

தனது தயாரார் இன்னும் ஒரு மணி நேரத்திற்கு வீடு திரும்பமாட்டாள் என்பதை அறிந்திருந்த மஹேஸ்வரி, அந்த ஏற்பாட்டுக்கு ஒப்புக்கொண்டாள். டாக்டர் ஆண்டியப்பர் உடனே டெலிபோன் செய்வதற்காக வெளியே சென்றார்.

அவர் திரும்பவும் அறைக்கு வந்தபொழுது, அவர் முகம் சந்தோஷத்தால் மலர்ந்திருந்தது.

நல்லதாகப் போயிற்று; நல்லதாகப் போயிற்று! மஹேஸ்வரி, நல்லதாகப் போயிற்று!" என்று ஆண்டியப்ர் குடுகுடுப் பாண்டியைப் போல் ஒரே வார்த்தையைப் பல தரம் திருப்பிச் சொல்லியபடி தம் ஆசனத்தில் போய் அமர்ந்தார்: உன் தாயார் இப்பொழுது அவசியம் புறப்பட்டு வருவதாகக் கூறினாள். அவளுக்குக் கார் அனுப்பப் போகிறேன். நாடக டிக்கட்டுகளை வாபஸ் செய்துவிடலாம் என்று அவளே கூறினாள்!" என்று உற்சாகத்தோடு சொன்னார்.

மஹேஸ்வரி அளவு கடந்த ஆச்சரியத்தோடு அவர் கூறிக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்தாள். திடீரென்று அவள் மனதில் கலவரம் புகுந்துகொண்டது. இந்த ஆள் பொய் சொல்லுகிறார்; தியேட்டருக்குப் போவதாக மஹேஸ்வரி கூறியது அப்பட்டமான பொய்! அதோடு ஆண்டியப்பர் பேசிவிட்டு வந்ததாகக் கூறும் நேரத்தில், தனது தாயார் வீட்டிலேயே இல்லை என்பதையும் அவள் அறிவாள், ஆபத்து! தன் கண்ணெதிரே, அபாய அறிவிப்பைத் தெரிவிக்கும் சிவப்பு விளக்கு எரிவதைப்போல் அவளுக்கு ஒரு பிரமை ஏற்பட்டது. அவளை எதிர் நோக்கி ஏதோ ஒரு பிரமாதமான ஆபத்து காத்திருக்கிறது!—அவள் நிதானமாக நடந்துகொள்ள வேண்டும்.

தனியாகவந்து அகப்பட்டுக்கொண்ட மஹேஸ்வரி நிலவரத்தைச் சாதுரியமாய் சமாளிக்க முயன்றவளாய்; ரொம்ப சந்தோஷம்!" என்று கூறிவிட்டு, பேச்சை வேறுவழியில் திருப்பினாள். உங்கள் வீடு ரொம்ப அழகாக இருக்கிறது, பேராசிரியர் சார்!" என்றாள்.

ஆமாம் பிரமாதமாக அமைத்துவிட்டது! வீடு பூராவும் பார்க்கிறாயா? இந்த வீட்டிற்கு ஒரு பழைய சரித்திரம் கூட இருக்கிறது—உனது சொந்தக்காரரான பவானந்தத்திற்கு உரிமையானதுதான் இந்த வீடும்! நான் பல வருஷங்களுக்கு முன், இந்த வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டேன்—"

அப்படியானால் உங்களுக்கு வக்கீல் ராஜாங்கம் பிள்ளையைத் தெரியுமா? என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் மஹேஸ்வரி.

டாக்டர் ஆண்டியப்பர் தமது முகவாய் கட்டையைத் தடவிய படியே, எனக்கு வக்கீல் ராஜாங்கம் பிள்ளையை அவ்வளவு நன்றாகத் தெரியாது, அவர் மூலமாகப் பல சொத்துக்களை வாங்கியிருக்கிறேன். ஒரு சமயத்தில், சிங்கப்பூர் அருகிலுள்ள ஒரு நிலத்தையும் வாங்கினேன்.. ஆனால் இந்த வீட்டை என் வசம் ஒப்புவித்தது வேறு ஒரு நபர்; என்னிடம் இந்த வீடு இருப்பது ராஜாங்கம் பிள்ளைக்குத் தெரியுமோ என்னவோ?—உனக்கு அவரை நன்றாகத் தெரியுமா?" என்று கேட்டார்.

சுமாராகத் தெரியும்" என்றாள் மஹேஸ்வரி. அவள் மூளை தீவிரமாக வேலை செய்துகொண்டிருந்தது. அவள் இப்பொழுது என்ன செய்வது?

தோட்டத்துக்குப் பக்கம் போவதற்கு அவளுக்குப் போதிய காரணம் எதுவும் கிடைத்தால் ரொம்பச் சௌகரியமாக இருக்கும். தோட்டத்திலிருந்து, அவள் வெளியேறி ரஸ்தாவை அடைந்தால் அங்கிருந்தபடியே நேராகப் பழைய மாம்பலம் பக்கம் தப்பித்து ஓடிவிடலாம்.

எங்கள் வீட்டிலுள்ள அறைகளையெல்லாம் பார்க்கிறாயா?" என்று கேட்டார் ஆண்டியப்பர்.

வேண்டாம், வேண்டாம்! உங்கள் தோட்டத்தைப் பார்க்க வேண்டுமென்றுதான் ஆசைப்பட்டேன்!" என்று கூறிவிட்டு மஹேஸ்வரி மெல்ல நாற்காலியைவிட்டு எழுந்தாள். அவள் முழங்கால்கள் நடுங்கின.

ஆமாம்; தோட்டம் அழகாகத்தான் இருக்கும். ஆனால் இப்பொழுது ரொம்ப சகதியாக இருக்கிறதே!" என்றார் பேராசிரியர் ஆண்டியப்பர்.

நான் சற்று வெளியே போனால்தான் தேவலை!" என்று வற்புறுத்தினாள் மஹேஸ்வரி.

ரொம்ப சரி. இரு; நான் இன்னொரு கோப்பை தேநீர் அருந்திவிட்டு வருகிறேன்!" என்று கூறிவிட்டு ஆண்டியப்பர் தமது கோப்பையில் கொஞ்சம் தேநீரை எடுத்து ஊற்றினார். அந்தச் சமயத்தில் திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவர் போல், அடடே; நீ இன்னும் உனக்குக் கொடுத்த தேநீரை அருந்தவில்லை போலிருக்கிறதே! ஆறிப்போய் இருக்குமே! வேறு தேநீர் தரட்டுமா?" என்று அக்கறையோடு கேட்டார்.

வேண்டாம் வேண்டாம்! இதுவே எனக்குப் போதும்!" என்றாள் மஹேஸ்வரி.

எவ்வளவு பெரிய முட்டாள் தனம் செய்துவிட்டாள் அவள். ஒரு முன்பின் தெரியாத பெண்மணியின் பின்னால்—அவள் மனதிற்குள் ஏதோ ஒன்று எதிர்த்த போதிலும் அதைக் கவனியாமல்—புறப்பட்டு, இனம் தெரியாத ஓர் இடத்திற்கு வந்துவிட்டாள்! அவள் எங்கு சென்றாள் என்பது கூட யாருக்கும் தெரியவராதே...?

தேநீர் கோப்பையை மஹேஸ்வரி தன் கையில் எடுத்து வறண்டிருந்த தன் தொண்டையை நனைத்துக் கொள்வதற்காக, ஆவலோடு ஓரளவு பருகினாள். அந்தத் தேநீர் அவ்வளவு ருசியாக இல்லை.

தயாரித்துப் பழக்கமில்லாத நபர், தயார் செய்த தேநீரைப் போல கசப்பாக இருந்தது. ருசியைக் கவனிக்காமல், தனக்கு இருந்த வறட்சியில்இ தேநீர் முழுவதையும் மஹேஸ்வரி குடித்துவிட்டாள்.

குடித்து முடிந்ததும், அவள் வாய்பூராவும் விசித்திரமாகக் கசந்தது. ஒருக்கால், தேயிலையை அதிகமாக வேகவைத்து விட்டார்களோ என்று நினைத்தாள் மஹேஸ்வரி.

அறையின் ஒரு மூலையிலே, டாக்டர் ஆண்டியப்பர் தமது அங்கவஸ்திரத்தை மாட்டி வைத்திருந்தார். அதை எடுத்து மேலே போட்டுக்கொண்டு, அவர் திரும்பிப் பார்த்த பொழுது, மஹேஸ்வரி தள்ளாடியபடி மேஜையின் முனையைப் பிடித்துக்கொண்டு முகம் வெளுத்துப்போய், கண்கள் பிரகாசிக்க நின்று கொண்டிருந்தாள்.

அவள் ஏதோ பேச முயன்றாள்; அவளால் பேச முடியவில்லை. ஆண்டியப்பர் வேகமாக அவள் நின்ற இடத்திற்கு வந்தார். மஹேஸ்வரி அப்படியே மயங்கி அவரது கரங்களில் சாய்ந்தாள்.

அவளை அப்படியே தாங்கியபடி, ஒரு சோபாவில் கொண்டு போய்ப்படுக்கவைத்த ஆண்டியப்பர், ஒரு சிறு திண்டை எடுத்து அவள் தலைக்கு வைத்தார். பிறகு அறையை விட்டு வெளியேறி அறைக்கதவை வெளியே இழுத்துத் தாளிட்டுப் பூட்டிவிட்டு மேலே நடந்தார்.

## *19. பேராசிரியரின் பித்தலாட்டமும், பயங்கரக் கையின் பச்சை ரத்தமும்!*

வழியிலே, பிச்சைக்கண்ணு அலட்சியமாக சிகரெட் குடித்தபடி நின்றுகொண்டிருந்தான்.

அவனது மமதையைக் கண்டு ஆத்திரமடைந்த டாக்டர் ஆண்டியப்பர், ஒருவாறு தம் ஆத்திரத்தைச் சமாளித்தபடி, அம்மணி, எங்கே?" என்று கேட்டார்.

மாடியிலிருக்கிறாள்!" என்றான் பிச்சைக்கண்ணு.

அவளிடம் போய் நான் அழைப்பதாகச் சொல்!"

நீயே போய் அதைச் சொல்லிக்கொள்!" என்று கொஞ்சம் கூட லட்சியம் செய்யாமல் பேசினான் பிச்சைக்கண்ணு.

டாக்டர் ஆண்டியப்பரின் முகம் ஆத்திரத்தால் சிவந்தது. பிச்சைக்கண்ணு மமதை பிடித்தவன் என்றாலும் அதுவரையில் அவ்வளவு திமிராக அவன் பேசியது கிடையாது. பொங்கி யெழுந்த கோபத்தை மிகச் சிரமப்படுத்தி அடக்கிக்கொண்டு பேராசிரியர் ஆண்டியப்பர் சற்று மிருதுவான குரலில், எனக்குக் கொஞ்சம் அவசரமாத் தபால் சுவர்கள் வேண்டியிருக்கின்றன. இங்கெல்லாம் போஸ்டாபீஸை மூடியிருப்பார்கள். கொஞ்சம் மௌண்ட் ரோட் போய், ஸ்டாம்பு வாங்கி வா!" என்றார்.

பிறகு பார்த்துக்கொள்ளலாம்!" என்று சர்வ அலட்சியமாகக் கூறிய பிச்சைக்கண்ணு, அந்த பெண் எங்கே?" என்று நிதானமாகக் கேட்டான்.

பெண்ணா? எந்தப் பெண்?" என்று விளங்காதவர்போல் கேட்டார் ஆண்டியப்பர்.

தேநீர் சாப்பிட நீ அழைத்து வந்த பெண்! அவள் முன்பே வெளியில் போய்விட்டாள் என்று என்னிடம் புளுகாதே! ஏனென்றால் நான் வெகு நேரமாக, அந்த அறைக்கதவைப் பார்த்துக் கொண்டே நிற்கிறேன்! அதோடு நீ அவளிடம் சற்று முன் பேசியதையும் கேட்டேன்!" என்று தீர்க்கமாகக் கூறினான் பிச்சைக்கண்ணு.

டாக்டர் ஆண்டியப்பர் நெடுமூச்சு விட்டபடி, அவள் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கிறாள். அவளுக்கு உடல்நிலை சரியாக இல்லை. நான் மருந்து கொடுத்திருக்கிறேன்—" என்றார்.

அட, சை; மூடு வாயை! பெரிய டாக்டரோ நீ? ஏதோ அமெரிக்கக் கல்லூரி ஒன்றில் இலக்கியத்தில், டாக்டர் பட்டம் வாங்கியதாகப் புளுகிக்கொண்டு, நீயாகவே டாக்டர் என்று வைத்துக் கொண்டு இருக்கிறாய்; தெரியாதா? அது போகட்டும்; அந்தப் பெண் எப்பொழுது வீட்டிற்குப் போகப் போகிறாள்? நான் மோட்டார் காரைத் தயாராக வைத்திருக்கிறேன்!" என்று ரௌடித்தனமாகப் பேசினான் பிச்சைக்கண்ணு.

டாக்டர் ஆண்டியப்பர் ரொம்பவும் நிதானமாக, அவள் இன்றிரவு வீட்டிற்குப் போகவில்லை, பிச்சைக்கண்ணு! இன்றிரவு அவள் இங்கேயே தங்கியிருப்பதாக ஏற்பாடாகி இருக்கிறது!" என்றார்.

பிச்சைக்கண்ணு எரிச்சலாக, அவளுக்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஏனென்றால் புத்தக சாலையிலிருந்து அவள் புறப்பட்டு வரும்போது, திரும்பிப்போகும் வழியில் யாரையோ பார்க்க வேண்டும் என்றும், அந்த வழியாகப் போய்த் தன்னை வீட்டில் இறக்கி விடும்படியும் என்னைக் கேட்டாள்!" என்றான்.

பிச்சைக்கண்ணு இம்மாதிரி சொல்லியது வடிகட்டிய பொய்ஆனால் டாக்டர் ஆண்டியப்பர் அதில் அதில் ஏமாந்து விட்டார்.

அவளுக்கு உடம்பு சரியில்லை—அவ்வளவுதான்!" என்று கடுகடுப்பாகக் கூறிய ஆண்டியப்பர், நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, நீ இருக்கவேண்டிய இடம் வீட்டின் வெளி வாயிற்படிதான்! நீ ரொம்பவும் அதிகப் பிரசங்கியாகி விட்டாய்! என்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் உன் அதிகப் பிரசங்கித் தனத்தையெல்லாம் பொறுத்துக்கொண்டு வந்திருக்கிறேன்! பிச்சைக்கண்ணு! உனக்குப் பித்தம் ஜாஸ்தியாகிவிட்டது. உன் அத்தையை நான் மணம் செய்துகொண்டதால், இந்த வீட்டிற்கு நீயே ராஜாவாகி விட்டதாக நினைப்பா? அந்த நினைப்பு உனக்கு இருந்தால், ரொம்ப சங்கடப்பட்டுப் போவாய். உனது அதிகப் பிரசங்கித் தனத்தையெல்லாம் இனிமேலும் என்னால் பொறுக்க முடியாது! நீ போகலாம்!" என்றார்.

பிச்சைக்கண்ணு நிதானமாகத் தலையை ஆட்டியபடி, நான் போகலாம் என்பது எனக்கே தெரியும்! எதனால் அப்படிச் சொல்கிறேன். என்றால், நான்

போக விருப்பினால் என்னை யாரும் தடுக்க முடியாது. இந்த நிமிஷமே வேண்டுமானாலும் நான் விரும்பினால் போய்விடலாம்—ஆனால் நான் விரும்பவில்லை. இது ஒரு நல்ல உத்தியோகம். இதை இழப்பதற்கு நான் விரும்பவில்லை. நீ இப்பொழுது செய்யப்போகும் ஈனத்தனமான வேலை என்னவென்றுதான் எனக்குத் தெரியவில்லை!" என்றான்.

டாக்டர் ஆண்டியப்பருக்குக் கண்மண் தெரியாமல் ஆத்திரம் வந்தது. அயோக்ய ராஸ்கல்!—உன் அத்தை அம்மணியம்மாளையே நீ கேவலமாக மதித்துப் பேசுகிறாயே! அவள்தானே அந்தப் பெண்ணை அழைத்து வந்தாள்"— என்று கத்தினார்.

என் அத்தையிடம் எனக்கு அளவுகடந்த மதிப்பு உண்டு. அம்மணி அத்தைக்கு நான் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறேன். என் உடலிலுள்ள வக்ர உணர்ச்சியெல்லாம், அவள் சோறிட்டு வளர்த்தது தான்! குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க, நீ போடும் எந்தத் திட்டமும் அவளுடைய மூளையின் சம்பந்தம் இல்லாமல் இருக்காது!" என்று கூறிவிட்டு, ஆத்திரமாக ஆண்டியப்பரின் முகத்தை ஒரு வினாடி பார்த்த பிச்சைக்கண்ணு, மீண்டும் தலையைத் தாழ்த்திக் கொண்டான்: ஆமாம்; அம்மணியத்தை என்னிடம் ரொம்ப நல்ல முறையில்தான் நடந்து கொண்டாள், ஆண்டியப்பன்! என்னோடு இரட்டையாகப் பிறந்த என் சகோதரன் பக்கிரிசாமியைப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயா? பால பருவத்தில் பக்கிரிசாமி காணாமல் போய்விட்டதாக அம்மணியத்தை அழகாகக் கதை சொல்லி வந்தாள். ஆனால் காணாமற்போன என் அருமைச் சகோதரனைப் பற்றிச் சமீப காலத்தில் நான் புதுக் கனவு காண ஆரம்பித்திருக்கிறேன். என் கண்ணெதிரே இப்பொழுது நின்று கொண்டிருப்பதைப் போல, அவ்வளவு தெளிவாகக் காண்கிறேன். அவன் என்னை விட்டுப் பிரிந்தபொழுது அவனுக்கு வயது ஏழுதான்—"

அவன் இறந்தபொழுது என்ற சொல்லு!" என்று திருத்தினார் ஆண்டியப்பர்.

ஆமாம்—அவன் இறந்தபொழுதுதான் நாங்கள் சமாதி மேட்டின் அருகேதான் உட்கார்ந்து விளையாடுவோம்—அந்தக் காலத்தில்—" என்று கூறிக்கொண்டே வந்த பிச்சைக்கண்ணு, திடீரென்று, தீப்பொறி பறக்கும்

கண்களுடன் ஆண்டியப்பரை நிமிர்ந்து பார்த்தான், அந்தப் பார்வையில் பேராசிரியரின் உடல் கிடு கிடுவென நடுங்கியது.

உன் சம்சாரம் அம்மணியம்மாள் ரொம்பவும் உத்தமமான அத்தை! குணத்தில் தங்கக் கம்பிதான்! நாங்கள் குழந்தைகளாக வளர்ந்தபோது அவளிடம் பட்டபாடு; அப்பப்பா! அதிலும் என் சகோதரன் பக்கிரிசாமியை தாங்க முடியாதவரை அவள் முரட்டுத்தனமாக அடிப்பாள். அடித்து அடித்தே அந்தப் பையனைக் கொன்றுவிட்டாள் என்று நீ சொன்னாலும் பொருத்தமாயிருக்கும்! ஆனால் என் சகோதரன் செத்திருக்கமாட்டான்; உன்னையும் அம்மணி அத்தையையும் பழிவாங்க எந்த உருவத்திலாவது காத்திருப்பான், என்பதே என் அபிப்பிராயமாகும். நல்ல காலமாக அம்மணியத்தை ஒரு பெண்ணாகப் பிறந்து தொலைத்திருக்கிறாள். ஆணாகப் பிறந்து இருந்தால், அந்த அரக்கியின் கழுத்தை எப்பொழுதோ முறித்து எறிந்திருப்பேன் என்று அவளிடம் சொல்!—இப்பொழுது நான் நேராகப் போய் மோட்டார்காரைத் தயாராகக் கொண்டு வந்து நிறுத்தப் போகிறேன். அத்தை கூட்டி வந்த பெண் மஹேஸ்வரியை நீ தயாராக அழைத்துவந்து அங்கு வைத்திருக்கவேண்டும்!" என்றான் பிச்சைக்கண்ணு. அவன் குரலிலே தொனித்த உறுதியைக் கண்டு டாக்டர் ஆண்டியப்பர் ஆடிப்போய் விட்டார்.

அதற்குமேல், ஒரு வார்த்தைகூடப் பேசாமல், பிச்சைக்கண்ணு வேகமாக அங்கிருந்து வெளியே நடந்தான். ஆண்டியப்பர், ஆத்திரத்தோடு மாடிப் படிக்கட்டுகளில் ஏறி, தம் மனைவி உட்கார்ந்திருந்த அறைக்குச் சென்றார். கொஞ்சம் நேரம்வரை, இருவரும் ஏதோ ஆத்திரமாகப் பேசிக் கொண்டார்கள். கடைசியில் அம்மணியம்மாள் தனியாக வெளியே வந்தாள். நேராக மஹேஸ்வரி மயங்கிக் கிடந்த அறைக்குச் சென்றாள்.

அதற்குள் மஹேஸ்வரி மயக்கம் தெளிந்து சோபாவில் எழுந்து உட்கார்ந்து, தன் தலையை இருகைகளாலும், பிடித்துக் கொண்டு இருந்தாள். அவளிடம் அம்மணியம்மாள் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் அவளைத் தாங்கிப் பிடித்தபடி அறையை விட்டு வெளியே வந்து மாடிக்கு அழைத்துச் சென்றாள். மாடியிலிருந்து ஒரு குறுகலான படிக்கட்டு மேல் நோக்கிச் சென்றது. அந்தப் படிக்கட்டுகள் வழியாக ஏறிச் சென்றால், ஒரு சிறு அறை இருந்தது. அந்த

அறையில் பெட்டிகளை அடுக்கி வைத்திருந்தார்கள். அந்த அறைக்குள்தான் மஹேஸ்வரியைத் தள்ளி விட்டாள் அம்மணியம்மாள்.

மஹேஸ்வரி அரைகுறையான பிரக்ஞையற்ற நிலையில்தான் இருந்தாள். மாடிமேல் ஏறி வந்ததுகூட அவளுக்குத் தெரியாது. அவள் திரும்பவும் நன்றாக விழித்தெழுந்தபோது, தலையைக் கோடாலியால் பிளப்பதுபோல் ஒரே வலியாக இருந்தது. ஒரு சிறு இரும்புக் கட்டிலில் தான் படுத்திருப்பதை உணர்ந்தாள். ஒரு சிறு பெட்ரூம் விளக்கு அங்கே எரிந்து கொண்டிருந்தது. ஏனென்றால் அதற்குள் இருள் பரவத் தொடங்கிவிட்டது.

படுக்கையில் மெதுவாக எழுந்து உட்கார்ந்து, நடந்த விஷயங்களையெல்லாம் மஹேஸ்வரி சிந்தித்துப் பார்க்க முயன்றாள். அவள் தலை பலமாகச் சுழன்றது. அவள் படுக்கை அருகில் ஒரு சிறு மேஜை போடப்பட்டிருந்தது. அந்த மேஜைமீது, ஒரு கிளாஸ் டம்ப்ளரில் தண்ணீரும், இரண்டு மாத்திரைகளும் வைக்கப்பட்டிருந்தன. அவள் தலை பிளந்து விடுவதுபோல் மேலும் அதிகமாக வலிக்க ஆரம்பித்தது. தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மயக்க மருந்திற்கு முறிவாகத்தான் அந்த மாத்திரைகளை வைத்திருக்கிறார்கள் என்று புரிந்து கொண்ட மஹேஸ்வரி, அவற்றை எடுத்து விழுங்கி விட்டுத் தண்ணீரையும் குடித்தாள்.

அதைச் சாப்பிட்டு அரைமணி நேரம் கழிந்த பிறகுதான், தலைவலி நின்றது. ஆனால் தலை சுற்றல் அப்படியே இருந்தது. அறையிலுள்ள மேஜையும், மற்ற பொருள்களும் தன்னைச் சுற்றிச் சுற்றி வருவதைப் போல் அவளுக்குத் தோன்றியது. இன்னும் கொஞ்சநேரம் சென்றதும், அந்த மயக்கமும் நின்றுவிட்டது. நிதானமாக, நடந்த விஷயங்களை யோசிக்கக்கூடிய அளவிற்கு மஹேஸ்வரியின் மூளை வலுப்பெற்றிருந்தது.

அவள் சிறை வைக்கப்பட்டிருந்த அந்த அறையில், ஒரே ஒரு சிறு ஜன்னல்தான் இருந்தது. அந்த ஜன்னலும் நிறையக் கம்பி வலைபோட்டு முறுக்கிப் பின்னப்பட்டிருந்தது. அறைக் கதவைத் திறக்க மஹேஸ்வரி முயற்சித்தாள். ஆனால் அவள் எவ்வளவு முயன்றும் கதவைத் திறக்கவே முடியவில்லை. திரும்பவும் படுக்கை மீது போய் தொப்பென்று உட்கார்ந்து,

கலவரத்தை ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டு நிதானமாக யோசிக்க முயன்றாள்.

அம்மணியம்மாளோடு தான் புறப்பட்டு வந்தது, எப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனம் என்று மஹேஸ்வரி திரும்பத் திரும்பத் தன்னை நொந்துகொண்டாள். ஒரு சிறு குழந்தைகூட இவ்வளவு சீக்கிரம் ஏமாந்து விடாதே? இருட்டிய பிறகு, தான் வீட்டிற்கு வராததைக் கண்டு தன் தாயார் எவ்வளவு துடிதுடித்துப் போவாள் என்பதை நினைத்துப் பார்க்கவும் அவளுக்குப் பயமாக இருந்தது!

அவள் தன் மெல்லிய கைகளில் உள்ள பலத்தையெல்லாம் ஒன்று திரட்டி அறைக் கதவை மீண்டும் திறக்க முயற்சி செய்தாள். வெளிப்பக்கம் நன்றாகப் பூட்டப்பட்டுத் தாழ்ப்பாளும் போடப்பட்டிருந்தது. எவ்வளவு முயன்றாலும், கொஞ்சம் கூடப் பூட்டு விட்டுக் கொடுக்காது என்று புரிந்து கொண்டாள் மஹேஸ்வரி. அதைக் கதவு முரட்டுக் கதவாக இருந்த போதிலும், அந்த அறைக்கு முதன் முதலில் போடப்பட்ட கதவல்ல அது என்றும் புரிந்துகொண்டாள். ஏனென்றால் கதவின் அடிபாகத்திலே இடைவெளிபோல் இரண்டு அங்குல அளவிற்கு ஓட்டை இருந்தது.

வேறு வழியில்லாமல் மஹேஸ்வரி மனம் சோர்ந்தவளாய் மறுபடியும் தன் படுக்கைக்குச் சென்று, அமர்ந்து, தன் சிந்தனைகளை ஒழுங்கு படுத்திப் பார்க்க முயன்றாள். அந்த விசித்திரச் சாவி!.... தன்னை அவர்கள் சிறைப்படுத்தி வைத்திருப்பதற்குக் காரணம் அந்த விசித்திரச் சாவியாக இருக்குமா? அவளுக்கு ஒரே பிரமிப்பாக இருந்தது. ஆனால் அவள் கலவரம் அடைந்து விடவில்லை. தனக்கு ஏற்பட்டிருக்கும் இந்தச் சங்கடமான சூழ்நிலைக்கு, அந்த விசித்திரச் சாவிதான் காரணமாக இருக்கும் என்று அவளுக்குத் திரும்பத் திரும்பத் தோன்றியது.

அறையில் கிடந்த நாற்காலி ஒன்றை சுவர் ஓரமாக மஹேஸ்வரி நகர்த்திவிட்டு, உயரே இருந்த ஜன்னல் வழியாகப் பார்த்தாள். அந்த ஜன்னல் கம்பியை உடைத்துக்கொண்டு வெளியே தப்பிச் செல்ல முடியுமா என்று கூட கவனித்தாள். ஆனால் சாத்தியமில்லாமலிருந்தது!

அவள் நாற்காலியின் மேல் நின்று கொண்டிருக்கும் பொழுது அறைக்கு வெளியே காலடி சப்தம் கேட்டது. அங்கு வந்தது யார் என்று அவசரமாகத் திரும்பிப் பார்த்தாள். அந்தக் கதவைத் திறப்பதற்கு சிறிது நேரம் பிடித்தது. அதைத் திறந்துகொண்டு பேராசிரியர் ஆண்டியப்பர் உள்ளேவந்தார். அவர் முகத்திலே பரந்த புன்னகை ஒன்று படர்ந்திருந்தது.

மஹேஸ்வரி! ரொம்பவும் கஷ்டப்பட்டுவிட்டாய் என்று நினைக்கிறேன்! இம்மாதிரி அடிக்கடி உனக்கு ஏற்படுமா?" என்று கேட்டார் ஆண்டியப்பர்.

இம்மாதிரி ஏற்படுமா என்றால்?—எனக்குப் புரியவில்லையே!" என்றாள் மஹேஸ்வரி.

ரொம்ப, ரொம்ப வருந்தத்தக்க விஷயம்! உள்ளபடியே உன் உயிருக்கு ஏதாவது ஏற்பட்டுவிடுமோ என்று பயந்தேன். ஏன் திடீரென மயங்கிச் சுருண்டு விழுந்தாய்? உங்கள் குடும்பத்தில் யாருக்காவது சித்தப் பிரமை வியாதி இருக்கிறதா?" என்று நிதானமாகக் கேட்டார் ஆண்டியப்பர்.

அந்தக் கேள்வியைக் கேட்க ஆண்டியப்பருக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டுமென்று நினைத்த மஹேஸ்வரிக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது!

டாக்டர் ஆண்டியப்பர் தொடர்ந்து பேசினார்: அம்மாதிரி இருக்குமென்று நான் கூறவில்லை. ஆனால் நீ நடந்துகொண்ட முறை விசித்திரமாக இருந்தது. வீறிட்டு அலறினாயே, அது உனக்கு நினைவிருக்கிறதா?—இல்லை! பார்த்தாயா; பார்த்தாயா; உனக்கு நினைவிருக்காதென்று எதிர்பார்த்தேன்! பரிதாபம்! ரொம்பப் பரிதாபம்!!"

டாக்டர் ஆண்டியப்பரே! நான் வீட்டிற்குப் போகவேண்டும்—உடனே என் தாயாரிடம் போக வேண்டும்!" என்று உறுதியான குரலில் கூறினாள் மஹேஸ்வரி.

அவளையே கொஞ்சநேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார் ஆண்டியப்பர். நீ போக விரும்புவாய் என்று எனக்குத் தெரியும்; எனக்குத்தெரியும்! ஆனால் நீ எதற்கும் பயப்படவேண்டாம். உன் தாயாருக்குத்

தெரிவித்து அவளும் பாதி வழியில் வந்து கொண்டு இருக்கிறாள்!" என்று கூறிவிட்டு, டாக்டர் ஆண்டியப்பர் தம் கையில் கொண்டுவந்த தோல்பையை, அங்கிருந்த மேஜைமீது வைத்தார். பிறகு அதை மெதுவாகத் திறந்து, உள்ளேயிருந்து தஸ்தாவேஜு போன்ற ஒன்றை வெளியிலெடுத்தார். பிறகு தம் சட்டைப் பையிலிருந்து ஒரு பேனாவை எடுத்து அதன் மூடியைக் கழற்றினார்.

பிறகு மஹேஸ்வரி பக்கம் திரும்பி, ஒரு பிரசங்கி போலப் பேச ஆரம்பித்தார்: தோழியரே! நிலைமை ரொம்பவும் சிக்கலாகி இருக்கிறது! நரம்பு வியாதி பிடித்த பெண்களை, நான் அழைத்துப்பேசிப் பழக்கமில்லை! உள்ளபடியே நான் பீதி அடைந்துவிட்டேன். என் மனைவி அம்மணியோ துடிதுடித்துப் போய்விட்டாள். அவள் என்னிடம் சொல்லிய ஒரு விஷயம் ரொம்ப நியாயமாகவே எனக்குப்பட்டது: ‘உங்கள் நிலைமை ரொம்ப தர்ம சங்கடமாகிவிட்டது’ஆவன்னா! இந்தப் பெண் வெளியில் சென்று, நீங்கள்தான் ஏதோ மயக்கமருந்து கொடுத்ததாகவும், அவள் விருப்பத்துக்கு மாறாக அவளை இங்கு அடைத்து வைத்ததாகவும் சொன்னாளானால், உலகம், அவள் பேச்சைத்தான் நம்பும். உண்மையிலேயே அவளுக்கு நரம்பு வியாதி இருப்பது யாருக்குத் தெரியப்போகிறது? என்றாள் என் மனையாள்! உண்மையிலே என் மனையாள் புத்திசாலிதான்!"

அம்மணியம்மாள் அப்படி எதுவும் சொல்லி இருக்கமாட்டாள் என்று மஹேஸ்வரிக்கு நிச்சயமாகத் தெரியும்.

பேராசிரியர் ஆண்டியப்பர் தொடர்ந்து பேசினார்: ஆகவே எனக்கு ஒரு யோசனை தோன்றியது. நீ மனப்பூர்வமாக ஒரு வாக்குமூலம் எழுதிக்கொடுத்து அதில், நானாகிய டாக்டர் ஆண்டியப்பன் உன்னிடம் முழுப் பிரியத்தோடும், அன்போடும் கண்ணியமாகவும் நடந்து கொண்டு, உன்னை இந்த அறையில் பூட்டிவைத்தேன் என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருந்தது; அந்தக் காரணம் என்னவென்றால் உனக்கு மூளைக்கோளாறு ஏற்பட்டிருந்தது —என்று நீ எழுதிக்கொடுக்க வேண்டும்—"

மஹேஸ்வரி மேஜைமேல் இருந்த காகிதத்தைப் பார்த்தாள்:"நான் ஒரு பைத்தியம் என்று எழுதிக் கொடுக்க முடியாது!" என்று தீர்மானமாகக் கூறினாள்.

நீ அப்படிச் செய்ய வேண்டுமென்று நான் எதிர்ப்பார்க்கவில்லை. நீ பைத்தியம் என்று இதில் ஊர்ஜிதமாக எழுதப்படவில்லை. அதோடு இந்த தஸ்தாவேஜுவை நான் எதற்கும் உபயோகப்படுத்தப் போவதில்லை. என்மேல் வீண் பழிவந்து சேராது என்ற தைரியத்தோடு நான் இருப்பதற்காகத்தான் நான் இதை உன்னிடம் எழுதி வாங்குகிறேன்." என்று கூறிவிட்டுப் பேனாவை அவளிடம் கொடுத்தார்.

நான் கையெழுத்துப் போடப்போகும் இந்தத் தஸ்தாவேஜை நான் படிக்கலாமா?" என்று கேட்டாள் மஹேஸ்வரி.

அது தேவையா?" என்று ரொம்பவும் மனக்குறையோடு கேட்பவர்போல் ஆண்டியப்பர் கேட்டு விட்டு, இதில் நீ கையொப்பம் இட்டவுடன் மறு வினாடியே உன்னை உன் தாயாரிடம் அழைத்துப் போகிறேன்!" என்றார்.

என் அம்மா பாதிவழியில் வந்து கொண்டிருக்கிறாள் என்று சொன்னீர்களோ?" என்று சந்தேகத்தோடு இடை மறித்தாள் மஹேஸ்வரி.

ஆண்டியப்பர் அளவுகடந்த நிதானத்தோடு, எனது திட்டம்என்னவென்றால், அவளை நீ பாதிவழியிலேயே சந்திக்க வேண்டுமென்பதுதான்!" என்று கூறிவிட்டுப் பேனாவை அவளிடம் கொடுத்தார். மறுபடியும் அவள் தயங்கினாள்.

அந்தப் பத்திரம், கோர்ட் ஸ்டாம்பு பேப்பரில் எழுதப்பட்டிருந்தது. மிகச் சிறிய எழுத்துக்களால் மிகவும் நெருக்கி எழுதப்பட்டிருந்தது. ஆண்டியப்பர் அந்தப் பத்திரத்தைப் பாதி சுருட்டிக்கொண்டு, பாக்கிப் பாதிப் பகுதியைத் தம் கையைவைத்து மறைத்துக்கொண்டு, மேஜை மீது வைத்து அவள் கையெழுத்திட வேண்டிய இடத்தைச் சுட்டிக்காட்டினார். எப்படியாவது அந்த இடத்தைவிட்டுத் தப்பி ஓடி விட வேண்டுமென்று கதிகலங்கிப் போயிருந்த மஹேஸ்வரி முதலில் கையெழுத்துப் போட்டுவிடவே நினைத்தாள்.

போனவைக் கையில் எடுத்து, பேப்பர்மீது வைத்து கையெழுத்திடும் தருணத்தில், பத்திரத்தில், ஆண்டியப்பரின் விரல்களின் இடுக்கு வழியாகத் தெரிந்த ஒரு வரி, மஹேஸ்வரியைத் திகைப்படையச் செய்தது. சட்டென்று

கையெழுத்துப் போடாமல் நிறுத்திக்கொண்டாள். காரணம் பத்திரத்திலிருந்த அந்த வரி பின்வருமாறு காணப்பட்டது:

மேலே கூறப்பட்ட மஹேஸ்வரி, முன்னதாக இறந்து விட்டால், இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆண்டியப்பர்...."

இது என்ன பத்திரம்?" என்று மஹேஸ்வரி ஆத்திரமாகக் கேட்டாள்!

கையெழுத்தைப் போடு!" என்று காட்டு மிராண்டித்தனமாகக் கத்தினார் பேராசிரியர் ஆண்டியப்பர்.

நான் படிக்காத பத்திரத்தில் கையெழுத்துப் போடமுடியாது!" என்று மஹேஸ்வரி தீர்க்கமாகக் கூறிவிட்டு பேனாவை மேஜைமீது வைத்துவிட்டாள்.

மறுவினாடி ஆண்டியப்பரின் முகம் பயங்கரமாக மாறியது! நீ கையெழுத்துப் போடத்தான் போகிறாய். இல்லாவிட்டால்—" என்று ஏதோ சொல்ல வந்தவர் மிகவும் சிரமப்பட்டுத் தம் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு, மறுபடியும் சாந்தமாக, எதற்காக மஹேஸ்வரி, உனக்குப் புரியாத சட்டப் பாயிண்டுகளைப் படிக்க விரும்புகிறாய்? இந்தக் கடிதத்தில் வேறு எதுவும் இல்லை. என்மீது—" என்று அவர் ஏதோ சொல்லிக்கொண்டு வரும்போது, மஹேஸ்வரி இடைமறித்து, நான் கையெழுத்துப் போடமுடியாது!" என்று மறுபடியும் தீர்க்கமாகக் கூறினாள்.

போடமாட்டாய்—இல்லையா?" என்று ஆத்திரத்துடன் ஆண்டியப்பர் பற்களை நறநற வென்று கடித்தபடி கூறிவிட்டு, அந்தப் பத்திரத்தை எடுத்துத் தம் சட்டைப் பையில் சொருகிக்கொண்டு, அவளை நோக்கி ஓர் அடி முன்னால் எடுத்துவைத்தார். கதிகலங்கிப்போன மஹேஸ்வரி, குபீரெனப் பாய்ந்து, அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓட முயன்றாள் . அதற்குள் ஆண்டியப்பர் அவள் மீது பாய்ந்து, அவள் கையைப்பற்றித் தூக்கிக் கட்டிலில் வீசி எறிந்தார்! மஹேஸ்வரி உன் மனம் மாறும் வரையில், இங்கேயே அடைந்து கிட! சோறு தண்ணீர் இல்லாமல்—தூக்கங்கூட இல்லாமல், இங்கேயே அடைப்பட்டுக் கிட! உன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள, உனக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்தேன்! ஆனால் அதை உபயோகப்படுத்திக்கொள்ள நீ தவறிவிட்டாய்! உனக்கு நல்ல புத்தி

வரும்வரை இங்கேயே கிட!" என்று கூறிவிட்டு ஆண்டியப்பர் படீரென அறைக்கதவை இழுத்துச் சாத்தி வெளிப்பக்கம் தாளிட்டுப் பூட்டிக்கொண்டு சென்றார்.

கொஞ்சம் நேரம் வரையில், தப்பித்துச் செல்வதற்காக எந்தவித முயற்சியும் எடுக்கக்கூடத் தைரியமற்ற நிலையிலே மஹேஸ்வரி கட்டிலிலேயே விழுந்துகிடந்தாள். ஆனால் கொஞ்சம் நேரம் கழித்து, எப்படியாவது தப்பிவிட வேண்டுமென்ற துடிதுடிப்போடு, நாற்காலியை இழுத்து ஜன்னலருகே போட்டு, மீண்டும் அதன்மேல் ஏறி நிற்க முயன்றாள். அவள் கால்கள் 'வெடவெட'வென்று நடுங்கின. அவளால் நிற்கக்கூட முடியவில்லை.

அந்த வழியாகத் தப்பிச் செல்வது அசாத்தியம் என்று உணர்ந்த மஹேஸ்வரி—கதவைத் திறந்துகொண்டு, யாரும் உள்ளே நுழையமுடியாத படி தடை செய்ய நினைத்த மஹேஸ்வரி— அங்கிருந்த மேஜையையும் இன்னும் இரண்டொரு சாமான்களையும் கதவருகே நகர்த்திச் சென்று முட்டுக் கொடுத்துவிட்டு, பீதியோடு கட்டிலில் உட்கார்ந்த படியே கவனித்துக் கொண்டிருந்தாள். நேரம் வெகு வேகமாகக் கழிந்துகொண்டே சென்றது. வீட்டிற்குள் எந்தவிதச் சத்தமும் கேட்கவில்லை. கட்டுமீறிய அயர்ச்சியாலும், பசியாலும், மஹேஸ்வரி அப்படியே அயர்ந்து கட்டிலில் சாய்ந்து விட்டாள். அவளை அறியாமல் தூக்கம் வந்து அவளை அழுத்தியது......

திடீரென்று மஹேஸ்வரி வாரிச்சுருட்டி எழுந்து உட்கார்ந்தாள். அவள் ஹிருதயம் படபடவென்று அடித்துக்கொண்டது. அறைக்கு வெளியே யாரோ திருட்டுத்தனமாக நடப்பதுபோல் சப்தம் கேட்டது. அது என்ன? அதை உற்றுக் கவனித்தாள். வெகுநேரம் வரை எந்தவிதச் சத்தமும் கேட்கவில்லை. பிறகு கீழே—கீழ்தளத்தில்—ஏதோ படபடவென்று முறியும் சத்தமும், என்னவோ திடீரென்று விழும் பயங்கர ஓசையும் கேட்டன. ஹிருதயத்தை அழுத்திப் பிடித்தபடி மஹேஸ்வரி வெகு உன்னிப்பாக அந்த சத்தத்தைக் கவனித்தாள்.

அவ்—வ்—வ்—வ்!"

மஹேஸ்வரியின் உடல் பயங்கரமாக நடுங்கியது. அளவற்ற கலவரத்தால் மூர்ச்சை அடையும் நிலையை அடைந்தாள். அவள் கேட்ட சத்தம் மனிதச் சத்தம் அல்ல; அமானுஷயமான பேய்க் குரலாக இருந்தது.

அளவற்ற பீதிக்கு இலக்கான காட்டு மிருகம் ஒன்று பயங்கரமாக அலறுவதைப்போல் இருந்தது அந்தச் சப்தம்—மீண்டும் அதே பயங்கர அலறல்!

கதவருகே நின்று எல்லா உணர்வுகளும் எச்சரிக்கையோடு இயங்க மீண்டும் கவனித்தாள். அந்த அலறல் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து தேம்பலாக மாறிக் கடைசியாக ஓய்ந்துவிட்டது. பத்து நிமிஷங்கள் கடந்தன. கால்மணி நேரமும் சென்றது. அவளை விழிப்படையச் செய்த அந்த ஒலி மீண்டும் கேட்க ஆரம்பித்தது—ஒரு முரட்டுக் கால் பூமியில் மோதினால் ஏற்படக்கூடிய சத்தத்தைப் போலிருந்தது அது.

அந்த பயங்கர ஒலி வர வர மிகச் சமீபத்தில் கேட்க ஆரம்பித்தது. அவளிருந்த அறை வாயிற்படி வரை சப்தம் வந்து, திடீரென்று நின்றுவிட்டது. கதவை யாரோ திறக்க முயல்வது போல் சப்தம் கேட்டது! மஹேஸ்வரிக்கு குபீரென மரணபீதி உண்டாகி விட்டது. அளவுகடந்த பயத்தோடு, இருந்த இடத்தை விட்டுக்கூட நகர முடியாமல் நடு நடுங்கினாள் மஹேஸ்வரி. உட்கார்ந்த இடத்திலிருந்தபடியே, கதவைத் திறந்துகொண்டு தன்னை எதிர் நோக்கி வரப்போகும் பேராபத்தை எதிர்பார்த்தபடி கல்லாகச் சமைந்திருந்தாள்.

மீண்டும் கதவு திறப்பதற்குச் செய்யப்படும் சப்தம் கேட்டது. ஆனால் கதவு திறக்கவில்லை. கதவைத் திறக்க முயன்றவர் யாராக இருந்தாலும், அவரிடம் சாவி இல்லை என்று தெரிந்தது. மறுபடி நிசப்தம் நிலவியது. யாரோ கதவை உடைத்துக்கொண்டு உள்ளே புக முயற்சி செய்வதுபோல் தெரிந்தது. அந்தச் சமயத்தில் மஹேஸ்வரியின் பார்வை எதேச்சையாகக் கதவின் அடிப்பாகத்திற்குச் சென்றது. வாயிற்படியின் தரைக்கும் கதவிற்குமிருந்த இலேசான இடைவெளிச் சந்திலே ராஷஸ உருவிலிருந்த மூன்று விரல்கள் தெரிந்தன. மெதுவாக அவ் விசித்திர விரல்கள் உள்பக்கம் நுழைந்து கதவைத் தாங்கிப் பிடித்து பெயர்த்தெறிய முயற்சி செய்துகொண்டிருந்தன. அந்த ராஷஸ விரல்களிலிருந்து, ரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது. அந்த பயங்கரக் கையையும், அதிலிருந்து சொட்டிக்கொண்டிருந்த பச்சைரத்தத்தையும், அது கதவைத் திறக்கப் போராடுவதையும், அதன் முயற்சி தன்னைக் கொல்லவே குறி வைத்து வந்திருப்பதையும் பார்த்த மஹேஸ்வரி, பயங்கரமான குரலில் வீறிட்டு அலறியபடி கட்டிலைவிட்டு கீழே

துள்ளிக்குதித்து, ஜன்னலருகே கிடந்த நாற்காலியில் தாவி ஜன்னலுக்கு வெளியே பீதியோடு கவனித்தாள்.

அந்த சமயத்தில் ஜன்னலுக்கு வெளிப்புறத்தில் அவளுடைய சிறை அறையை நோக்கியபடி வெளிறிய முகத்துடன் நின்றுகொண்டிருந்தான். டிரைவர் பிச்சைக்கண்ணு!

## *20. அம்மணியம்மாளின் கைப்பிடிக்குள்?*

மலைமேல் விநாயகர் வாசகசாலைக்கு அன்றைய தினம் பிரபாகர் சென்றது ஒரு எதிர்பாராத நிகழ்ச்சிதான். அவருக்கு அங்கு எந்தவித வேலையும் இல்லாவிட்டாலும், ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது மஹேஸ்வரியைப் பார்க்காவிட்டால், அந்த நாள் வீணாகிப்போய்விட்ட நாளாகவே அவருக்குத் தோன்றியது.

லைப்ரரிக்குள் நுழைந்த பிரபாகர், மஹேஸ்வரி வேலை பார்க்கக் கூடிய இடத்திற்குத் தேடிக்கொண்டு சென்றார்.

மஹேஸ்வரி வெளியே போய்விட்டாள். யாரோ ஓர் அம்மாள் அவளை அழைத்துப் போனாள்!" என்று கூறினார் ஓர் அதிகாரி.

அவள் தாயார் வந்தாளா?"

இல்லை; அவள் தாயாரை எங்களுக்கு நன்றாகத் தெரியும். இன்றைக்கு வந்தவள் யாரோ ஒரு பெரிய பணக்காரிபோலிருக்கிறது. திடீர் டம்பக்காரி போலவுமிருந்தது. காரில் வந்து மஹேஸ்வரியை அழைத்துக்கொண்டு போனாள். அந்த மினுக்குளக்காரியை இதற்குமுன் நான் பார்த்ததில்லை!" என்றார் அந்த அதிகாரி.

ஆனால் வாசகசாலையில் மஹேஸ்வரி இல்லாதது பிரபாகருக்கு ஒரே ஏமாற்றமாக இருந்தது. ஏனென்றால், அன்று மாலை அவளை நாடகத் தியேட்டருக்கு அழைத்ததுப்போக வேண்டுமென்ற நோக்கத் தோடுதான் அவர் அன்று அங்கு வந்திருந்தார். இரவு ஏழு மணி வரையில் வாசகசாலை அருகே காத்திருந்தும் மஹேஸ்வரி திரும்பி வரவில்லை. கடைசியாக எழும்பூர்

ஸ்பர்டாங் ரோடிலுள்ள அவளது வீட்டிற்குப் பிரபாகர் சென்றார். மஹேஸ்வரியின் தாயாரோ பிரபாகரைக் கண்டதும் தான் வெளியே சென்றிருந்தபோது தனக்கு மஹேஸ்வரியிடமிருந்து டெலிபோன் செய்தி வந்ததாகவும், அதில் அவள், தான் அன்றிரவு தன் சிநேகிதி ஒருத்தி வீட்டில் சாப்பிட்டு விட்டுத் திரும்பி வருவதாகச் சொன்னதாகவும் கூறினாள்.

அவள் சிநேகிதி ஒருத்தி இருக்கிறாள். சில சமயங்களில் அவளோடு சாப்பிட்டுவிட்டு, தியேட்டருக்குப் போய்வருவாள். நீங்கள் கொஞ்ச நேரம் இங்கே காத்திருங்களேன்; அவள் வந்து விடுவாள்!" என்றாள் மஹேஸ்வரியின் தாயார்.

மஹேஸ்வரி எப்படியும் திரும்பி வந்துவிடுவாளென்ற ஆர்வத்தில், பிரபாகர் அங்கே காத்திருப்பதற்கு ஒப்புக்கொண்டார். இரவு பதினோரு மணிவரை தங்கியிருந்தும், மஹேஸ்வரி வீடு திரும்பவில்லை! அதுவரையில் புத்தகசாலை அதிகாரி 'கூறிய விவரங்களைப் பிரபாகர் மஹேஸ்வரியின் தாயாரிடம் கூறவில்லை.

மஹேஸ்வரியின் சிநேகிதி பெரிய பணக்காரியோ?" என்று கேட்டார் பிரபாகர். தாயார் அளவற்ற ஆச்சரியத்தோடு, இல்லையே! அவள் எங்கோ ஒரு மருந்து ஷாப்பில் காஷியராக வேலை பார்க்கிறாள்!" என்றாள்.

அதைக் கேட்டதும் பிரபாகர் முகத்திலே மாறுதல் ஏற்பட்டதைக் கவனித்த மஹேஸ்வரியின் தாயார், ஏன்? என்று கேட்டாள்.

யாரோ ஒரு பணக்காரி, காரில் வந்து அவளை அழைத்துப் போனாளாம். லைப்ரரி அதிகாரி ஒருவர் சென்னார்!" என்று கூறினார் பிரபாகர்.

தாயார் சிரித்துக்கொண்டே, இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. அவள் சிநேகிதி சுந்தரவல்லி பணக்காரி அல்ல என்றாலும், அவள் சொந்தக்காரர்கள் பலர் நிறையப் பணம் படைத்தவர்கள். ஒருக்கால் சுந்தரவல்லியின் அத்தைதான் மஹேஸ்வரியை அழைத்துப் போக வந்தாளோ என்னமோ?" என்றாள்.

கொஞ்ச நேரம்வரை பிரபாகர் அவ்வீட்டுக்கு வெளியே சிகரெட் பற்ற வைத்தபடி நின்று கொண்டிருந்தார். அவர் மனம் நிம்மதியற்றிருந்தது. மெதுவாகத் தம் ஜாகையை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

ஜாகையை அடைந்ததும், ஜாக்கிரதையாக வெளிக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தார். பிறகு கதவைத் தாளிட்டுவிட்டு வழக்கம்போல் எல்லா அறைகளையும் சோதனையிட்டார். ஒவ்வொரு கதவிற்குப் பின்னாலும் ஒவ்வொரு அபாய அறிவிப்பு மணியைப் பொருத்தி வைத்திருந்தார். யாராவது அவரறியாமல் கதவைத் திறக்க முயன்றால் நிச்சயம் அலாரம் மணி அடித்து அவரை எழுப்பிவிடும்.

அவற்றையெல்லாம் பரிசீலனை செய்த பிறகு பிரபாகர் தம் உடைகளை மாற்றிக்கொண்டு படுக்கைக்குச் செல்லத் தயாரானார்.

படுத்த பிறகும் வெகு நேரம்வரை அவருக்குத் தூக்கம் வரவில்லை. மஹேஸ்வரியின் நினைவே சதா அவர் கண்முன் வந்து நின்றது. ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்துப் படித்துக்கொண்டே, இரவு ஒரு மணிவரை நிம்மதியில்லாமல் புரண்டு கொண்டிருந்தார். அதற்கு மேல் இலேசாகக் கண்ணை மூடினார்.

பாதித் தூக்கத்திலிருக்கும் பொழுது டெலிபோன் மணி ‘கண கண’வென்று அடித்தது. பிரபாகர் சட்டென்று, விளக்கைப் பொருத்தி விட்டு, டெலிபோன் கருவியை எடுத்துக் காதில் வைத்துக்கொண்டு, ஹலோ! யார் அது?" என்று கேட்டார்.

டெலிபோனில் பின்வருமாறு பதறல் குரல் கேட்டது.

கொலை.....நான் கொலை செய்யப்படுகிறேன்..... கடவுளே...... அவர்கள் இங்கே வந்துவிட்டார்கள் ... அந்தப் பசங்கள்...கொலை!"

பிரபாகரின் ரத்தம் உறைந்துவிடுவதைப் போன்றிருந்தது.

யார் பேசுவது?"என்று பிரபாகர் டெலிபோனில் அவசரமாகக் கேட்டார்.

பதில் இல்லை.

யார் அது? எங்கிருந்து பேசுகிறாய்?"

மறுபடியும் பதில் இல்லை. அதைத் தொடர்ந்து சில வினாடிகளுக்கெல்லாம் ஒரு பலமான முனகல் சப்தம் டெலிபோனில் கேட்டது.

அதன்பின் யாரோ வீறிட்டு முடிவில் தேம்பி அழுவதைப் போலிருந்தது.

என்னைத் தொடாதே! என்னைத் தொடாதே! உதவி! உதவிக்கு யாராவது வாருங்கள்! ஐயோ, உதவி!"

அதையொட்டி ஏதோ நொறுங்குவதைப்போன்ற சப்தம் கேட்டது. அதன் பிறகு எந்தவித ஒலியும் டெலிபோனில் கேட்கவில்லை.

பிரபாகர் அவசர அவசரமாக டெலிபோன் எக்ஸ்சேன்ஜ் ஆபீஸரை டெலிபோனில் கூப்பிட்டு, இப்பொழுது என்னுடன் பேசியது எந்த இடத்து டெலிபோன்?" என்று கேட்டார்.

கோடம்பாக்கத்திலுள்ள டெலிபோன், டாக்டர் ஆண்டியப்பரின் நம்பரோடு பேசினீர்கள்!" என்று பதில் கிடைத்தது.

அப்பொழுதுதான் பிரபாகருக்கு அந்தக் குரல் பேராசிரியர் ஆண்டியப்பரின் குரல் என்று நினைவுக்கு வந்தது. யாரோ தம்மைக் கண்டதுண்டமாக வெட்டும்பொழுது, ஆண்டியப்பர் கதறியதைப் போலிருந்தது அது.

அவசர அவசரமாக இன்ஸ்பெக்டர் துரைசாமிக்கு டெலிபோன் செய்தார் பிரபாகர். தூக்கக் கலக்கத்தில் துரைசாமி சீக்கிரமாக டெலிபோனை எடுக்கமாட்டார் என்று நினைத்தார். ஆனால் அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக, மறுவினாடியே, இன்ஸ்பெக்டர் துரைசாமி டெலிபோனில் பேசினார். பிரபாகர் தாம் கேள்விப்பட்டதையெல்லாம் கூறினார்.

பிரபாகர்! ஆண்டியப்பரின் வீட்டில் ஏதோ அசம்பாவிதம்தான் நடந்திருக்க வேண்டும்! என் மோட்டார் கார் தயாராக இருக்கிறது—" என்றார் துரைசாமி.

என் கார் அதைவிட வேகமாகச் செல்லும். நான் வந்து உங்களை அழைத்துச் செல்கிறேன். வீட்டில்தானே இருக்கிறீர்கள்?" என்று கேட்டார் பிரபாகர்.

ஆமாம்; என்னோடு இன்ஸ்பெக்டர் தேவசகாயமும் சப்—இன்ஸ்பெக்டர் பரமகுருவும் ஒரு வழக்கு விஷயமாகப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்!" என்றார் துரைசாமி.

அந்தச் செய்தி பிரபாகருக்கு மிகவும் திருப்தியளித்தது. ஏனென்றால் அப்பொழுது ஆண்டியப்பர் வீட்டில் செய்யப்போகும் வேலைகளுக்கு, திறமையுள்ள பல போலீஸ் அதிகாரிகள் தேவைப்படும் என்று அவர் நினைத்தார்.

இன்னும் பத்து நிமிஷங்களில் உங்கள் வீட்டிற்கு வருகிறேன்!" என்று கூறிவிட்டுப் பிரபாகர் அவசர அவசரமாக உடை உடுத்த ஆரம்பித்தார்.

உடைகளை அணிந்துகொண்டு, சுழல் துப்பாக்கியைக் கையில் எடுத்துக்கொண்டு, வெளியே புறப்படுவதற்காக வாசற் கதவைத் திறந்தவர் சட்டென்று ஒரு அடி பின்னால் நகர்ந்தார். வெளிறிய முகத்தோடு மஹேஸ்வரியின் தாயார் வாயிற்படியில் நின்றுகொண்டு இருந்தாள்!

நீங்களா!" என்று மூச்சு வாங்க கேட்டார் பிரபாகர். அவர் ஹிருதயத்தில் யாரோ பலமாக அடித்ததைப் போலிருந்தது.

சுந்தரவல்லியோடு மஹேஸ்வரி போக வில்லையாம்!" என்று பீதியுடன் மெல்லிய குரலில் கூறினாள் மஹேஸ்வரியின் தாயார்.

அவள் இன்னும் திரும்பி வரவில்லையா?"

மஹேஸ்வரியின் தாயார் இல்லையென்று தலை ஆட்டினாள்.

உள்ளே வாருங்கள்—என்ன நடந்ததென்று சொல்லுங்கள்—" என்று பதறினார் பிரபாகர்.

மஹேஸ்வரியின் தாயார், பன்னிரெண்டு மணி வரையில் காத்திருந்திருக்கிறாள்; பிறகு ஏதோ சந்தேகம் தோன்றி நேராகச் சுந்தரவல்லியின் வீட்டிற்குச் சென்றிருக்கிறாள். சுந்தரவல்லி அப்பொழுது தூக்கிக் கொண்டிருந்திருக்கிறாள். அவள் அன்று பூராவும் மஹேஸ்வரியைப் பார்க்கவில்லை யென்றும், அவளைப் பார்ப்பதற்கு எந்தவித ஏற்பாடும் செய்யவில்லையென்றும் கூறியிருக்கிறாள்.

அவளைத் தவிர வேறு யாரையாவது மஹேஸ்வரி பார்க்கச்சென்றிருப்பாளா?" என்று கேட்டார் பிரபாகர்.

மஹேஸ்வரி போயிருக்கக்கூடிய இரண்டு இடங்களுக்கும் டெலிபோன் செய்து விசாரித்தேனே! அங்கும் அவள் போக இல்லையாமே! புத்தகச்சாலையின் அவளோடு வேலை பார்க்கும் பரமேஸ்வரியின் வீட்டிற்குப்போய் விசாரித்தேன். அவள் சொன்னது இருந்து, மஹேஸ்வரியை அழைத்துப் போக வந்தது. நடுத்தர வயதுள்ள ஒரு ஸ்தீரி என்றும், அவள் ஏராளமாக நகை அணிந்து, மட்டரகமான குரலில் பேசியதாகவும் கூறினாள்!"

அப்படியானால் அது ஆண்டியப்பனின் மனைவியாகத் தான் இருக்கும்!— இதை நினைத்தும், பிரபாகரின் முகம் சவம்போல் வெளுத்தது. அதைக்கண்டு பதறிப்போன மஹேஸ்வரியின் தாயார், அவர் கரத்தை இறுகப்பற்றியபடி ஏதாவது விபரீதம் நேர்ந்து விட்டதோ ?" என்று பரபரப்போடு கேட்டாள்.

எனக்குத் தெரியாது; நீங்கள் இங்கேயே தங்கி இருங்கள் நான் போய்ப் பார்த்து வந்துவிடுகிறேன்" என்றார் பிரபாகர்.

உங்களோடு நான் வரக்கூடாதா?"

கூடாது, கூடாது அரை மணி நேரத்திற்குள், உங்களுக்கு நான் டெலிபோன் மூலம் செய்தி அனுப்புகிறேன். இங்கேயே தங்கியிருந்து ஏதாவது புத்தகத்தை படித்துக் கொண்டிருங்கள்!" என்றார் பிரபாகர்.

இல்லை; நான் வீட்டிற்குப் போகவேண்டும். ஒருக்கால் மஹேஸ்வரி திரும்பி வந்தால், நான் வீட்டில் இருக்கவேண்டும். எனக்காக நீங்கள் காத்திருக்க வேண்டாம். நீங்கள் புறப்படுங்கள். நான் வந்த ரிக்ஷா வண்டி வெளியே நிற்கிறது!" என்றாள் மஹேஸ்வரியின் தாயார்.

பரபரப்புடன் கிளம்பிய பிரபாகர், தமது காரில் ஏறிக்கொண்டு வெகு வேகமாக இன்ஸ்பெக்டர் துரைசாமியின் வீட்டை நோக்கிப் பறந்தார். அங்கு இன்ஸ்பெக்டரும் மற்ற இரு நண்பர்களும் தயாராகக் காத்திருந்தனர்.

சீக்கிரம் ஏறிக்கொள்ளுங்கள், உங்களிடம் நான் ஓர் அவசரமான விஷயம் சொல்ல வேண்டும். என்னைவிட நீங்கள்தான் நிதானமாகச் சிந்தனை செய்ய முடியும்!" என்றார் பிரபாகர்.

கோடம்பாக்கத்தை நோக்கிக் கார் புறப்பட்டதும், மஹேஸ்வரி காணாமல் போனதைப்பற்றி இன்ஸ்பெக்டரிடம் விவரமாகப் பிரபாகர் கூறினார்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு இருந்துவிட்டு, அப்படியானால் மஹேஸ்வரியை அழைத்துப் போனது நிச்சயமாக அந்த அம்மணியம்மாள்தான்! அவள் ஆண்டியப்பன் சம்சாரம்! அந்த டம்பக்காரியை கொஞ்ச காலத்திற்குமுன் நான் பார்த்தேன். அசல் நகைக் கடைப் பொம்மை மாதிரி இருந்தாள் — அவளால் மஹேஸ்வரிக்கு என்ன கெடுதல் செய்ய முடியும்?" என்று கேட்டார்.

அதற்குப் பதில் சொல்ல பிரபாகருக்குத் தெரியவில்லை.

சில வினாடிகள் கழிந்ததும் இன்ஸ்பெக்டர் துரைசாமி, இங்குதான், எங்கோ டாக்டர் ரஞ்சித் சிங்கின் வீடு இருக்கிறது, இல்லையா?" என்று கேட்டார்.

இடது பக்கம் இருக்கிறது!" என்று கூறினார் பிரபாகர்.

டாக்டர் ரஞ்சித் சிங்கின் வீட்டை அவர்கள் தாண்டிச் செல்லும் பொழுது ஒரே இருளாக இருந்தது. வீதியிலிருந்தபடி வீட்டைப் பார்க்க முடியாமல் தோட்டமெல்லாம் புதர் மண்டிக் கிடந்தது.

இன்ஸ்பெக்டர் துரைசாமி யோசனையோடு, பவானந்தத்தின் விவகாரேமோ ஒரே சிக்கலாக இருக்கிறது. அதில் எந்த இடத்தில் கை வைத்தாலும், எக்கச்சக்கமாக முடிகிறது. அவன் வெளி நாடுகளில் மர்ம மனிதனைப்போல் அலைவதற்கு என்னதான் செய்திருக்கிறான் அப்படி?" என்று கேட்டார்.

பிரபாகர் திடுக்கிட்டுத் தம் யோசனையிலிருந்து விழித்துக் கொண்டு, ம்! பவானந்தம் ஏன் சென்னைக்கு வராமல் விலகியே இருக்கிறான்? அந்த மர்மம்தான் விளங்கவே இல்லை!" என்றார்.

அவனை நீ பார்த்திருக்கிறாயா?" என்று கேட்டார் துரைசாமி.

இல்லை! அவன் புகைப்படம் ஒன்றைத்தான் பார்த்து இருக்கிறேன்!" என்றார் பிரபாகர்.

புகைப்படத்தைப் பார்த்திருக்கிறாயா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டார் துரைசாமி.

ஆமாம்! அவன் கொழும்பிலிருந்தபோது, இந்திய சர்க்காரின் அரசியல் தூதர் அங்கு வந்திருந்தார். அவர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படும்பொழுது, அதை வேடிக்கைப் பார்க்க, தானிருந்த ஹோட்டலின் பால்கனியில் பவானந்தம் வந்து நின்றானாம்! அப்பொழுது யாரோ ஒரு பத்திரிக்கைக்காரர் கூட்டத்தைப் புகைப்படம் எடுத்தார். எனக்கு அது தெரியாது. ஆனால் நான் அந்த ஹோட்டலில் தங்கியபோது அந்த ஹோட்டல்காரர், பத்திரிகைகளில் வெளி வந்திருந்த அந்தப் படத்தைக் காட்டினார். நான் பத்திரிகை ஆபீஸிற்கு சென்று, அந்தப் புகைப் படத்தின் மூலத்தை வாங்கி, அதிலிருந்த பவானந்தத்தின் படத்தை மாத்திரம் மிகப் பெரியதாக என்லார்ஜ் செய்து என்னிடம் வைத்துக் கொண்டிருக்கிறேன்.!"

ம்! பவானந்தம் என்கிற பேர்வழி பார்வைக்கு எப்படி இருக்கிறான்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

சாவகாசமாகச் சொல்லுகிறேன்" என்றார் பிரபாகர்.

அதற்குள் எல்லோரும் சூளைமேட்டை அடைந்து விட்டார்கள். டாக்டர் ஆண்டியப்பரின் பங்களாவிற்கு முன்னால் கார் போய் நின்றது.

காரின் ஹாரனை அடித்தார்கள். ஆண்டியப்பரின் பங்களாவிற்குள், விளக்கோ, அல்லது எந்தவித நடமாட்டமோ காணப்படவில்லை. வேகமாக இறங்கிச் சென்று பங்களாவின் வாசற் கதவைப் பலமாக இடித்தார்கள். கதவு அப்பொழுதும் திறக்கப்பட இல்லை. ஒருக்கால் மாடியில் யாராவது இருப்பார்களோ என்ற சந்தேகத்தோடு, ஒரு சிறு பரலிக் கல்லை எடுத்து மாடி ஜன்னல் நோக்கி வீசினார்கள். மாடியில் மனித நடமாட்டமிருப்பதாகத் தெரியவில்லை.

இன்ஸ்பெக்டர் துரைசாமி ஜன்னலை உடைத்துக் கொண்டு உள்ளே நுழையலாமென்று கூறினார். அதன்படி ஒரு ஜன்னல் உடைக்கப்பட்டது. அதன்

வழியாக முதலில் பிரபாகர் உள்ளே குதித்தார்.

அந்த ஹால் ஒரே இருட்டாக இருந்தது. அங்கு மாட்டப் பட்டிருந்த கடிகாரத்தின் 'டிக்டிக்'சப்தத்தைத் தவிர பயங்கரமான நிசப்தம் நிலவியது. திடீரென்று பிரபாகர் சுவாசத்தை உள்ளுக்கு இழுத்து நெடி பிடித்துப் பார்த்தார். நெடியிலிருந்து, விஷயத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் பிரபாகருக்கு இருந்தது. இப்பொழுது அவர் பிடித்த நெடி, அவர் உடலை சில்லிட்டுப்போகச் செய்தது. கையிலிருந்த டார்ச் விளக்கின் உதவியால், தெருக் கதவைத் திறந்து விட்டு மற்ற நண்பர்களையும் உள்ளே தருவித்தார்.

இங்கே கொலை நடந்திருக்கிறது! ரத்த வாடை வீசுவது உங்களுக்குத் தெரிகிறதா?" என்று கேட்டார் பிரபாகர்.

ரத்தமா?" என்று திடுக்கிட்டுப்போய்க் கேட்டார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

பிரபாகர் அந்த வீட்டில் மின்சார விளக்குகளின் சுவிட்ச் எங்கே இருக்கிறதென்று தேடிப் பிடித்து அந்த் சுவிட்சைப் போட்டார்.

வெளி ஹாலிலும், மாடியின் மேல் தளத்திலும் விளக்குகள் எரிந்தன. இவர்கள் நின்று கொண்டிருந்த இடத்திற்கு, சுவிட்ச் வெளியே எங்கோ இருந்தது. அந்தச் சமயத்தில் திடீரென்று இன்ஸ்பெக்டர் துரைசாமி வெடுக்கென பிரபாகரின் கையைப் பிடித்தார்.

அங்கே பார்!" என்று கலவரத்தோடு துரைசாமி அலறினார்.

மாடி சுவற்றில் ஓர் உருவத்தின் நிழல் தெரிந்தது! அந்த உருவம் மாடிப் படிக்கட்டில் உள்ள கைப்பிடிக் கம்பிகளின்மீது குப்புற சாய்ந்து கிடந்தது. மாடியில் போடப்பட்ட விளக்கின் வெளிச்சம் அந்த உருவத்தின் மீது பட்டு, சுவற்றிலே மிகத் தெளிவான நிழலைப் பதிய வைத்தது. பிரபாகர் சட்டெனச் சட்டைப் பையிலிருந்து, சுழல் துப்பாக்கியை வெளியிலெடுத்துக் கொண்டு, ஜாக்கிரதையாக மாடிப்படிகளின் மேலே ஏறிச்சென்றார். இன்ஸ்பெக்டர் துரைசாமியும் அவரைப் பின்பற்றினார். இருவரும் மாடியின் முதல் தளத்தை அடைந்தார்கள்.

படிக்கட்டுகளருகே, பாதுகாப்புக்காக வைக்கப் பட்டிருக்கும் சட்டத்திலே, குப்புற விழுந்தபடி அம்மணியம்மாளின் உருவம் கிடந்தது. அவளது கண்கள் எதையோ வெறிக்கப் பார்த்தபடி நிலைக்குத்தாக நின்றன. முகம் வெளிறிப்போய் விவரிக்க இயலாத திகில் குடி கொண்டிருந்தது. அவளது கரங்கள் இறுக மூடியபடி இருந்தன.

அவள் செத்துவிட்டாள்!" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

பிணத்தை மெதுவாகத் தூக்கிவந்து மேல் தளத்தின் நடுமத்தியில் கிடத்தினார்கள்.

அம்மணியம்மாளின் பிரேதத்தில் எந்தவித பலாத்கார அறிகுறியும் கிடையாது. அவளை நன்றாகச் சோதித்துப் பார்த்த இன்ஸ்பெக்டர் துரைசாமி, இவள் ஏதோ எதிர்பாராத ஒன்றைக் கண்ட பயத்தினால் இறந்திருக்கிறாள். பத்து வருஷங்களுக்கு முன் இதேபோல் இறந்த மனிதன் ஒருவனைப் பார்த்தேன். எதையோ அம்மணியம்மாள் பார்த்திருக்க வேண்டும் — மகா பயங்கரமான எதையோ ஒன்றைப் பார்த்திருக்க வேண்டும். அதுதான் இப்படித் திடீரென மாரடைப்பினால் மாண்டுபோயிருக்கிறாள்!" என்றார்.

அவள் கையில் எதுவும் இருக்கிறதா?" என்று சட்டென்று கேட்ட பிரபாகர், அவளுடைய பிரேதத்தின் மூடியிருந்த விரல்களை மிகச் சிரமப்பட்டு விலக்கினார்.

அந்தக் கைக்குள்ளிருந்து ‘கிளாங்’என்ற சப்தத்துடன் கீழே விழுந்த வஸ்துவைப் பார்த்ததும் ஆச்சரியத்தால் வாய்விட்டுக் கூவி விட்டார் பிரபாகர்.

அது ஒரு விசித்திரச் சாவி. பாங்கில் அவர் வைத்திருக்கும் மற்ற இரண்டு விசித்திரச் சாவிகளுக்கு இணையானது அது!

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். டாக்டர் ஆண்டியப்பர் எங்கே?" என்று கேட்டார் துரைசாமி. பிறகு இருவரும் டெலிபோன் எங்கே இருக்கிறதென்று தேடினார்கள்.

அந்தச் சமயத்தில், தாம் முதல் முதலாக ஆண்டியப்பரைச் சந்திக்கும் பொழுது, கீழ் தளத்தில் டெலிபோன் இருந்ததைப் பார்த்த நினைவு

பிரபாகருக்கு வந்தது. கீழ் தளத்திற்குச் செல்வதற்காக இறங்கிய இருவரும், அங்கே கண்ட காட்சியால் ஒரு வினாடி ஸ்தம்பித்து நின்று விட்டார்கள்.

## *21. இருண்ட வீட்டினுள் கொலை, கொலை!*

மாடிப் படிக்கட்டில் நடந்து செல்வதற்காகப் படிகள் பூராவும் ரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. அந்தக் கம்பளத்தில் ரத்தம் தோய்ந்த காலடித் தடங்கள் காணப்பட்டன!

பிரபாகர் குனிந்து அந்தத் தடங்களை விரல்களால் தொட்டுப் பார்த்தார்.

ரத்தம்! — அந்தக் கால்களில் எங்கே மிதித்து இவ்வளவு ரத்தம் ஒட்டிக்கொண்டிருந்தது?" என்ற ஆச்சரியத்தோடு கேட்டார் பிரபாகர்.

அந்தக் காலடித் தடம் தெரிந்த வழியே, இருவரும் கீழே இறங்கிச் சென்றார்கள். கீழே தரையில் மிகத் தெளிவாக அந்தக் காலடித் தடம் தென்பட்டது.

இந்த ரத்த பாதங்களுக்குரியவன் மாடிப் படியில் ஏறி, இரண்டு படியும், மூன்று படியுமாகத் தாண்டிச் சென்றிருக்கிறான்! — அவன் வந்த தடயத்தை நாம், ஹாலில் இன்னும் தெளிவாகக் காண முடியும்" என்றார் பிரபாகர்.

ஆனால் கீழ்த் தளத்தில் எங்கெங்கோ அந்த உருவம் ரத்தக் காலோடு அலைந்திருக்கிறது. எந்த இடத்திற்குப் போகிறோம் என்று நிர்ணயமில்லாமல் அந்த உருவம் அறை பூராவும் அலைந்திருக்கிறது..... பிரபாகருக்கோ பல்லாயிர எண்ணங்கள் நெஞ்சைக் குடைந்தன. ரத்தத் தடங்கள் காணப்படுகின்றனவே? யார், எங்கே கொலை செய்யப் பட்டார்கள்? அம்மணியம்மாள் அழைத்து வந்த மஹேஸ்வரி என்ன கதியானாள்? அவளிடமிருந்த விசித்திர சாவிக்காக கொலை செய்யப்பட்டிருப்பாளோ? ராமானந்தர் எஸ்டேட்டிற்குரிய பவானந்தம் ஒரு வேளை இறந்து போயிருந்தால், அடுத்த வாரிசு மஹேஸ்வரிதான் என்பது தெரிந்து ஒரு வேளை மஹேஸ்வரியும் கொலை செய்யப்பட்டிருப்பாளோ?

நெடுகிலும் கவனித்துக்கொண்டே வந்த இன்ஸ்பெக்டர் துரைசாமியும், பிரபாகரும், பூட்டப்பட்ட ஓர் அறையின் முன்னால் வந்து நின்றார்கள். கதவைத் தட்டிப் பார்த்தார்கள். ஒருவிதச் சப்தமுமில்லை. அநத்க் கதவிற்கெதிராக இன்னொரு அறைக் கதவு திறந்திருந்தது. அந்த அறைக்குள் நுழைந்து கவனமாக எல்லாவற்றையும் பரிசீலனை செய்தார்கள். அங்கு எந்தவிதத் துப்பும் கிடைக்கவில்லை. பிறகு பூட்டப்பட்டிருந்த கதவின் முன்னால் இருவரும் வந்து நின்றார்கள்.

அந்தக் கதவை உடைத்து உள்ளே நுழைந்ததும், பிரபாகர், தாம் முதன்முதலாக ஆண்டியப்பரைச் சந்தித்த அறைதான் அது என்று புரிந்துகொண்டார். அவர்கள் எதிரேயிருந்த மேஜையின் மேல் ஒரு சிறு சிகப்பு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. பக்கத்தில் டெலிபோன் கருவி தலை கீழாக உருண்டு கிடந்தது. பிரபாகர் வேகமாக அதை நோக்கி இரண்டடி எடுத்துவைத்தார். திடீரென்று எல்லா விளக்குகளும் குப்பென அணைந்தன! அந்த அறையிலிருந்த விளக்கு மட்டுமல்லாமல், ஹாலிலிருந்த விளக்குகளும் அணைந்தன. எங்கும் கரும் கும்மென்று இருண்டு விட்டது.

யாராவது விளக்குகளின் ஸ்விட்சைத் தொட்டீர்களா" என்று இருளில் தடுமாறியவாறு கத்திக் கேட்டார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

இல்லை சார்!" என்று வெளியிலிருந்து பதிலளித்தார் ஓர் அதிகாரி.

பிரபாகர் தமது டார்ச் விளக்கை எடுத்து அதைப் பொருத்திக் கொண்டே, மேஜையை நெருங்கினார். மேஜை அருகே ஓர் உருவம் கவிழ்ந்து கிடந்தது! பிரபாகர் பயந்தது நடந்துவிட்டது!

இலக்கிய டாக்டர் ஆண்டியப்பர் கெலை செய்யப்பட்டுக் குப்புற விழுந்து கிடந்தார்! அவர் கையில் இன்னும் டெலிபோனில் பேசும் கருவி அப்படியே இருந்தது. அவரைக் கொலை செய்த நபர் கடப்பாரையால் அவரைக் குத்திக் கொன்றிருக்கக்கூடும் என்று தோன்றியது! அந்தக் கடப்பாரை ரத்தம் தோய்ந்தபடி அவர் அருகிலேயே கிடந்தது. ஆண்டியப்பரின் முதுகிலும் நெஞ்சிலும் ஆறு இடங்களில் கொலையாளி கடப்பாரையால் குத்திப் பிளந்து

கொன்றிருப்பதாகத் தோன்றியது. கடைசி கடப்பாரைக் குத்து விழும் வரையில், டாக்டர் ஆண்டியப்பர் டெலிபோனில் பேசி இருக்கிறார்.

அறையிலிருந்து மேஜை டிராயர் எல்லாம் துப்புரவாகக் காலி செய்யப்பட்டிருந்தன. அதில் ஒரு சிறு தாளைக்கூடக் கொலையாளி விட்டு வைக்கவில்லை.

இன்ஸ்பெக்டர் துரைசாமி ஒரு சிறு கையுறையை அணிந்து கொண்டு அந்தக் கடப்பாரையை எடுத்து மேஜைமேல் ஜாக்கிரதையாய் வைத்தார். பிறகு அதிகாரி ஒருவரை அழைத்து மேல் மாடியிலிருந்த மற்றொரு டெலிபோன் மூலம் போலீஸ் கமிஷனர் ஆபீஸிற்கு போன் செய்து, அங்கிருந்து போலீஸ் படையைத் தருவிக்கும்படி கூறினார்.

கொலை நடந்த அறையின் மற்றொரு கோடியிலே ஒரு கதவு இருந்தது. அந்தக் கதவிற்குப் பின்னால் ஒரு சிறிய அறை காணப் பட்டது. அங்கிருந்த ஜன்னலொன்று விரியத் திறந்து கிடந்தது.

நமக்கு டெலிபோன் செய்தது நிச்சயமாக ஆண்டியப்பர்தான். ஆண்டியப்பன் மனைவி அம்மணியம்மாள் தான், மஹேஸ்வரியை இங்கு அழைத்து வந்திருக்கிறாள்! இன்ஸ்பெக்டர் சார்! நாம் அந்தப் பெண்ணைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்!" என்று பதட்டத்தோடு முகம் வெளுத்துப்போய்க் கூறினார் பிரபாகர்.

இந்தக் கொலையைச் செய்தவர் யாராக இருந்தாலும், அவர் இங்குதான் எங்கோ சமீபத்திலிருக்கிறார். ஏனென்றால் விளக்குகள் தெய்வாதீனமாக அணையவில்லை — யாரோ வேண்டும் என்றுதான் அணைத்திருக்க வேண்டும்!" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

அந்தச் சமயத்தில் டெலிபோன் பேசப்போன அதிகாரி திரும்பிவந்து, தாம் பேசிக் கொண்டு இருக்கும்போது யாரோ டெலிபோன் கம்பியைத் துண்டித்து விட்டார்கள் என்று கூறினார். அதற்குள் இரண்டு அதிகாரிகள், 'மெயின் ஸ்விட்சு' இருக்குமிடம் சென்று 'ப்யூஸ்'கம்பி போய்விட்டதோ என்று பார்த்தார்கள். அதுவும் போகவில்லை.

நான் மாடியைப் போய் பரிசோதித்து விட்டு வருகிறேன். நீங்கள் இங்கே பாருங்கள்" என்று இன்ஸ்பெக்டரிடம் கூறிவிட்டுப் பிரபாகர் வேகமாகவும் ஜாக்கிரதையாகவும் அம்மணியம்மாளின் பிரேதம் கிடந்த மாடியறைக்குச் சென்றார். ஒருவேளை கொலையாளி இன்னும் பல கொலைகள் செய்யக் காத்திருக்கலாம் என்பதையும் அவர் பொருட்படுத்தவில்லை. மஹேஸ்வரி என்ன ஆனாள் என்பதுதான் அவருடைய கவலையாக இருந்தது. மாடியிலிருந்து அறைகளை ஒவ்வொன்றாக நுழைந்து பார்த்தார். அங்கு எதுவும் சச்சரவுகள் நடந்ததற்கான அறிகுறி எதுவுமில்லை. அங்கு கிழே விரிக்கப்பட்டிருந்த, விரிப்புகளில் டார்ச் விளக்கை அடித்துப் பார்த்தார். அந்த விரிப்புகளிலும் ரத்தம் தோய்ந்த காலடிச் சுவடுகள் காணப்பட்டன. அந்தக் காலடிச் சுவடுகளிலிருந்து அந்த நபர் மாடியிலும், அங்குமிங்கும் அலைந்திருப்பதாகத் தெரிந்தது. அந்தப் பயங்கர நபரை நேரில் சந்தித்த பீதியில்தான் அம்மணியம்மாள் மாரடைத்து உயிர் துறந்திருக்க வேண்டும். மாடியில் சில இடங்களில், ரத்தம் தோய்ந்த காலடிச் சுவடுகள் காணப்படவில்லை. அதற்கு பதிலாக சொட்டுச் சொட்டாக ரத்தம் சிந்தியிருந்தது! அதிலிருந்து அந்த நபர் காயம் பட்டிருக்க வேண்டுமென்று யூகித்தார் பிரபாகர். வெகு நேரம் அவர் அந்த சந்தேகத்திலிருக்கவில்லை. வெள்ளை அடிக்கப்பட்டிருந்த அந்தச் சுவற்றிலே, ஓர் இடத்தில் பிரம்மாண்டமான, ரத்தம் தோய்ந்த கைத்தடம் ஒன்று காணப்பட்டது. அந்த இடத்திற்குச் சிறிது இப்பால் ஒரு பாண்டேஜ், (ரண சிகிச்சைக்காகக் கட்டப்படும் கட்டு) துணியும் கொஞ்சம் பஞ்சும் கிடந்தன.

மறுவினாடியே கொலை செய்த நபர், தன்னால் ‘சமாதி மேட்டில்’துப்பாக்கியால் சுடப்பட்டுத் தப்பிய முரட்டு ராக்ஷஸ மனிதன் என்றும், பரலோக பவனத்தில் தம்மைத் தாக்கிய அதே பூதாகாரமான ஆள் என்றும் புரிந்துகொண்டார். கொலை செய்யும் பொழுது, அவன் காட்டிய முரட்டுத்தனத்தால், கட்டு அவிழ்ந்து விழுந்திருக்க வேண்டும் என்றும் யூகித்தார், பிரபாகர்.

சுற்றிக்கொண்டே வந்த பிரபாகர், மேலே ஒரு குறுகலான படிக்கட்டு செல்வதைக் கவனித்தார். அதன் மேலே ஏறிச் சென்றதும் எதிரே ஓர் அறைக்

கதவு உடைக்கப்பட்டுக் கிடப்பதைக் கவனித்தார். அதில் பூட்டப்பட்டிருந்த பூட்டு மூன்று துண்டாக உடைபட்டுக் கிடந்தது. அந்த அறையினுள் பேயிருள் படிந்திருந்தது.

அறைக்குள் நுழைந்த பிரபாகர் தமது டார்ச் விளக்கின் ஒளியை அறை பூராவும் அடித்துப் பார்த்தார். அங்கு ஒரு படுக்கை கிடந்தது. படுக்கையின் கீழே ஒரு சிறு கைக்குட்டை இரத்தம் தோய்ந்து கிடந்தது!

நடுங்கிய கையோடு பிரபாகர் அந்தக் கைக்குட்டையை மெதுவாக எடுத்துப் பார்த்தார். அதன் ஒரு மூலையில் 'ம'என்ற எழுத்து எம்பிராயிடரி நூல் பின்னலினால் செய்யப்பட்டிருந்தது— மஹேஸ்வரியின் கைக்குட்டைதான் அது!

பிரபாகரின் ரத்தம் உறைந்து விடுவதைப் போலிருந்தது,

இன்ஸ்பெக்டர் சார்!" என்று உரத்த குரலில் அலறினார் பிரபாகர்!

## *22. தோட்டத்தில் தோட்டா மாரி!*

பிரபாகரின் குரலைக் கேட்ட இன்ஸ்பெக்டர் துரைசாமி மேலே ஓடி வந்தார். இருவரும் அந்த அறையைச் சோதனையிட்டனர்.

கதவின் மேல் இரத்தக் கறை! கவனித்தாயா, பிரபாகர்? கதவின் அடிப்பாகத்தில் இரத்தம் தோய்ந்த விரல்களின் தடயம் எவ்வளவு தெளிவாகத் தெரிகிறது! இதை யார் செய்திருந்தாலும் அந்த நபர் கதவினடியில் தனது கையைக் கொடுத்து, கதவைக் கழற்ற முயற்சி செய்திருக்க வேண்டும் — அந்தக் கைகள் எவ்வளவு பிரும்மாண்டாக இருக்கின்றன! இதைச் செய்த நபர் நிச்சயமாக உன்னைத் தாக்கியவன்தான்!" என்றார் துரைசாமி.

பிரபாகர் 'ஆம்'என்று தலையசைத்தார்.

வேறு எந்தவிதமான பலாத்கார அறிகுறிகளும் காணப்படவில்லை. தரையில் இரத்தத்தைக் காணோம்!" என்று கூறிவிட்டு இன்ஸ்பெக்டர் துரைசாமி நிமிர்ந்து பார்த்தார். ஒரு சிறு ஜன்னல் தெரிந்தது.

ஜன்னலுக்குக் கீழே கிடந்த நாற்காலியில் ஏறிப் பிரபாகர் எட்டிப் பார்த்தார். அங்கிருந்து ஒரு சிறு ஏணி கீழ்த் தளத்தை நோக்கிச் சாத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்த அறையில் அடைபட்டிருக்கக்கூடிய மஹேஸ்வரிக்கு ஏதோ உதவி கிடைத்திருக்கிறது!" என்று குதூகலத்தோடு கூறிய பிரபாகர், இன்ஸ்பெக்டர் துரைசாமியிடம் மேலே வரும்படி அழைத்தார். இருவரும் அந்த ஏணி வழியாகக் கீழே இறங்கினர்.

ஆண்டியப்பரின் டிரைவர் பிச்சைக்கண்ணு என்ன ஆனான்?" என்று கேட்டார் துரைசாமி.

இருவரும் அதற்குள் பின்பக்கத்துத் தோட்டத்தை அடைந்து விட்டனர். அங்கே பயங்கரமான இருள் மண்டிக் கிடந்தது.

இருவரும் ஒரு வினாடி தயங்கி நின்றார்கள்.

வந்ததுதான் வந்தோம்; நேராகக் கொஞ்சதூரம் போய்ப் பார்க்கலாம்!" என்றார் துரைசாமி.

இருவரும் நடந்து கொண்டிருக்கும்பொழுது, இன்ஸ்பெக்டர் துரைசாமி, நான் நினைக்கிறேன் —" என்று ஏதோ ஆரம்பித்தார். அப்போது,

டுமீல்! டுமீல்!

இருட்டிலிருந்து அவர்கள் தலைக்கு நேராக, விறு விறுவென்று இரண்டு துப்பாக்கிக் குண்டுகள் பறந்து வந்தன! கண்ணிமைக்கும் நேரத்திற்குள் இருவரும் தரையோடு தரையாகப் படுத்துவிட்டனர்.

அவர்களுக்கெதிராக சிறிது தூரத்திலிருந்து ‘பட பட’‘பட பட’வென்று இடைவிடாமல் சரமாரியாகத் துப்பாக்கிக் குண்டுகள் சுடப்பட்டன. சில விநாடிகளுக்குப் பிறகு எவ்வளவு சட்டென்று அந்தக் குண்டுமாரி ஆரம்பித்ததோ, அதே போலத் திடீரென்று ஓய்ந்து விட்டது! இருவரும் இருளை ஊடுருவி மிகக் கூர்மையாகக் கவனித்தார்கள். எந்தவிதச் சத்தமும் அதன் பிறகு காணோம்! பிரபாகர் இன்னும் சர்வ ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொண்டேயிருந்தார். அப்போழுது சிறிது தூரத்தில், புதரில் உராய்ந்தபடி யாரே

செல்லும் சத்தம் கேட்டது. அந்தத் திக்கை நோக்கி இரண்டு முறை சுட்டார் பிரபாகர் அதன் பிறகு அங்கு யாரும் இருப்பதாகவோ, யாருக்கும் துப்பாக்கிக் காயம் பட்டதாகவோ, எந்தவித அறிகுறியும் தெரியவில்லை.

அங்கே என்ன வைத்திருக்கிறார்கள்? ஒரு பட்டாளமே இருக்கிறதோ? சரமாரியாகச் சுடுகிறார்களே!" என்று மெதுவான குரலில் கேட்டார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

ஒரே மனிதன் இரண்டு பெரிய சுழல் துப்பாக்கிகளை வைத்துக் கொண்டு சுட்டிருக்கலாம்!" என்று பிரபாகர் கூறினார். அதன் பிறகு வெகு தூரம் வரை இருவரும் தவழ்ந்தபடியே சென்றார்கள். அவர்கள் முழங்கால் சிராய்ந்து, இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

இனிமேல் பயமில்லை; எழுந்திருக்கலாம்!" என்றார் பிரபாகர். இருவரும் எழுந்தார்கள். மறு வினாடி டுமீல் என்ற சத்தத்துடன் ஒரு துப்பாக்கிக் குண்டு அவர்கள் முகத்திற்கு வெகு அருகாமையில் வெடித்தது!

## *23. தகரப்பெட்டிக்குள் ஒரு தடயம்!*

முகத்திற்கு வெகு அருகாமையில் துப்பாக்கிக் குண்டு வெடித்ததால் பிரமை தட்டிப்போன பிரபாகர் தடுமாறி மண்டியிட்டு விழுந்து விட்டார். அந்தச் சமயத்தில் தமக்கு முன்னால் யோரோ இருட்டில் குபீரென ஓடும் சப்தம் கேட்டது. அவசர அவசரமாகப் பிரபாகர் எழுந்து, அந்த உருவத்தைப் பின் தொடர்ந்து ஓட ஆரம்பித்தார். சில கஜ தூரங்கள் செல்வதற்குள் மீண்டும் தலை குப்புற விழுந்தார். ஏனென்றால் அந்தக் கொலைகாரன், இரண்டு மரங்களுக்கிடையில் ஒரு நீளமான கம்பியைக் கட்டி வைத்திருந்தான்! அவர்கள் மேலே செல்லச் செல்ல அதே போல நெடுகவும் அவன் கம்பியைக் கட்டி வைத்திருப்பது தெரிந்தது. அன்றிரவு மரண தேவன் பிரபாகருக்கு வெகு அருகாமையில் இருந்தான்.

அவர்கள் தப்பி ஓடியிருப்பார்களா?" என்று கேட்டார் துரைசாமி.

ஆமாம்! இதன் பின்புறம் ஒரு ரஸ்தா போகிறது. நான் முதல் தடவை இங்கு வந்த போதே அந்தப் பக்கம் போய்ப்பார்த்தேன். அந்த ரஸ்தாவை அடைந்துவிட்டால், அவன் எந்தத் திக்கில் ஓடினான் என்று கண்டு பிடிக்க முடியாது!" என்றார் பிரபாகர்.

இருவரும் திரும்பிக் கொலையுண்ட டாக்டர் ஆண்டியப்பரின் வீட்டிற்குள் நுழைந்தார்கள். பிரபாகரின் மனம் ஒரேயடியாகக் குழம்பியிருந்தது. மஹேஸ்வரி எங்கே? அவளுக்கு ஒன்றும் ஆபத்து நேர்ந்திராது என்று பிரபாகர் தமக்குத் தாமே பல தடவைகள் சொல்லிக் கொண்டார். ஆண்டியப்பரின் வீட்டிற்குள் அவர்கள் மறுபடி நுழைந்த போது அவ்வீட்டில் எல்லா விளக்குகளும் எரிந்து கொண்டிருந்தன. போலீஸ் அதிகாரிகளெல்லாம் அங்கு குழுமியிருந்து, ரிப்போர்ட் தயார் செய்து கொண்டிருந்தார்கள். அந்த வீட்டிற்குச் சிறிது தூரத்திலிருந்த சப் — ஸ்டேஷனில், யாரோ புகுந்து 'ப்யூஸ்'கழற்றிப் போய்விட்டதாக அதிகாரி ஒருவர் சொன்னார்.

வெளிச்சத்தின் உதவியால் அவர்கள் வீடு பூராவையும் நன்றாகச் சோதனையிட்டார்கள். எந்தவிதத் தடயமும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. செத்துப்போன அம்மணியம்மாளின் அறையைச் சோதனையிட்டுக் கொண்டிருக்கும் பொழுது, நிறையப் போலீஸ்காரர்கள் வந்து சேர்ந்தார்கள். பாதியில் டெலிபோன் கம்பி துண்டிக்கப்பட்டதால், ஏதோ விபரீதம் நேர்ந்திருக்க வேண்டுமென்று நினைத்துப் போலீஸ் கமிஷனர் ஆபிஸிலிருந்து ஏராளமான போலீஸாரை அனுப்பி இருந்தார்கள். எல்லோரையும் பல இடங்களுக்குப் பிரித்தனுப்பிவிட்டு, இன்ஸ்பெக்டர் துரைசாமியும் பிரபாகரும், அம்மணியம்மாளின் அறையிலிருந்து எடுத்த ஒரு சிறு தகரப்பெட்டியைத் திறந்து கொண்டிருந்தார்கள்.

அந்தப் பெட்டிக்குள் நிறையக் காகிதங்களும், பழைய பட்டியல்களும் வைக்கப்பட்டிருந்தன. இன்ஸ்பெக்டர் ஒரு பெரிய காகிதக் கட்டை எடுத்துப் பிரபாகரிடம் கொடுத்துவிட்டு மற்றவற்றைத் தாம் சோதனையிட ஆரம்பித்தார்.

பிரபாகர் அந்தக் காகிதக் கட்டை அவிழ்த்து ஒவ்வொன்றாகப் பிரித்துக் கொண்டேவந்தார். அதில் இரண்டொரு கடிதங்கள், சிறு பிள்ளைகளின் எழுத்தைப்போல், கோணல் மாணலாக எழுதப்பட்டு இருந்தன. அவற்றில்

ஒன்றினடியில், உன் அன்புள்ள மருமகன்— பக்கிரிசாமி" என்று கையெழுத்திடப்பட்டு இருந்தது.

அம்மணியம்மாளுக்குப் பிச்சைக்கண்ணுவென்ற ஒரே ஒரு மருமகன்தான் இருக்கிறான் என்று நினைத்தேன்! என்றார் பிரபாகர்.

ஒருவருக்கு எத்தனை மருமகன்கள் இருக்கிறார்களென்று உன்னால் கண்டு பிடிக்க முடியாது!" என்று அலட்சியமாகக் கூறினார் துரைசாமி.

இந்தக் கடிதத்தில் பிச்சைக்கண்ணுவைப்பற்றி எழுதியிருக்கிறதே! அப்படியானால் பக்கிரிசாமி என்பவன் பிச்சைக்கண்ணுவின் சகோதரனாகத்தான் இருக்க வேண்டும்!" என்று தொடர்ந்து கூறினார் பிரபாகர்.

இந்தப் பிச்சைக்கண்ணுவிற்கு என்ன நேர்ந்தது. நேற்றிலிருந்து ஆளையே காணோம். இந்தக் கொலையில் அவனுக்கும் சம்பந்தமிருக்குமென்று நான் சந்தேகிக்கிறேன்!" என்றார் துரைசாமி.

அந்த சந்தேகத்தை அடியோடு விட்டொழியுங்கள்! எனக்குப் பிச்சைக்கண்ணுவைப்பற்றி நன்றாகத் தெரியும். அவன் அப்படிப் பட்டவனல்ல. திருட்டையே தொழிலாகக் கொண்டவனே தவிர அவன் கொலை செய்யத் துணியமாட்டான்!" என்றார் பிரபாகர்.

அந்த சமயத்தில் பிரபாகருக்கு ஒரு கடிதம் சிக்கியது. அதில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தது.

அன்புள்ள அம்மணிக்கு,

நான் இப்பொழுதான் டாக்டர் ரஞ்சித் சிங்கைச் சந்தித்தேன். ராமானந்தர் உடல்நிலை ரொம்பவும் மோசமாக இருக்கிறதென்று அவர் கூறினார். அது சம்பந்தமான முழு விபரங்களையும் எனக்குத் தெரிவி. எதற்காக என்று நான் குறிப்பிடத் தேவை இல்லை என்று உனக்கே தெரியும்.

அன்பு

ஆண்டியப்பன்"

அப்படியானால் அவர்களெல்லாரும், ஒருவருக்கு ஒருவர் மிகவும் அறிமுகமானவர்களாகத் தெரிகிறது. பேராசியர் ஆண்டியப்பர், அம்மணியம்மாள், டாக்டர் ரஞ்சித் சிங், பவானந்தத்தின் தந்தையான ராமானந்தர் இவர்களுக்கிடையே உள்ள சம்பந்தமென்ன? ராமானந்தர் குடும்பத்தைப்பற்றித் தனக்கு எதுவுமே தெரியாது என்று பேராசிரியர் ஆண்டியப்பர் கூறியது வடிகட்டிய பொய்தான்! ஆனால் இனிமேல் அதைப்பற்றிச் செத்துப்போன நபரை விசாரிக்க முடியாது!" என்றார் பிரபாகர்.

வெகு நேரம் வரை அவர்கள் சோதனையிட்டும் அதற்குமேல் எதுவும் கிடைக்கவில்லை.

முடிவாக பிரபாகர், இங்கிருந்து நாம் அடுத்தபடியாக எங்கே போகப் போகிறோம்?" என்று கேட்டார்.

எனக்குத் தெரியாது!" என்றார் துரைசாமி.

தம் சட்டைப் பைக்குள் கையைவிட்டு, அந்த விசித்திரச் சாவியை எடுத்தார் பிரபாகர். அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டே, இது நாலாவது விசித்திரச் சாவி! ஏழு பூட்டுகளுக்கு இன்னும் மூன்று சாவிகளைக் கண்டு பிடிக்க வேண்டும்! கண்டு பிடித்துவிட்டால், மாயச் சமாதியின் ஏழு புட்டுக்களுக்கு அப்பால் என்ன மர்மம் புதைக்கப்பட்டு இருக்கிறதென்பதைக் கண்டு பிடித்துவிடலாம். அதன் பிறகு இன்றிரவு நடந்த கொலைக்காக ஒருவன் தூக்கு மேடை ஏறுவான்" என்றார், பிரபாகர்.

நாம் எங்கே செல்லப்போகிறோம்?" என்று துரைசாமி இந்தத் தடவை கேட்டார்.

பிரபாகர் தம் கைக்கெடிகாரத்தைப் பார்த்தார், மணி இரண்டே காலாகியிருந்தது.

பவானந்தம் எஸ்டேட்டிற்குரிய ஒரு பங்களாவிற்குச் செல்லுகிறோம்! அந்தப் பங்களா இங்கிருந்து சமீபத்தில்தான் இருக்கிறது!" என்றார் பிரபாகர்.

இருவரும் டாக்டர் ஆண்டியப்பரின் வீட்டைவிட்டுப் புறப்பட்டுப் பிரபாகரின் மோட்டார் கார் நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்குச் சென்றார்கள்.

அங்கே என்ன கிடைக்கும், பிரபாகர்?" என்று கேட்டார் துரைசாமி.

எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை! ஆனால் ஏதாவது துப்புக் கிடைக்கலாம்!" என்று கூறிவிட்டுக் காரில் ஏறி டிரைவர் ஆசனத்தில் பிரபாகர் அமர்ந்தார். இன்ஸ்பெக்டர் துரைசாமியும் அவர் பக்கத்தில் ஏறி அமர்ந்து கொண்டார்.

பிரபாகர் காரைக் கிளப்பியதும், கார் தள்ளாடித் தள்ளாடி இங்கும் அங்கும் இழுத்தபடி ஓடியது. சட்டென்று பிரபாகர் பிரேக் போட்டுக் காரை விட்டுக் கீழே குதித்தார்.

தமது டார்ச் விளக்கைச் சக்கரம் மீது அடித்துப் பார்த்துவிட்டு, பிரபாகர் ஒரு பெருமூச்சுடன், உம்! நாம் மேலே நடந்துதான் செல்லவேண்டும்!" என்றார்.

மோட்டார் காரின் நாலு சக்கரங்களிலுமுள்ள டயர்கள் கண்மூடித்தனமாகக் கத்தியால் கிழிக்கப்பட்டுச் சக்கரத்திலிருந்த காற்றெல்லாம் வெளியேற்றப்பட்டிருந்தது!

## *24. பிச்சைக்கண்ணுவின் பிரலாபமும், பீதிவசப்பட்ட பேதையும்!*

பேராசிரியர் ஆண்டியப்பரின் வீடு போலீஸாரால் சோதனையிடப் படுவதற்கு முன்னால், மஹேஸ்வரிக்கு நேர்ந்த கதி என்ன? அது மகா பயங்கரமானது. அறையில் அடைப்பட்டிருந்த மஹேஸ்வரி ஜன்னலின் வழியாகப் பார்த்தாள். டிரைவர் பிச்சைக்கண்ணுவின் முகத்தை மரண பீதியோடு மஹேஸ்வரி வெறித்துப் பார்த்த அந்த சமயத்தில், அவள் அனுபவித்த மகா பயங்கரமான சித்திரவதையை வாழ்நாள் பூராவும் அவள் மறக்கவில்லை. தனக்குப் பின்னால் அந்த முரட்டு ராக்ஷஸ மனிதன் உறுமியும் மோதியும் அறைக்கதவைத் திறப்பதற்குப் போராடிக் கொண்டிருப்பதைக் கண்டதும், அவளுடைய கலவரம் இன்னும் அதிகமாயிற்று. பிறகு ஜன்னலுக்கு

வெளியே காணப்பட்ட பிச்சைக்கண்ணு — அவன் ஒருக்கால் அவளுடைய எதிரியாகவும் இருக்கலாம்.

ஜன்னலுக்கு அப்பால் இருந்த பிச்சைக்கண்ணுவின் உருவம் ஒரு வினாடி கீழே மறைந்தது. அதன் பிறகு ஒரு ஏணியைக் கொண்டு வந்து வைத்து ஏறி, அந்த ஜன்னலைப் பெயர்க்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டது. சில வினாடிகளுக்கெல்லாம், ஜன்னல் கம்பிகள் பெயர்த் தெரியப்பட்டன. வெளியில் இருந்த பிச்சைக்கண்ணு கையை நீட்டினான். மஹேஸ்வரி கொஞ்சங்கூடத் தயங்காமல், அந்தக் கையைப் பற்றிக்கொண்டு, ஜன்னல் வழியாக நுழைந்து, அந்த ஏணியில் இறங்கினாள்.

அவள் ஏணி வழியாக அறையை விட்டுத் தப்பிக் கீழே இறங்குவதற்கும், அவள் இருந்த அறைக் கதவை உடைத்துக்கொண்டு, அந்த ராக்ஷஸ மனிதன் உள்ளே சாய்வதற்கும் சரியாக இருந்தது.

படபடப்புடன் கீழே இறங்கிய, மஹேஸ்வரியை இழுத்துக் கொண்டு, அந்தத் தோட்டத்தில் பிச்சைக்கண்ணு வெகு வேகமாக ஓடினான்.

தோட்டத்தைவிட்டு வெளியேறியதும் ஒரு நெல் வயல் எதிர்ப்பட்டது. அந்த வயலுக்குள் நுழைந்து கதிர்களிடையே மறைந்தபடியே பிச்சைக்கண்ணு கொஞ்ச தூரம் ஓடினான். இன்னும் அவர்கள் பீது தணியவில்லை. அந்த ராக்ஷஸ மனிதன் தங்களைத் துரத்திக்கொண்டு வருகிறானென்றே நம்பினார்கள். கிட்டத்தட்ட ஒன்றரை மைல் தூரத்திற்கு மேல் ஓடி வந்த பிச்சைக்கண்ணுவும் மஹேஸ்வரியும் நுங்கம்பாக்கம் எல்லையை அடைந்து விட்டார்கள். அங்கு வந்து ரோடில் ஏறியதும்தான் அவர்களுக்கு மூச்சு வந்தது. ரோடில் அவர்களுக்கு எதிரில் மிக உயரமான பழங்காலச் சுவர் ஒன்று காட்சியளித்தது.

இதுதான் ராமானந்தர் எஸ்டேட்டிற்குரிய பவானந்தரின் பங்களா! இதற்குப் பின்னால் கொஞ்ச தூரத்தில்தான் சமாதி மேடு இருக்கிறது!" என்றான் பிச்சைக்கண்ணு. மஹேஸ்வரியின் உடல் நடுங்கியது.

ராமானந்தர் எஸ்டேட்டிற்குரிய பவானந்தத்தின் பங்களா! அதற்குப் பின்னால் சமாதி மேடு! அந்தப் பயங்கரமான இடத்திற்கு வந்து

சேருவோமென்று மஹேஸ்வரி கனவிலும் நினைக்கவில்லை. அதைக் கேட்டதும் அவள் உடல் பயத்தால் சில்லிட்டது.

கொஞ்சதூரம் போனால், இந்தச் சுவற்றில் ஒரு ஓட்டை இருக்கிறது. அங்குதான் உன்னை அழைத்து போகவேண்டும். அப்படிக்கின்றி நாம் போகும் வழியை அந்த ராக்ஷஸ மனிதன் கண்டு பிடித்து விட்டானானால், நம்மால் இலேசில் தப்பிக்க முடியாது!" என்றான் பிச்சைக்கண்ணு.

யாரவன்? ஆண்டியப்பரின் வீட்டில் என்ன நடந்தது? அங்கே யாரோ வீறிட்டு அலறும் சப்தத்தைக் கேட்டேனே!" என்றாள் மஹேஸ்வரி.

எனக்கும் அந்தச் சத்தம் கேட்டது. நீதான் அப்படிக் கத்துகிறாய் என்று நினைத்தேன். அதனால்தான் ஏணியைக்கொண்டுவந்து சாத்தி, உன்னைத் தப்புவிக்கத் திட்டமிட்டேன். எனக்கு அங்கு ஜன்னல் இருப்பதும், அந்த அறை இருப்பதும் மிக நன்றாகத் தெரியும்" என்றான் பிச்சைக்கண்ணு.

இருவரும் அந்த மதில்சுவரை ஒட்டியே கொஞ்சதூரம் நடந்து சென்றார்கள்.

ஏதோ நடந்திருக்கிறது. அது என்கு நன்றாகத் தெரிகிறது! — இந்த மனிதனை — ராக்ஷச மனிதனை — இதற்கு முன் நான் பார்த்திருக்கிறேன்...." என்று பிச்சைக்கண்ணு சொல்லிக்கொண்டே வரும்போது, மஹேஸ்வரி இடைமறித்து, யாரவன்?" என்று பீதியோடு கேட்டாள்.

அவன் யாரென்று எனக்குத் தெரியாது. அவனுடைய உருவம் ராக்ஷசன் மாதிரி இருக்கிறது. அதோடு கொஞ்சம் வெறி பிடித்தவன் என்றும் நினைக்கிறேன். ஒரே ஒரு தடவை அவன் சற்றுத் தொலைவில் இருக்கும்போது, நான் அவனைப் பார்த்திருக்கிறேன். அன்று என் மனதில் ஏற்பட்ட பீதி, வாழ்நாள் முழுவதும் என்னைவிட்டுப் போகாது! எனக்கு ஒரு சந்தேகம் தோன்றியது; அந்தச் சந்தேகத்தை உன்னிடம் சொல்வதில் பிரயோசனமில்லை. உனக்கு அதில் எந்தவிதச் சுவாரசியமும் ஏற்படாது!— இதோ, சுவற்றில் ஓட்டை இருக்கிறது, பார்; என்றான் பிச்சைக்கண்ணு.

அங்கு எந்தவித ஓட்டையும் தென்படவில்லை! பகலிலே பார்ப்பவர்களுக்குக்கூட அங்கு ஓட்டை இருப்பது தெரியாது. ஏனென்றால் அந்த இடத்தில் புதராக ஆடா தொடை" செடி மண்டிக் கிடந்தது. பிச்சைக்கண்ணு அந்த இடத்தை நன்றாக அறிந்தவனாதலால், அந்தப் புதரை விலக்கி மஹேஸ்வரி உள்ளே நுழைவதற்கு வழி செய்து கொடுத்தான்.

சில வினாடிகளுக்கெல்லாம் இருவரும் காம்பவுண்டுக்குள் நுழைந்து விட்டார்கள். பிச்சைக்கண்ணு இடைவிடாமல் பேசிக் கொண்டே வந்தான். அம்மணியம்மாள் தன் அத்தைதான் என்று அவன் கூறியபோது மஹேஸ்வரிக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது.

நான் சிறு பிள்ளையாக இருக்கும்போது என்னையும் என் சகோதரன் பக்கிரிசாமியையும் அம்மணியம்மாள்தான் வளர்த்து வந்தாள். பக்கிரிசாமி இறந்துவிட்டான் என்று சொல்கிறார்கள். என் அருமைச் சகோதரனை இழக்கும் போது எனக்கு வயது ஆறு!" என்றான் பிச்சைக்கண்ணு.

வாழ்நாள் பூராவும் அம்மணியம்மாளோடுதான் இருந்து வருகிறாயா?" என்று அக்கரையோடு கேட்டாள் மஹேஸ்வரி. தனக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவத்தை மறக்க ஏதாவது பேசிக் கொண்டு வரவேண்டும் போலிருந்தது அவளுக்கு. பிச்சைக்கண்ணு வெறுப்பான ஒரு சிரிப்புடன், அந்த அம்மணியோடு இருந்தேனா என்றா கேட்கிறாய்? கடவுளே! எப்பொழுதெல்லாம் முடியுமோ அப்பொழுது எல்லாம் அந்த அத்தையைவிட்டு ஓடிவிட்டேன்!" என்றான் பிச்சைக்கண்ணு.

அவள் உன்னிடம் அன்பாக நடந்து கொள்ளவில்லையா?" என்று கேட்டாள் மஹேஸ்வரி.

'அன்பு'என்ற வார்த்தையையே அம்மணியத்தை கேள்விப் பட்டதில்லை! என்னையும், என் சகோதரன் பக்கிரிசாமியையும் அவள் அடியோடு வெறுத்தாள். பக்கிரிசாமி என்னோடு இரட்டையாகப் பிறந்த சகோதரன். அவன் அதிர்ஷ்டமிருந்தால் அவன் சிறு வயசிலே இறந்து போயிருப்பான்!" என்றான் பிச்சைக்கண்ணு.

மஹேஸ்வரி அவன் சொல்வதையெல்லாம் ஆச்சரியத்தோடு கேட்டுக் கொண்டிருந்து விட்டு, அப்படியிருந்துமா அந்த அம்மணியத்தையிடம் திரும்பிப் போனாய்?" என்று கேட்டாள்.

கொஞ்ச நேரம் வரை பிச்சைக்கண்ணு அதற்குப் பதில் சொல்லவில்லை. பிறகு அவன் 'ச்'கொட்டிவிட்டு, அம்மணியத்தையின் அதிர்ஷ்டம்; அவள் திடீரென ஆண்டியப்பரை மணந்து நல்ல நிலைமைக்கு வந்தாள், என் துரதிர்ஷ்டம்; நான் கெட்டழிந்து போனேன்! உண்மையைச் சொல்லவேண்டுமானால், நான் பதினாறு தடவை சிறைக்குச் சென்றிருக்கிறேன்!" என்றான்.

திருட்டுக் குற்றத்திற்கா?" என்று மென்று விழுங்கியபடி கேட்டாள் மஹேஸ்வரி.

ஆனால் பிச்சைக்கண்ணு அதற்காகக் கவலைப் பட்டவனாய்த் தெரியவில்லை! சர்வ அலட்சியமாக மேலே பேசினான்; அதற்காகத்தான் சென்றேன்! நான் பிறவியிலேயே திருடன் — அதாவது திருடுவதற்காகவே பிறந்தவன்! மோட்டார்கார் திருட்டுக்களில்தான் எனக்கு ரொம்ப ஆசை. நான் திருடிக்கொண்டு சென்ற மோட்டார்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், ஒரு மஹாராஜாகூட அவ்வளவு மோட்டார்கள் வைத்திருக்க முடியாது! ஆனால் சென்ற தடவை அவர்கள் என்னைக் கோர்ட்டில் கொண்டுபோய் நிறுத்தியபோது, நீதிபதி எனக்கு ஓர் எச்சரிக்கை கொடுத்தார். இன்னொரு தடவை இம்மாதிரி திருடிவிட்டு வந்தால், என்னை வழக்கமாகத் திருடுபவன்" (ஹாபிச்சுவல்) என்ற பிரிவில் சேர்த்துவிடுவதாக அச்சுறுத்தினார். அப்படிச் செய்துவிட்டால் என்னைப் போலீஸ்காரர்கள் நாயாக மதித்து நடத்துவார்கள். எனக்குக் கொடுக்கப்படும் தண்டனையும் அதிகமாகிவிடும். அதற்காக அந்தத் தொழிலை விட்டே விலகி விடுவது என்று முடிவு செய்தேன். நல்ல நிலைமையில் இருக்கும் என் அம்மணியத்தையிடம் வேலை தேடிப்போனேன். அவள் எதனால் வேலை கொடுத்தாள் என்று எனக்குத் தெரியாது. ஒருக்கால், சொந்தக்காரனாக இருப்பதால், அவள் சொல்லும் எந்தக் கீழ்த்தர வேலையையும் செய்வேனென்று எதிர்பார்த்தாளோ என்னவோ? — நானும் இரண்டொரு விசித்திரமான வேலைகளைச் செய்தேன்..........." என்று

சொல்லிக்கொண்டே வந்த பிச்சைக்கண்ணு திடீரென்று பேச்சை நிறுத்தி அவளை மௌனமாக இருக்கும்படி சைகை காட்டினான். சிறிது தூரத்தில் இருட்டில் ஏதோ வருவதை அவன் கவனித்திருக்கவேண்டும்.

உடனே பிச்சைக்கண்ணு பரபரப்புடன் இரகசியமான குரலில் மஹேஸ்வரியை நோக்கி, நீ வேகமாக ஓடு. இடது பக்கமாகவே ஓடி அங்குள்ள மரங்களிடையே பதுங்கிக்கொள்!" என்று பதறினான்.

நீ யாரைப் பார்த்துவிட்டு இப்படிப் பதறுகிறாய்?" என்று கால்கள் வெடவெடவென நடுங்க மஹேஸ்வரி கேட்டாள்.

எனக்குத் தெரியாது! நான் சொன்னபடி செய். போகும்போது அதிகச் சப்தம் ஏற்படாமல் பார்த்துக்கொள்!" என்றான் பிச்சைக் கண்ணு.

அந்தப் பயங்கர நேரத்தில் தனியாகச் செல்வதற்கு மஹேஸ்வரிக்குத் துணிச்சலில்லை. இருந்தபோதிலும் பிச்சைக்கண்ணு அவ்வளவு அவரசமாகக் கூறியதால் அவளால் மறுக்க முடியவில்லை. ஆகவே அவன் கூறிய வழியே, அளவற்ற கலவரத்தோடு வேகமாக நடக்க ஆரம்பித்தாள் மஹேஸ்வரி.

பிச்சைக்கண்ணு தரையில் குப்புறப் படுத்தபடி, தன்னை நோக்கி வந்துகொண்டிருக்கும் உருவத்தைக் கவனித்துக்கொண்டிருந்தான். அந்த ராக்ஷஸ உருவம் எந்தவித நோக்கமுமில்லாமல், இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் உலாவியபடி வந்துகொண்டிருந்தது. ஆனால் அவன் இருந்த திக்கை நோக்கித்தான் அது வந்துகொண்டிருந்தது.

பயமென்றால் — நமக்கெல்லாம் ஏற்படும் பயத்தைப் போன்ற பயமென்றால் — பிச்சைக்கண்ணுவுக்கு என்னவென்று தெரியாது. திருட்டுத் தொழிலை நடத்தி அவனுக்கு ஏற்பட்டிருந்த நெஞ்சு உரமும், எதிர்த்தவர்களை நிர்மூலமாக்கிவிட வேண்டுமென்ற அவனது சண்டைக் குணமும், எதிர்நோக்கி வந்துகொண்டிருந்த போராட்டத்திற்கு அவனைத் தயாராக்கின. மோட்டார்காரில் உபயோகப்படுத்தும் ஒரு நீளமான இரும்பு ஸ்பானர்" அவன் கையிலிருந்தது. அந்த ராக்ஷஸ உருவம் அவனை நெருங்கியதும் குபீரென்று அதன்மீது பாய்ந்தான்.

அந்த அமானுஷ்ய உருவத்தின் ஆத்திரமான கூக்குரலும், ‘திடீர் திடீ’ரென்று தரையில் எகிறிக் குதித்து அது ஆவேசமாகச் சண்டைபோடும் சப்தமும், கலவரத்தோடு ஓடிக்கொண்டிருந்த மஹேஸ்வரியின் காதுகளில் விழுந்தன. அந்தப் பேதைப்பெண் கண்ணை இறுக்க மூடிக்காண்டு பீதியுடன் வெகுவேகமாக திக்குத்திசை தெரியாமல் ஓட ஆரம்பித்தாள். இருட்டிலே தடுமாறி விழுந்தும், முட்களில் கால்களைக் கிழித்துக்கொண்டும், ஓடும் வேகத்தில் மரங்களில் மோதிக்கொண்டும், சொல்லொணாக் கஷ்டத்தோடு நிற்காமல் ஓடிக்கொண்டேயிருந்தாள் மஹேஸ்வரி! அவளுக்கு அங்கு திசை தெரியாததாலும், ஒரே இருளாக இருந்ததாலும், அளவு கடந்த களைப்பாலும், அவள் எங்கெங்கோ வெகுநேரம் ஓடி, கடைசியில் ஓர் இடத்தில் வந்து நின்றாள். அந்தச் சமயத்தில் வானத்திலுள்ள சந்திரனை மறைத்திருந்த மேகமண்டலம் நீங்கி நிலவொளி வீச ஆரம்பித்தது. அந்த வெளிச்த்திலே, தான் எங்கு நிற்கிறோமென்பதை அறிந்ததும், மஹேஸ்வரியின் இரத்தம் சில்லிட்டது. எதிர்பாராத விதமாக சமாதி மேட்டிலே, சமாதிகள் இருக்கும் இடமான தேவானந்தர் குன்றி"னருகே நின்றுகொண்டிருந்தாள்! அந்தச் சமாதியின் இரும்பு வாசல் திறந்திருந்தது! மஹேஸ்வரி பயத்தால் மூர்ச்சையாகிவிடும் நிலையைக்கூட அடைந்து விட்டாள்!

மஹேஸ்வரியின் இருதயம் பயங்கரமாகக் குதித்தது! அவள் பற்கள் கிடுகிடுவென வேகமாக அடித்துக்கொண்டன. உதடுகள் துடித்தன. மெதுவாக சமாதியின் இரும்புக் கதவை நோக்கி நடந்தாள். கதவிலேயே சாவி பொறுத்தி வைக்கப்பட்டிருந்தது. கலவரத்தோடு உள்ளே எட்டிப் பார்த்தாள் மஹேஸ்வரி! அந்தகாரம் நிறைந்த அந்த இடத்தில், அவள் கண்களுக்கு எதுவும் தென்படவில்லை. அந்த சமயத்தில் அவளுக்குப் பின்னால் அந்த இருண்ட வனாந்தரம் முழுவதும், ‘கிடுகிடு’த்துப் போகும்படி ராக்ஷஸ மனிதன் அலறுவது கேட்டது! அந்த அலறலைக் கேட்டபோது மஹேஸ்வரியின் ரத்தமே உறைந்து விடுவதைப்போலிருந்தது!

அப்படியானால் அந்த ராக்ஷஸ மனிதன் தன்னைத்தான் படுவேகமாகத் துரத்திக்கொண்டு வருகிறானா? இந்த எண்ணம் ஏற்பட்டதும் மஹேஸ்வரி வேறு வழியில்லாமல் மின்னலைப்போல், சமாதி நிலவறைக்குள் புகுந்து இரும்புக்

கதவைப் படீரென்று சாத்திக் கையை வெளிப்புறமாக நீட்டி, பூட்டைப் பூட்டி சாவியைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

கொஞ்சநேரம் அந்தச் சமாதிக் கிடங்கினுள் இருந்தபடியே மஹேஸ்வரி தன்னைச் சுற்றிப் பயப்பிராந்தியோடு கவனித்தாள். சமாதிகள் இருந்த இடத்தில் நிசப்தம் நிலவியது. படிக்கட்டுகள் வழியாக மெதுவாகக் கீழிறங்கி முன் அறையை அடைந்தாள். அந்தச் சமயத்தில் சமாதிக்கு மேலே ஏதோ ஒரு ராக்ஷஸ உருவம் அலையும் காலடி ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து விசித்திரமான ஒரு அழுகுரலும் கேட்டது.

மஹேஸ்வரி இரண்டாவது இரும்புக் கதவின் மீது நடுநடுக்கத்தோடு சாய்ந்துகொண்டாள். முதல் கதவினருகில் பிரம்மாண்டமான நிழல் விழுந்தது. அவள் கண்கள் படிக்கட்டின்மீது லயித்திருந்தன. மூச்சுவிடக்கூட மஹேஸ்வரியால் முடியவில்லை. ஒருக்கால் அந்தப் பூட்டை உடைத்துக் கொண்டு, அந்தப் பயங்கர ராக்ஷஸ மனிதன் வந்துவிட்டால்? அதோடு பேதைப் பெண்ணான அவள் அச் சமாதிக் கிடங்கினுள் தனியாக இருக்கிறாள்..... பாதாளத்திலே, பயங்கர சமாதிகளின் புதை பூமியிலே, செத்தவர் மத்தியிலே குலை நடுங்கும் இருட்டிலே பெண்ணொருத்தி தனியாக இருக்கிறாள்.

ராக்ஷஸ மனிதனின் பிடியிலிருந்து தப்ப வேண்டுமென்ற பதை பதைப்பதோடு, மஹேஸ்வரி வேகமாக இரண்டாவது கதவைத் திறப்பதற்கு, பூட்டு இருக்கும் இடத்தைத் தேடுவதற்காக இருட்டில் கையால் துழாவினாள். அந்தச் சமயத்தில் அவள் கை கம்பிகளின் இடுக்கு வழியாக சமாதிகள் இருந்த கிடங்கின் உள்ளே நீண்டது. திடீரென்று ஏதோ ஒரு முரட்டுக் கரம் சமாதிக் கிடங்கின் இருளிலிருந்து அவள் கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டது.

மறு கணம் மஹேஸ்வரி வீறிட்டு இருட்டிற்குள் எதிர்நோக்கி யிருக்கும் ஆபத்தைக் கதிகலங்கிபோய் உற்றுப் பார்த்தாள்.

*25. சமாதியில் சதி,*
*பங்களாவில் பயங்கரம்!*

மஹேஸ்வரியால் அந்த இருட்டில் எதையும் பார்க்க முடியவில்லை. நீண்டு பிடித்துக்கொண்ட முரட்டுக் கையிலிருந்து தனது ஒரு கையை விடுவிப்பதற்காகப் புலியைப்போல் போராடிய மஹேஸ்வரி தன்னுடைய மற்றொரு கையையும் வேகமாக உள்ளே நீட்டினாள். காடுபோல் மண்டியிருந்த ஒரு தாடியின் மத்தியிலே அந்தக் கை போய்ச் சிக்கிக்கொண்டது.

சப்தம் போடாதே! நான் உனக்கு ஒரு தீங்கும் செய்ய மாட்டேன். நீ இங்கு என்ன செய்துகொண்டிருக்கிறாய் என்பதை மட்டும் சொல்லிவிடு!" என்று தாடிக்குரிய விசித்திரமான குரல் ஒலித்தது.

நல்லவேளையாக அது மனிதக் குரலாக இருந்தது! தன்னைத் துரத்திவரும் ராக்ஷஸக் குரலைவிட மிருதுவாக இருந்தது!

நான் — நான்தான் — ஓர் அபலை! என்னைத் துரத்திவந்த பயங்கர மிருகத்தின் பிடியிலிருந்து தப்புவதற்காக வந்து ஒளிந்தேன்—" என்று மஹேஸ்வரி மூச்சு வாங்கக் கூறினாள்.

அப்படியா!" என்று கூறிவிட்டு அவளைப் பிடித்திருந்த கரம் விட்டுவிட்டது. நான் கதவைத் திறக்கிறேன்! கொஞ்சம் நகர்ந்து நில்; நான் விளக்கை ஏற்றும்வரை நகராதே" என்றது அந்தக் குரல்.

கதவு திறக்கப்பட்டது. மஹேஸ்வரி மூர்ச்சித்து விழும் நிலையிலிருந்தாள்.

அந்த மாயமான குரலுக்குரிய உருவம் ஓர் அரிக்கன் விளக்கைக் கொளுத்தியது. அந்தப் பரிதாபகரமான வெளிச்சத்தில், டாக்டர் ரஞ்சித் சிங்கின் கோர உருவம் இன்னும் அதிகோரமாகக் காட்சியளித்தது. அவரையே விசித்திரமாகப் பார்த்தாள் மஹேஸ்வரி. ஒடுங்கிக் கோடு விழுந்த முகமும், நீண்ட தாடியும், அழுக்கேறிய உடுப்பும், அவர் தோற்றத்திற்கே அலாதி குரூரத்தை அளித்தன.

ஏழு பூட்டுகள் போடப்பட்டிருந்த அந்த மாயச்சமாதியின் எதிரே, ஒரு தோல் பை வைக்கப் பட்டிருந்தது. அதில் ஏராளமான ஆயுதங்கள் இருந்தன.

ஏதோ ஓர் இரும்பு ஆயுதம், இரண்டாவது பூட்டில் செருகப்பட்டிருந்தது. ஒருபுறம் ரம்பம் ஒன்றும் காணப்பட்டது.

எதைக் கண்டு பயந்தாய் பெண்ணே?" என்று கேட்டார் டாக்டர் ராஞ்சித் சிங். அவரது கரிய விழிகள் அவளது கண்களையே உற்றுப் பார்த்தன. அந்தக் கண்களுக்குள்ள மாயச் சக்தியால், தன் விழிகளை — இப்புறமோ அப்புறமோ நகர்த்த முடியாமல், அவற்றையே வெறிக்கப் பார்த்தபடி, ஒரு — ஒரு பயங்கரமான மனிதனைக் கண்டு பயந்தோடி வந்தேன்!" என்று தடுமாறினாள் மஹேஸ்வரி.

ரஞ்சித் சிங் ஒரு சுருட்டை மெதுவாகப் பற்ற வைத்தார். பிறகு, சிங் தம் புருவங்களை உயர்த்தியபடி, அதிகாலை மூன்று மணிக்கா? நள்ளிரவில் வீதியில் நடுமாடும் பெண்கள், ஆண்களைக் கண்டு பயப்படுவதில்லையே! உட்கார் — தரையில் உட்கார். நீ என்னைவிட ரொம்ப உயரமாக இருக்கிறாய். உயரமான பெண்களின் அருகே நின்று பேசும்போது, நான் சின்னவனாகி விடுகிறேன்! அவர்கள் என்மீது ஆதிக்கம் செலுத்துவதைப்போன்ற பிரமை எனக்கு ஏற்பட்டுவிடுகிறது!" என்று கூறிவிட்டு, மெதுவாக ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்த இடத்திற்குச் சென்றார். இரண்டாவது பூட்டில் செருகப்பட்டிருந்த ஒரு ஆயுதத்தையும் வெளியே எடுத்து, எல்லா ஆயுதங்களோடும் சேர்த்து ஒன்றாகக் கட்டினார்.

நீ என்னை வேவு பார்க்கத்தான் வந்திருக்கிறாய் ஆமாம்! நீ வெளிக் கதவைத் திறந்ததும், பிறகு படிக்கட்டுகள் வழியாக இரகசியமாக இறங்கி வந்ததும் எனக்குத் தெரியும்! என் நிலைமை இப்போது சங்கடமாக இருக்கிறது! என்னை வேவு பார்க்கும் ஓர் இளம் பெண்ணை, நான் என்ன செய்வது? உள்ளபடியே நான் ஒரு 'பண்டைய கால விவகாரங்களை ஆராய்ச்சி செய்யும் நிபுணன்'என்று சொன்னால் நீ நம்பமாட்டாய்! — உன்னை அனுப்பிய உன் எஜமானரும் நம்பமாட்டார்! உன் பெயர் என்ன?" என்று கேட்டார் விஞ்ஞானி ரஞ்சித் சிங்.

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன், மஹேஸ்வரி, — வரண்டு போயிருந்த தன் உதடுகளை, நாக்கினால் தடவி ஈரம் செய்து

கொண்டாள்: மஹேஸ்வரி!" என்று அவள் கூறியதும், ரஞ்சித் சிங்கின் முகம் இலேசாக மாறியது.

மஹேஸ்வரியா? — அப்படியானால் அதே பெண்தான்! — என்ன விசித்திரமான சந்திப்பு!" என்று கூறிவிட்டு, ஏழு பூட்டுகள் பூட்டப்பட்டிருந்த அந்தக் கதவை நோக்கினார். சில வினாடிகள் அதைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு டாக்டர் ரஞ்சித் சிங் தம் தலையை ஆட்டியபடியே, உன்னையும் மாற்ற முடியாது — அவளையும் மாற்ற முடியாது. ஏனென்றால் மாற்ற முடியாத நிலையை அடைந்த வயது முதிர்ந்த பெண் அவள்! ரொம்ப வயதாகி விட்டது, ரொம்ப வயதாகி விட்டது; அந்தோ! ரொம்ப வயதாகி விட்டது!" என்று வேதனையோடு தன் பார்வையை அவள் பக்கம் திருப்பினார். பிறகு மஹேஸ்வரியை உற்று நோக்கியபடி சிங், உனக்கு எட்டு அல்லது ஒன்பது வயதாக இருந்தால், அது சுலபமாக இருக்கும். ஆனால் இப்பொழுது நீ — உன் வயது என்ன?" என்று கேட்டார்.

இருபத்து இரண்டு!" என்று இயந்திரம்போல் பதிலளித்தாள் மஹேஸ்வரி.

ஒன்றும் செய்ய முடியாது! ஆனால்—" என்று கூறியபடியே டாக்டர் ரஞ்சித் சிங், தன் பார்வையை அங்கிருந்த சமாதிகளின் மீது மெதுவாகச் செலுத்தினார்! அதைப் பார்த்த மஹேஸ்வரிக்குக் கட்டு மீறிய கலவரம் பீடித்துக்கொண்டது.

நீ ஒரு பெண்; எனக்குப் பெண்களெல்லாம், தூசிக்குச் சமானம்! என் சோதனைக்கு லாயக்கில்லாத பலஹீனப் பிறவிகள்! அவர்கள் நான் எதிர்பார்க்கும் மாறுதலுக்கு ஆளாவதில்லை— சில சமயம் இறந்துவிடுகிறார்கள். அதனால் பல வருஷ விஞ்ஞான ஆராய்ச்சிப் பாழாகிப் போய்விடுகிறது!" என்று கூறி நிறுத்தினார் டாக்டர் ரஞ்சித் சிங்.

பிறகு அந்த விஞ்ஞானி, தம் உதட்டைக் கடித்தபடி, சமாதிகள் இருக்கும் இடத்தை நோக்கி மெதுவாக நடந்தார். ஒரு சமாதி அறையின் கதவை மெதுவாகத் திறக்க முயன்றார். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நிலவரம், ரொம்பத் தலைவேதனையாக இருக்கிறது. வெளியே ஒரு மனிதன் நின்றுகொண்டு இருக்கிறான் என்று கூறுகிறாய்! ம்! அவன் பார்வைக்கு எப்படி

இருந்தான்?— அமானுஷ்ய உருவத்தோடு இருந்தானா?" என்று கேட்டார் ரஞ்சித் சிங்.

ஆம்" என்ற பாவனையில் இலேசாகத் தலையசைத்தாள் மஹேஸ்வரி.

அதுவும் ஒரு நல்ல வழிதான்!" என்று தனக்குத்தானே பேசிக்கொண்ட டாக்டர் ரஞ்சித் சிங். அந்த ராக்ஷஸ மனிதன், பார்வைக்கு ரொம்ப அருவருப்பாக இருக்கிறான். அவன் அப்படி இருப்பது இயற்கைதான். அவனைப்போன்ற ஜந்துக்களுக்கு, எப்படி சுத்தமாக இருக்கிறது என்று பயிற்சி கொடுக்க முடியாது. சுத்தமும் நாகரிகமும் ஏற்படவேண்டுமானால், அதற்கு அறிவு முதிர்ச்சி வேண்டும். ஒரு பெரிய ரெயில்வே இன்ஜினால், ஊசித்துவாரத்திற்குள் நூலைக் கோர்க்க முடியுமா? ஆனால் ஒரு சிறிய தையல் மிஷினைக் கொண்டு, ஒரு ரயிலையே இழுக்கப் பயிற்சி அளித்துவிட முடியும்!" என்று புரியாத மர்ம பாஷையில் பேசினார்.

பிறகு சிங் தம் சட்டைப் பையில் கையை விட்டு எதையோ தேடினார். அவர் தேடியது அங்கு கிடைக்காததால், கால்சட்டைப் பைக்குள் கையைவிட்டு மீண்டும் துழாவினார்.

ஆ, இதோ இருக்கிறது!" என்று விஞ்ஞானி ரஞ்சித் சிங் கூறிக்கொண்டே ஒரு சிறு பச்சை பாட்டிலை வெளியே எடுத்தார். அதைத் திறந்து, இரண்டு சிகப்பு மாத்திரைகளை எடுத்து மஹேஸ்வரியிடம் நீட்டி, இவற்றை விழுங்கி விடு!" என்றார்.

மந்திரத்தால் கட்டுண்டவள்போல், மஹேஸ்வரி அம்மாத்திரைகளை கையில் வாங்கிக் கொண்டாள்.

என்ன துரதிர்ஷ்டம்!" என்று ரஞ்சித் சிங் சொல்லிய வண்ணம் ஒரு சாவியை எடுத்து அங்கு இரண்டாவதாக இருந்த ஒரு சமாதியின் கதவில் நுழைத்து திறக்க முயன்றுகொண்டே, எல்லாக் கதவுகளும், அதைப்போலேவே சுலபமாகத் திறந்து கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்? இந்த உலகத்தில் எவ்வளவு சங்கடங்களையும் பகைகளையும், அப்பொழுது கவிழ்த்திருக்க முடியும்!" என்று கூறினார்.

மஹேஸ்வரி அவரையே விரைக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள். சட்டென்று அந்த அபலையைத் திரும்பிப் பார்த்த டாக்டர் ரஞ்சித் சிங் நான் கொடுத்த மாத்திரைகளை, நீ விழுங்கவில்லைபோல் இருக்கிறதே!" என்றார் கடுமையான குரலில்.

மஹேஸ்வரியோ அந்த மாத்திரைகளைத் தன் கையில் வைத்துக் கொண்டு அவரது கொடிய விழிகளை பார்த்துக்கொண்டிருந்தாள்.

சீக்கிரம் — தயங்காதே!" என்று உத்தரவிட்டார் ரஞ்சித் சிங்.

அவளை அறியாமலே, அவளது கை மேலே உயர்ந்தது. இருந்த போதிலும், முன்பின் அறிமுகமில்லாத ஒரு விசித்திர மனிதரின் வார்த்தைக்கு ஏன் கீழ்ப்படியவேண்டும் என்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது. இருந்தபோதிலும், அந்த அபாயகரமான மனிதன் முன்னால், அந்த மாத்திரைகளைச் சாப்பிட முடியாது என்று மறுக்கவும் அவளுக்குத் தைரியம் இல்லை.

மாத்திரையை விழுங்குபவள்போல்; மஹேஸ்வரி பாசாங்கு செய்து, அதை வாயில் அடக்கிக் கொண்டாள். அதைப் பார்த்துத் திருப்தி அடைந்த டாக்டர் ரங்சித் சிங், மூன்றாவது சமாதியைத் திறக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டார். அந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு மாத்திரைகளை வீசி எறிந்து விட்டாள் மஹேஸ்வரி.

மாத்திரைகளை விழுங்கிவிட்டாயா? மயக்கம் விருகிறதா, பெண்ணே?" என்று கேட்டார் ரஞ்சித்சிங்.

மஹேஸ்வரி மயக்கம் வருவதுபோல் தள்ளாடிப் பாசாங்கு செய்தாள்.

பவானந்தத்திற்கு அடுத்த வாரிசுக்காரி! நீ சாகத்தான் வேண்டும்! ஆனால் பாவம், கன்னிப் பெண்! ஒருநாள்கூட மணவாழ்வின் சுகத்தைக் காணாமல் மடிவது துர்பாக்கியம்!" என்று சொல்லிய ரஞ்சித் சிங் தம் மோகம் தெறிக்கும் விழிகளால் மஹேஸ்வரியின் அழகிய முகத்தை வட்டமிட்டார்.

மஹேஸ்வரியின் முகம் சவம்போல் வெளுத்தது. அந்த் ரஞ்சித் சிங்கிடமிருந்து தன் கற்பை எப்படிப் பாதுகாத்துக்கொள்வது என்று

நடுங்கினாள். அவ்வாறு தள்ளாடியபடியே பின்னெகிறி தன் பின்னால் கிடந்த ஓர் இரும்பு மேஜைமீது சாய்ந்தாள்.

ஏன் பெண்ணே! என்னை வெறுக்கிறாய்? என் முரட்டுத் தாடி உனக்குப் பிடிக்கவில்லையா?... தாடி என்ன பிரமாதம்! அதை நான் நினைத்தபடியெல்லாம் முகத்தில் ஒட்ட வைத்துக்கொள்ள முடியும்.... இப்போது என் முகத்தைப் பார்!" என்றார் ரஞ்சித் சிங்.

அப்போது அவருடைய முகத்தில் தகித்த மோகத் தீயை மஹேஸ்வரியால் பொறுக்க முடியவில்லை!

உண்மையிலே அவள் மயங்கிச் சுருண்டு மூர்ச்சித்துவிட்டாள்.

சே! பெண்களே சுத்த அசம்பாவிதங்கள்!" என்று ரஞ்சித் சிங் முகம் சுளித்துக்கொண்டு, அவள் மூர்ச்சை தெளியும் வரை சமாதிகளைத் திறக்கும் வேலையில் ஈடுபடலாம் என்று நினைத்தார்.

சிறிது நேரத்தில் மஹேஸ்வரி மூர்ச்சை தெளிந்து கண் விழித்துப் பார்த்தபோது, தான் ஒரு இரும்பு மேஜையின்மீது கிடத்தப்பட்டு இருந்ததைக் கண்டாள். அவளுக்குத் தேகமெல்லாம் புல்லரித்தது!

அந்தச் சமயம் மூன்றாவது சமாதியின் கதவைக் ‘கிரீச்’ என்ற சப்தத்துடன் டாக்டர் ரஞ்சித் சிங் திறந்தார். பிறகு மஹேஸ்வரி உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்து, அங்கிருந்த விளக்கை எடுத்துக் கொண்டு, அவளை ஓரக் கண்ணால் பார்த்தபடியே சமாதியை நோக்கி நடந்தார்.

ஒரு வினாடி நேரம், மஹேஸ்வரி தன் முழு தைரியத்தையும் வரவழைத்துக்கொண்டு, ஒரே பாய்ச்சலில், அந்தப் பாதாள அறையை விட்டு, படிக்கட்டுகளின் வழியாக மேலே பாய்ந்து ஓடினாள். வெளியே வந்ததும், அந்த இரும்புக் கதவை இழுத்துச் சாத்திப் பலமாகப் பூட்டிவிட்டாள்.

இப்பொழுது சமாதியை விட்டு வெளியே வந்து விட்டோம் என்ற ஆறுதல் மஹேஸ்வரிக்கு ஓரளவு இருந்தபோதிலும் வெளியே ராஷஸ மனிதன் துரத்தி வந்திருப்பானே என்கிற பயம் அவளை ஆட்கொண்டது. அந்த பயத்தால்—

இருபுறமும் திரும்பிப் பார்த்தபடி கரவரத்தோடு வெகு வேகமாகத் தான் முதலில் வந்த வழியே ஓட ஆரம்பித்தாள்.

பிச்சைக்கண்ணு எங்கே சென்றான்? அவனைப் பற்றிய நினைவு மஹேஸ்வரிக்கு ஒரு வினாடி எழுந்தது. இதே வழியாக ஓடினால், சமாதி மேட்டைக் காவல் பார்க்கும் காவற்காரன் வீட்டை அடைந்து விடக்கூடும் என்று நினைத்தாள் மஹேஸ்வரி. ஒரு சமயத்தில் இதே, வழியாகத் தானும் பிரபாகரும் வந்தோம் என்பதை நினைத்ததும், இப்பொழுது பிரபாகர் தன் அருகில் இருக்கக்கூடாதா என்ற தவிப்பு அவளுக்கு எழுந்தது.

சுற்றிலும் இன்னும் ஒரே பயங்கர இருளாகவே இருந்தது. சூரியோதயத்தை முன்கூட்டி அறிவிக்கும் முறையில் கீழ்வானத்தில் மிகவும் லேசான ஒளி தெரிந்தது. சீக்கிரம் பொழுது விடிந்துவிடக் கூடாதா என்று தவித்தாள் மஹேஸ்வரி. இன்னும் ஒரு மணி நேரம் இதே நிலையில் இருந்தால் அவளுக்குப் பயத்தால் பைத்தியமே பிடித்துவிடும்.

மஹேஸ்வரி வேகமாகக் கொஞ்ச தூரம் இருட்டில் சென்றதும், என்னவோ கலகலவென்று ஒரு சங்கிலி சப்தமும், பயங்கரமாக ஒரு நாய் குரைத்துக் கொண்டு ஓடிவரும் சப்தமும் அவள் காதில் விழுந்தன. அந்தப் பதைபதைப்பிலும் மஹேஸ்வரியின் நிதானம் அவளை விட்டு அடியோடு அழிந்துவிடவில்லை. அந்த இடத்திலேயே மஹேஸ்வரி சட்டென நின்று, ஆதரவாக அந்த நாயைத்தட்டிக் கொடுத்தாள். நாய்களைக் கண்டு பயப்படும் வழக்கம் மஹேஸ்வரிக்குக் கிடையாது. அவளது ஆதரவுக்கு இலக்கான அந்தப் பிரம்மாண்டமான நாய், நன்றியறிதலோடு, வாலைக் குழைத்துக் கொண்டு, அவள் பின்னால் நடக்க ஆரம்பித்தது.

நாய் கட்டப்பட்டிருந்த சங்கிலியை மஹேஸ்வரி விடுவித்து விட்டதால் நாய் அவள் போன இடமெல்லாம் தொடர்ந்தது.

அவள் இருட்டில் சென்ற வழி, ராமானந்தரின் எஸ்டேட் பங்களாவிற்கு அழைத்துப் போய்விட்டது அந்த எஸ்டேட்டின் வாரீசுதாரரான பவானந்தத்திற்குரிய அந்தப் பங்களாவின் முன் வாசல் பக்கம் மஹேஸ்வரி வந்து நின்று கொண்டிருந்தாள்.

பழைய காலத்து ராஜா மாளிகையைப்போல கம்பீரமாகக் கட்டப்பட்டிருந்த பவானந்தத்தின் எஸ்டேட் பங்களா இருளிலே மூழ்கிக் கிடந்தது. ஜன்னல் கதவுகள் எல்லாம் அடைக்கப்பட்டிருந்தன. யாருமே குடியிருக்காத பாழடைந்த கட்டிடம்போல் அந்தப் பெரிய பங்களா காட்சியளித்தது. அந்தச் சமயத்தில் அவள் அருகில் இருந்த நாய் கும்மிருட்டில் எதையோ கண்டு உறுமியது. மஹேஸ்வரி கலவரத்தோடு சுற்றிலும் பார்த்தாள். இருட்டில் அவளுடைய கண்ணிற்கு எதுவும் தென்படவில்லை. ஒருக்கால் புதர் மறைவிலிருந்து ஏதாவது ஜீவராசி ஓடி இருக்கும் என்று நினைத்தாள் மஹேஸ்வரி. ஆனால் அந்த நாயின் பார்வையோ பவானந்தத்தின் பங்களாவை நோக்கியே நிலைக்குத்தாக நின்றது.

அதுவரை அந்த பங்களாவின் ஜன்னல்கள் மூடப்பட்டு இருக்கின்றன என்றும், கட்டிடமே இருள் அடைந்திருக்கிறது என்றும் நினைத்த மஹேஸ்வரி எதிரில் இருந்த ஒரு ஜன்னலில் இலேசாக ஒளி வீசுவதைக் கவனித்தாள். மெதுவாக அந்த ஜன்னலை நோக்கி நடந்தாள். தெரு வாயிற்கதவிலிருந்து மூன்றாவதாக இருந்தது அந்த ஜன்னல்! அந்த ஜன்னல் இடுக்கு வழியாக உள்ளே கவனித்த மஹேஸ்வரி, அந்த அறைக்குள் ஒரு சிறு மெழுகுவர்த்தி எரிந்து கொண்டிருப்பதைக் கவனித்தாள். அந்த அறையிலே எந்தவித மேஜை, நாற்காலியும் காணப்படவில்லை. அந்த சமயத்தில் அறைக்குள் ஏதோ மனித நடமாட்டம் ஏற்படுவதை மஹேஸ்வரி கவனித்தாள். இருட்டிலிருந்து மெதுவாக அந்த அறைக்குள் வந்து கொண்டிருந்த உருவத்தைப் பார்த்ததும் வீறிட்டு அலறவிருந்த மஹேஸ்வரி தன்னைக் கஷ்டப்பட்டுச் சமாளித்துக்கொண்டாள்.

இருளிலிருந்து ஒரு ராஷஸ உருவம் மெதுவாக வெளிப்பட்டு வெளிச்சத்தை நோக்கி வந்தது. சிங்கத்தைப்போல பிரம்மாண்டமான தலை படைத்த அந்த மனித உருவினன் அமானுஷ்யமான தோற்றத்தோடு பயங்கரமாக இருந்தான். அவன் உடலிலெல்லாம் காட்டு மிருகங்களைப்போல வெகு நீளமாக ரோமங்கள் வளர்ந்திருந்தன. இடுப்பில் மாத்திரம், கித்தான் துணியினால் தைக்கப்பட்ட ஒரு கால் சட்டையை அணிந்து கொண்டிருந்தான். அவனுடைய தசைநார்கள் எல்லாம் முறுக்கேறி இருந்தன. மஹேஸ்வரி அந்த ராஷஸ உருவத்தை வெகு நேரம் உற்றுப் பார்த்தாள். என்ன காரணத்தாலோ அவள் கலவரம் அடையவில்லை!

தன்னை யாரும் கவனிக்கிறார்கள் என்பதை அறியாத அந்த விசித்திர மிருக மனிதன், மெதுவாக அங்கு எரிந்துகொண்டிருந்த தீபத்தின் அருகில் வந்து அதைக் கையில் எடுத்து ஊதி அணைத்தான். அந்தச் சமயத்தில், அவனுடைய பயங்கரமான கண்களை மஹேஸ்வரி பார்த்தாள். அந்தப் பார்வையில் படர்ந்திருந்த சூன்யம், அவளை நிலைகுலையச் செய்தது. நாயின் கழுத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள் மஹேஸ்வரி, ஏனென்றால் அது திடீரென்று குலைத்து, தான் அங்கு இருப்பதைக் காட்டிக் கொடுத்துவிடுமோ என்ற திக் பிரமை அவளுக்கு இருந்தது.

அந்தச் சமயத்தில் அந்த நாய், அவள் பிடியிலிருந்து குபீரென்று பாய்ந்து, தெருப்பக்கத்து காம்பௌண்ட் வாசல் கேட்டை நோக்கி நடந்தது. யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது. மஹேஸ்வரி மீண்டும் அளவு கடந்த பீதிக்கு ஆளானாள் இருந்த போதிலும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, இருளை நோக்கி, யார் அது? நெருங்காதே! நெருங்கினால் என் கைத்துப்பாக்கியால் சுட்டுவிடுவேன்!" என்று மிரட்டினாள்.

ஆண்டவனுக்கு நன்றி — ஆண்டவனுக்கு நன்றி!" என்று உற்சாகமான குரல் வந்தது.

வந்து கெண்டிருந்தது தனது காதலன்தான் என்பதை அறிந்ததும், மஹேஸ்வரி அளவற்ற குதூகலத்தோடு, ஆ! பிரபாகர்; நீங்களா?" என்று அலறியபடி பாய்ந்தோடி அவரைக் கட்டிக் கொண்டாள்.

## *26. பேயடையும் பங்களாவில் ஒருநாள் வாசம்!*

சாதாரணமான சூழ்நிலையில் காதலர் இருவர் சந்திக்கிறார்கள் என்றால், மூன்றாவது நபர் அங்கே நிற்பதற்கு ரொம்ப சங்கடமாக இருக்கும்! அதுவும் பேராபத்திலிருந்து விலகி வந்த காதலி தன் காதலனைச் சந்திக்கிறாள் என்றால் அந்த இடத்தில் யார் நின்றாலும் நிற்காவிட்டாலும் இன்ஸ்பெக்டர் துரைசாமியால் நிற்க முடியவில்லை!

சரி, பிரபாகர்! நாம் இங்கு எதற்கு வந்தோமோ அந்த வேலையைக் கவனிக்கலாம்!" என்று கூறிவிட்டு இன்ஸ்பெக்டர் துரைசாமி மெதுவாக இருண்டு கிடக்கும் ராமானந்தர் எஸ்டேட்டின் பங்களாவை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

சட்டென்று மஹேஸ்வரி பதறியவளாய் அவர் முன்னால், ஓடி, “கொஞ்சம் பொறுங்கள்! உள்ளே யாரோ ஒருவன் இருக்கிறான்— விசித்திரமான ஒரு மனிதன்! — அவனை ஜன்னல் வழியாக நான் பார்த்தேன்!'' என்ற தடுமாறிக் கொண்டே கூறினாள்.

“யாராவது திருட்டுப் பயலாக இருக்கும்!" என்று பரம அலட்சியமாகக் கூறிய இன்ஸ்பெக்டர் துரைசாமி, ஜன்னல் கதவு எதுவும் திறந்து இருக்கிறதா?" என்று கேட்டார்.

எதுவும் திறக்கவில்லை?"

ஒருக்கால் காவல்காரனின் நண்பன் யாராவது வந்திருக்கலாம்" என்று பிரபாகர் கூறிவிட்டு வாசற் கதவை படபடவென்று தட்டினார். மஹேஸ்வரியின் உடல் இன்னும் நடுங்கிக்கொண்டுதானிருந்தது. சில வினாடிகளுக்கெல்லாம் யாரோ வீட்டுக்குள் நடக்கும் காலடிச் சப்தம் கேட்டது.

யார் அது?" என்று வீட்டிற்குள் இருந்து ஒரு குரல் வந்தது.

நான்தான் பிரபாகர்! இன்ஸ்பெக்டர் துரைசாமியும் வந்திருக்கிறார்! கதவைத் திற!" என்று கட்டளையிட்டார் பிரபாகர்.

உடனே தெருக் கதவு திறக்கப்பட்டது. தூக்கத்திலிருந்து அப்பொழுதுதான் விழித்து எழுந்துவந்த காவற்காரன், அவர்கள் முன்னால் நின்று கொண்டிருந்தான்.

உள்ளே வாருங்கள், சார்! என்ன விசேஷம்?" என்று பங்களா காவற்காரன் கேட்டான்.

உன்னோடு, உன் நண்பர்கள் யாராவது இந்தப் பங்களாவில் தங்கி இருக்கிறார்களா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

ஆச்சரியத்தால் பிரமித்துப்போன காவற்காரன், என்னுடனா சார்? இல்லையே! என் மனைவி மாத்திரம் தான் என்னோடு இருக்கிறாள்!" என்றான்.

இன்ஸ்பெக்டர் துரைசாமிக்கு ஒரே பிரமிப்பாக இருந்தது.

இருண்டு கிடந்த பங்களா பூராவும் விளக்குகளை எரியவிட்டு, மஹேஸ்வரி அந்த ராக்ஷஸ உருவத்தைப் பார்த்த அறைக்குள் எல்லோரும் நுழைந்தார்கள். அந்த அறைக் கதவு தாளிடப்பட்டுப் பூட்டப்பட்டிருந்ததால், அதைத் திறந்துகொண்டுதான் உள்ளே செல்ல வேண்டியிருந்தது. அறைக்குள் நுழைந்ததும் ஒரு மூலை பாக்கி விடாமல் பிரபாகர் துருவித் துருவிப் பார்த்தார். அந்த விசித்திர மனிதனைக் காணோம். ஒருக்கால், தனக்கிருந்த அளவு கடந்த பீதியில், மஹேஸ்வரி கற்பனை செய்து கொண்டிருப்பாளோ என்றுகூட நினைத்தார் பிரபாகர்.

ஆனால் அந்த அறையின் ஒரு மூலையில் கிடந்த ஒரு பெரிய கைத்தடி அவர் சந்தேகத்தைப் போக்கியது.

இந்தக் கைத்தடி உன்னுடையதா?" என்று காவற்காரனை நோக்கித் துப்பறியும் பிரபாகர் கேட்டார்.

இல்லை, சார்! நேற்றிரவு நான் இந்த அறைக் கதவைப் பூட்டும்போதுகூட, அந்தக் கைத்தடி இங்கே இருக்கவில்லை! நான் தினசரி ஒவ்வொரு அறையாகக் கூட்டுவது வழக்கம். நேற்றிரவு இந்த அறையைப் பெருக்கினேன்" என்றான் பங்களாவின் காவற்காரன்.

இந்த வீட்டிற்குள் ஏராளமான மாய வழிகள் இருக்குமோ?" என்று கிண்டலாகக் கேட்டார் பிரபாகர்.

அவர் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக அந்தக் காவற்காரன், ஆமாம், சார்! நிறைய வழிகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் அந்தச் சுரங்கப் பாதைகளை நான் பார்த்தது கிடையாது!" என்றான்.

பிரபாகர் அங்குள்ள சுவர்களையெல்லாம் தட்டிப்பார்த்தார். அவற்றில் சுரங்க வழிகள் இருப்பதாகத் தெரியவில்லை. அங்கு கிடந்த கைத்தடியை

வெளிச்சத்திற்கு எடுத்துச்சென்று, அதைக் கவனமாகப் பார்த்தார். அதில் ஈரமண் ஒட்டிக்கொண்டிருந்தது.

இதிலிருந்து என்ன நினைக்கிறாய்!" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

எனக்கு ஒன்றும் புரியவில்லை!" என்றார் பிரபாகர்.

தன் அருகே நிற்கும் மஹேஸ்வரியைப் பார்க்கும்போதெல்லாம், அவருக்குப் பரிதாபமாக இருந்தது. வெளியே குளிர்ந்த காற்று வீசாத போதிலும், அந்தப் பெண் பேதையின் உடல் வெடவெடவென நடுங்கிக்கொண்டுதானிருந்தது. அவளிடமிருந்து அன்றைய இரவு நிகழ்ச்சிகளை, விரைவில் புரிந்துகொள்ள வேண்டும் என்று துடியாகத் துடித்தார் பிரபாகர். அவள் பீதியால் பற்கள் கிட்டித்துப்போய் நிற்கிறாள் என்று நினைத்தார்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி அப்பங்களாவின் காவற்காரனிடம் கூறி கொஞ்சம் காபி தயாரிக்கச் செய்தார். அதை அருந்தியதும், மஹேஸ்வரிக்குக் கொஞ்சம் தெம்பு ஏற்பட்டது.

இன்ஸ்பெக்டர் துரைசாமியும், பிரபாகரும் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்க, மஹேஸ்வரி தனது பயங்கர அனுபவத்தைக் கூற ஆரம்பித்தாள். அதைக் கூறி முடிக்கும்வரையில், அவளைக் குறுக்கிட்டு யாரும் தொந்தரவு செய்யவில்லை.

முடிவிலே மஹேஸ்வரி, எதற்காக பேராசிரியர் ஆண்டியப்பர் என்னை அடைத்து வைத்தார் என்று தெரியவில்லை! அவருக்கு எதுவும் நேர்ந்துவிட்டதா?" என்று கலவரத்துடன் கேட்டாள்.

பிரபாகர் அதற்கு உடனே பதில் சொல்லவில்லை.

யாரோ மிகப் பயங்கரமாக அலறும் சப்தம் கேட்டது — அது என் ரத்தத்தைச் சில்லிட்டுப்போகச் செய்தது!" என்று நடுங்கிக் கொண்டே கூறிய மஹேஸ்வரி, அந்த அலறல் சப்தம் டாக்டர் ஆண்டியப்பருடைய மரண ஓலமாக இருக்குமா?" என்று பீதியுடன் கேட்டாள்.

இருக்கலாம்!" என்று தட்டிக் கழிக்கும் முறையில் பதில் சொன்ன பிரபாகர், பிச்சைக்கண்ணு இன்னும் சமாதி மேட்டில் இருக்கிறான் என்று சொன்னாயே? யாரோ உங்களைத் தொடர்ந்து வந்ததையும் இருவரும் பார்த்திருக்கிறீர்கள் — ஏதாவது போராட்டம் நடந்த சப்தம் உன் காதில் விழுந்ததா?" என்று கேட்டார்.

ஆமாம்" என்று தலை அசைத்த மஹேஸ்வரி, ஜன்னல் அருகே சென்று அவற்றைத் திறந்துவிட்டாள். பொழுது விடிந்துவிட்டது. பகல் வெளிச்சத்தில் அந்தப் பங்களாவைச் சோதனையிடுவது நிரம்ப சுலபமாக இருக்கும்.

ஜன்னல் வழியாகப் பார்த்த பிரபாகர் சிறிது தூரத்தில் இருளைக் கிழித்துக் கொண்டு ஒரு பிரம்மாண்டமான மோட்டார்கார் வருவதைக் கவனித்தார்.

போலீஸாரை வரச்சொல்லி இருந்தீர்களா?" என்று இன்ஸ்பெக்டர் துரைசாமியைக் கேட்டார் பிரபாகர்.

இல்லையே!" என்றார் துரைசாமி. அதற்குள் அந்தக் கார், பங்களாவின் முன்னால் வந்து நின்றது. அதற்குள்ளிருந்து வக்கீல் ராஜாங்கம் பிள்ளை கீழே இறங்கி வந்தார்.

ஒன்றும் விபரீதம் நடந்து விடவில்லையே? மஹேஸ்வரி இங்கேதானே இருக்கிறாள்?" என்று கவலையோடு கேட்டார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

ஆமாம்! அது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார் பிரபாகர்.

அவள் சௌக்கியமாக இருக்கிறாளா?" என்ற மீண்டும் வற்புறுத்திக் கேட்டார் வக்கீல்.

சௌகரியமாகவே இருக்கிறாள்! உள்ளே வாருங்கள்!" என்றார் பிரபாகர். அவருக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. வக்கீல் ஸார்! இங்கே நீங்கள் எதற்காக வந்தீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு வக்கீல் ராஜாங்கம் பிள்ளை உடனடியாகப் பதில் சொல்லவில்லை. தமது சட்டைப் பைக்குள் கையைவிட்டு ஒரு கடிதத்தை வெளியே எடுத்தார். அந்தக் கடிதம், சென்னையிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றின் விலாசம் அச்சிடப்பட்ட காகிதத்தில் எழுதப்பட்டிருந்தது. அந்தக் கையெழுத்து பிரபாகருக்கு அறிமுகமான கையெழுத்துதான்.

அன்புள்ள ராஜாங்கம் பிள்ளைக்கு,

நான் விவரமாக எல்லாவற்றையும் இந்தக் காகிதத்தில் எழுத முடியவில்லை. நீங்கள் உடனே என் எஸ்டேட் பங்களாவிற்குப்போங்கள். அங்கே என் உறவினளான மஹேஸ்வரி இருக்கிறாள். பேராபத்தில் சிக்கிக்கொண்டு இருக்கிறாள். அவளைச் சேர்ந்த எல்லோருக்கும் அபாயம் சூழ்ந்து இருக்கிறது — உங்களுக்கும் அபாயம் நேரிட இருக்கிறது. உடனே நீங்கள் என் பங்களாவிற்கு போய் நாளை இரவு முழுவதும் அங்கேயே மஹேஸ்வரியைத் தங்கியிருக்கச் செய்யுங்கள். நாளை விடியற்காலை 4 மணிக்கு நான் அவ்விடம் வருகிறேன். அதுவரை எக்காரணம் கொண்டும் என் பங்களாவைவிட்டு மஹேஸ்வரியை வெளியே விடாதீர்கள்!— பவானந்தம்."

மேற்கூறிய கடிதத்தைப் படித்து முடித்த பிரபாகர் வியப்புடன் வக்கீலை நோக்கி, இந்தக் கடிதம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?" என்றார்.

என் வீட்டுக் கதவை நடுராத்திரியில் யாரோ, 1 மணிக்கு வெகு வேகமாகத் தட்டினார்கள். நான் படுக்கையைவிட்டு எழுந்து சென்று கதவைத் திறந்து பார்த்த சமயத்தில், அங்கு யாரும் இல்லை. இந்தக் கடிதம் மாத்திரம் கிடந்தது. முதலில் இந்தக் கடிதம் ஏதாவது சூழ்ச்சியாக இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் நான் படுக்கைக்குச் சென்று கொஞ்ச நேரத்திற்கெல்லாம், டெலிபோன் மணி 'கண கண'வென்று ஒலித்தது. டெலிபோனில் பவானந்தமே பேசினான். எனக்கு அந்தக் கடிதம் கிடைத்ததா என்று கேட்டான். நான், ஆமாம் என்று பதில் சொல்லியதும், என்னை உடனே இந்த பங்களாவிற்கு வரச் சொன்னான். அதற்குமேல், அவனைக் கேள்வி கேட்பதற்குள், அவன் சட்டென டெலிபோன் கருவியை வைத்து விட்டான்!" என்றார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

பிரபாகர் மறுபடியும் கடிதத்திலுள்ள பவானந்தத்தின் கையெழுத்துக்களைப் பார்த்தார். மற்ற கடிதங்களில் காணப்பட்ட அதே கையெழுத்துத்தான்!

வக்கீல் ராஜாங்கம் பிள்ளை தொடர்ந்து, அதற்கு மேல் நான் மஹேஸ்வரியின் வீட்டிற்குப் போனேன். அவள் தாயார், தன் மகள் காணாமல் போய்விட்டதாகக் கூறினாள்!" என்றார்.

நீங்கள் போலீஸிற்குத் தகவல் கொடுத்தீர்களா?"

நான் கொடுக்கவில்லை! ஆனால் கொடுத்து இருக்க வேண்டும்! மஹேஸ்வரியின் தாயாரோ மஹேஸ்வரியைத் தேடிக்கொண்டு பிரபாகர் சென்று இருப்பதாகச் சொன்னாள். அதற்கு மேல் போலீஸிற்குத் தெரிவிப்பது அனாவசியம் என்று நான் தீர்மானித்துவிட்டேன்! உம்! மஹேஸ்வரி இங்கேதான் இருக்கிறாள்?" என்று கேட்டார் வக்கீல்.

பிரபாகர் உள் கதவைத் திறந்து மஹேஸ்வரியை அழைத்தார். மஹேஸ்வரி வெளியேவந்தாள். பயங்கரமான அந்த அனுபவத்திற்குப் பிறகு, அறிமுகமானவர்கள் முகத்தைப் பார்ப்பது அவளுக்கு எவ்வளவோ ஆறுதலாக இருந்தது. அந்தப் பயங்கர அனுபவத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியில், அவள் நரம்புகள் தளர்ந்து, ரொம்பவும் பலஹீனமாக இருந்தாள். வீட்டைச் சுற்றிலும் சோதனை இடுவதற்குப் போதிய வெளிச்சம் வந்துவிட்டது என்று கருதிய பிரபாகர். நேராகச் சமாதிமேட்டை நோக்கி நடந்தார். அது வழக்கம்போலவே பூட்டப்பட்டுக் கிடந்தது. அங்கு உள்ளே போய்ச் சோதனை இடுவதால் எந்த விதப் பயனும் ஏற்படாது என்று பிரபாகருக்குத் தெரியும். ஏனென்றால் அங்கிருந்து மஹேஸ்வரி தப்பிவந்த உடனேயே டாக்டர் ரஞ்சித் சிங் அங்கிருந்து புறப்பட்டிருப்பான்! மஹேஸ்வரி முதல்நாள் இரவு சுற்றி வந்த ரஸ்தாவின் வழியாகக் கொஞ்சதூரம் பிரபாகர் நடந்து சென்று பார்த்தார். ராக்ஷச மனிதனை எதிர்த்து நிற்பதற்காகப் பிச்சைக் கண்ணு பின் தங்கிவிட்டான்" என்று மஹேஸ்வரி கூறியது. அவருக்கு நினைவுவந்தது! அந்தப் போராட்டம் நடந்த அறிகுறி காணப்படும் என்று எதிர்பார்த்த பிரபாகருக்கு ஒரே ஏமாற்றமாக இருந்தது. பிச்சைக்கண்ணு கொல்லப்பட்டிருந்தால், அவன் உடல் எங்கே? வனாந்திரம் போல்

காட்சியளித்த அந்த இடத்தைச் சோதனை இடுவது அவ்வளவு சுலபமாக அவருக்குத் தோன்றவில்லை. ஆகவே வந்த வழியே மீண்டும் திரும்பி பவானந்தத்தின் எஸ்டேட் பங்களாவை அடைந்தார்.

பிரபாகர் திரும்பி வரும்போது, வக்கீல் ராஜாங்கம் பிள்ளையும் இன்ஸ்பெக்டர் துரைசாமியும் இரகசியமான குரலில் என்னவோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

பிரபாகர்! மஹேஸ்வரி பார்த்த அந்த ராக்ஷச மனிதன், இன்னமும் இந்த வீட்டிற்குள்தான் ஒளிந்து கொண்டிருக்கவேண்டும் என்று வக்கீல் ராஜாங்கம் பிள்ளை கருதுகிறார்! ஆனால் நான் அப்படி நினைக்க இல்லை!" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

இந்தப் பங்களாவில் எங்காவது சுரங்க அறை இருக்கிறதா?" என்று கேட்டார் பிரபாகர்.

அப்படிப்பட்ட அறை எதுவும் இந்தப் பங்களாவில் கிடையாது. அதெல்லாம் வேலைக்காரர்களின் கட்டுக்கதை. இந்தக் கட்டிடத்தைக் கட்டிய இஞ்ஜினியரிடமே நான் அதைப்பற்றி விசாரித்துவிட்டேன். அம்மாதிரி எதுவும் இல்லையாம்!" என்றார் வக்கீல் ராஜாங்கம்பிள்ளை.

பிரபாகர் அதற்கு ஒரு பதிலும் சொல்லவில்லை.

வக்கீல் சில வினாடிகள் கழித்து, இப்பொழுது என்ன செய்ய போகிறீர்கள்?" என்று கேட்டார்.

நான் வீட்டிற்குப் போகிறேன்! மஹேஸ்வரியை அவள் தாயாரிடம் அனுப்ப வேண்டும்" என்றார் பிரபாகர்.

மஹேஸ்வரி இங்கேயே தங்கி இருக்கத்தான் விரும்புவாள். ஒருக்கால் அவள் ஏதாவது ஆக்ஷேபித்தாலும், பவானந்தத்தின் கடிதம் எழுதப்பட்டு இருக்கும் நிலைமையைப் பார்த்தால், ஏதோ ஒரு பேராபத்து காத்திருப்பதைப் போலவே எனக்குத் தோன்றுகிறது!" என்று கவலையாகக் கூறினார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

அதாவது இன்னும் இருபத்திநாலு மணி நேரத்திற்கு இந்த பங்களாவை விட்டு மஹேஸ்வரி நகரவேண்டாம் என்று பவானந்தம் எழுதியிருக்கிறானே, அதையா சொல்கிறீர்கள்?" என்று கேட்டார் பிரபாகர்.

ஆமாம்! இந்த எச்சரிக்கையை நான் ரொம்ப முக்கியமானதாகக் கருதுகிறேன்! நமக்குப் பின்னால் ஏதோ ஒரு பேராபத்துக் காத்திருக்கிறது! ஆகவே நாளைக் காலை வரை, எல்லோரும் இந்த பங்களாவிலேயே தங்கிவிடலாம். இன்ஸ்பெக்டர் துரைசாமி ஒரு லாரி நிறையப் போலீஸாரை அழைத்து வந்து, இந்த இடத்தைக் காவல் புரிய ஏற்பாடு செய்யட்டும்! நாளை விடியற்காலை சரியாக நாலு மணிக்குப் பவானந்தம் இந்த பங்களாவிற்கு வருவதாக எழுதியிருக்கிறான். அப்போது மஹேஸ்வரியும் இங்கு இருக்க வேண்டுமென விரும்புகிறான். அதில் முக்கியமான மர்மம் ஏதாவது வெளிப்படலாம்!" என்றார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

பிரபாகர் அவரையே வெறிக்கப் பார்த்தார். நீங்கள் உண்மையிலேயே அம்மாதிரி செய்யவேண்டும் என்று விரும்புகிறீர்களா?" என்று கேட்டார்.

அவரை வக்கீல் ஒருமுறை விசித்திரமாக நோக்கிவிட்டு, நிச்சயமாக! இன்ஸ்பெக்டர் துரைசாமியும், அம்மாதிரியே அபிப்பிராயப்படுவார்! இந்தக் குடும்பத்தில் நடந்த இரண்டொரு அபாக்கியமான நிகழ்ச்சிகளை நீங்கள் அறிந்திருந்தால், நான் சொல்வதை ஒப்புக் கொள்வீர்கள். இந்த பங்களாவிற்குரிய ராமானந்தரைத் தவிர, அவருக்கு முன்னால் இருந்த ஐந்து பிரபுக்களும் படுகொலை செய்யப்பட்டு இறந்து போனார்கள். ராமானந்தருக்கு வாரிசுதாரரான பவானந்தம் இந்த பங்களாவிற்குள் தங்காமல் வெளிநாடுகளுக்கு ஓடியதே அந்த பயத்தினால் இருக்காலாம்! அக் கொலைகளில் ஒவ்வொரு கொலைக்கு முன்பும், இப்பொழுது நடந்ததைப் போலவே, விசித்திரமான நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன!" என்றார்.

பிரபாகர் புன்னகையுடன், நாமெல்லாம் இந்த பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவே!" என்று பரிகாசமாகக் கூறினார்.

இந்த நேரத்தில், நாம் எல்லோருமே, அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே நம்மைக் கருதிக் கொள்ள வேண்டும்! பல வருடங்களாக,

பவானந்தம் வீடு திரும்பாமல் இருப்பது, ஏதோ ஓர் விபரீத காரணத்தால்தான். அதை நான் இப்பொழுது நன்றாக உணருகிறேன். அவனை ஊர் சுற்றுவதற்கு நான் அனுமதித்ததே பெரும் முட்டாள்தனம். எவ்வளவோ விஷயங்கள் நடந்து, அவன் மனப்போக்கையே பாதித்திருக்கலாம்!" என்றார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

பிரபாகர், தமக்குப் பவானந்தத்தின் மர்ம மறைவைப் பற்றி எதுவும் தெரியும் என்று கொஞ்சங்கூடக் காட்டிக்கொள்ளவில்லை.

வக்கீல் சார்! மற்றதெல்லாம் இருக்கட்டும்! பவானந்தத்திற்கு அடுத்த வாரிசான மஹேஸ்வரியை இந்தக் கொலைகார பங்களாவில் இருபத்திநாலு மணி நேரம் தங்குவதற்கு நான் அனுமதிக்க முடியாது" — என்று ஆரம்பித்தார் பிரபாகர்.

நான் அதையும் நினைத்தேன். அவள் தாயாரை இங்கு வரவழைக்கலாம் என்பதுதான் என் எண்ணம். இங்கு ஏராளமான கட்டில்களும், படுக்கை முதலியனவும் இருக்கின்றன. யாராவது இரண்டு வேலைக்காரர்களை இங்கு வந்து இருக்கச்சொன்னால், ஒரு நாள் பொழுதை ஓட்டி விடலாம்" என்றார் வக்கீல்.

பிரபாகரோ இன்ஸ்பெக்டரின் முகத்தைப் பார்த்தார். அவர் ஒப்புக்கொண்டு விட்டதாகவே பிரபாகருக்குத் தோன்றியது.

நான் இன்று பூராவும் இங்கேயே தங்கிவிடத் தீர்மானித்து விட்டேன். இந்த விவகாரம் எவ்வளவு தூரம் செல்கிறது என்று நான் புரிந்து கொள்ள வேண்டும்! குறித்த நேரத்தில் பவானந்தம் இங்கு வந்தால் பல மர்மங்கள் வெளிப்படும்! மஹேஸ்வரி உள்பட நாமெல்லாம் இந்தப் பங்களாவில் குறித்த காலம் வரை தங்கியிருப்போம்!" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி. மஹேஸ்வரி கூட, அதே முடிவுக்கு வந்தது, பிரபாகருக்கு ஆச்சரியத்தை அளித்தது. ஆனால் அவளுக்கு இருந்த களைப்பில், மஹேஸ்வரி அந்த இடத்திலேயே படுத்து உறங்கி விட்டுச் செல்லவே விரும்பினாள். அவளால் ஒரு அடி கூட அப்பால் எடுத்து வைக்க முடியாது போலிருந்தது.

இன்ஸ்பெக்டர் துரைசாமி தனியாகப் பிரபாகரை ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்று, இந்த ஏற்பாடு நமக்கு ரொம்ப சௌகர்யமானது. எனக்கும் கொஞ்ச நேரம் தூங்குவதற்கு அவகாசம் கிடைக்கும்!" என்றார்.

பிரபாகர் ஒரே பிடிவாதமாக அதை மறுத்தார். கடைசியாக இன்ஸ்பெக்டர் துரைசாமி நிரம்பவும் வற்புறுத்திக் கூறியதின் பேரில் அந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொண்டார்.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளை, தமது காரில் சென்று மஹேஸ்வரியின் தாயாரை அங்கு கூட்டி வருவது என்று முடிவு செய்யப்பட்டது.

மஹேஸ்வரி, ஆபத்திலிருந்து தப்பி விட்டாள் என்ற செய்தியை முன்னமேயே, அவள் தாயாருக்கு ஆள்மூலம் தெரிவித்து விட்டார் பிரபாகர்.

மறுபடியும் டெலிபோன் மூலம் அந்த அம்மாளிடம் விவரங்களைச் சொல்லிவிட்டு, அவளை அழைத்து வர வக்கீல் ராஜாங்கம் பிள்ளை அங்கு வந்திருப்பதாகக் கூறினார்.

மஹேஸ்வரியின் தாயாருக்கு மனதின் பதைபதைப்பு அதிகமாக இருந்தது. உயிரோடு மகளின் முகத்தைப் பார்க்க உடனே புறப்பட்டு வந்துவிட அந்த அம்மாள் துடித்தாள். அவளை அழைத்து வர வக்கீல் ராஜாங்கம் பிள்ளை அவள் வீட்டிற்கு வரும் வரையில் அங்கேயே காத்திருக்கும்படி, பிரபாகர் நிரம்பவும் வற்புறுத்திக் கூற வேண்டியிருந்தது!

## *27. பவானந்தம் வரட்டும்!*

இன்ஸ்பெக்டர் துரைசாமி அந்தப் பயங்கர பங்களாவிலே பவானந்தத்தின் கடிதத்தில் குறிப்பிட்டபடி ஒருநாள் பொழுது தங்கிவிட தீர்மானித்ததற்கும் வேறொரு காரணம் இருந்தது. அந்தப் பங்களாவைப் போல் மற்றொரு பயங்கர வீடான பரலோக பவனத்தைச் சோதனையிட்டு, அங்கு குடியிருந்த டாக்டர் ரஞ்சித் சிங்கைக் கைது செய்யத் தீர்மானித்திருந்தார். ஆனால் அங்கிருந்து சென்று பரலோக பவனத்தை முற்றுகையிட்டபொழுது ரஞ்சித் சிங் அகப்படவில்லை. அவர் தப்பி ஓடிவிட்டார். அந்த வீட்டில் யாரோ ஒரு கிழவன் இருந்தான். அவனைக் கேட்டதற்கு, ரஞ்சித் சிங் என்கிற பேர்வழி முதல் நாள்

இரவே தன் வீட்டிற்கு வந்து சாவியைக் கொடுத்துவிட்டுப் போனதாகவும், தான் திரும்பிவருவதற்கு ஒரு வாரம் ஆகும் என்று கூறியதாகவும் சொன்னான். அந்த வீட்டைப் போலீஸார் நன்றாகச் சோதனையிட்டார்கள். எந்தவிதப் பலனும் கிடைக்கவில்லை.

டாக்டர் ரஞ்சித் சிங்கைக் கைதுசெய்ய நமக்குப் போதிய சாட்சியமில்லை என்று நினைக்கிறேன்!" என்றார் ஓர் அதிகாரி.

அவனைச் சமாதிகளுக்கு இடையே, விடியற்காலை இரண்டு மணிக்கு மஹேஸ்வரி பார்த்திருக்கிறாள். அந்த நேரத்தில் விஞ்ஞானிக்கு அங்கு என்ன வேலை? அது ஒன்றே போதும் டாக்டர் ரஞ்சித் சிங்கைக் கைது செய்வதற்கு!" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

ரஞ்சித் சிங்கின் வீட்டைச் சோதனை செய்து முடிந்து எல்லோரும் வெளியே நின்று கொண்டிருக்கும் போது பிரபாகர் அங்கு வந்தார். இன்ஸ்பெக்டர் துரைசாமியைப் பார்த்து, என் காரில் ஏறிக்கொள்ளுங்கள், நேராகப் பவானந்தத்தின் எஸ்டேட் பங்களாவிற்குச் செல்லலாம். அங்கே மஹேஸ்வரிக்குத் துணை வைத்துவிட்டு வந்தோம்! நம்மை எதிர்நோக்கித் தவித்துக் கொண்டிருப்பாள்! மஹேஸ்வரியின் தாயார் அங்கு முன்பே சென்று விட்டாளாம்!" என்றார்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி காரில் ஏறியபடியே, ரஞ்சித் சிங் தப்பி ஓடி விட்டானே!" என்று கவலையோடு கூறினார்.

அவன் ஓடியது கூட பெரிது அல்ல! அந்தச் சாவியையும் தூக்கிக்கொண்டு ஓடி விட்டானே!" என்று வருத்தப்பட்டார் பிரபாகர்.

சாவியா?"

ஆமாம்! ஐந்தாவது விசித்திரச் சாவி அவனிடம்தான் இருக்கிறது. ஆறாவது சாவி பவானந்தத்திடம் இருக்கக்கூடும். ஏழாவது விசித்திரச் சாவி இனந்தெரியாத ஒரு மாய மனிதனிடம் இருக்கிறது, என்று நினைக்கிறேன்!" என்றார் பிரபாகர்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி ஒன்றும் பேசாமல் கொஞ்சநேரம் மௌனமாக இருந்தார். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவர் போல், பிச்சைக்கண்ணு எங்கே?" என்று கேட்டார்.

கடவுளுக்குத்தான் தெரியும்! முதலில் இந்தக் கொலைகளைச் செய்தது அவனாகத்தான் இருக்கும் என்று நான் சந்தேகப்பட்டேன். ஆனால் கொலை செய்யும் அளவுக்கு அவன் துணியக் கூடியவன் அல்ல. அதோடு மஹேஸ்வரிக்கு அவன் ரொம்பவும் உதவி செய்திருக்கிறான்" என்றார் பிரபாகர்.

துரைசாமி லேசாகச் சிரித்தார்.

அவர்கள் இருவரும் போலீஸ் காவலுள்ள பவானந்தத்தின் பங்களாவை அடையும்போது, மஹேஸ்வரியின் தாயாரை அங்கே காணோம்! அவளை அழைத்து வந்து விட்டதாகவும், பங்களாவின் மாடியில் தன் மகளுடன் ஓர் அறையில் இருப்பதாகவும் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை கூறினார்.

அதிகப்படியான போலீஸாருக்கு ஏற்பாடு செய்து விட்டீர்களா?" என்று கேட்டார் ராஜாங்கம் பிள்ளை.

பன்னிரெண்டு ஜவான்கள் இன்றிரவு துப்பாக்கிகள் சகிதம் இங்கு பாரா கொடுப்பார்கள்! ஆனால் விடியற்காலை நாலு மணிக்கு பவானந்தம் இங்கு வரும்போது அவனைச் சுட்டுத் தள்ளி விடாமல் உள்ளே அழைத்து வர வேண்டும்! நீங்கள்தான் அவனுடைய அங்க அடையாளங்களைச் சொல்ல வேண்டும், வக்கீல் சார்! ஏனென்றால், பவானந்தம் என்கிற பேர்வழி எப்படியிருப்பான் என்றே எங்களுக்குத் தெரியாது!" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

இன்ஸ்பெக்டர்! எனக்கு ரொம்பவும் கவலையாக இருக்கிறது. நண்பர் பிரபாகர், நான் அனாவசியமாக அலட்டிக் கொள்வதாக நினைக்கிறார். ஆனால் நாளைக் காலையில்தான் எனக்கு முழு உயிரும் வரும்!" என்றார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

அதைச் சொல்லிவிட்டு வக்கீல் அவ்வறையில் குறுக்கும் நெடுக்குமாக நிம்மதியில்லாமல் நடக்க ஆரம்பித்தார்.

பவானந்தம் சென்னையில் இல்லை! எப்படி இருந்தாலும், அவன் நிச்சயமாக அநத் ஹோட்டலில் இல்லை! இன்று காலை, நான் அங்கு போய் விசாரித்தேன். அங்கு இல்லை என்று கூறினார்கள். அவன் அங்கு தங்கியதே இல்லையாம்!" என்றார் ராஜாங்கம் பிள்ளை.

எல்லாம் பெரிய மர்மமாகவே இருக்கிறதே!" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

எனக்கும் போதும் போதும் என்றாகிவிட்டது. இந்த வேலையை ராஜிநாமா செய்துவிடுகிறேன் என்று மிரட்டியும் பார்த்தேன். சொத்துக்குரிய பவானந்தம் என்னிடம் சிக்கினால், எல்லாவற்றையும், இந்தாடாப்பா, தம்பி!" என்று அவனிடம் ஒப்புவித்துவிட்டு இவ்விவகாரங்களிலிருந்தே என் தலையைக் கழட்டிக்கொள்ளலாம் என்று நினைத்தேன். ஆனால் பவானந்தம் என்னிடம் சிக்கினால்தானே?" என்றார் வக்கீல்.

நேற்றிரவு அவன் டெலிபோனில் பேசினான் என்று சொன்னீர்களே! அவன் எங்கிருந்து பேசினான்? அதைச் சொல்லவில்லையா?" என்று கேட்டார் பிரபாகர்.

அவன் சொல்லவில்லை! எங்காவது ரயில்வே ஸ்டேஷனிலோ வீதி முனைகளிலோ அமைக்கப்பட்டிருக்கும் டெலிபோன் மூலமாக அவன் பேசியிருக்கலாம்!"

அந்தச் சமயத்தில் மஹேஸ்வரியின் தாயார் மாடியிலிருந்து கீழே இறக்கி வந்தாள்.

இந்த விபரீதமெல்லாம் என்னவென்றே எனக்குப் புரியவில்லை. நல்ல வேளையாக என் மகள் உயிர் பிழைத்தாள்! — அந்த டிரைவர் என்ன ஆனான்?" என்று அந்த அம்மாள் பீதியோடு கேட்டாள்.

டிரைவர் பிச்சைகண்ணுவைப் பற்றிக் கேட்கிறீர்களா? மஹேஸ்வரியை விட்டுப் பிரிந்ததிலிருந்து பிச்சைக்கண்ணுவை யாருமே பார்க்கவில்லையாம்!" என்றார் பிரபாகர்.

அவனுக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டிருக்குமோ?" என்று கேட்டாள் மஹேஸ்வரியின் தாயார் நடுக்கத்தோடு.

எனக்குத் தெரியாது. நான் அப்படி நினைக்கவில்லை. பிச்சைக்கண்ணுவிற்குத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் சக்தி இருக்கிறது. ஏதாவது தகராறு எற்பட்டால், அவன்தான் ஜெயிப்பான்!" என்றார் பிரபாகர்.

அன்று மாலை; டாக்டர் ரஞ்சித் சிங்கைப் பற்றிப் புதிய தகவல் ஒன்று கிடைத்தது. அவரை வில்லிவாக்கம் அருகே யாரோ பார்த்ததாகவும், அவர் வெறி கொண்டவர்போல் தமது மோட்டார் காரை ஓட்டிக்கொண்டு வந்து ஒரு பக்கத்தில் நிறுத்திவிட்டு தமக்குத்தாமே ஆத்திரமாகப் பேசிக் கொண்டதாகவும், அதன் பிறகு அங்கிருந்து புறப்பட்டு எங்கோ சென்றுவிட்டதாகவும் அந்தத் தகவல் கூறியது.

பிரபாகரோ அந்தப் பவானந்தத்தின் பங்களா முழுவதையும் சோதனை போட்டார். பவானந்தத்தின் கடிதப்படி 24 மணி நேரத்திற்குள் அப்பங்களாவில் ஏதோ ஒரு விசித்திரம் நடைபெறப்போகிறது என்று யாரும் ஊகிக்கக்கூடியதுதான்! மாயமாகக் கொலைகள்கூட நடக்கலாம்! எல்லோருக்குக்கும் படுக்கைக்காக ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த இடங்களையெல்லாம் பிரபாகர் மிக ஜாக்கிரதையாகப் பரிசோதித்தார். மாடியில் வலது பக்கம் இருந்த ஒரு பெரிய அறைதான் மஹேஸ்வரியும் அவள் தாயாரும் படுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு எதிராக இருந்த மற்றொரு பெரிய அறையில்தான் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை படுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த அறைகளிலெல்லாம் அனாவசியமான மரச் சாமான்கள் எதுவும் இல்லாமல், போலீஸார் காலிசெய்துவிட்டனர். அறை ஜன்னல் கம்பிகளெல்லாம் வலுவாக இருக்கின்றனவா என்று பலமுறை சோதித்துப் பார்த்தார் பிரபாகர். அறைச் சுவற்றில், இரகசியப் பாதை எதுவும் இருக்கிறதா என்றும் வெகு நேரம் தட்டிப் பார்த்தார். எதுவுமே இல்லை. ஒருவாறு மனத்திருப்தி அடைந்து வெளியே வந்தார் பிரபாகர்.

அந்தச் சமயத்தில் இன்ஸ்பெக்டர் துரைசாமி அங்கே வந்தார்.

இந்த அறையில்தான் பெண்கள் எல்லாம் படுக்கப் போகிறார்களோ? பந்தோபஸ்தான அறைதான்! வெளியே வராந்தாவில் ஒரு போலீஸ் ஜவானைக் காவலுக்கு வைக்கப்போகிறேன். அவனை மீறிக் கொண்டு, யாரும் உள்ளே

நுழைய முடியாது — இன்றிரவு எந்தத் தொந்தரவும் ஏற்படாது என்றே நினைக்கிறேன். ஒருக்கால் பவானந்தம் வரும்போது, தன்னோடு எதுவும் ‘தொந்தரவு’கொண்டு வருவாரோ என்னவோ!" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

காலையில் ஆறு மணிக்கு மேல் ஏழு மணிக்குள் பவானந்தம் வரக்கூடும் என்கிறார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை!" என்றார் பிரபாகர்.

வரட்டும்; வரட்டும்!" என்று தலை ஆட்டினார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

## *28. துரைசாமிக்குத் துணிச்சல்! காதலர்களுக்குக் கலக்கம்!*

பவானந்தத்தின் மாளிகையில், பிரபாகர் பார்த்துப் பரிசோதிக்காத இடம் ஒன்றே ஒன்றுதான் இருந்தது. அந்த இடத்திற்கு காவற்காரனை அழைத்துக்கொண்டு பார்வையிடச் சென்றார் பிரபாகர். அந்த இடம்தான் பவானந்தத்தின் மாளிகையிலிருந்த, பாதாளச் சுரங்க அறைகள். அச்சுரங்கங்களுக்குச் செல்வதற்கு சமையற்கட்டில் இரகசியமான படிக்கட்டு ஒன்று இருந்தது.

கீழ்த் தளத்து அறைகளுக்கு மின்சார விளக்குகள் போடப்பட வில்லை. ஆனால் பிரபாகர் தம் கையிலெடுத்துச் செல்லும் லாந்தர் விளக்கின் மெல்லிய வெளிச்சத்தில்தான் அங்கிருந்த சாமான்களைப் பரிசீலனை செய்தார். சாமான்களைப் போட்டு வைப்பதற்காகத்தான், அந்த அறைகளைக் கட்டினார்களாம். ஒரே ஒரு அறையில் மாத்திரம் ஏராளமான துப்பாக்கித் தோட்டாக் கருவிகள் போடப்பட்டு பூட்டி வைத்துக் கிடந்தன. மற்ற அறைகளில் ஒன்றையும் காணோம். அங்கு ஒரு சிறிய ஹாலும் இருந்தது. அந்த ஹாலில் மூன்று பெரிய பீப்பாய்கள் கிடந்தன. அப் பீப்பாய்கள் சில தினங்களுக்கு முன்னால்தான் அங்கு வந்து சேர்ந்தன என்று காவற்காரன் கூறினான்.

காவற்காரனை ஏதோ ஒரு சாக்குச் சொல்லி, மேலே அனுப்பி வைத்த பிரபாகர், அவன் சென்றதும், அந்தப் பீப்பாய்க்குள் என்ன இருக்கிறதென்று

ஆராய்ச்சி செய்து பார்த்தார். பீப்பாய் மூடியை இலேசாகக் கழற்றிவிட்டு முகர்ந்து பார்த்ததும் அதற்குள் பெட்ரோல் இருக்கின்றதென்று தெரிந்து விட்டது.

அந்தப் பரிசோதனை பிரபாகருக்குப் பலவிதத்தில் திருப்தி அளித்தது. கட்டிடத்தின் பின்புறமாகச் சென்று, பல இடங்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு கால்நடையாக அந்த மாளிகையின் கிழக்குப் பக்கத்திலுள்ள புதர் வழியாக உள்ளே பிரவேசித்தார். அங்கிருந்து சாப்பாட்டுக் கூடத்தை நோக்கி நடந்தார்.

நெருக்கடியான நேரம் நெருங்கிவிட்டது. சூழ்நிலைகள் எல்லாம் புத்துயிர் பெற்றிருக்கின்றன. நிச்சயம் இன்றிரவு பவானந்தத்தின் மறைவைப்பற்றிய மர்மம் வெட்டவெளிச்சமாகிவிடுமென்று நினைத்தார் பிரபாகர். சாப்பாட்டுக் கூடத்தருகே மஹேஸ்வரி நின்று கொண்டிருந்தாள். அவளிடம் பேச்சக் கொடுத்தார் பிரபாகர்.

ஓ! நன்றாகத் தூங்கினேனே!" என்று உற்சாகமாகப் பதிலளித்த மஹேஸ்வரி, பிரபாகர், உங்களுக்கு நான் ரொம்பத் தொந்திரவு கொடுத்துவிட்டேன்!" என்றாள்.

எனக்கா? — மற்றவர்கள் எனக்குக் கொடுக்கு அளவிற்கு நீ எனக்குத் தொந்தரவு கொடுக்கவில்லை மஹேஸ்வரி! ஆனால் அளவற்ற கவலையைத்தான் கொடுத்திருக்கிறாய்! — அது இயற்கையும்கூட!" என்றார் பிரபாகர்.

ஒரு வினாடி மௌனம் நிலவியது.

நீங்கள் ஈடுபடும் ஒவ்வொரு வழக்கிலும் இப்படித்தான் கவலைப் படுவீர்களோ?" என்று அவர் முகத்தைப் பார்க்காதபடி வேறு எங்கோ பார்த்தபடி கேட்டாள் மஹேஸ்வரி.

ம்...இது.........ம்........இந்த விவகாரம் எனது சொந்த விவகாரம் போ! நீ பாதுகாப்பாக, எந்தவித ஆபத்தும் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதுதான் என் வாழ்வின் லட்சியம்!" என்றார் பிரபாகர்.

மஹேஸ்வரி அவரைக் கூர்ந்து பார்த்தபடி, நான் இப்பொழுது பந்தோபஸ்தாக இருக்கிறேனா?" என்று கேட்டாள்.

பிரபாகர் அதற்குப் பதில் சொல்லவில்லை!

மஹேஸ்வரி மீண்டும், இன்றிரவு நாம் எங்கே தங்கப் போகிறோம்?" என்று கேட்டாள்.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளை நினைப்பது என்ன என்றால் — என்று ஆரம்பித்தார் பிரபாகர்.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளை ரொம்பவும் பீதி அடைந்திருக்கிறார். அக் கொலைக்காரர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் தன்னைத்தான் அடுத்தபடியாக குறி வைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறார்!" என்றாள் மஹேஸ்வரி.

யாரை நினைத்து அவர் பயப்படுகிறார்?" என்று கேட்டார் பிரபாகர்.

டாக்டர் ரஞ்சித் சிங்கை நினைத்து!" என்று கூறும்பொழுதே மஹேஸ்வரியின் உடல் நடுங்கியது.

பிரபாகர் வியப்போடு அவளைப் பார்த்தபடி, நீ எதனால் அப்படிச் சொல்கிறாய்? வக்கீல் ராஜாங்கம் பிள்ளைஅப்படி உன்னிடம் கூறினாரா?" என்று கேட்டார்.

'ஆம்'என்று தலையசைத்த மஹேஸ்வரி, ஆண்களெல்லாம், மற்றொரு ஆணிடம், தான் சொல்லக் கூச்சப்படும் தகவலை ஒரு பெண்ணிடம் தாராளமாகச் சொல்லுவார்கள்! டாக்டர் ரஞ்சித் சிங்கின் பிடியில் பவானந்தம் அகப்பட்டுக்கிடக்கிறாரென்று வக்கீல் ராஜாங்கம் பிள்ளை சந்தேகிப்பது உங்களுக்குத் தெரியுமா? இன்னும் அவர் என்ன நினைக்கிறாரென்றால் — அதை அவரே உங்களிடம் சொல்லுவார். நாம் எதனால் இந்த மாளிகையில் தங்கி இருக்கிறோமென்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள் மஹேஸ்வரி.

எனக்கு வக்கீல் ராஜாங்கம் பிள்ளைக்கு வந்த ஒரு கடிதம்தான் தெரியும்!" என்றார் பிரபாகர்.

நாம் இங்கே தங்கியிருப்பதற்குக் காரணம், இந்த மாளிகை ஒரு கோட்டையைப் போன்றது — இந்தக் கோட்டையில்தான் அந்தக் கொலைகாரர்களின் அட்டூழியம் பலிக்காது. என்னை எதற்காக இங்கே தங்கச் சொல்லுகிறார் என்று உங்களுக்குத் தெரியுமா? — அது எனக்குத் தெரியாது. ஆனால் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை நான் கண்டிப்பாக இங்கே தங்கத்தான் வேண்டும் என்கிறார். என் விஷயத்தில் பவானந்தத்திற்கு அவ்வளவு அக்கறை இருக்க வழியில்லை!"

அவன் உன் பங்காளி!" என்றார் பிரபாகர்.

அதனால்?"

அதனால், பவானந்தம் இறந்தால், நீதான் சட்டப்படி இந்தச் சொத்திற்கு வாரிசாகப் போகிறாய்!" என்றார் பிரபாகர்.

அளவுகடந்த ஆச்சரியத்தினால் மஹேஸ்வரியால் பேசக்கூட முடியவில்லை. ஆனால் அது நிச்சயமில்லை என்றும், பவானந்தம் ஒருக்கால் மணம் செய்து கொண்டிருக்கலாமென்றும் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை குறிப்பாகச் சொன்னார். அதோடு நான் அவ்வளவு நெருங்கிய உறவும் இல்லை!"

நெருங்கிய உறவாக இல்லாவிட்டாலும், பவானந்தத்தின் உறவு என்ற முறையிலே, நீ ஒருத்திதான் இப்போது மிஞ்சி இருக்கிறாய் மஹேஸ்வரி! அதனால்தான் உன்னைச் சுற்றி இவ்வளவு அபாயங்கள் நடமாடுகின்றன. கொலையுண்ட டாக்டர் ஆண்டியப்பர் ஏதோ ஒரு கடிதத்தை நீட்டி, உன்னிடம் கையெழுத்துக் கேட்டான் என்றாய். அந்தக் கடிதம் இந்தச் சொத்து சம்பந்தமாக எழுதப்பட்ட உயில் பத்திரம் போன்ற ஏதாவதொன்றாகத்தான் இருக்கும். இந்த விவகாரங்களில் டாக்டர் ஆண்டியப்பன் முழுக்க முழுக்க ஈடுபட்டிருக்கிறான்!" என்றார் பிரபாகர்.

பவானந்தம் இப்பொழுது எங்கே இருக்கிறார்?"

எனக்குத் தெரியாது. என்னால் ஓரளவு யூகிக்க முடிகிறது — அந்த யூகம் என்னை அச்சமடையச் செய்கிறது!" என்றார் பிரபாகர். மஹேஸ்வரியின் கண்கள் அகல விரிந்தன. அப்படியானால், அப்படியானால் அவர் இறந்திருப்பார் என்கிறீர்களா?"

இறந்தும் இருக்கலாம்! ஆனால் எனக்கு நிச்சயமாகத் தெரியாது. அப்படி இறந்திருந்தால் அதுவும் ஒருவிதத்தில் நல்லதுதான்!" என்றார் பிரபாகர்.

அதற்குள் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை அந்த இடத்தை நோக்கி வந்தார். அவர் முகத்தில் கட்டுமீறிய கலவரம் குடிகொண்டிருநத்து. வாத நோயால் அவஸ்தைப்படுபவர்போல் வக்கீல் காணப்பட்டார்!

எத்தனை மணிக்குப் பவானந்தம் இங்கு வருவார்?" என்று கேட்டார் பிரபாகர்.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளை வேதனையோடு தலையசைத்தபடி, அவன் வந்தால் நான் எவ்வளவோ மகிழ்ச்சி அடைவேன்! இப்பொழுதிருக்கும் நிலையில், அவன் வருவானா என்று எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. நாளைக் காலை என்ன செய்தி நமக்குக் கிடைக்குமோ?...ம்! ..... டாக்டர் ரஞ்சித் சிங்கைப் பற்றி வேறு தகவல் ஒன்றும் கிடைக்கவில்லையா?" என்று கேட்டார்.

ஒன்றுமில்லை! போலீஸார் அவனைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அவன் சுலபத்தில் தப்பிவிட முடியாது!" என்றார் பிரபாகர்.

அந்தச் சமயத்தில் சாப்பாடு தயாராக இருக்கிறதென்று பங்களாவின் வேலைக்காரன் அறிவித்தான்.

சாப்பாடு முடிந்ததும், மஹேஸ்வரியை பிரபாகர் அழைத்துக் கொண்டு தோட்டத்தில் உலாவினார். மஹேஸ்வரியின் தாயார் வெகுநேரம்பரை தன் மகள் வரவிற்காகக் காத்துக்கொண்டு தோட்டத்தில் போடப்பட்டிருந்த ஒரு சலவைக் கல் பெஞ்சியில் உட்கார்ந்திருந்தாள். மஹேஸ்வரி தனியாக அவளிடம் திரும்பிவந்து சிறிது நேரம் என்னவோ பேசினாள். பிறகு தாயாரும் மகளும் பிரபாகரிருந்த இடத்தை நோக்கிச் சென்றார்கள்.

வீட்டிற்கு முன்புறத்திலே வக்கீல் ராஜாங்கம் பிள்ளையும் இன்ஸ்பெக்டர் துரைசாமியும், பழைய கால வழக்குகள் பலவற்றைப் பற்றி சுவாரசியமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். வெகு நேரம் கழித்து பிரபாகர் அங்கு வந்தார். வானத்திலே இலேசாக மேகங்கள் சேர்ந்து கொண்டிருந்தன. இன்னும் ஒருமணி நேரத்தில் மழை வந்துவிடுமென்று நினைத்தார் பிரபாகர்.

என்னோடு சமாதி மேடுவரையில் யாராவது வருகிறீர்களா?" என்று கேட்டார் பிரபாகர்.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளைக்கு அந்த யோசனை அவ்வளவு உற்சாகமாகப் படவில்லை. நிரம்ப இருட்டி விட்டது — அதோடு இந்தப் பெண்களையும் நாம் தனியாக விட்டு விட்டுப் போகக்கூடாது!" என்று கலவரத்தோடு கூறினார்.

எங்கள் ஆட்கள் அவர்களைக் கவனித்துக் கொள்வார்கள்! அதோடு ரொம்ப அசதியாக இருந்ததால், மஹேஸ்வரியும் அவள் தாயாரும் படுக்கைக்குப் போய்விட்டார்கள்!" என்றார் பிரபாகர்.

வக்கீலோ அம்மாளிகையை அண்ணாந்து பார்த்தபடியே, அவர்கள் பத்திரமாக இருக்கிறார்கள் என்றே நினைக்கிறேன் — ஆனால் நேரம் ஆக ஆக, நாம் இந்த இடத்தில் தங்கியது சரிதானா என்ற சந்தேகங்கூட எனக்கு எழுகிறது. இன்னும் சொல்லப் போனால், எனக்கு அவரவர் வீட்டுக்குப் போய்விடலாமா என்றுகூடப் பயம் தோன்றுகிறது. நான் ஒருவன்தான் அப்படிச் சொல்லக் கூடியவன். ஆதலால், இங்குள்ளவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்களென்றும் எனக்குத் தெரியும்! உண்மை என்னவென்றால், எனக்குப் பீதி அதிகமாகிக்கொண்டே வருகிறது. இங்குள்ள ஒவ்வொரு புதரின் மறைவிலும், பயங்கரமான நிழல் ஒன்று தெரிவதைப் போலவும், ஒவ்வொரு மரத்தின் மறைவிலும். ஒரு ராக்ஷஸ உருவம் இருப்பதைப் போலவும் எனக்குப் பிரமை தட்டுகிறது!" என்றார்.

நாம் சமாதி மேடுவரை போகவேண்டாம். கொஞ்ச தூரம் தோட்டத்தில் நடந்துவிட்டு வரலாம். எனக்கு இந்த இடத்தின் அமைப்பு சரிவரத் தெரியாது.

நீங்களும் கூடவந்தால் அதைக் காட்டிக் கொடுக்கக் கூடுமென்று நினைக்கிறேன்!" என்றார் பிரபாகர்.

மூவரும் தோட்டத்தில் வெகுதூரம் நடந்து சென்றார்கள்.

வானம் இன்னும் நிர்மலமாக இருந்தது. தூரத்திலிருக்கும் வஸ்துகளைக்கூடப் பார்க்கக்கூடிய வெளிச்சம் இருந்தது. இங்கு நடந்துகொண்டிருக்கும் பொழுதுதான், வேதநாயகத்தின் கொலை பற்றிய பூரா விவரங்களையும் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை தெரிந்து கொண்டார்.

இது பிரமை தட்டும் விஷயமாக இருக்கிறதே! வேதநாயகத்தை யாரோ சமாதியின் பூட்டைத் திறக்கச் சொல்லி அதற்காகக் கொலை செய்து விட்டார்களென்று பத்திரிகைகளில் கூட வெளிவரவில்லையே! அந்தச் சமாதி, தேவானந்தக்குன்றுக்கடியிலுள்ள சமாதிதான்!" என்று கட்டுமீறிய வியப்போடு கூறினார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

பத்திரிகையில் வெளிவராத மர்மங்களுக்குத் திறவுகோல், நமக்கு விரைவில் கிடைக்கலாம்!" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

வெகு நேரம் வரை எல்லோரும் மௌனமாக நடந்து கொண்டிருந்தார்கள்.

இந்த விஷயம் எனக்கு முன்பே தெரியாமல் போய்விட்டதே. அப்படித் தெரிந்திருந்தால், நான் உங்களுக்கு எவ்வளவோ உதவி அளித்திருக்க முடியுமே — தன்னை வேலைக்கு அமர்த்திய நபர் யாரென்று கொலையுண்ட வேதநாயகம் கூறிவில்லையா?" என்று கேட்டார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

'இல்லை'என்று தலையாட்டிய பிரபாகர், அவன் சொல்லவில்லை; ஆனால் எங்களால் யூகிக்க முடிந்தது!" என்று சொன்னார்.

டாக்டர் ரஞ்சித் சிங்தானே?" என்று அவசரமாகக் கேட்டார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

அப்படித்தான் இருக்கும். வேறு யாரைப் பற்றியும் என்னால் நினைக்க முடியவில்லை!" என்றார் பிரபாகர்.

அதற்குள் அவர்கள் எல்லோரும், பிச்சைக்கண்ணுவும் அந்த ராக்ஷஸ மனிதனும் சந்தித்த இடத்தை அடைந்தார்கள். சுற்றிலும் ஒரு முறை நன்றாகப் பார்த்தார் பிரபாகர். அவருக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது.

அப்படியானால் உங்களுக்கெல்லாம் சமாதி மேட்டிற்கு வரப் பிரியமில்லையா?" என்று விஷமச் சிரிப்போடு கேட்டார் பிரபாகர்.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளை படபடப்போடு, நிச்சயமாக நான் வரவில்லை! இந்த அகாலத்தில் அந்தப்பேய் உலாவுமிடத்திற்கு வருவதற்கு நான் தயாராக இல்லை. வாருங்கள் எல்லோரும் திரும்பிச் செல்லலாம்!" என்றார்.

எல்லோரும் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். வீட்டை நெருங்கியதும் ஒரு ரகசியப் போலீஸ் அதிகாரி பிரபாகரை நெருங்கி, மஹேஸ்வரியின் தாயார் ஜன்னலைத் திறந்து காலை ஆறு மணிக்குத் தன்னை எழுப்பி விடும்படி கூறியதாகச் சொன்னார்.

வாருங்கள் வீட்டிற்குள் போகலாம். நாம் போடும் சத்தத்தில் அவர்களைத் தூங்க முடியாதபடி செய்வோம்!" என்றார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

எல்லோரும் சாப்பாட்டுக் கூடத்திற்குச் சென்றார்கள். அங்கு வேலைக்காரன் சுடச்சுட தேநீர் பானம் தயாரித்து வைத்திருந்தான். தேநீர் டம்ப்ளரை வாயருகில் கொண்டு போகும்பொழுது, வக்கீலையறியாமலே அவர் கரம் நடுங்கியது. வாழ்நாளிலேயே, தாம் இப்படிப் பட்ட கலவரத்திற்கு அடிமையானதில்லை என்று வக்கீல் ராஜாங்கம் பிள்ளை கூறினார்.

என்ன நடந்தாலும், இன்றிரவோடு பவானந்தத்தின் எஸ்டேட் பொறுப்பை நான் கழித்துவிடப் போகிறேன்! பவானந்தம் இன்று விடியற் சாமத்தில் வந்தானானால், எல்லாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்துவிட்டு, ‘அக்கடா’என்று இருந்துவிடப் போகிறேன்!" என்றார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

நீங்கள் எந்த அறையில் தூங்கப் போகிறீர்கள்?" என்று கேட்டார் பிரபாகர்.

மஹேஸ்வரியும் அவள் தாயாரும் படுத்து உறங்கப் போகும் அறைக்கு எதிராக உள்ள ஓர் அறையில்! உங்கள் ஆட்கள் ஒருவனை வெளிவராந்தாவிற்குக் காவல் வையுங்கள்!" என்று கேட்டுக் கொண்டார் வக்கீல்.

நான் அதை முன்பே ஏற்பாடு செய்துவிட்டேன்!" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

இந்த விவகாரம் இன்னும் எனக்குச் சரிவர விளங்கவில்லை. இந்த டாக்டர் ஆண்டியப்பனுக்குப் பவானந்தத்தோடு எந்த விதத்தில் தொடர்பு? டாக்டர் ரஞ்சித் சிங்கிற்கு அவனோடு என்ன சம்பந்தம்?" என்று திகைத்தார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

இன்ஸ்பெக்டர் துரைசாமி புன்னகையுடன், அதை நான் சொல்லுகிறேன்! பவானந்தத்தைப் பாடசாலைக்கு அனுப்பினீர்களே ஞாபகம் இருக்கிறதா?" என்று மெதுவாகக் கேட்டார்.

ஆமாம்!" என்று ஒன்றுமே விளங்காமல் கூறினார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

உங்களுக்கு அந்த உபாத்தியாயர் பெயர் ஞாபகம் இருக்கிறதா?"

ராஜாங்கம் பிள்ளை சில வினாடிகள் யோசித்தார். நினைவு இருக்கிறது — பேயாண்டி!" என்றார். அப்பொழுது பேயாண்டியாக இருந்தவன்தான், பிறகு பேராசிரியர் ஆண்டியப்பராக மாறி, டாக்டர் பட்டத்தையும் வைத்துக்கொண்டார்!" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளையின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. அப்படியானால் பேயாண்டி, டாக்டர் ஆண்டியப்பன், பவானந்தத்தின் வாத்தியார் எல்லோரும் ஒரே ஆள் என்றா சொல்லுகிறீர்கள்?"

பிரபாகர் ஒரு புன்னகை புரிந்தார். இப்பொழுது நான் ஒரு கேள்வி கேட்கிறேன் வக்கீல் சார்! அதற்குப் பதில் சொல்லுங்கள். பவானந்தம்

சிறுவனாக இருக்கும் பொழுது, அவனுக்கு ஒரு செவிலித்தாய் அமர்த்தினீர்கள் அல்லவா?"

ஆமாம்"

அவள் பெயர் உங்களுக்கு நினைவு இருக்கிறதா?"

வக்கீல் ராஜாங்கம் பிள்ளை திரும்பவும் கொஞ்சம் யோசனை செய்தார! வக்கீலின் வாழ்வில் இதுபோல் எவ்வளவோ விவரங்கள்! அதனால் எனக்குச் சரியாக நினைவில்லை; ஆனால் பவானந்தத்தின் தாயின் பெயர் அமிர்தமோ, ஆனந்தமோ, என்னவோ ஒரு பெயர் அவளுக்கு!"

அம்மணியம்மாள்தானே?" என்று கேட்டார் பிரபாகர்.

ஆமாம், ஆமாம்! அதேதான்! இப்பொழுதுதான் அது ஞாபகம் வருகிறது"! என்றார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

அந்த அம்மணியம்மாள் என்பவள் டிரைவர் பிச்சைக்கண்ணுவின் அத்தை! முதலில் அந்த அம்மாள் ராமானந்தர் குடும்பத்தில் வேலைக்காரியாக இருந்தாள். பிறகுதான் ராமானந்தத்தின் வாரிசான பவானந்தத்திற்குச் செவிலித் தாயாக மாறினாள். இப்படிப்பட்ட கீழ்த்தரமான ஒரு பெண்மணியைப் பேராசிரியர் ஆண்டியப்பர் எதற்காகத் திருமணம் செய்துகொண்டார் என்று உங்களுக்குப் புரிகிறதா?" என்று கேட்டார் பிரபாகர்.

அதற்கு வெகு நேரம் வரையில் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை ஒன்றும் பதில் கூறவில்லை.

இதையெல்லாம் எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?" என்று வியப்போடு வக்கீல் கேட்டார்.

கொலை நடந்த ஆண்டியப்பர் வீட்டில் சில காகிதங்கள் கிடைத்தன. அவனைக் கொலை செய்த நபர், அவன் மேஜையிலிருநத் தஸ்தாவேஜுக்களையெல்லாம் எடுத்துச் சென்று விட்டான். ஆனால் அம்மணியம்மாளின் பெட்டியிலிருந்த சில கடிதங்களை விட்டு விட்டுப் போய்விட்டான். அதிலிருந்துதான் எனக்கு இவ்வளவு விவரங்களும் கிடைத்தன

— நீங்கள் பேராசிரியர் ஆண்டியப்பன் என்கிற பேர்வழியைப் பார்த்ததே இல்லையே?" என்றார் பிரபாகர்.

'இல்லை'என்ற பாவனையில் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை தலையாட்டினார்.

இன்னொரு விஷயம் உங்களுக்குத் தெரியுமா? இரண்டு சந்தர்ப்பங்களில் காலஞ்சென்ற ராமானந்தர் அளவு கடந்த குடி போதையால் அவதிப்பட்டபொழுது, அவருக்கு மருத்துவம் செய்ய டாக்டர் ரஞ்சித் சிங் தருவிக்கப்பட்டாரென்று உங்களுக்குத் தெரியுமா?" என்று மெதுவாகக் கேட்டார் பிரபாகர்.

ஆச்சரியமாக இருக்கிறதே! ராமானந்தரின் டாக்டர் குரு மூர்த்திதான்! டாக்டர் ரஞ்சித் சிங் என்பவர் அவருக்கு வைத்தியம் பார்த்தாரென்று எனக்குத் தெரியாது!" என்றார் பிரமித்துப்போன வக்கீல் ராஜாங்கம் பிள்ளை. பிறகு, இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார்.

பிரபாகர், இன்ஸ்பெக்டர் துரைசாமியைப் பார்த்தார். அவர் தம் பைக்குள் கையைவிட்டு, பல காகிதங்களுக்கு மத்தியிலிருந்த ஒரு காகிதத்தை எடுத்து வக்கீலிடம் நீட்டினார். அந்தக் காகிதமும் அம்மணியம்மாள் பெட்டியிலிருந்து எடுக்கப்பட்டதுதான்.

ஆனால் இதற்கும், பவானந்தம் ஊர் சுற்றிக்கொண்டிருப்பதற்கும் என்ன சம்பந்தம்? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! இந்த விவகாரத்தில் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமான விஷயங்கள் தெரிகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு குழப்பமல்லவா ஏற்படுகிறது!" என்றார் வக்கீல்.

பவானந்தம் இன்று விடியற் சாமத்தில் இங்குவந்து எல்லாவற்றையும் விவரமாக நம்மிடம் சொல்லுவார்!" என்று கூறிய பிரபாகர், சட்டென்று தமது கைக்கடிகாரத்தைப் பார்த்தார். நேரமாகி விட்டது! நாம் படுக்கைக்குப் போகவேண்டும்! எனக்கு ரொம்ப அசதியாக இருக்கிறது!" என்றார்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி, நீளமான ஒரு ஈஸிச்சேரில் போய்ச் சாய்ந்துகொண்டு, இன்றையத்தினம் எனக்குத் தூக்கம், விழிப்பு எல்லாம் இந்த

நாற்காலியில்தான்!" என்றார்.

## *29. சமாதி மேட்டில் குழந்தைப்பாட்டு!*

அன்றிரவு எல்லோரும் படுக்கைக்குச் சென்ற பிறகு, பதினோரு மணிக்குமேல், பிரபாகர் தமது அறையைவிட்டு மெதுவாக வெளியே வந்தார். வெளிப் பக்கத்தில், ஒரு போலீஸ்காரர் காவல் புரிந்து கொண்டிருந்தார். தம் அறையை வெளிப் பக்கமாகப் பூட்டிவிட்டுப் பிரபாகர் சப்தமில்லாமல் நடந்து சென்று இன்ஸ்பெக்டர் துரைசாமி இருந்த இடத்தை அடைந்தார். அவருக்காகக் காத்திருந்தவர்போல் துரைசாமி சட்டென்று எழுந்து வந்தார்.

இருவரும் ஓசைப்படாமல், கீழ் தளத்தில், மஹேஸ்வரி ராக்ஷஸ உருவத்தைக் கண்ட அந்த அறைக்குச் சென்றார்கள் — அந்த அறைக்குள் பலவித விசித்திரங்கள் நடைபெறலாம் என்றோ, துப்புகள் அகப்படலாம் என்றோ அவ்விருவரும் கருதினார்கள்.

பேய் இருள் கப்பியிருந்த அந்த அறையின் ஜன்னல் கதவுகள் எல்லாம் மூடப்பட்டிருந்தன. பிரபாகர் ஒரு மூலையில் இருந்த ஜன்னலை மாத்திரம் கொக்கி போடாமல் திறந்து வைத்தார். அந்த ஜன்னலுக்குக் கம்பிகள் இல்லாததால், நெருக்கடியான சமயத்தில், தப்பிச் செல்லும் பாதையாக அதை உபயோகிக்கலாம் என்று நினைத்தார்.

நீங்கள் வெளி ஹாலிலேயே ஓசைப்படாமல் ரகசியமாகக் காத்திருங்கள், இன்ஸ்பெக்டர் சார்! நான் கூச்சல் இடும்வரையில் நீங்கள் இருமல் சப்தத்தைக்கூட ஏற்படுத்தக் கூடாது, பொழுது விடியும்வரை நாம் காத்திருக்கும்படி நேரிடலாம். ஒருக்கால் அவ்வளவு நேரம் கழித்துத் தாடிக்காரனான ரஞ்சித் சிங் வந்தாலும் வரலாம்!" என்றார் பிரபாகர். அதன் பிரகாரம் இன்ஸ்பெக்டர் துரைசாமி ஹாலில் போய் தங்கிவிட்டார்.

இருள் நிறைந்திருந்த அந்த அறைக்குள் ஒரு மூலையில் கிடந்த அலமாரியில் மறைவாக ஏறி உட்கார்ந்து, சப்தமில்லாமல் கவனித்துக் கொண்டிருந்தார் பிரபாகர். அங்கு பதுங்கியிருந்தால் அறைக்குள் நடக்கப்போகும் மர்மங்களெல்லாம் அவருக்குத் தெரிந்துவிடும்! அவர்

நினைத்தது தவறாகவும் இருக்கலாம். ஆனால் அது சரியாக இருந்தால், அம் மர்மங்களுக்கெல்லாம் ஒரு திறவு கோல் கிடைத்து விடும்.

நேரம் மெதுவாகக் கழிந்து கொண்டேயிருந்தது. ஆனால் பிரபாகர் இருந்த இடத்தைவிட்டு நகரவில்லை. சுவற்றில் சாய்ந்தபடி, அந்த இருட்டினூடே நெஞ்சு 'திக்'கென்று அடித்துக்கொள்ள உற்றுப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். எங்கோ ஒரு கடிகாரத்தில் டாண் டாண் என்று பன்னிரண்டு மணி அடிக்கும் சப்தம் கேட்டது. அப்புறம் வெகு நேரத்திற்கப்பால், அரை மணி அடிக்கும் சப்தம் கேட்டது. அன்று இரவுப் பொழுது வீணாகிப் போய்விடுமோ என்ற சந்தேகம் பிரபாகருக்கு எழுந்தது. திடீரென்று அந்த சமயத்தில், அறையின் கிழக்குப் பக்கத்து மூலையிலே, பூமி பிளந்து அதற்குள்ளிருந்து விசித்திரமான ஓர் ஒளி வெளியே தென்பட்டது! மூச்சைப் பிடித்துக்கொண்டு, பிரபாகர் அந்தப் பக்கம் கவனித்தார். கொஞ்சம் கொஞ்சமாக அந்த மெல்லிய வெளிச்சத்தின் ரேகை செந்தாழம் பூக்கீற்றுபோல் அகலமாகத் தெரிய ஆரம்பித்தது. கிரீச்சென்று மிக மெல்லிய சப்தத்துடன் அறையின் தளவரிசை மெதுவாக நகர்ந்து கொடுப்பதைக் கவனித்தார் பிரபாகர். அநத் இடை வெளியிலிருந்து ஒரு மனிதத் தலை மெதுவாக மேலே கிளம்பியது. தரைக்கடியிலுள்ள ஏதோ ஒரு சுரங்கத்திலிருந்துதான் அந்தத் தலை கிளம்பி வந்திருக்க வேண்டும்! அது கொண்டுவந்திருந்த மெழுகு திரியிலிருந்துதான் மெல்லிய வெளிச்சம் வந்தது!

பூமிக்குள்ளிருந்து தோன்றிய அந்த விசித்திர முகம் பார்ப்பதற்கு மிகவும் பயங்கரமாக இருந்தது. பேய்க்களை ததும்பிய சலனமற்ற கண்களும், அமானுஷ்யமான அளவிலே பெருத்திருந்த அதன் தவடையும், அந்த உருவத்தின் முரட்டுக் கரங்களும் பார்ப்பதற்கு மிகக் கொடூரமாக இருந்தன. அந்த உருவம், தன் கையில் கொண்டு வந்திருந்த மெழுகுத் திரி வெளிச்சத்தை அணைக்காமல் அறையின் தளத்தில் வைத்துவிட்டு, குபீரென்று சுரங்கத்திலிருந்து வெளியே தாவி, அறைக்குள் பாய்ந்தது. ஒரு வினாடி பிரபாகரின் ரத்தமே உறைந்துவிட்டதுபோல் இருந்தது!

அறைக்குள் ஜீவனற்று ஒளிவிடும் மெழுகு திரியின் மெல்லிய வெளிச்சத்தில் அந்த உருவம் மகாப் பயங்கரமான மிருகம்போல்

காட்டுமிராண்டித்தனமாகக் காணப்பட்டது. இடுப்பில் இருந்த ஒரு கித்தான் கால் சட்டையைத் தவிர, அந்த உருவத்தின் உடம்பில் எவ்வித ஆடையும் கிடையாது. சில வினாடிகளில் அந்தப் பாதாளச் சுரங்கத்திலிருந்து, இன்னொரு பிரம்மாண்டமான உருவம் வெளியே வந்தது. இரண்டாவது வந்த உருவம், முதலில் வந்த உருவத்தைவிட உயரமாக இருந்தது. அதனுடைய உடம்பின் தோலானது முதல் உருவத்தைப்போல கரடு முரடாக இல்லாமல், மென்மையாகத் தோன்றியது.

அவ்வாறு சுரங்கத்திலிருந்து வந்த இரு உருவங்களையும் வெறித்துப் பார்த்தபடி பிரபாகர் ஓசைப்படாமல் அலமாரி மீதே பதுங்கி உட்கார்ந்திருந்தார். அவரது இருதயம் வெகு வேகமாகத் துடித்தது. அறைக்குள் பயங்கரமான முதல் உருவம் தன் பிரம்மாண்டமான கையால் மெழுகு திரியை மூடியபடி மெதுவாக சுவற்றை நோக்கி நடந்தது. இரண்டாவதாக வந்த உருவம் அதைப் பின்பற்றியது. முதல் உருவம் சுவற்றில் வைத்து அதைத் தடவியது.

மறு வினாடி நடந்த நிகழ்ச்சியைக் கண்டதும், ஆச்சரியத்தால் வாய்விட்டுக் கூச்சலிடவேண்டிய பிரபாகர், மிகவும் கஷ்டப்பட்டுத் தம் வாயை அடக்கிக்கொண்டார். ஏனென்றால் சுவற்றில் அழகாக மாட்டப்பட்டிருந்த ஒரு படம் 'கிர்ர்'என்ற சப்தத்துடன் நகர்ந்து கொடுத்தது. அந்தப் படத்திற்கு அடியில் ஓர் அலமாரி காணப்பட்டது.

முதல் உருவம் அந்த அலமாரிக்குள் கையைவிட்டுத் துழாவி, ஏதோ ஒன்றை வெளியில் எடுத்து இரண்டாவது உருவத்திடம் காண்பித்தது. இரண்டும் ஒன்றின் தலையோடு மற்றொன்றின் தலையை வைத்துக்கொண்டு, அந்த வஸ்துவை மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தன. தாங்கள் கண்டுபிடித்துவிட்ட அந்த அதிசயத்தைப்பற்றி இரண்டும் குதூகலத்தில் ஆழ்ந்திருக்கவேண்டும் என்று நினைத்தார் பிரபாகர்.

அந்த சமயத்தில் யாரோ வெளிக் கதவைத் தட்டுவதுபோன்ற சப்தம் கேட்டது. சட்டென்று இரு உருவங்களும் கையிலிருந்த மெழுகுவர்த்தியைக் 'குப்'பென்று அனைத்துவிட்டு இருளில் பரபரப்புடன் நிலவறையை நோக்கி நடக்கும் ஓசையைப் பிரபாகர் கவனித்தார். மறு வினாடி இரண்டு

உருவங்களும், சுரங்கத்தில் இறங்கி மறைந்தன. சுரங்கக் கதவு மூடிக்கொண்டது.

பிரபாகர் அளவு கடந்த ஆத்திரத்துடன், அலமாரியிலிருந்து கீழே குதித்து அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே பார்த்தார். இன்ஸ்பெக்டர் துரைசாமிதான் நின்று கொண்டிருந்தார்!

யாரோ உள்ளே நடமாடியதுபோல் இருந்தது! அதனால் கதவைத் தட்டினேன்! உனக்கு ஒன்றும் அபாயம் ஏற்படவில்லையே?" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

நீங்கள் மாத்திரம் இன்னும் கொஞ்சம் நேரம் பொறுத்து இருந்தால்......!" என்று பொறுமையிழந்து கூறிய பிரபாகர் ஒரு பெருமூச்சு விட்டு அறையின் விளக்குகளைப் பொருத்தினார்.

அறை காலியாக இருந்தது; எந்த விசித்திர உருவத்தையும் அங்கே காணோம்!

இன்ஸ்பெக்டர் துரைசாமி! அதோ பார்!" என்று அந்த ராக்ஷஸ உருவங்கள் திறந்துவிட்டுப் போயிருந்த மாய அலமாரியைக் காட்டினார்.

அதை நான் முதலிலேயே பார்த்துவிட்டேன்!" என்று எரிச்சலாகக் கூறிய பிரபாகர், அங்கு தாம் கண்ட விவரங்களை சுருக்கமாகக் கூறினார்.

அவ்விரு உருவங்களால் திறக்கப்பட்ட மாய அலமாரியில், பிரமாதமான விசித்திரத்தைக் காணப்போகிறோம் என்று நினைத்த பிரபாகர், அவசரமாக அதன் அருகே சென்றார். ஆனால் அவர் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக அந்த அலமாரி, மிகச் சாதாரணமான மர அலமாரியாக இருநத்து. அதற்குள் சில ஓட்டை உடைசல்களான சமான்கள்தான் கிடந்தன! கால் ஒடிந்த ஒரு மரக் குதிரை, பல வர்ணம் தீட்டப்பட்ட ஒரு பெரிய பந்து, சாவி கொடுத்தால் ஓடும் ரயில் வண்டியில் இணைக்கப்பட்டிருக்கும் கம்பார்ட்மென்ட்கள் முதலான குழந்தைக்குரிய விளையாட்டுச் சாமான்கள்தான் அந்த ரகசிய அலமாரிக்குள் இருந்தன. அந்த விளையாட்டு ரயிலின் என்ஜினைக்கூடக் காணோம்!

இன்ஸ்பெக்டர் துரைசாமியின் சகாயத்தோடு, சுரங்க அறையைத் திறக்க முயன்றார் பிரபாகர். ஆனால் முடியவில்லை. சுரங்கத்தின் கதவு உட்புறம் ஏதோ ஒரு ரகசியமான விசையில் மூடப்பட்டிருக்க வேண்டுமெனவும், அதை உடைத்துப் பார்க்க மயல்வது வீண் பொழுதாகிவிடுமெனவும் தோன்றியது!

இங்கேயே இருங்கள்!" என்று கூறிவிட்டுப் பிரபாகர் வெகுவேகமாக அறையைவிட்டு வெளியே ஓடி, தோட்டத்தை அடைந்தார். தோட்டத்தில் ஒரு உருவத்தையும் காணோம்! பிறகு இருண்டு கிடக்கும் சமாதி மேட்டை நோக்கி, பிரமையுடன் சுற்றிலும் திரும்பிப் பார்த்துக்கொண்டே வெகு வேகமாக ஓட ஆரம்பித்தார்.

கடைசியாகச் சமாதி மேட்டைப் பிரபாகர் நெருங்கும்போது, அங்கு படிந்திருக்கும் பயங்கர இருளில் மிகவும் உஷாராக ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து நடந்து கொண்டிருந்தார். சமாதியை நெருங்க நெருங்க மெதுவாக ஒரு பாட்டுச் சப்தம் கேட்க ஆரம்பித்தது. வரவர அந்தப் பாட்டுச் சப்தம் சற்று பலமாகக் கேட்க ஆரம்பித்தது.

சிறு குழந்தைகள் பாடும் பாட்டு அது. சுமார் இருபது வருடங்களுக்கு முன் பிரபாகரும் அந்தப் பாட்டைப் பாடியிருக்கிறார்.

**கை வீசம்மா கை வீசு—**

**கடைக்குப் போகலாம் கை வீசு—**

**மிட்டாய் வாங்கலாம் கை வீசு—**

**மெதுவாய்த் தின்னலாம் கை வீசு!"**

அந்தப் பாட்டைக் கேட்டதும் பிரபாகருக்குத் தம் காதுகளையே நம்ப முடியவில்லை! பயங்கரமான சமாதி மேட்டிலே பச்சிளம் குழந்தைகள் பாடும் இந்தப் பாட்டு எப்படி ஒலிக்க முடியும்!... இதன் மர்மம் என்ன....?

அந்த இடத்தை நெருங்க நெருங்க பிரபாகர் மண்டியிட்டு ஊர்ந்தபடி, ஒவ்வொரு மரத்தின் நிழலிலுமாகப் பதுங்கிப் பதுங்கி, மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டே முன்னேறினார். அவர் உடலெல்லாம் வெடவெடவென ஆடி வியர்த்துக் கொட்டியது. நெற்றியிலிருந்து வழிந்த வியர்வைத்

திவலைகள், அவர் கண்களில் விழுந்து, பார்வையை மறைத்தன. மிகச் சிரமப்பட்டுத் தம் கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டார். அந்தப்படியாகப் பிரபாகர் நகர்ந்துகொண்டே சென்று சமாதிக் குன்றுக்கு அருகாமையிலிருந்த ஒரு பிரம்மாண்டமான மரத்தின் நிழலில் மறைந்திருந்து எதிரே கவனித்தார்.

அந்த குன்றின் இரும்பு கேட் திறந்திருந்தது. அதன் எதிரே மூன்று பேர்கள் கைகோர்த்து நின்றுகொண்டு, அந்தப் பாட்டைப் பாடியபடி உற்சாகமாகக் கையை வீசியபடி முன்னும் பின்னுமாக நடந்து கொண்டிருந்தார்கள்.

பிரபாகரின் இருதயம் அந்தக் காட்சியைக் கண்டதும் சடக்கென ஸ்தம்பித்து ஒரு கணம் நின்று விட்டது என்று கூடச் சொல்லலாம். அது ஒரு கெட்ட கனவைப்போல் பிரமை உண்டாக்கியது. இருந்த போதிலும் மிகவும் பரிதாப உணர்ச்சியை எழுப்பிய அந்தக் காட்சியானது பிரபாகரின் கண்களில் கண்ணீர் துளிர்க்கச் செய்தது.

பாட்டுப் பாடிய வண்ணம் நடக்கும் மூன்று உருவங்களில், இரண்டு, சற்றுமுன் தாம் அறையில் பார்த்த இரண்டு ராக்ஷஸ உருவங்கள்தாம் என்று பிரபாகர் சுலபத்தில் அடையாளம் கண்டு கொண்டு விட்டார். ஆனால் மூன்றாவது இருந்த மனிதர் யார் என்பதுதான் கும்மிருட்டில் பிரபாகருக்குச் சட்டென்று விளங்கவில்லை. மிகச் சிரமப்பட்டு உற்றுக் கவனித்தார் — அது டிரைவர் பிச்சைக்கண்ணு!

திடீரென்று அந்தப் பாட்டு நின்றது. மூவரும் கீழே உட்கார்ந்தார்கள். ஏதோ ஒரு பொருளை, ஒவ்வொருவராகப் பார்த்து விட்டு, மற்றவரிடம் நீட்டினார்கள். அது என்ன என்று மிகக் கூர்ந்து கவனித்தார் பிரபாகர் — ‘சாவி கொடுத்தால் ஓடக்கூடிய’ விளையாட்டு ரயில் என்ஜின்!

அந்தப் பொம்மை என்ஜினைப் பார்த்ததும் இரண்டு ராக்ஷஸ மனிதர்களும் அதி குதூகலமாகவும், குழந்தைத் தனமாகவும் இனம் புரியாத ஏதோ பாஷையில், என்னவோ பேசிக்கொண்டார்கள். பிச்சைக்கண்ணு வெட்டவெளியை வெறிக்கப் பார்த்தபடி, தன் கண்களை எங்கோ

நிலைக்குத்தாக வைத்து நின்றான் — அந்த மூவரிலேயே அவனைப் பார்க்கத்தான் மிகவும் பயங்கரமாக இருந்தது!

திடீரென்று இருட்டிலே எங்கிருந்தோ யாரோ சீட்டியடிப்பது போன்ற ஒரு சிறு விசில் சப்தம் கேட்டது. அந்தச் சப்தத்தைக் கேட்டதும் ராக்ஷஸ உருவங்கள் இரண்டும் துள்ளி எழுந்து நடுநடுங்கிக் கொண்டு நின்றன! பிச்சைக்கண்ணு போன இடம் தெரரியவில்லை!

மறுபடியும் அந்த விசில் சப்தம் கேட்டது. இரு ராக்ஷஸ உருவங்களும் இன்னும் அதிகக் கலவரத்தோடு நடுநடுங்க ஆரம்பித்தன. எங்கோ செடிகள் முறிவதைப் போல சப்தம் கேட்டது. புதருக்குப் பின்னாலிருந்து ஒரு மனிதர் வெளியே வந்தார்.

அந்த மனிதர் விஞ்ஞானி ரஞ்சித் சிங்தான்!

ரஞ்சித் சிங்கின் ஒரு கையில் நீளமான சாட்டையும், மற்றொரு கையில் பளபளப்பான ஒரு குத்துவாளும் இருந்தன.

ஆ! என் அருமைக் குழந்தைகளா! நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள்! ரொம்ப அதிசயமாக இருக்கிறதே! புறப்படுங்கள்!" என்று ரஞ்சித் சிங் அதட்டிவிட்டுச் சாட்டையை அவர்கள் தலைக்கு மேலாக சற்று உயரத்தில் சொடுக்கி, படீரென அடித்தார். இரண்டு ராக்ஷஸ உருவங்களும் கதிகலங்கிப்போய் தரையில் குனிந்து உட்கார்ந்தன.

அதன் பிறகு ரஞ்சித் சிங் பஞ்சாபி பாஷையில் என்னவோ கூறினார். பிரபாகருக்கு அது விளங்கவில்லை. இரு ராக்ஷஸ உருவங்களும் உடனே ரஞ்சித் சிங் பின்னால் அநத் இருண்ட வனத்திற்குள் நுழைந்து சிங்கைப் பின் தொடர்ந்து சென்றன. இருந்தபோதிலும் பிரபாகர் தாம் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை. பிச்சைக்கண்ணு எங்கே? பூமியே பிளந்து விழுங்கி விட்டதைப்போல, அவன் மாயமாக மறைந்து விட்டானே!

இந்தச் சமயத்தில் திடீரென்று தமக்கு முன்னால் இருந்த ஒரு புதர் மறைவிலிருந்து பிச்சைக்கண்ணு வெளிக்கிளம்பி, டாக்டர் ரஞ்சித் சிங்கையும், ராக்ஷஸ மனிதர்களையும், ரகசியமாகப் பின்தொடர்வதைப் பிரபாகர் தம்

மறைவிடத்திலிருந்து கவனித்தார். மறு விநாடி அவரும், அவர்களை இரகசியமாகப் பின் தொடர ஆரம்பித்தார்.

இனி என்ன நடந்தாலும் டாக்டர் ரஞ்சித் சிங்கைத் தப்பவிடக் கூடாது என்ற முடிவுதான் பிரபாகரின் மனதிலே ஆதிக்கம் பெற்றிருந்தது. பிச்சைக்கண்ணு எங்கே சென்றுகொண்டிருக்கிறான் என்று பிரபாகருக்குத் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் அவரும் அதி ஜாக்கிரதையாக மர நிழலில் மறைந்தவாறே கும்மிருட்டில் ஓசைப்படாமல் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றார்.

அந்த வனத்திற்குள், வெகுதூரம் முன்னேறிச் சென்றறியாத பிரபாகர், தாங்கள் எங்கு போய்க் கொண்டிருக்கிறோம் என்பதையே அறிந்துகொள்ள முடியாமல் பரிதவித்தார். கொஞ்ச தூரம் சென்றதும் ஒரு சிறு ரஸ்தா குறுக்கிட்டது. அந்த ரஸ்தாவின் பக்கம் சிறிது தெரு வெளிச்சம் இருந்ததால், அவர்களைச் சிறிது தூரம் போகவிட்டு அதன் பிறகு தொடர்ந்து செல்லலாம் என்று நினைத்த பிரபாகர், ஒரு மர நிழலில் சிறிது ஒதுங்கினார். திடீரென்று எதிர்பாராதவிதமாக ரஸ்தாவில் குபீரென ஒரு மோட்டார் கார் புறப்படும் சப்தம் கேட்டது. சட்டென்று முன்னோடிச் சென்று கவனித்தார் பிரபாகர். அவர் பார்த்துக் கொண்டே இருக்கும்போது, அவருக்கு முன்னால் இருந்த ஒரு புதரிலிருந்து, ஓர் உருவம் படீரெனப் பாய்ந்து, காரின் பின்பக்கம் தொற்றி ஏறிக்கொண்டது.

டாக்டர் ரஞ்சித் சிங்கின் மோட்டார் கார் மோசமான நிலையில் இருந்ததாலும், அந்த ரஸ்தாவில் ஏராளமாக கொடிகள் நிறைந்திருந்ததாலும், கார் மெதுவாகத்தான் சென்றுகொண்டிருந்தது. ஆகவே பிரபாகர் வெகுவேகமாக அந்தக் காரைப் பின்பற்றி ஓடினார். எதிரே ஒரு மேடு குறுக்கிட்டது. அந்த மேட்டில் ஏறுவதற்கு டாக்டர் ரஞ்சித் சிங்கின் கார் நிரம்பவும் திணறியது. அதுவும் ஒரு விதத்தில் பிரபாகருக்கு அனுகூலமாகவே முடிந்தது. அந்தக் கார், மேட்டில் ஏறிக் கொண்டிருக்கும்பொழுது, பின்னால் ஒளிந்துகொண்ருந்த உருவம் குபீரென காருக்குள் பாய்ந்தது. மறுவினாடி, டாக்டர் ரஞ்சித் சிங் வீறிட்டு அலறும் குரல் கேட்டது. அவர் ஓட்டிச் சென்ற

கார், நிலை தடுமாறி இங்கும் அங்குமாக அலை மோதியபடி, மேட்டின் அருகாமையில் இருந்த ஏரிக்குள் தலை குப்புறக் கவிழ்ந்து விழுந்தது.

பின் தொடர்ந்து ஓடிய பிரபாகர், என்ன செய்வது என்று ஒன்றும் புரியாமல் திகைத்துப்போய், சில விநாடிகள் மேட்டின் மேலேயே நின்றுவிட்டார்.

பிறகு அவர் சிறிது சுய உணர்வு பெற்றவராக வேகமாகப் பள்ளத்தாக்கில் இறங்கி ஏரியை நோக்கி ஓட ஆரம்பித்தார்.

## *30. பிச்சையின் அழுகை! வக்கீலின் மூர்ச்சை!*

ஏரிக்கரையைப் பிரபாகர் அடைந்தபோது இருட்டில் ஒரு மனித உருவம், ஆத்திரத்தோடும், வேதனையோடும் ஏதோ உளறிக்கொண்டு வருவது தெரிந்தது. அந்த உருவம் தம் அருகே வந்ததும், பிரபாகர் அதைச் சட்டென்று பிடித்துக்கொண்டார். அந்த மனித உருவம் பிச்சைக்கண்ணுதான்!

என்ன நடந்தது பிச்சைக்கண்ணு!" என்று பதட்டத்துடன் கேட்டார் பிரபாகர்.

கடவுளே! கார் கவிழ்ந்து விட்டது! அந்த சிங் இறந்து விட்டான்!— அவனோடு அவர்கள் இருவருமே இறந்து விட்டார்கள்! அந்த அயோக்யன் ரஞ்சித் சிங்—அவனைப்பற்றி நிச்சயமாகத் தெரியவில்லை! அவனை முதலிலேயே நான் கொன்றிருக்க வேண்டும்!" என்று கதறினான் பிச்சைக்கண்ணு.

அவர்கள் எங்கே?"

பிச்சைக்கண்ணு ஏரியின் நடுமத்தியைச் சுட்டிக் காட்டினான்.

கார் தலைகீழாகப் புரண்டு விட்டது. ரஞ்சித் சிங் காருக்குள் அகப்பட்டுக் குற்றுயிராகக் கிடந்தான். அவனை வெளியே இழுத்துவிட முயன்றேன்!" என்று ஓலமிட்ட பிச்சைக்கண்ணு, அன்றிரவே நான் அவனைக் கொன்றிருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும்! ஏதாவது செய்யுங்கள், பிரபாகர்! ஒரு வேளை அவன் காருக்குள் இன்னும் குற்றுயிராகவே இருக்கலாம்! அவனை

எப்படியாவது காப்பாற்றுங்கள்—என்னைப்பற்றி நான் கவலைப்படவில்லை—அந்தக் காரை நாம் இருவரும் புரட்டிவிட முடியுமா?" என்று பதறினான்.

ஒரு வார்த்தைக்கூடப் பேசாமல், பிரபாகர் தம் சட்டையைக் கழற்றி ஏரிக்கரையில் போட்டுவிட்டுக் குபீரென்று ஏரிக்குள் குதித்தார். பிச்சைக்கண்ணுவும் அவரைப் பின் தொடர்ந்தான். அவ்விருவராலும் காரைப் புரட்ட முடியவில்லை. ஆனால் குப்புறக் கிடந்த காருக்குள் அகப்பட்டுக் குற்றுயிராகக் கிடந்த டாக்டர் ரஞ்சித் சிங்கைக் கரைக்கு இழுத்து வந்தார்கள். பிச்சைக்கண்ணு அளவு கடந்த வேதனையோடு தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தான்.

அந்த விஷயத்தை அறிந்த உடனேயே நான் ரஞ்சித் சிங்கைக் கொன்றிருக்க வேண்டும். ஒரு சமயம் அவனும் டாக்டர் ஆண்டியப்பனும் பேசிக்கொண்டிருந்ததை நான் ஒட்டுக் கேட்டேன். சற்று முன் இந்தக் கிராதகன் சிங் காரை எடுத்துக்கொண்டு கிளம்பியதும், நான் காருக்குப் பின்னார் தொற்றி ஏறி, காருக்குள் குதித்து இவன் மண்டையைப் படீரென அடித்துப் பிளந்துவிட்டேன். அதற்காக என்னை நீங்கள் கைது செய்ய நினைத்தாலும், கைது செய்துகொள்ளலாம்! என் கையில் இருந்த ஒரு முரட்டு கார் ‘ஸ்பானரால்’இவன் தலையைப் பலமாகத் தாக்கி அடித்து இவன் மண்டையைப் பிளந்தேன்!" என்றான் பிச்சைக்கண்ணு.

டாக்டர் ஆண்டியப்பனைத் தாக்கிக் கொன்றது யார்?" என்று கேட்டார் பிரபாகர்.

என் சகோதரன் பக்கிரிச்சாமிதான் கொன்றான்! எனக்கு அதில் எவ்வளவோ மகிழ்ச்சி! டாக்டர் ரஞ்சித் சிங் சொல்லித்தான் டாக்டர் ஆண்டியப்பன் வீட்டிற்குப் பக்கிரிசாமி இரகசியமாகச் சென்று ஆண்டியயப்பனைக் கொலை செய்தான்! அதைப் பார்த்த பயங்கரத்தில் அம்மணியம்மாளும் மாரடைத்து செத்துப்போனாள்!" என்றான் பிச்சைக்கண்ணு.

பக்கிரிசாமியா? உன் சகோதரனா?" என்று வியப்புடன் பிரபாகர் தம் காதுகளையே நம்ப முடியாமல் கேட்டார்.

என் சகோதரன்தான்! அந்த ராக்ஷஸ மனிதர்களில் பெரியவனாக இருந்தவன்தான் பக்கிரிசாமி! டாக்டர் ரஞ்சித் சிங் தம் விஞ்ஞான

ரசாயனங்களின் மூலம் பால பருவத்தினரை உருத்தெரியாமல் பூதாகாரமாகவும் ராக்ஷஸ மனிதர்களாகவும் வளர்த்துவிட முடியும் என ஆராய்ச்சி நடத்தியவன்! அந்தக் கிராதக விஞ்ஞானி என் சகோதரன்மீது முதலில் பரிசோதனை நடத்திவிட்டுதான் மற்றொரு பையனைத் தயார் செய்தான்! இப்பொழுது அவ்விரு ராக்ஷஸ மனிதர்களும் கார் கவிழ்ந்ததோடு மடிந்து போனார்கள்!" என்று தேம்பியழலானான் பிச்சைக்கண்ணு.

மிகக் கஷ்டப்பட்டு, பிச்சைக்கண்ணுவைச் சமாதானம் செய்து பிரபாகர் அழைத்துக்கொண்டு, சமாதி மேட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

பவானந்தத்தின் மாளிகைத் தோட்டத்தை நெருங்கும் போது எங்கிருந்தோ ஒரு போலீஸ் விசில் மிகப் பலமாக ஒலித்தது. மறுவிநாடி பவானந்தத்தின் மாளிகையில் குபீரென்று தீ கிளம்பி வானளாவ எட்டியது. பிரபாகர் அவசர அவசரமாக மாளிகையை நோக்கி ஓடினார். அம்மாளிகைக்குள் மஹேஸ்வரியும், அவளுடைய தாயாரும் படுத்துறங்குகிறார்கள் என்ற நினைப்பு வந்ததால்தான் பிரபாகர் அப்படி ஓடினார் என்று சொல்லமுடியாது. பல போலீஸ் விசில்கள் தொடர்ந்து ஒலித்தன. மாளிகையின் முன்புறத்தைப் பிரபாகர் ஓடிச்சென்று அடைவதற்குள், மாளிகை பூராவும் தீப்பற்றிப் பயங்கரமாக ஜ்வாலை வீசி எரிய ஆரம்பித்தது. சுற்று வட்டாரத்தில் வெகு தூரம்வரை பட்டப்பகலைப்போல் வெளிச்சம் பரவியது.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளை, படபடப்போடு இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருந்தார். அங்கு நின்று கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் துரைசாமியிடம், உள்ளே படுத்திருக்கும் பெண்களைக் காப்பாற்றுங்கள்! இந்நேரம் மஹேஸ்வரியும் அவளுடைய தாயாரும் தீயில் எரிந்து போயிருப்பார்கள்! — சீக்கிரம், தீப்பிடித்து எரியும் கதவை உடைத்து, யாரும் செல்ல முடியாதா?" என்று பதறினார்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி சர்வ அலட்சியமாக ஒரு சுருட்டை எடுத்துப் பற்ற வைத்தார். பிறகு சுருள் சுருளாக புகையை மேலே ஊதியபடி அதையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்!

பெண்களைக் காப்பாற்றுங்கள் என்று சொல்கிறேன், உங்கள் காதில் விழவில்லையா, இன்ஸ்பெக்டர்?" என்று ஆத்திரத்துடன் தவித்தார் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

பெண்கள்தானே? — அவர்கள் சாகட்டும்!" என்று சர்வ அலட்சியமாகக் கூறினார் துரைசாமி. என்ன, என்ன?" என்று துடிதுடித்தார் ராஜாங்கம் பிள்ளை.

மாளிகை பூராவும் தீப்பிடித்துவிட்டது! உள்ளே பெண்கள் படுத்திருந்தால் இந்நேரம் தீயில் வெந்து, பிடி சாம்பலாகப் போயிருப்பார்கள்! உமக்கு அக்கறை இருந்தால் உள்ளே தீக்குளித்து அவர்களின் சாம்பலை அள்ளிக்கொண்டு வாருங்கள், வக்கீல் ஸார்!" என்றார் துரைசாமி.

பிரபாகர்! உனக்குமா தீ வீட்டிற்குள் குதிக்க பயம்? மஹேஸ்வரியைவிட உனக்கு மரணம் பெரிதா?" என்று துடித்தார் வக்கீல்.

பிரபாகர் அவரது கரங்களைப் பிடித்தபடி, கவலைப்படாதீர்கள், பிள்ளைவாள்! மஹேஸ்வரியோ, அல்லது அவளது தாயாரோ, இந்தக் கட்டிடத்தில் இல்லை!" என்று நிதானமாகக் கூறினார்.

வக்கீல் சட்டென பிரபாகரை வெறித்துப் பார்த்தபடி, இந்த வீட்டில் இல்லையா?" என்று மூச்சு வாங்கக் கேட்டார்.

நாம் தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கச் சென்ற சமயத்தில், அவர்களை இன்ஸ்பெக்டர் துரைசாமி இந்த வீட்டிலிருந்து ரகசியமாகக் கிளப்பி சொந்த வீட்டிற்கே படுக்கச் செல்லும்படி ஏற்பாடு செய்து விட்டார்!" என்றார் பிரபாகர்.

ஆமாம்! பீப்பாய்களில் உள்ள பெட்ரோலால் இந்த வீடு யாராலோ தீ வைத்துக் கொளுத்தப்படும் என்பது நாங்கள் எதிர்பார்த்ததுதான்!" என்று தலை அசைத்தபடி கூறினார் துரைசாமி.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளை அளவு கடந்த ஆச்சர்யத்திற்கு இலக்காகி கல்லைப் போல் சமைந்து நின்றார்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி, தாம் பற்ற வைத்திருந்த சுருட்டை இரண்டு மூன்று முறை வேகமாக இழுத்து ஊதிவிட்டு அதை விசிறி எரிந்தார். பிறகு

நிமிர்ந்து நின்று, தம் சட்டையைச் சரியாக இழுத்து விட்டுக் கொண்டார். மறு விநாடி அவரது போலீஸ் முறுக்கு அவரிடம் குடி கொண்டது.

உம் பெயர் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை! — நான்தான் போலீஸ் கமிஷனர் ஆபீஸைச் சேர்ந்த துப்பறியும் இன்ஸ்பெக்டர் துரைசாமி — உம்மை ஒரு கொலைக் குற்றத்திற்காகவும், கொலையைத் தூண்டிவிட்ட குற்றத்திற்காகவும், இந்த வீட்டைப் பெட்ரோலில் தீயை வைத்து எரித்த குற்றத்திற்காகவும் கைது செய்கிறேன். இப்பொழுது நீர் சொல்லப் போகும் ஒவ்வொரு விஷயத்தையும் குறித்து வைத்துக் கொண்டு விசாரணையின்போது, உமக்கு எதிர் சாட்சியமாக அவற்றை உபயோகிப்போம் என்று எச்சரிக்கை செய்கிறேன்!" என்று துரைசாமி நிரம்பவும் நிதானமான குரலில் கூறினார். அதைக் கேட்டதும் முகம் வெளிறி கற்சிலைபோல ஸ்தம்பித்துப் போன வக்கீல் ராஜாங்கம் பிள்ளை ஏதோ பேசுவதற்காக வாயைத் திறந்தார். ஆனால் அவருடைய வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை. அதற்குள் இன்னொரு போலீஸ் அதிகாரி, வக்கீலின் கையைப் பிடித்து அதில் விலங்கைப் பூட்டினார்.

வக்கீல் மூர்ச்சித்துக் கீழே விழுந்து விட்டார். அவரை லாரியில் ஏற்றிச்சென்று போலீஸ் ஸ்டேஷனில் போட்டு சோதனை நடத்தினார்கள். அவருடைய கழுத்தில் இரகசியமாக மெல்லிய இரும்புச் சங்கிலியில் கோர்க்கப்பட்டுள்ள இரண்டு விசித்திரச் சாவிகள் தொங்கிக் கொண்டிருந்தன. அந்தச் சாவிகள் வக்கீலிடம் இருக்கும் என்று முதலிலேயே பிரபாகர் எதிர்பார்த்திருந்தார்.

சிறிது நேரம் சென்றதும். வக்கீல் ராஜாங்கம் பிள்ளைக்கு சுய பிரக்ஞை வந்தது: இதைப் போன்ற அக்ரமமான குற்றச்சாட்டை, இதுவரை யாரும் ஜோடித்திருக்க முடியாது. இதைப்போன்ற் அவமானகரமான முறையில் போலீஸ் இலாகா நடந்துகொள்ளும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை — என்று ஆரம்பித்தார், வக்கீல் ராஜாங்கம் பிள்ளை.

பிரபாகர் ஆத்திரமாக, போதும், நிறுத்தும் வக்கீல் ராஜாங்கம் பிள்ளைவாள்! கொழும்பில் ஒரு பத்திரிகாலயத்தில் பவானந்தத்தின் புகைப்படத்தை நான் பார்த்தபொழுதே, இது உனது மோசடி

வேலையாகத்தான் இருக்குமென்று நான் புரிந்து கொண்டுவிட்டேன். பிறருக்குச் சந்தேகம் ஏற்படாமல் இருக்க, நீயே பவானந்தத்தைத் தேடுவது போல் பாசாங்குசெய்து, என்னை வீணாக வெளி நாடுகளுக்குத் துப்பறிய அனுப்பி வைத்தாய் — வேறு யாரோ நிஜப் பவானந்தம் எங்கே என்று தேட ஆரம்பித்திருக்க வேண்டும். அது தெரிந்ததும், நீயே ஒரு போலீஸ் அதிகாரியை அனுப்பி அவனைத் தேடச்சொல்லி இருக்கிறாய்...இந்த முடிவை நீ செய்ததும், பேராசிரியர் ஆண்டியப்பன் என்ற எத்தனோடு கலந்து, அவனது டிரைவரான பிச்சைக்கண்ணுவைப் பவானந்தமாக்கி ஊர்சுற்றும் வேலைக்கு அனுப்பியிருக்கிறாய்! பவானந்தத்தைத் தேடி நான் வெளிநாடுகளில் அலையும் போது உன் ஏற்பாட்டின்படி, பிச்சைக்கண்ணு எனக்குப் பாய்ச்சல் காட்டியபடி ஒவ்வொரு இடமாகத் தாவிச்சென்று கொண்டிருந்தான். ஆனால் எதிர்பாராதவிதமாகக் கொழும்பு நகரில் இந்திய ராஜாங்கத்தூதருக்கு ஊர்வலம் நடந்த சமயத்தில் தான் தங்கியிருந்த ஹோட்டல் மாடியில் வந்து நின்று வேடிக்கை பார்த்திருக்கிறான். அந்த சமயத்தில் யதேச்சையாக அந்தப்பக்கம் ஒரு பத்திரிகையாளன் புகைப்படம் எடுத்திருக்கிறான். அந்தப் புகைப் படத்தில் பிச்சைக்கண்ணுவின் உருவம் சிக்கிக் கொண்டதால் தான் எனக்கும் உண்மை புரிய ஏதுவாயிற்று. அது முதல் நான் நிஜப் பவானந்தத்தின் மர்ம மறைவைப்பற்றி ஆராய்வதில் தனிப்பட்ட முறையில் துப்பறிய ஈடுபட்டுவிட்டேன்!" என்றார்.

வக்கீல் ராஜாங்கம் பிள்ளை நடுங்கிய தொனியில், முட்டாள்தனமாகப் பவானந்தத்தின் விஷயத்தில் ஒரு தவறு செய்துவிட்டேன். அவன் சிறு குழந்தையாக இருக்கும்போது ரொம்ப பலஹீனமானவனாக இருந்தான்! அதனால் பையன் பவானந்தத்தை ஒரு டாக்டரிடம் ஒப்படைத்தேன்—" என்று நிறுத்தினார்.

டாக்டர் ரஞ்சித் சிங்கிடம் ஒப்படைத்தாய்! அந்தக் கிராதக டாக்டர் தன்னுடைய விஞ்ஞான இரசாயனங்களின் மூலம் சிறு சிசுக்களை விபரீத ராக்ஷஸ பலமுடையவனாக ஆக்கிவிட முடியுமென நிறையத்தத்துவப் புத்தகங்கள் படித்து ஆராய்ச்சிகள் நடத்திக் கொண்டிருந்தவன்; நீ அவனிடம் ஒப்படைத்த பாலகன் பவானந்தத்தைத் தன் விஞ்ஞான பரிசோதனைக்குப் பயன்படுத்தி, ஒரு ராக்ஷஸ மனிதனாக ஆக்கிவிட்டான். ரஞ்சித் சிங்கின் நூதன

விஞ்ஞான சோதனை வெற்றி பெறுமா, எஸ்டேட்டிற்கு வாரிசுக்காரனான பவானந்தத்தை உருத் தெரியாத மனித வடிவாக்கி விடமுடியுமா? என்ற சந்தேகத்தால் நீ வேறொரு குழந்தையை அவனிடம் முதலில் ஒப்படைத்தாய். அந்தக் குழந்தை அம்மணியம்மாளின் வளர்ப்பில் இருந்த பக்கிரிசாமி என்ற குழந்தை! பிச்சைக்கண்ணுவின் சகோதரன்! அந்தக் குழந்தை விஞ்ஞானியின் வளர்ப்பில் ராக்ஷஸ உருவமாக மாறியது. இப்பொழுது பிச்சைக்கண்ணு இங்கேதான் இருக்கிறான். முதலாவது ராக்ஷஸ உருவந்தான் தன் சகோதரன் என்று பிச்சைக்கண்ணு அன்றிரவு அடையாளம் கண்டு கொண்டான். அவன்தான் பக்கிரிசாமியை — அவனது பால பருவத்திய செல்லப் பெயரைச் சொல்லி அழைத்து, அந்த ராக்ஷஸ மனிதனின் உள்ளத்திலே மனித உணர்வை எழுப்பி, அவனிடமிருந்து மஹேஸ்வரியைக் காப்பாற்றியிருக்கிறான். பிறகு மஹேஸ்வரியுடன் வெளியே தப்பி ஓடும்போது வழியில் இரண்டாவது ராக்ஷஸ உருவத்தோடு போராடி அதையும் தன் வசப்படுத்தியிருக்கிறான்! இவ்வளவிற்கும் மூலக்காரணம் நீதான் ராஜாங்கம் பிள்ளை! இந்தக் கிராதகமான குற்றம் ஒன்றிற்கே, ராஜாங்கம் பிள்ளை, நீ தூக்கு மேடைக்குச் செல்ல வேண்டியிருக்கும்! பவானந்தத்தின் சொத்தை நீ ஏப்பமிடுவதற்கு ஒரு போட்டிக்காரனாக விளங்கிய டாக்டர் ஆண்டியப்பனின் கொலைக்குத் தூண்டுகோலாய் இருநத்து ஒரு பக்கம் இருக்கட்டும்; பவானந்தத்தின் அடுத்த வாரிசுக்காரியான மஹேஸ்வரி தங்கியிருந்த மாளிகைக்குத தீ வைத்துக் கொளுத்தினது ஒருபுறமிருக்கட்டும். இதற்கு முன்னேற்பாடாக மூன்று பீப்பாய்கள் நிறைய பெட்ரோலை நிரப்பிச் சுரங்க அறையில் அடைத்து வைத்திருந்தாய் என்பது ஒரு பக்கம் இருக்கட்டும் — இவை எல்லாவற்றையும்விட, இரண்டு மனித ஆத்மாக்களைக் கொலைசெய்து அவர்களை ராக்ஷஸ உருவமுள்ள மிருகங்களாக்கிவிட்ட குற்றத்திற்கு, நீ கண்டிப்பாய் பதில் சொல்லியாக வேண்டும்!" என்றார் துப்பறியும் பிரபாகர்.

இவற்றையெல்லாம் உன்னால் நிரூபிக்க முடியுமா?" என்று வக்கீல் ராஜாங்கம் பிள்ளை கேட்டு விட்டு, யதேச்சையாகக் கையைக் கழுத்துப் பக்கம் கொண்டு போய்த் தடவிப் பார்த்தார். அங்கு மறைத்து வைத்திருந்த இரண்டு விசித்திரச் சாவிகளையும் காணோம்! மறு விநாடி முகமெல்லாம் முத்து முத்தாக வியர்வை துளிர்க்க, நெஞ்சு பதற, ஏதோ பேச முயன்றார்

வக்கீல் — முடியவில்லை! மீண்டும் தம் சுவாதீனத்தை இழந்து அடியற்ற மரம்போல், தடாலெனக் கீழே சாய்ந்துவிட்டார் ராஜாங்கம் பிள்ளை!

## *31. மாயச் சமாதியில புதைந்திருந்த மர்மம்!*

ராமானந்தர் எஸ்டேட்டிற்குரிய மாயச் சமாதியிலுள்ள ஒரு மர்மக் கதவில் ஏழு பூட்டுகள் இருக்கிறன்றன. அவற்றிற்கு ஏழு விசித்திர சாவிகளும் இருக்கவேண்டும். பேராசிரியர் ஆண்டியப்பனிடம் ஒரு விசித்திரசாவி இருந்தது; ராமானந்தத்தின் தோட்டக்காரனான பஞ்சநதத்திடம் மற்றொன்று இருந்தது. மூன்றாவது சாவி அம்மணியம்மாளிடம் இருந்தது. ராமானந்தர் எஸ்டேட்டின் வக்கீலான ராஜாங்கம் பிள்ளை முக்கிய நபர் ஆனதால் அவரிடம் இரண்டு சாவிகள் இருந்தன. பிரக்ஞையற்றுக் கிடக்கும் டாக்டர் ரஞ்சித் சிங்கிடம் இன்னொரு சாவி அகப்பட்டது!—மீதமுள்ள ஏழாவது சாவி, பிச்சைக்கண்ணுவின் சகோதரனும் முதலாவது ராஷஸ உருவமுமான பக்கிரிசாமியின் கழுத்தில்தான் இருக்கும்! அந்த விசித்திர சாவியும் அகப்பட்டுவிட்டால் மாயச் சமாதியைத் திறந்து அதற்குள் என்ன மர்மம் புதைந்து கிடக்கிறதென்பதைக் கண்டு பிடித்து விடலாம்!" என்றார் பிரபாகர்.

ஆமாம்! அவன் பிணத்தை ஏரியிலிருந்து இந்நேரம் எடுத்திருப்பார்கள்! கொஞ்ச நேரத்தில் அந்தப் பிணத்திடமுள்ள ஏழாவது விசித்திரச் சாவியும் நம்மிடம் வந்துவிடும்!" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

துரைசாமியும் பிரபாகரும் அப்போது சமாதி மேட்டிலுள்ள தேவானந்தக் குன்றின் அருகே அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். கொஞ்ச நேரத்தில் ஒரு போலீஸ் அதிகாரி ஏழாவது சாவியையும் கொண்டுவந்து இன்ஸ்பெக்டர் துரைசாமியிடம் கொடுத்தார்.

எல்லோரும் சமாதிகள் கட்டப்பட்டிருந்த நிலவறைக்குள் நுழைந்தார்கள். அந்தச் சமாதிகளில் ஒன்றின் கதவு விரியத் திறந்து கிடந்தது. இருண்டிருந்த அந்தச் சமாதிக்குள் பிரபாகர் தம் கையில் கொண்டுவந்த டார்ச் விளக்கை அடித்துப் பார்த்தார். அந்த வெளிச்சத்தில் சமாதியின் ஒரு மூலையிலிருந்து

கீழ் நோக்கிப் படிக்கட்டுகள் இறங்குவது தெரிந்தது. அந்தப் படிக்கட்டின்மீது ஒரு மெழுகுத் திரி கிடந்தது.

இந்தப் படிக்கட்டின் வழியாகச் சென்றால் ஒரு சுரங்கப் பாதை இருக்கிறது! அந்தப் பாதையானது பவானந்தத்தின் எஸ்டேட்பங்களாவில் நான் ஒளிந்து கொண்டிருந்த அறைக்குள் போய் சேருகிறது. பவானந்தம் சிறு குழந்தையாக இருந்தபொழுது ஒரு வேளை அதை விளையாடும் அறையாக உபயோகித்திருந்திருக்கலாம். அந்த ஓர் இடத்தைத்தான், பாவம் இரண்டாவது ராஷஸ உருவமான பவானந்தத்தால் நினைவு வைத்துக்கொள்ள முடிந்திருக்கிறது! டாக்டர் ரஞ்சித் சிங் கடைசியாகச் சமாதியைச் சோதித்து விட்டு, தப்பி ஓடிச்சென்றபோது முதல் இரண்டு ராஷச உருவங்களும், பிச்சைக்கண்ணுவும் இங்குதான் பதுங்கியிருந்திருக்கிறார்கள். சமாதியிலிருந்து ரஞ்சித் சிங் தப்பி வரும்போது தனக்கு இருந்த அவசரத்தில் பவானந்தத்தைவிட்டு விட்டு விட்டு ஓடியிருக்கிறான்!" என்றார் பிரபாகர்.

எதற்காக இரண்டாவது ராஷஸ உருவமான பவானந்தம் அந்த அறைக்கு வந்தான்?" என்று ஆச்சர்யத்தோடு கேட்டார் துரைசாமி.

பாவம்; அந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த விசித்திரப் பிறவிக்கு விளையாட்டுச் சாமான்கள் தேவைப்பட்டிருக்கின்றன.—அதுதான்! கிட்டத்தட்ட பாதி மிருகமாகியிருந்த இரு விசித்திர ஜீவன்களும், மனப்போக்கைப் பொறுத்த மாட்டில் குழந்தைகளாகவே இருந்தனர். குழந்தைகளுக்கு எந்தெந்தப் பொழுது போக்குகளில் குதூகலம் ஏற்படுமோ, அந்தந்தப் பொழுது போக்குகளில்தான் அவ்விரு ஜீவன்களும் குதூகலம் அடைந்திருக்கின்றன. குழந்தைகளுக்கு எந்தெந்த விதமான பீதிகள் ஏற்படுமோ அந்தந்த விதமான பீதிகள்தான் அவ்விரு ஜீவன்களையும் ஆட்கொண்டிருந்தன. இதை நன்றாக அறிந்திருந்த விஞ்ஞானி ரஞ்சித் சிங், அவற்றை, மிக லாவகமாக அடக்கி ஆண்டு வந்திருக்கலாம்!" என்றார் பிரபாகர்.

இன்ஸ்பெக்டர் துரைசாமியும் பிரபாகரும் அந்த இடத்திலிருந்து புறப்பட்டு, நேராகச் சமாதிகளின் கிடங்கில் ஏழு பூட்டுகள் போடப்பட்டிருந்த சமாதியை நோக்கிச் சென்றார்கள். ஏழு பூட்டுகளையும் தம்மிடம் இருந்த ஏழு விசித்திரச் சாவிகளால் ஒவ்வொன்றாகத் திறந்து முடித்த பிரபாகர் அதன் பிறகு

மெதுவாக அந்த இரும்புக் கதவைத் திறந்தார். கதவு மிகவும் பளுவாக இருந்தது.

முதலில் பிரபாகர்தான் டார்ச் விளக்குடன் உள்ளே நுழைந்தார். சமாதி மேடையில் வைக்கப்பட்டிருந்த மரப்பெட்டிக்குள் ஒரு சிறு இரும்புப்பெட்டி இருந்தது. அதைத் தவிர சமாதிக்குள் எதுவும் இல்லை.அந்தச் சிறு இரும்புப் பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு, சமாதியை மீண்டும் ஜாக்கிரதையாகப் பூட்டிவிட்டு, எல்லோரும் வெளியே தோட்டத்திற்கு வந்தார்கள்.

அந்த இரும்புப் பெட்டியைத் திறப்பதற்குச் சிறிது நேரம் பிடித்தது. ஆனால் இன்ஸ்பெக்டர் துரைசாமி, தமது கைத்துப்பாக்கியைப் பூட்டின் அருகே நீட்டிச் சுட்டதும், 'டணார்'என்ற சப்தத்துடன் அந்தப் பெட்டியின் பூட்டுத் திறந்துகொண்டது அதன் உள்ளே, சுருளாகக் காகிதங்கள் சுற்றி வைக்கப்பட்டிருந்தன. அதைப் பிரித்துப் பார்த்ததும், அது பள்ளிக்கூட மாணவர்கள் உபயோகிக்கும். நாற்பது பக்கநோட்டு என்று தெரிந்தது. அதனுள் மிக நெருக்கமாக எல்லாப் பக்கங்களிலும் பேனாவால் எழுதப்பட்டிருந்தது.

இது பேராசிரியர் ஆண்டியப்பனின் கையெழுத்து! அவன்தான் எழுதியிருக்கிறான். இதைப் படி, பிரபாகர்!" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

பிரபாகர் அந்த நோட்டுப் புத்தகத்தைப் பிரித்து, அந்த மாயப்பூட்டின் மர்மக் கதையைப் படிக்க ஆரம்பித்தார்.

## *32. சதிகாரர்களின் ஒப்பந்தம்!*

இந்த ஒப்பந்தம் இதில் கையொப்பம் இட்டிருப்பவர்களின் மனப்பூர்வமான சம்மதத்தோடு, ஆண்டியப்பன் என்று அழைக்கப்படும் பேயாண்டியாகிய என்னால் எழுதப்பட்டது. இதன் கீழே கையொப்பம் இட்டவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து எதிர் காலத்தில் தங்களில் யாராவது ஒருவர் துரோகியாக மாறி விடாமல் இருப்பதற்காகவும், தனக்குள்ள பொறுப்பைத் தட்டிக்கழித்து, தப்பித்துக்கொள்ள முயலாமல் இருப்பதற்காகவும், தன் சகாக்களைச் சர்க்காரிடம் காட்டிக் கொடுத்து விடாமல் இருப்பதற்காகவும், எல்லோரையும் பந்தப்படுத்தி இம்மாதிரி ஒரு தஸ்தாவேஜு தயார் செய்யவேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

மாபெரும் எஸ்டேட் சொத்துகளுக்குரிய ராமானந்தர் இந்த ஒப்பந்தம் கையெழுத்து ஆவதற்கு முன்பே காலமாகிவிட்டார். ராமானந்தர் ரொம்பவும் கண்டிப்பான ஆசாமி. பணச்சாமியார் என்ற பட்டப் பெயருள்ள அவர், தாம் காலமானதும் தம் பணத்தோடு சமாதி நிலை அடைய வேண்டுமென ஆசைப்பட்டார். தாம் இறந்ததும் தம் சொத்துக்ளை எல்லாம் தங்கமாக மாற்றி அவற்றைத் தம்மைப் புதைக்கும் சமாதி அருகிலேயே ஒரு வலுவான இரும்புப் பெட்டியில் வைத்துப் புதைக்க வேண்டும் என்று தமது குடும்ப வக்கீலான ராஜாங்கம் பிள்ளையிடம் கூறியிருந்தார். அப்படிப் புதைக்கப்பட்ட தங்கம், தமது மகன் பவானந்தம் இருபத்தைந்தாவது பிராயத்தை அடைந்த பிறகுதான், அவனிடம் சேரவேண்டும் என்றும், அதுவரை அந்தத் தங்கம் களவு போய்விடாமல் இருக்க, மிக சக்திவாய்ந்த ஏழுபூட்டுகள் அடங்கிய கதவு ஒன்றைத் தம் சமாதிக்குப் பொருத்த வேண்டும் என்றும், அப்பூட்டுகளின் ஏழு விசித்திரச் சாவிகளையும் ஏழு டிரஸ்டிகள் வசம் ஒப்படைத்து வைக்கப்பட வேண்டும் என்றும் தெளிவதாகத் தெரிவித்திருந்தார். தமது திட்டப்படியே ஏழு பூட்டுகள் கொண்ட மிக வலுவான கதவு ஒன்றை ஆர்டர் கொடுத்துத் தருவித்திருந்தார்.

வாரிசு உரிமைச் சட்டப்படி, ராமானந்தரின் ஆசை நிறைவேற்றப்படக்கூடியதல்ல என்று அவரிடம் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும், அவர் விடாப்பிடியாக இருந்தார். தமது திட்டத்தை வக்கீல் ராஜாங்கம் பிள்ளையிடம் சொல்லியதோடு மட்டும் இல்லாமல், மாளிகைக்கு அப்பொழுது அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்த தமது நண்பரான டாக்டர் ரஞ்சித் சிங்கிடமும் கூறியிருந்தார்.

ராமானந்தர் இறப்பதற்கு மூன்று வாரங்களுக்கு முன்பு, அவர் நரம்புக் கோளாறால் மிகவும் பாதிக்கப்பட்டு பிதற்றும் நிலையில் இருந்தபொழுது வக்கீல் ராஜாங்கம் பிள்ளை அவரை நெருங்கி, தான் மிகப்பெரிய ஆபத்து ஒன்றில் சிக்கிக்கொண்டு இருப்பதாகவும், பல கட்சிக்காரர்களின் பணத்தைக் கையாடி விட்டதாகவும், ராமானந்தரின் எஸ்டேட்டைச் சேர்ந்த பணத்தில்கூட ஓரளவு கையாடி விட்டதாகவும் ஒப்புக்கொண்டு, தன்னை மன்னிக்கும் படியும், தான் அந்த சிக்கலிலிருந்து விடுபட 50,000 ரூபாய் கடன் கொடுக்கும்படியும், இல்லாவிட்டால் போலீஸார் தன்மீது வழக்குத் தொடர்ந்து விடுவார்கள் என்றும்

பரிதாபமாக வேண்டிக்கொண்டார். ஆனால் ராமானந்தர், தன்னை மோசடி செய்த வக்கீல் ராஜாங்கம் பிள்ளையை மன்னிக்கத்தயாராக இல்லை.

ஆத்திரத்தால் கொதித்தெழுந்த ராமானந்தர், வக்கீல் ராஜாங்கம் பிள்ளையை மனம்போனபடி பேசினார். அந்தக் கொதிப்பில் மீண்டும் நரம்புக்கோளாறு அதிகமாகி மூர்ச்சித்து விழுந்தார். உடனே டாக்டர் ரஞ்சித் சிங் தருவிக்கப்பட்டார். அவருக்குச் செவிலித் தாயாக வேலை பார்த்த அம்மணியம்மாளின் உதவியோடு, ராமானந்தரைப் படுக்கையில் கிடத்தி, அவருக்கு மூர்ச்சை தெளிவிக்கப்பட்டது. பிறகு மூர்ச்சை தெளிந்த ராமானந்தர், மீண்டும் டாக்டர் ரஞ்சித் சிங்கின் எதிரில், ராஜாங்கம் பிள்ளை செய்த மோசடியை ஆத்திரமாக எடுத்துக் கூறினார். அந்தச் சமயத்தில் டாக்டருக்கு உதவி செய்வதற்காக அங்கு வந்திருந்த ராமானந்தரின் தோட்டக்காரன் பஞ்சநத்தம் எல்லா விவரங்களையும் கேட்டுக்கொண்டிருந்தான்.

உடனேயே ராமானந்தருக்கு மீண்டும் மயக்கம் ஏற்பட்டு, அந்த மயக்கத்திலிருந்து விடுபடாமலே காலமானார். அவர் இறக்கும்போது டாக்டர் ரஞ்சித் சிங், அம்மணியம்மாள், வக்கீல் ராஜாங்கம் பிள்ளை ஆகியோர் கூட இருந்தார்கள். இந்த ஒப்பந்தத்தை எழுதிய டாக்டர் ஆண்டியப்பன் அந்தச் சமயத்தில் இந்த விவகாரத்தில் சம்பந்தப்படவில்லை. என்றாலும், தாம் எல்லா விவகாரங்களிலும் பந்தப்பட்டவராக ஒப்புக்கொள்கிறார்.

ராமானந்தர் மூர்ச்சையான நிலையிலேயே உயிர் துறந்ததால், அவருக்குத் தாம் முதலில் எழுதி வைத்த உயிலை மாற்றுவதற்குச் சந்தர்ப்பமே இல்லாமல் போய்விட்டது. அதனால் அந்த உயிலை நிறை வேற்றும் பொறுப்பு வக்கீல் ராஜாங்கம் பிள்ளையிடமே மாறாமல் இருந்து வந்தது. டாக்டர் ரஞ்சித் சிங்கோ ராமானந்தரின் மரண காலத்தில் நடந்த பேச்சு வார்த்தைகளையும், அவர் ராஜாங்கம் பிள்ளையைப்பற்றி வெளியிட்ட தகவல்களையும், யாருக்கும் தெரியாமல் மறைத்துவிட வேண்டும் என்ற கூறினார். அதற்கு ராஜாங்கம் பிள்ளையும் ஒப்புக்கொண்டார். அதையொட்டி ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அதன்படி ராமானந்தரின் சொத்துக்களை வக்கீல் ராஜாங்கம் பிள்ளை பரிபாலித்துவருவதென்றும், அதில் வரும் வருமானத்தை நான்கு சம பங்குகளாகப் போட்டு, ராமானந்தத்தின் தோட்டக்காரன் பஞ்சநதம்,

செவிலித்தாயான அம்மணியம்மாள், டாக்டர் ரஞ்சித் சிங், வக்கீல் ராஜாங்கம் பிள்ளை ஆகியோரிடையே விநியோகிக்க வேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. ராமானந்தரின் முன் கோபத்திற்கு ஆளாகி, பல சமயங்களில் முரட்டுத்தனமாக நடத்தப்பட்ட தோட்டக்காரன் பஞ்சநதம் இந்த ஏற்பாட்டிற்கு முழுமனதுடன் ஒப்புக்கொண்டான்.

ஆரம்ப காலத்தில் இந்த சதித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டபொழுது வக்கீல் ராஜாங்கம் பிள்ளையின் நிர்வாகத்தில் சொத்துகள் இருக்கும் வரையில்—ராமானந்தரின் ஒரே பாலகனான பவானந்தம் மேஜராகும் வரையில் அந்தச் சொத்தில் ஓரளவு சம்பாதித்துக்கொண்டு திருப்தி அடைவது என்று முடிவு செய்யப்பட்டது. அதன் பிறகு, மேஜரான பவானந்தத்திடம் சொத்துக்களை ஒப்படைத்து விடுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் பாலகன் பவானந்தம் மிகவும் பலஹீனமாக இருந்தான். அவனது மனோநிலையும் வலுவிழந்திருந்தது. எந்த நேரத்திலும் அவனுக்குப் பைத்தியம் பிடித்து விடுமென்று நினைத்தார் டாக்டர் ரஞ்சித் சிங். அப்படிப் பைத்தியம் பிடித்தால் கோர்ட்டார், யாராவது ஒரு புது நபரை நியமித்து, வக்கீலோடு சேர்ந்து சொத்தைப் பரிபாலிக்கச் செய்யக்கூடுமென்றும் இதில் கையொப்பமிட்டவர்கள் நம்பினார்கள். அம்மாதிரி செய்யப்பட்டால் தங்களுக்கு இந்த சொத்தின் மீதுள்ள ஆதிக்கம் போய்விடுமென்று பயந்தார்கள். ஆகவே, பையனைக் கண்காணாத இடத்திற்குப் படிக்க அனுப்புவது என்று திட்டமிட்டார்கள்.

அதை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பு, இதை எழுதியவராகிய ஆண்டியப்பன் தலையில் விழுந்தது. மோசடிக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்ட ஆண்டியப்பன், சிறையிலிருந்து வெளிவந்த மறுநாளே, வக்கீல் ராஜாங்கம் பிள்ளையால் தருவிக்கப்பட்டு, இந்தப் பொறுப்பில் அமர்த்தப்பட்டார். அதற்காக ஒரு பெரும் தொகையும், ஆண்டியப்பனாகிய எனக்குக் கொடுக்கப்பட்டது.

பவானந்தத்திற்குக் கல்விப் பயற்சியளிக்க எவ்வளவோ முயன்றேன்; ஆனால் முடியவில்லை. இந்த விவரத்தை வக்கீல் ராஜாங்கம் பிள்ளையிடமும், டாக்டர் ரஞ்சித் சிங்கிடமும் பலமுறை எடுத்துக் கூறினேன். டாக்டர் ரஞ்சித்

சிங், அந்தச் சமயத்தில் ஒரு புதுத் திட்டத்தைக் கூறினார்—அதாவது பாலபருவத்திலுள்ள ஒரு குழந்தை, தன்னிடம் ஒப்படைக்கப்பட்டால், அது, யார் எவர் என்ற அடையாளமே தெரியாதபடி தம்முடைய விஞ்ஞான ரசாயனங்களின் மூலம் உரு மாற்றிவிட முடியுமென்றும், அப்படிச் செய்வதற்குக் குரூரமான வழிகளைத் தாம் கடைப்பிடிக்கப் போவதில்லையென்றும் தம் மனோசக்தியால் அம்மாதிரி செய்துவிட முடியுமென்றும் கூறினார். அவரது சித்தாந்தம், ‘மனித உடலிலுள்ள ஏதாவது ஒரு சக்தியை வேலைசெய்ய வொட்டாமல் தடுத்துவிட்டால், வேறொரு துறையிலுள்ள மற்றொரு சக்தி அபரிமிதமாக வளர்ந்துவிடும்’என்பதுதான்! அதன்படி மிகவும் சக்தி வாய்ந்த, வலுவான ஒரு மனிதனை சிருஷ்டிக்க முடியுமென்றும், அவனுக்குச் சொந்தமாக எந்தவித மனோசக்தியும் இருக்காதென்றும், வேறொருவர் ஆட்டி வைப்பதுபடி ஆடுவான் என்றும் டாக்டர் ரஞ்சித் சிங் கூறினார். இந்த முடிவுக்குத்தான் உலகிலுள்ள தேசு தத்துவ சாஸ்திரிகள் வருகிறார்களென்றும், தேனீக் கூட்டத்தில் ராணி ஈ ஒன்றிற்குத்தான் இனத்தைப் பெருக்கும் சக்தியைக் கடவுள் அளித்திருப்பதுபோல், மனித உலகத்திலும் ஒரு குறிப்பிட்ட சிலருக்குத்தான் மூளை பலத்தை ஏற்படுத்தி, மற்ற பெரும்பான்மையான மக்களை சிந்தனா சக்தியற்றவர்களாக, ஆக்கிவிட வேண்டுமென்று அவர்களெல்லாம் கருதுவதாகவும், டாக்டர் ரஞ்சித் சிங் கூறினார். பாலகன் பவானந்தம் யார் என்று இனங்கண்டு பிடிக்க முடியாதபடி, தான் செய்து விடுவதாகவும், அதனால் அவனுடைய உயிருக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாதென்றும், தங்களுக்கும் எந்தவிதத் தொந்தரவும் ஏற்படாதென்றும், உறுதி கூறினார்....

இந்தத் திட்டத்திற்கு நான் முழு மனதுடன் சம்மதித்தேன். ஆனால் வெகுகாலம் வரையில் வக்கீல் ராஜாங்கம் பிள்ளை இந்தத் திட்டத்திற்குச் சம்மதிக்கவில்லை. டாக்டர் ரஞ்சித் சிங்கின் பரிசோதனை வெற்றி அளிக்கும் என்று தம்மால் நம்பமுடியவில்லை என்று கூறினார். ஆனால் ரஞ்சித் சிங், தம்மிடம் வேறு ஏதாவது குழந்தையை ஒப்படைத்தால், மூன்று மாத காலத்தில் அந்தக் குழந்தையிடம், தான் பிரமிக்கத்தக்க மாறுதல்கள் செய்து காண்பிப்பதாகவும், அதன் பிறகு பவானந்தத்தைத் தன்னிடம் ஒப்படைக்கலாமென்றும் கூறினார். டாக்டர் ரஞ்சித் சிங்கின் இந்தத் திட்டம் நியாயமானதாகவேபட்டது. அந்தச் சமயத்தில், பவானந்தத்தின் செவிலித்

தாயாக இருந்த அம்மணிஅம்மாளின் பராமரிப்பிலே, பிச்சைக்கண்ணுவும், அவன் சகோதரனான பக்கிரிசாமியும் பால 'பருவத்தினராக'இருந்தார்கள், பக்கிரிசாமியை டாக்டர் ரஞ்சித் சிங்கிடம் ஒப்படைக்க, அம்மணி அம்மாள் ஒப்புக்கொண்டாள். அதன்படி பக்கிரிசாமியின் மீது விஞ்ஞானச் சோதனைகள் நடத்தப்பட்டன. சோதனையின் முடிவு திருப்திகரமாக முடிந்திருந்திருக்கவேண்டும். அதனால்தான் மூன்று மாதங்களுக்குப் பிறகு வக்கீல் ராஜாங்கம் பிள்ளை பவானந்தத்தை டாக்டர் ரஞ்சித் சிங்கிடம் ஒப்படைத்து விடலாமென்று தீர்மானமாகக் கூறினார்.....

பையன் பவானந்தம் என்னிடமிருந்து போய்விட்டால் அவனுக்குரிய சொத்து வருமானங்களில் எனக்குக் கிடைக்கக் கூடிய பங்கு போய்விடுமே என்ற பயம் எனக்கு ஏற்பட்டது. அதனால், இந்த ஒப்பந்தத்தைப்போல ஒரு ஒப்பந்தம் தயார்செய்து, ஒவ்வொருவரும் தாங்கள் செய்த குற்றங்களை ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டுவிட்டால், ஒருவரை ஒருவர் ஏமாற்றத் திட்டமிட மாட்டார்கள் என்றும், ஒருவரிடம் மற்றொருவருக்குள்ள பீதியால் அவரவருக்குக் கிடைக்கவேண்டிய பங்கை மோசடி செய்யமாட்டாரென்றும் நினைத்தேன். அப்படி எழுதப்படும் தஸ்தாவேஜை எல்லோரும் பார்க்கக்கூடிய ஓர் இடத்திலும், ஆனால் ஒருவர் உதவியில்லாமல், மற்றொருவர் அதை எடுக்க முடியாதபடியும் ஏற்பாடு செய்யத்திட்டமிட்டேன். இதைப்பற்றிப் பிரமாதமான வாக்குவாதம் நடைபெற்றது. வக்கீல் ராஜாங்கம்பிள்ளை இந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொள்ளத் தயங்கினார். டாக்டர் சிங் இதில் கொஞ்சங் கூட அக்கறை காட்டாமலிருந்தார். ஆனால் அம்மணி அம்மாள்தான் இதில் நிரம்பவும் அக்கறை காட்டி, திட்டத்தை நிறைவேறும்படி செய்தாள்.

ஏழு பூட்டுகளுள்ள மர்மமான இந்த இரும்புக்கதவு, ராமானந்தரின் சமாதிக்குப் போடுவதற்குத்தான் தயாரிக்கப்பட்டது என்று கூறியிருக்கிறேன், ஆனால் உண்மையில் அவர் சமாதியில் இந்த மர்மக் கதவு அவர் புதைக்கப்பட்ட இடம் வேறு, அவர்கள் மூதாதைகளில் ஒருவரான தேவானந்தரின் சமாதியில்தான் இந்த மர்மக் கதவு பொருத்தப்பட்டிருக்கிறது. அப்படிப் பொருத்த வேண்டுமென்ற திட்டம், வக்கீல் ராஜாங்கம் பிள்ளையினுடையது. ஏனென்றால் அந்தச் சமாதியில் நாங்கள் எழுதும்

தஸ்தாவேஜை—இந்த ஒப்பந்தத்தை —வைத்துப் பூட்டலாமென்று முடிவு செய்தோம். அதன்படியே இந்த ஒப்பந்தத்தை ஒரு இரும்புப் பெட்டியில் வைத்து இதற்குள் பூட்டி வைத்தோம்.

இந்த தஸ்தாவேஜி எழுதப்படும், சமயத்தில், பவானந்தம் 'பரலோக பவன'த்தில் டாக்டர் ரங்சித் சிங்கிடம் உருமாற்றப்படும் சிகிச்சை பெற்றுவருகிறான். பக்கிரிசாமியையும் பவானந்தத்தையும் நானே நேரில் பார்த்தேன். அவர்கள் இருவர் விஷயத்திலும், டாக்டர் ரங்சித் சிங்கின் சிகிச்சை, பிரமாத வெற்றி அடைந்திருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். அவர்களிருவரும் டாக்டர் ரஞ்சித் சிங்கின் உத்தரவிற்குக் கீழ்ப்படிந்து பக்குவமாக நடந்துகொள்ளுகிறார்கள். அவர் சொல்லுகிற எந்த வேலையையும் முணுமுணுக்காமல் செய்கிறார்கள். குளிர்காலத்தில் கூட, ஒரு சிறு கால் சராயுடன் எங்கு பார்த்தாலும் சுற்றிவருகிறார்கள். இந்த ஒப்பந்தம் எழுத ஆரம்பித்து இரண்டொரு தினங்களில், நான் அம்மணி அம்மாளை மணம் செய்து கொண்டேன். இந்த ஏற்பாட்டைச் செய்தவர்கள், வக்கீல் ராஜாங்கம் பிள்ளையும், டாக்டர் ரஞ்சித் சிங்கும்தான்!

எங்களுடைய இந்தத் திட்டம், யாராலும் சுலபத்தில் கண்டுபிடிக்க முடியாதது. பவானந்தம் பரம்பரைக்கு நெருங்கிய உறவினர்கள் யாரும் கிடையாது. தூரத்து உறவினர் ஒருவர்தான் இருக்கிறார். அவரும் பெரிய பணக்காரர் ஆதலால், இந்த விவகாரத்தில் தலையிட்டு அனாவசியமாகக் கலவரத்தை ஏற்படுத்தமாட்டார். அவருக்குப் பவானந்தம் எங்கே இருக்கிறான் என்றோ, என்ன ஆனான் என்றோ தெரிந்து கொள்ளவேண்டிய சிரத்தை கிடையாது. பவானந்தம் மேஜரானதும், அவன் அயல்நாட்டுக்குப் பிரயாணம் சென்று இருக்கிறானென்று வக்கீல் ராஜாங்கம் பிள்ளை பிரகடனம் செய்துவிடுவார்.

மேலே கண்ட எல்லா விவரங்களுக்கும், கீழ் கையொப்பமிட்ட நாங்கள் எல்லோரும், கூட்டாகவும், தனித் தனியாகவும், எங்களைப் பந்தப் படுத்திக்கொண்டு, இதனால் ஏற்படும் சகல நன்மை தீமைகளிலும்...சம பங்கு கொள்வதாக, இதன்மூலம் பிரமாணம் செய்கிறோம்."

அதற்கடியில் அவர்கள் எல்லோருடைய கையெழுத்துக்களும் போடப்பட்டிருந்தன.

## *33. மர்மப் புதையல்!*

பவானந்தம் வெளி நாடுகளிலிருந்து தம்பிக்கண்ணு என்ற பெயரில் எழுதியதாக வக்கீல் ராஜாங்கம் பிள்ளை என்னிடம் காட்டிய கடிதங்கள் எல்லாம், அவராகவே எழுதிக்கொண்டவை. அப்படிப்பட்ட கடிதமொன்றை அவர் என்னிடம் காட்டியபொழுது, அந்தக்கடிதம் பச்சை நிற மையில் எழுதப்பட்டிருந்தது. அன்றையத் தினமே நான் அவையெல்லாம் வக்கீல் ராஜாங்கம் பிள்ளையின் சூழ்ச்சிதானென்றும், அவர் இந்த விவகாரத்தில் ரொம்ப ஈடுபட்டிருக்கிறார் என்றும் புரிந்து கொண்டேன்!" என்றார் பிரபாகர்.

அவர்களெல்லோரும் சமாதி மேட்டிலிருந்து போலீஸ் கமிஷனர் ஆபிஸை நோக்கி மோட்டார்காரில் சென்று கொண்டிருந்தார்கள்.

விசித்திரமாக உருமாறிய பக்கிரிசாமியை எப்படித் தன் சகோதரன் என்று பிச்சைக்கண்ணுவினால் அடையாளம் கண்டு பிடிக்க முடிந்தது? அதுதான் எனக்கு விளங்காத மர்மமாய் இருக்கிறது!" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

பிரபாகர் சில விநாடிகள் யோசித்தார். பிறகு, நீண்ட நாட்களாகவே அவன் அதைப்பற்றி சிந்தித்து வந்திருக்கவேண்டும்! இயற்கையிலேயே பிச்சைக்கண்ணு கெட்டவனல்ல!" என்றார்.

பிறகு வெகு நேரம்வரையில் இருவரும் ஒன்றும் பேசவில்லை. கார் போலீஸ் கமிஷனர் ஆபிஸை அடைந்தது. அங்கு காத்திருந்த ஒரு போலீஸ்காரர் வேகமாக ஓடிவந்து இன்ஸ்பெக்டர் துரைசாமியை நெருங்கி, டாக்டர் ரஞ்சித் சிங்கிற்குப் பிரக்ஞை வந்துவிட்டது. ஆனால் அவர் பைத்தியம்போல் உளறுகிறார். ரஞ்சித் சிங்கிற்குச் சித்தம் பேதலித்திருக்கும் என்று வைத்திய அதிகாரி கருதுகிறார்!" என்றார்.

அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டால், அவனை என்ன செய்வார்கள்?" என்று கவலையோடு கேட்டார் பிரபாகர்.

பைத்தியம் தெளிந்த பிறகு தூக்குப் போடுவார்கள்!" என்று தைரியம் கூறினார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

கோர்ட்டிலே தீர்ப்புச் சொல்லும் தினத்தன்று ஒரே ஜனக் கூட்டம் நிறைந்திருந்தது. நியாயமாக வெகு நாட்களுக்கு முன்பே பைசலாகியிருக்க வேண்டிய அந்த வழக்கு, அவ்வளவு காலம் கழித்து விசாரணைக்கு வந்ததற்குக் காரணம், டாக்டர் ரஞ்சித் சிங்கிற்குப் பிடித்திருந்த பைத்தியம்தான்.

பைத்தியமாக இருக்கும்பொழுது விஞ்ஞானி ரஞ்சித் சிங் வெறிபடித்தவர்போல் 'லாக்அப்'கதவுகளில் பலமாக மோதிக்கொண்டு வீறிட்டு அலறுவாராம். அவரை நிர்வகிப்பது ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறதென்று, பைத்தியக்கார ஆஸ்பத்திரி அதிகாரிகள் சர்க்காருக்கு மனுகூட அனுப்பினார்களாம். ஆனால் திடீரென்று ஒருநாள் ரஞ்சித் சிங்கின் பைத்தியம் தீர்த்து சுயப் பிரக்ஞை வந்துவிட்டது. அதன் பிறகுதான் வழக்கு விசாரணையே ஆரம்பமானது.

பல கொலைகளுக்கும் கிராதகச் செயல்களுக்கும் காரணமாக இருந்த விஞ்ஞானி ரஞ்சித் சிங் இரண்டு மரண தண்டனைகள் விதிக்கப்பட்டார். மோசடி, கொலைக்கு உடந்தை ஆகிய பல்வேறு பிரிவில் செய்யப்பட்ட குற்றங்களுக்காக வக்கீல் ராஜாங்கம் பிள்ளை இரண்டு ஆயுள் தண்டனைகள் விதிக்கப்பட்டு, அதைத் தனித்தனியே அனுபவிக்கப்பட வேண்டுமென்று தீர்ப்புக் கூறப்பட்டது. அதன்படி அவர் தம் வாழ்நாள் பூராவும் சிறைக்குள்ளேயே வாடி சிறைக்குள்ளேயே மடிய நேர்ந்தது.

மிகவும் சுவாரசியமான இந்தத் தீர்ப்பு சொல்லப்படும் நேரத்தில் துப்பறியும் பிரபாகரோ கோர்ட்டுக்கு வரவே இல்லை! அன்றையத் தினம்தான், அவருக்கும், ராமானந்தர் எஸ்டேட்டின் அடுத்த சட்ட பூர்வமான வாரிசுக்காரியாகிய மஹேஸ்வரிக்கும் மர்மபலத்தில் திருமணம் நடந்தது! அவ்விருவர் நெஞ்சங்களிலும் மாயம் புகுந்து வெகு காலமாக மர்மப் புதையலாக விளங்கி வந்த காதல் அன்றையத் தினம் மணமேடையில் பலரறியப் பகிரங்கமாகிவிட்டது!

முற்றும்